

செ.திவான்

மலையாளக்கரையினில்
இஸ்லாம்

இஸ்லாம் கேரளாவில் தோன்றிய
வரலாறு பற்றிய நூல்

மலையாளக் கரையினிலே இஸ்லாம்
MALAYALA KARAIYINILE ISLAM

செ.திவான்

வெளியீடு
ரெகான் சுலைமான் பதிப்பகம்
106F, 4A, திருவனந்தபுரம் சாலை,
பாளையங்கோட்டை, திருநெல்வேலி- 627002
போன்: 0462-2572665

நூலாசிரியரின் 131வது நூல்

நூலின் தலைப்பு : மலையாளக் கரையினிலே இஸ்லாம்

பொருள் : வரலாறு

நூலின் ஆசிரியர் : செ. திவான்

மொழி : தமிழ்

பதிப்பு ஆண்டு : 2021, நவம்பர்

உரிமை : ஆசிரியருக்கே

பக்கங்கள் : 216

அச்சிட்டோர் : நியூஸ்மேன் பப்ளிகேஷன்ஸ், மதுரை
போன்: 0452-4396667, 90803 30200

வடிவமைப்பு : ஜ. அப்துல் நசீர், 94891 15236

விலை : ₹ 200/-

ISBN No. : 978-93-92351-18-1

உள்ளே...

1. எண்ண அலைகள் 004
2. கடல் 016
3. பழந்தமிழர் வாணிபமும் பன்னாட்டுத் தொடர்பும் 024
4. அரேபியா 026
5. அரேபியரின் வணிகம் 030
6. அரேபியர் தமிழர் வணிகம் 041
7. குதிரை 089
8. இஸ்லாம் 099
9. சந்திரன் 114
10. சேரமான் பெருமாள் 172



எண்ண அலைகள்

.... உலகோர்
உறவாளனும் உணர்வாளனும் உயர்வாளனும் அழியாப்
பொருளாளனும் புகழாளனும் பொறையாளனும் மறையோர்
உறையாளனும் நிறையாளனும்
அருளாளனும் அறிவாளனும் அறவாளனும் இறையே*

தமிழகத்தில் முஸ்லிம்கள்

அகிலத்திற்கோர் அருட்கொடையாகவும், அழகிய முன்மாதிரியாகவும் தோன்றிய அண்ணல் முஹம்மது (ஸல்) போதித்த இஸ்லாம் மார்க்கம் இப்பகுதிக்கு, எப்போது வந்தது? இக்கேள்விக்கான பதிலும், தென்னகத்திற்கு இஸ்லாமின் வருகை குறித்த தகவல்களும், யூகத்தையும் அனுமானத்தையும் இப்படித்தான் இருந்திருக்கக்கூடும் எனும் வாதப் பிரதிவாதங்களையும் அடிப்படையாகக் கொண்டே அமைகின்றன.

சரித்திரச்சான்றாதாரங்கள்

கலாச்சாரப் பண்டிதர்கள், கல்வெட்டுத்துறை ஆய்வாளர்கள், தொல்பொருள் அகழாய்வு நிபுணர்கள், சிலாசாசனச் சிந்தனையாளர்கள், சரித்திர ஜாம்பவான்கள், வரலாற்று விற்பன்னர்கள் ஒப்புக்கொள்ளும் வகையில் முஸ்லிம்களின் பாரம்பரியத் தொன்மையினை அறுதியிட்டும், இறுதியாகவும் சொல்லுகின்ற காலம் விரைந்து வந்தாக வேண்டும். முஸ்லிம்களின் தொன்மை பற்றிய சரித்திரச் சான்றாதாரங்கள் ஜொலிக்கின்றபோது தான் சிறப்பெய்திட முடியும்.

கள ஆய்வுகள்

இங்கே இஸ்லாம் எப்போது வேரூன்றியது? அதன் வரலாற்றுப் பின்னணி என்ன? எப்.கிரித் (Hirth) W.W. ராக்கில் (Rockill) ஆகியோரது சீன அரேபிய வணிகம் பற்றிய அண்மைக்கால ஆய்வுகள், தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக்கழகம் 1987இல் இராமநாதபுரம், பெரியபட்டிணம் கடற்கரைப் பகுதியில் நடத்திய ஆய்வுகள், நொபருகராசிமா (Noboru Karashima) தலைமையில்

---

* கவிஞர் கா.மு.ஷெரீப், அமுதக்கலசம், சென்னை, 1964, பக்கம் 109.

தமிழக கேரளக் கடற்கரைப் பகுதியில் நடைபெற்ற ஆய்வுகள், தென்கிழக்காசியாவில் நடந்த ஆய்வுகள், இவைகளைப் போன்ற கள ஆய்வுப் பணிகளில் முஸ்லிம் அமைப்புகள் இன்னும் முழுவதுமாக இறங்கிடவில்லை. தங்களின் பூர்வீகத்தொன்மை குறித்த உண்மையினை நிலைநாட்டிட இஸ்லாமிய சமுதாயக் கல்வி சார்ந்த அமைப்புகள் வலுவான முயற்சிகள் எதிலும் இதுகாறும் ஈடுபடவில்லை. இந்த நிலையில்தான் முஸ்லிம்களின் வரலாற்றைச் சிந்திக்க வேண்டியதிருக்கிறது.

யூல் - சில்வெயின்லெவி - (Sylvainlevi)

'இந்திய வரலாற்றைப் பயில்வோர் அந்நாடு ஒரு கண்டம் என்பதையும் கடல்சார்ந்த நாடு என்பதையும் கருத்திற்கொள்ள வேண்டும்' என்பர் சில்வெயின்லெவி; கீழை நாடுகளின் கடற்பயணங்களைப் பற்றி செய்திகளை நாம் அறியுந்தோறும் அவற்றின் வரலாற்றுத் தொன்மையும் உயர்ந்து கொண்டே போகிறது என்பர் யூல் (Yule).

இந்துமாக்கடல் (The Indian Ocean)

மத்திய தரைக்கடல் நாற்புறமும் நிலஞ்சூழ்ந்த ஒரு பள்ளம் போன்றது. ஆனால் இந்துமாக்கடல் அத்தகைய தன்று. அதன் தென்புறம் மிகப்பரந்த நீர் நிலையோடு இணைந்துள்ளது. அக்கடலில் உள்ள நீரோட்டங்கள் அங்கு வீசும் பருவக்காற்றுகள் ஆகியவற்றின் விளைவாக ஆப்பிரிக்கக் கடற்கரை, அரேபியா, பாரசீக வளைகுடா, இந்தியா அதனை அடுத்து அமைந்துள்ள தீவுகள், இந்தோசீனா, கொரியா, ஜப்பான் ஆகிய நாடுகளுக்கிடையே மிகப்பழங்காலந்தொட்டே கடற்பயணங்கள் நிகழ்ந்து கொண்டே இருந்தன.

தமிழகக் கடற்கரைகள்

தமிழகம் பெற்றிருக்கும் நீண்ட கடற்கரை, கடல்வழித் தொடர்புகள் மேற்கொள்வதற்கு ஏதுவாக இருந்தது. தமிழகத்தின் தொன்மையான இலக்கியங்கள் சங்ககாலத் துறைமுகங்கள் பற்றி விரிவாகவே சொல்லியுள்ளது. கே.கே.பிள்ளை, டி.வி.மகாலிங்கம், பி.டி.சீனிவாசஅய்யங்கார், கே.ஏ.நீலகண்டசாஸ்திரி, மயிலை, சீனி.வேங்கடசாமி, அ.ராகவன் போன்றோர்கள் தமிழக வணிகத் தொடர்புகள் குறித்து விரிவாகவே விளக்கியுள்ளனர். இன்றைய கேரளப்பகுதியை உள்ளடக்கிய தமிழகத்திற்கும்

கிரேக்க, ரோமானிய, சீன அரேபியருக்கும் இடையே வணிக உறவுகள் இருந்து வந்தது.

டி.டபுள்யூ. ஆர்னால்டு

கி.பி.1896இல் ‘இஸ்லாம் எப்படி பரவியது?’ The Preaching of Islam எனும் ஆய்வு நூலில், டி.டபிள்யூ. ஆர்னால்டு (Arnold) “இறுதியாக மேற்குக்கடற்கரை முழுவதுமாக அரேபியர்களின் வழி வந்தவர்களாக இருக்கக்கூடிய மக்களின் குடியிருப்புகள் இருக்கின்றன. இவர்களுடைய மூதாதையர்கள் இந்தியாவிற்கு கடல் மார்க்கமாக வந்தார்கள்” என்கிறார்.*

ஏழாம் நூற்றாண்டில்

அரபு நாட்டில் இஸ்லாம் அறிவிக்கப்பட்டது. புதிய தேசிய வாழ்வு துவங்கியது. அண்ணலாரின் (ஸல்) சேனைகள் மூன்று கண்டங்களையும் நோக்கி முன்னேறியது. முற்காலத்தில் ரோமராஜ்யம் உச்சநிலையில் இருந்ததைப்போல மிகப்பெரிய சாம்ராஜ்யத்தின் எஜமானர்களாக ஏழாம் நூற்றாண்டில் முஸ்லிம்கள் உயர்ந்து நின்றனர்.

பி.டி.சீனிவாச அய்யங்கார்

“ஏழாம் நூற்றாண்டில் அராபியர் சிரியா, எகிப்து, பாரசீகம் (பர்ஷியா) ஆகிய நாடுகளை வெற்றிகொண்டு மீண்டும் இந்திய வணிகத்தின் இடைத்தரகராயினர்**என்பார் பி.டி.சீனிவாச அய்யங்கார்.

வி. கனகசபை

பின்னாட்களில் அராபியர்களும், கிரேக்கர்களும் இத்தமிழக வணிகத்தைத் தொடர்ந்து நடத்தினர் என்பர் வி. கனகசபை.***

★……*all along the west coast are settlements probably of Arab descent, whose original founders came to india by sea” by J.A.Baines,General report, London, 1893, p. 167.*

★★ *In the VII Century the Arabs conquered Syria, Egypt and Persia and became again the intermediaries of Indian Commerce P.T.Srinivasaayengar, History of the Tamils from the earliest times to 600 A.D., Madras, 1929, P 321*

★★★*Subsequently the Arabs and Greeks appear to have kept up the trade with Tamilakam (V.Kanakasabhai, The Tamils Eighteen Hundred Years Ago, Madras, 1966, P 31.*

அரபகக் கப்பல்கள்

பஹ்ரைன், ஏமன், ஹோர்மூச் போன்ற அரேபிய நாட்டுத் துறைமுகங்களிலிருந்து புறப்பட்ட அரபகக் கப்பல்கள் இந்தியக் கடல்களில் வலம் வந்தது. அரேபியத் தென்முனைத் துறைமுகங்களிலிருந்து புறப்பட்ட கப்பல்கள் 47 நாட்களில் தமிழகத்தின் எல்லையைத் தொட்டன. வணிகர்களாக வந்த அரேபியர்கள், சங்ககாலந்தொட்டே தமிழகக் கடற்கரைகளில் தங்கியிருந்தனர். பத்துப்பாட்டும், எட்டுத்தொகையும், சிலப்பதிகாரமும், மணிமேகலை போன்ற பழந்தமிழ் இலக்கியங்கள் இதற்குச் சான்று தருகின்றன.

அரபு வணிகர்கள்

தமிழநாட்டிற்கு வடமேற்கிலிருந்து வந்த அரபு வணிகர்கள் சேரநாட்டின் முசிறித் துறைமுகத்தில் தங்கியிருந்தனர். கடைவீதி என்று பொருள்தரும் 'பந்தர்' என்று தங்கள் வாணிகஞ்செய்த இடத்திற்குப் பெயரிட்டனர்.

பதிற்றுப்பத்து

சங்க இலக்கியமான பதிற்றுப்பத்தில், ஆறாம்பத்து காக்கைப்பாடினியார் நச்செள்ளையார் பாடியது. அதில் ஐந்தாவதுசெய்யுள் 'துஞ்சும்பந்தர்' ஆகும். 'நன்கலவெறுக்கைதுஞ்சும் பந்தர்க் கமழும் தாழைக் கானலம் பெருந்துறை' (ஆறாம்பத்து), கபிலர் பாடியது. ஏழாம் பத்தில், ஏழாவது செய்யுளிலும், அரிசில்கிழார் பாடிய எட்டாம் பத்தில், நான்காவது செய்யுளிலும், அங்காடி என்று பொருள்தரும் 'பந்தர்' என்ற சொல் பயன்படுத்தப்பட்டுள்ளது. அரேபியரது வணிகத் தொடர்பினால் தமிழகத்து அரிசி, அரபுமொழியில் 'ஓருஸ்' என்று வழங்கப்படுகிறது.

பி.என்.குஞ்ஞுன் பிள்ளை

கேரளத்தில் கொய்லாண்டி வட்டத்திலுள்ள 'பந்தாளயினி கொல்லம்' என்ற நகர்தான் பந்தர் என்று அழைக்கப்பட்டது என்று பேராசிரியர் இளங்குளம் பி.என். குஞ்ஞுன்பிள்ளை குறிப்பிடுகிறார்.*

---

*ஐந்தாம் ஆறாம் நூற்றாண்டுகளில் கேரளம், சென்னை, 1967, பக்.108, *Studies in Kerala Histroy, Tiruvanduram P.68.*

சேரநாட்டு மிளகைக் கொண்டு போய், செங்கடல் துறை முகங்களிலும், அலெக்சாந்திரியத் துறைமுகப்பட்டினத்திலும் விற்றார்கள். அங்கிருந்து நல்ல குதிரைகள் தமிழகத்திற்கு இறக்குமதி செய்யப்பட்டன. வணிகம் நூற்றாண்டு, நூற்றாண்டுகளாகத் தொடர்ந்து வந்தது.

பாபாரத்தன்

தமிழகத்துக் கடற்கரைப் பட்டினங்களில் வந்து தங்கிய அரேபிய முஸ்லிம்கள் இந்த நாட்டுப் பெண்களை மணந்தனர். தங்களது மார்க்கக் கோட்பாடுகளை இங்குள்ள மக்களிடம் பரப்பினர். அமைதியான வழியில் கத்தியின்றி, இரத்தமின்றி, இந்தத் திருநாட்டில் இஸ்லாம் மார்க்கம் வேரூன்றத் துவங்கியது. அண்ணலார் (ஸல்) காலத்திலேயே வடஇந்தியப்பகுதியிலிருந்து பாபாரத்தன் என்ற இந்துத்துறவி இருமுறை நேரில் சென்று அண்ணலாருடன் விவாதித்துப் பின்னர் இஸ்லாம் மார்க்கத்தில் தன்னை இணைத்துக் கொண்டார்.★

நபித் தோழர்களான அகாஷா (ரலி) பரங்கிப் பேட்டையில், சென்னை கோவளத்தில் தமீம்அன்ஸாரி (ரலி) ஆகியோரது அடக்கஸ்தலங்கள், அண்ணலார் (ஸல்) காலத்திலேயே சத்திய சன்மார்க்க சமரச இஸ்லாம் தமிழ்த்திருநாட்டில் நிலைத்திருந்ததை உறுதிப்படுத்துகிறது.

போர்த்துக்கீசியர்கள்

வாஸ்கோடகாமா போர்த்துக்கீசியரோடு இப்பகுதிக்கு வந்திருக்காவிடில், இந்தக் கடற்கரை முழுவதும் இஸ்லாம் மார்க்கத்திற்கு வந்திருக்கும்.

டபிள்யூ.எஸ். ஸ்காப்

பல நூற்றாண்டுகளுக்கு முன்பு எழுதப்பட்ட எரித்திரியக் கடலின் பெரிப்ளுஸ் (Periplus of the Erithraean Sea) என்ற நூலைப் பதிப்பித்த டபிள்யூ. எஸ். ஸ்காப், "கிரேக்க மக்கள் அநாகரிகத்தினின்றும் விழித்தெழுவதற்குப் பல்லாயிரம் ஆண்டுகட்கு முன்பே, அரேபியாவும், எகிப்தும், பண்டைய இந்திய நாடுகளுடன் வணிகத்தொடர்பு கொண்டிருந்தன.

★ *John A. Subhan, Sufismits Saints and Shrines, I Ed, Lagore, 1938, II Ed , Delhi, 1999, P. 121*

பாரசீக வளைகுடாவில் பண்டமாற்றுச் செய்துகொண்டனர்" என்று குறிப்பிட்டுள்ளார். ஆனால் போர்த்துக்கீசியர்களின் வருகைக்குப் பின் 16ஆம் நூற்றாண்டில் அரேபியரின் வணிகம் அழிக்கப்பட்டது அது மட்டுமா? அவர்களின் மூதாதையர்கள் தமிழக மேற்குக் கடற்கரைகளில் உருவாக்கியிருந்த தங்களது வழிபாட்டுக் கூடங்களான, பள்ளிவாசல்கள் பலவும் அழிக்கப்பட்டன.

ஏ.பி.இப்ராஹிம் குஞ்சு

" The Portuguese demolished the ancient cathedral mosque, which was built ther on the first introduction of Islam in Malabar and made use of its materials for the building of the fort and the church." ★

மலபாரில் முதன்முதலாக இஸ்லாம் அறிமுகப்படுத்தப்பட்ட போது கட்டப்பட்ட புராதன பள்ளிவாசலை போர்த்துக்கீசியர்கள் இடித்து, அதிலிருந்து கிடைத்த பொருட்களைக் கொண்டு கோட்டையையும் கோயிலையும் கட்டினார் என்று வரலாற்றாசிரியர் எனது உறவினர் ஏ.பி.இப்ராஹிம் குஞ்சு தனது 'மாப்பிள்ளை முஸ்லிம்ஸ் ஆப் கேரளா' என்ற நூலில் (1989, பக்கம் 38) விரிவாக எடுத்துரைத்துள்ளார்.

தமிழகக் கடற்கரையோரங்களில்

பழவேற்காடு, கோவளம், பரங்கிப்பேட்டை, தொண்டி, பெரியபட்டினம், பௌத்திர மாணிக்கப்பட்டினம் (கீழக்கரை) காயல்பட்டினம், நாகப்பட்டினம், தேங்காய்பட்டினம், கோட்டாறு, குளச்சல், கொல்லம், கொடுங்கலூர், கள்ளிக்கோட்டை, காஸர்கோடு என தென்னகக் கடலோரம் தீன்குலத்தோரின் சரித்திரம் துவங்கிற்று.

பாலக்காடு கணவாய் வழியாக

கடல்வழியாக குமரி முனைக்கு வந்தபிறகு கிழக்கு கடற்கரையின் இதரப் பகுதிகளுக்குச் செல்வதுபோல, கிராங்கனூர், கண்ணனூர், பொன்னானி ஆகிய மேற்குக் கடற்கரை ஊர்களிலிருந்தும் இருபது மைல் அகலமுள்ள

★ *Shaykh Zaynuddin, Hudayat ul Adhkiya lla Tariq till auliya, reprint, Tirurangadi, 1967, pp, 66-70.*

பாலக்காடு கணவாய் வழியாக கோயமுத்தூர் பகுதிக்கு வந்தனர். பின் அங்கிருந்து கரூர், புதுச்சேரி, மதுரைப்பகுதிகளிலும் பரவினர். சோழ, பாண்டிய, சேர மன்னர்கள் காலத்திலும், மதுரை சுல்தான்கள் ஆட்சியிலும், ஆற்காடு நவாப்களின் காலத்திலும் முஸ்லிம்கள் தமிழகமெங்கும் பரவி வியாபித்தனர். இது பிந்தைய கால சரித்திரம்.

முதல் பள்ளிவாசல் - மாலிக்பின்தினார்

கடற்கரையோரங்களில் வாழ்ந்த முஸ்லிம்களின் வழிபாட்டு ஸ்தலங்கள், கடல் அரிப்புகள், இயற்கையின் சீற்றம், ஐரோப்பியர் ஆதிக்கம் பெறுதல் போன்ற பல காரணங்களால் பல பள்ளிவாசல்கள் அழிக்கப்பட்டன. வரலாற்றில் எஞ்சியிருப்பதில், மாலிக்பின்தினார் (Malik Bin Dinar) முயற்சியால் காசர்கோடில் (Kaserod) கி.பி.643 ஜூனில், ஹிஜ்ரி 22 ரஜப் பிறை 13இல் எழுந்த பள்ளிவாசல் இன்றும் அழிக்க இயலாத சரித்திரச் சான்றுகளுடன் திகழ்கிறது. 14X77 செ.மீ. அகலத்திற்கு அராபியக் கல்வெட்டு அங்கு அத்தாட்சியாக இன்றும் இருக்கிறது. ★

ஹாஜி அப்துல்லா இப்னு அன்வர்

ஹாஜி அப்துல்லா இப்னு அன்வர் முயற்சியால் திருச்சி கோட்டை ரயில் நிலையம் அருகே கட்டப்பட்டு, தற்போது இடிபாடுகளுடன் காணப்படுகின்ற கல்லுப்பள்ளி ஹிஜ்ரி 116இல் (கி.பி.733) கட்டப்பட்டது. அதுவும் அழிக்க இயலாத ஆதாரமாகத் திகழ்கிறது. பன்னெடுங்காலமாக வணிகத்தாலும், மனித நேயத்தாலும், மார்க்கப் பிரச்சாரத்தாலும் வளர்ந்து வருபவர்கள் முஸ்லிம்கள்; ஐரோப்பியரின் கடலாண்மை, ஆரியரின் ஆட்சி அதிகாரம், பிரிட்டிஷாரின் பிரித்தாளும் சூழ்ச்சி இவைகளால் பாதிப்பிற்குள்ளாகி, பொருளாதாரத்திலும், தங்களது வரலாற்றுப் பின்புலத்திலும் மிகவும் பின்தங்கி வருகின்றனர் முஸ்லிம்கள், இவர்களது வரலாறு துவக்க காலந்தொட்டு, இதுவரையில் உள்ளதைத்தேடி எடுத்துத்தொகுத்திடும் தூய பணியினை தொடங்கிட வேண்டிய

★ *Journal of the Epigraphical Society of India, Vol.25. 1999 Mysore, pp 54, 55, An Arabic Epigraph pertaining of early Islamic Mission to kerala, by G.S. Khwaja.*

தலையாய கடமை குறித்து எளியேனின் உள்ளத்தில் இருபத்தி ஐந்து ஆண்டுகளுக்கும் மேலாக தீராத கவலை வருத்திக் கொண்டிருந்தது.

நா. முகமது செரீபு

எனது பிரியத்திற்குரிய நண்பர் மறைந்த இராமநாதபுரம் நா. முகமது செரீபு '**தமிழகத்தில் முகம்மதியர் வரலாறு**' எனும் நூலை 1976இல் 62 பக்கங்களில் 2 ரூபாய் 50 பைசா விலையில் வெளியிட்டார்.

ஸையித் இப்ராஹிம்எம்.ஏ.,எல்.டி.,

'**இஸ்லாம் எப்படி பரவியது**' என்ற நூலை 1979இல் திருச்சியிலிருந்து 544 பக்கங்களில் வெளியிட்டவர் ஸையித் இப்ராஹிம். இது டி.டபிள்யூ அர்னால்டின் The Preaching of Islam எனும் ஆங்கில நூலின் தழுவல். அதில் இந்தியாவில் இஸ்லாம் 277 பக்கம் துவங்கி தென்னிந்தியாவில் இஸ்லாம் 296வது பக்கம் தொடங்கி 376வது பக்கம் வரை உள்ளது. ஏறத்தாழ நூறு பக்கங்கள்.

இவரே 'முஸ்லிம் இந்தியா' என்னும் நூலை இருபகுதிகளாக 1975, 1976இல் வெளியிட்டவர் ஆவார். முதல் பாகம் 366 பக்கங்கள், இரண்டாவது பாகம் 448 பக்கங்கள், இதனை யுனிவர்ஸல் பப்ளிஷர்ஸ் நிறுவனம் 2014இல் 335 பக்கங்களில் முதல் பகுதியை 400 பக்கங்களிலும் இரண்டாம் பகுதியையும் மறுபதிப்பாக வெளியிட்டுள்ளது.

டாக்டர் பி.எம். அஜ்மல் கான்

'**தமிழகத்தில் முஸ்லிம்கள் போர்ச்சுக்கீசியர் வருகைக்கு முன்பும் பின்பும்**' என்ற சிறுநூலை பி.எம்.அஜ்மல்கான் 102 பக்கங்களில் பத்து ரூபாய் விலையில் 1985இல் தந்தார்கள்.

திருவை எம்.ஏ. நஸீர்

'**இந்தியாவில் இஸ்லாம்**' எனும் பொத்தம் பொதுவான நூலினை திருவை எம்.ஏ.நஸீர் 1987இல் ரூபாய் 10 விலையில் வெளியிட்டுள்ளார்.

ஏ.கே. ரிபாயி

'**தமிழகத்தில் இஸ்லாமியர் வரலாறு**' குறித்து எனது

பிரியத்திற்குரிய அண்ணன் மறைந்த மாநிலங்களவை உறுப்பினர் ஆலிஜனாப் ஏ.கே.ரிபாயி 1988இல் 300 பக்கங்களைக் கொண்ட நூலினைத் தந்தார்கள். (விலை ரூபாய் இருபது) அது ஒரு துவக்கப்புள்ளி.

டாக்டர் எஸ்.எம். கமால்

'முஸ்லிம்களும் தமிழகமும்' என்ற நூலை எனது பாசத்திற்குரிய அண்ணன் சேதுபதிகள் குறித்த சிறந்த ஆய்வாளர் இராமநாதபுரம் மறைந்த எஸ்.எம். கமால் 255 பக்கங்களில் நூலை தந்தார்கள். இது அடுத்த முயற்சி. அந்த நூலினை இலக்கியச்சோலை செப்டம்பர் 2015இல் ரூபாய் 140 விலையில் 256 பக்கங்களில் மறுபதிப்பு செய்தது.

மு.இ. முஹம்மது ஹசன் மரைக்காயர்

'மரைக்காயர் சமூகம் ஓர் ஆய்வு' எனும் நூலை மு.இ.முஹம்மது ஹசன் மரைக்காயர் 1991இல் ரூபாய் 14 விலையில் 116 பக்கங்களில் தந்துள்ளார்.

செ. திவான்

'தெற்கில் ஒலித்த தீன்குரல்' எனும் 84 பக்கங்கள் கொண்ட நூலினை இருபது ரூபாய் விலையில் செ. திவான், 1998இல் வெளியிட்டார். இது குறிப்பிட்ட ஒரு பகுதி சரித்திரம் மட்டுமே.

ஜெ. ராஜா முகம்மது

2016இல் **'தமிழக முஸ்லிம்களின் கடல் வாணிப வரலாறு'** நூலாக 56 பக்கங்களில் ஜெ. ராஜா முகம்மது வெளியிட்டார். இலக்கியச்சோலை வெளியீடு விலை ரூபாய் 35.

'தமிழகத்தில் இஸ்லாம் வந்ததும், வளர்ந்ததும், வாழ்வதும்' வரலாறு தொகுதி 1 எனும் 176 பக்கங்களைக் கொண்ட நூலினை ஜெ. ராஜா முகம்மது திருச்சியிலிருந்து 2018இல் வெளியிட்டார்.

துவக்ககால ஆய்வுகள்

இஸ்லாம் இவ்வுலகில் தோன்றி 1443 ஆண்டுகளாகிவிட்டது. இஸ்லாம் வருகை, பரவியது, குறித்து இருபதாம் நூற்றாண்டின் துவக்கத்தில் நூல்கள் எதுவும் வெளிவந்துள்ளதா? தேடினேன்.

முஸ்லிம் முரசு – மஹ்மூது பிரெல்வி

‘இந்தியாவில் இளம்பிறைத் தோற்றம்’ *என்ற கட்டுரையினை ‘மஹ்மூது பிரெல்வி’, ‘முஸ்லிம் முரசு’ 1953 ஜனவரி, பிப்ரவரி இதழில் எழுதியுள்ளார்.*

மஹதி

கவிக்கோ அப்துல் ரகுமானின் தந்தையார் மஹதி (சையத் அஹமத்) 1961 இல் மணிவிளக்கு இதழில் **‘நாம் ஆண்ட தென்னகம்’** *என்ற தலைப்பில் இஸ்லாம் வந்ததைத் தொட்டுச் செல்கிறார். 1950, 1960 களில் அவர் எழுதிய கட்டுரைகள்* **‘முஸ்லிம்கள் ஆண்ட இந்தியா’** *எனும் நூலாக யுனிவர்ஸல் பப்ளிஷர்ஸ் நிறுவனம் 2016இல் வெளியிட்டுள்ளது.* **‘இஸ்லாம் பரவிய வரலாறு’** *(நூல் 216 பக்கங்கள்) என்ற நூலை யுனிவர்ஸல் பப்ளிஷர்ஸ் நிறுவனம் 112 பக்கங்களில் 2011இல் வெளியிட்டுள்ளது.*

ரசூல்

‘இஸ்லாம் வளர்ந்த வரலாறு’ *என்ற தொடர் கட்டுரையை பாசமுள்ள அண்ணன் மர்ஹூம் திருச்சி ரசூல் முஸ்லிம் முரசில் 1961 மே மாதத்திலிருந்து எழுதியுள்ளார்.*

கே.பி.எஸ். ஹமீது

சதாவதானி ஷெய்குத் தம்பிப் பாவலரின் புதல்வர் பிரியத்திற்குரிய அண்ணன் மர்ஹூம் கே.பி.எஸ். ஹமீது 1960, 1967களில் முஸ்லிம் முரசு இதழில் எழுதிய தொடர் ‘தென்னாட்டில் இஸ்லாம், மலபாரும் அரேபியாவும்’ என்ற தொடர் ஆகும்.

எம்.கே.எம். காதிர் முகையதீன் மரைக்காயர்

சென்னையிலிருந்து வெளிவந்த இஸ்லாமியக் கலைஞானத் திங்கள் வெளியீடு ‘நூருல்ஹக்’. அதன் ஆசிரியர் எம்.கே.எம். காதிர் முகையதீன் மரைக்காயர்.

கே.எம்.கே. அப்துல் காதிர் ஸாஹிப் எம்.ஏ. பி.எட்.

நூருல் ஹக் இதழில் 1948 அக்டோபர் இதழிலிருந்து கே.எம்.கே. அப்துல் காதிர் ஸாஹிப்எம்.ஏ.,பி.எட்., **‘தென்னிந்தியாவும் தீனுல்**

இஸ்லாமும்' என்ற தொடர் எழுதியதை அறிய முடிந்தது.

இதற்கு முன்பு இது குறித்த நூல்கள் வந்துள்ளதா? இன்னும் தேடினேன்.

அ. ஸதகத்துல்லாஹ் பாக்கவி

தென்னாடும் இஸ்லாமும் எனும் 90 பக்கங்களைக் கொண்ட நூலினை 1945இல் கம்பம் அ.ஸதக்கத்துல்லாஹ் பாக்கவி காரைக்கால் ஹூசைனிய்யா பிரஸில் அச்சிட்டு வெளியிட்டுள்ளார்கள்.

இன்னும் தேடினேன்; 1945க்கு முன்பு ஏதாவது இந்தப் பொருள் குறித்து வந்துள்ளதா? இன்னும் தேடினேன்.

மௌலவி அஹ்மத் ஸயீத் சாஹிபு

'**இஸ்லாமும் உலகமும்**' என்னும் நூலை 12 அணா விலையில் 1932இல் ஸைபுல் இஸ்லாம் பிரஸில் அச்சிடப்பட்டு 128 பக்கங்களில் வெளிவந்தள்ளது.

ஸைபுல் இஸ்லாம்

முழு உலகிலும் இஸ்லாம் பரவிய வரலாற்றை அந்த நூலில் ஸைபுல் இஸ்லாம் ஆசிரியர் மௌலவி அஹ்மத் ஸயீத் சாஹிபு எழுதியுள்ளார். இந்தியாவில், மலையாளப்பகுதியில் இஸ்லாம் பரவிய விபரம் 19வது பக்கம் முதல் 51வது பக்கம் வரை 32 பக்கங்கள் உள்ளது.

இவைகளை எல்லாம் தேடி எடுத்தும் திருப்தி வரவில்லை. இஸ்லாம் பரவிய வரலாறு குறித்து இவர்கள் தருகின்ற செய்திகளை அப்துல்காதர் அப்படியே ஏற்றுக்கொள்வார், ஆறுமுகமும் ஆப்ரகாமும் ஒப்புக்கொள்ள வேண்டாமா?

தேடினேன், தேடினேன், திரிந்தேன், திரிந்தேன், அலைந்தேன், அலைந்தேன் சரித்திரப்பூர்வமாக, ஆராய்ச்சியின் அடிப்படையில்



துவக்கமாக மலையாளக் கரையினிலே இஸ்லாம் எனும் நூலினை எழுதிட முடிவெடுத்தேன். எல்லாம் வல்ல இறைவனின் அருளால் இப்போது அதற்கான நேரம் வந்தது.

இறைவனுக்கு நன்றி!
காலத்திற்கு நன்றி!

எளியேன் வாழ்வதற்காக எழுதவில்லை;
எழுதுவதற்காகவே வாழ்கிறேன்.

ரெகான் சுலைமான் பதிப்பகம்
கல்வித் தந்தை சுலைமான் இல்லம்,
106F, 4A திருவனந்தபுரம் சாலை,
பாளையங்கோட்டை, நெல்லை.
1.10.2021

செ.திவான்

கடல்

'நீராருங் கடலுடுத்த உலகம்' என்று மனோன்மணியம் சுந்தரம் பிள்ளை பாடுவார். முதலில் கடல் குறித்துப் பார்ப்போம்.

உலகத்தின் மீது ஓர் உறையைப் போல் கடல் அமைந்திருக்கிறது. அந்த உறை ஒழுங்கற்றது. ஆயினும் ஓர் இடத்திலும் விட்டுப் போகாமல் தொடர்ச்சியாக உள்ளது. நமக்குக் கிடைக்கும் நீர் அனைத்தின் அடிப்படை மூலப் பொருளாய் கடல் இருக்கிறது. ★

நாம் வசிக்கின்ற நிலப்பரப்பில் முக்கால் பகுதிக்கு மேல் கடல்களால் ஆனது. 'கடல் ஒரு மாபெரும் தனி உலக அதிசய இரகசியங்கள் நிரம்பியுள்ள மண்டலம். இயற்கை நடத்தும் பெரிய காட்சி சாலை. அழகும், அற்புதமும், அதிகபயங்கரமும், விநோதமும், வேடிக்கையும் அங்கே அதிகம், கடலின் அமைப்பும் அற்புதம் நிறைந்ததாகத்தான் இருக்கிறது.'★★

பதிற்றுப்பத்து - பரணர் பாடல்

பாட்டும் தொகையுமாய் உள்ள சங்க இலக்கியங்கள் அவற்றின் பழமையான பொருள் அறிதற்கு அருமையுடையன. பண்டைத் தமிழகத்தை ஆண்ட சேர, சோழ, பாண்டியர் எனும் மூவேந்தருள் சேரரைப் பற்றிய தனி நூலாகப் பதிற்றுப்பத்து அமைந்துள்ளது. அதில் பரணர் பாடிய பாடல் வரிகள் இதோ;

"மழை கொளக் குறையாது, புனல்புக நிறையாது
விலங்கு வளிகடவும் துளங்கு இருங்கமஞ்சூல்" ★★★
"முகில் படிந்து முகத்தலால் நீர்
குறையாமலும், ஆறுகளின் வரவால்
நீர் நிரம்பிக் கரை கடவாமலும்,
செல்லும் செலவைத் தடுத்து

★ ராபெர்டு ஸி. கௌவன், தமிழாக்கம், வெ.ச. அனந்தபத்மநாபன், ஆழ் கடலின் அற்புதங்கள், சென்னை, 1986, ப.2.

★★ கு. ராஜாராம், கடல், சென்னை, 1957, ப.10.

★★★ பதிற்றுப்பத்து பாடல் 45, வரி 19-20)

மோதும் காற்றுத் திரட்டும்,
அலைகளால் அலைதலை உடைய திரைப் பனிக்கடல்*

*பதிற்றுப்பத்து வரிகளுக்கு, "குறைதலும் மிகுதலும் கடலுக்கு இல்லை" என்று விளக்கம் தருவார் புலவர் வீ. செந்தில் நாயகம்.***

"கடல் உலகின் முதல் அதிசயம்
சத்தமிடும் ரகசியம்
காலவெள்ளம் தேங்கி நிற்கும்
நீலப்பள்ளம்
வாசிக்கக் கிடைக்காத வரலாறுகளைத்
தின்று செரித்து நின்று சிரிக்கும்
நிஜம் கடல்!
ஒரு வகையில் நம்பிக்கை
ஒரு வகையில் எச்சரிக்கை" ***

என்பார் கவியரசு வைரமுத்து.

"கடல்" என்பதற்குத் தான் எத்தனை சொற்கள். அடேயப்பா! கடலைக் குறித்திடும் 222 சொற்கள் இதோ...

ஆழி

அகத்தியர், அகூபாரம், அத்தி, அபாம்பதி, அப்தி, அப்பதி, அப்பு, அம்பரம், அம்பு, அம்புதி, அம்புநிதி, அம்புராசி, அம்போதி, அம்போநிதி, அம்போராசி, அரலை, அரி, அரிணம், அரிணவம், அருணவம், அலை, அலைநீர், அவாரபாரம், அழுவம், அளக்கர், அன்னவம், ஆநாத்தம், ஆர்கலி, ஆலம், ஆழம், ஆழி, இந்துசனகம், இயாதவதி, இரத்தினகருப்பம், இரத்தினாகரம், இருங்கடல், இரைநீர், ஈண்டுநீர், உததி, உதரதி, உந்தி, உப்பு, உரகடல், உரவுநீர், உவரி, உவர், உவா, ஊர்மிமாலி, ஓதம், ஓதவனம், ஓலம், கசங்கலம், கடல், கயம், கலி, கார்கோளி, கார்கோள், கார்மலி, கால்வலயம், கிடங்கர், கிருபீடபாலம், குண்டுநீர், குரவை, கூபாரம், சரிற்பதி, சரற்பதி, சலதரம், சலதி,

---

★ஔவை சு. துரைசாமிப்பிள்ளை, பதிற்றுப்பத்து மூலமும் விளக்க உரையும், சென்னை, 1968, ப. 212

★★ புதிய (எளிய) பதிற்றுப்பத்து, பத்தமடை, 2002, ப. 79

★★★ வைரமுத்து, தண்ணீர் தேசம், சென்னை, 2003, ப.1)

சலநிதி, சலபதி, சலராசி, சலாகரம், சலாபாகாரம், சாகரம், சிந்து, சிந்துவாரம், சூழி, சோணம், தரங்கம், தாந்தம், தவிசம், தவீசம், தாரதம், தாரீடம், தாழி, திமி, திமிகோடம், திரை, துநீநாதன், துறை, துனிநாதம், தெண்டிரை, தேனம், தொடரல், தொன்னீர், தோயதி, தோயநிதி, தோயம், தோழம், நன்னீர், நதநதீபதி, நதாதிபதி, நதிபதி, நதீநன், நதீனம், நரலை, நாமநீர், நாரநிதி, நிதி, நித்தியம், நீத்தம், நீந்து, நீரதி, நிரநிதி, நீராழி, நீர், நீர்நிதி, நீனிறவியலகம், நெடுநீர், நெறிநீர், நேமி.

பரவை

பயோதகம், பயோததி, பயோதரம், பயோதி, பயோநிதி, பரந்தநீர், பரப்பு, பரவை, பராங்கவம், பராவரம், பரு, பவ்வம், பாதோதி, பாதோநிதி, பாராவாரம், பாரி, பாலை, பாழி, பானல், பிரபாகரன், பிரம்பு, புணரி, புணர்ப்பு, புரணம், புறவிடன், பூரணம், பெருங்கடல், பெருங்குழி, பெருநீர், பெருவனம், பேராழி, பேரு, பௌரணை, பௌவம், மகாசலம், மகரநீர், மகராகரம், மகராங்கம், மகராலயம், மகராலையம், மகரி, மகாகச்சம், மகாசமுத்திரம், மகாசயம், மகான்னவம், மகீப்பிராசீரம், மகோததி, மஞ்சம், மதுரோதகம் (நன்னீர்), மந்திரம், மழு, மாதங்கம், மாதோயம், மிதத்துரு, மிருதோற்பவம், மீரம், மீனநிலையம், மீனாலயம், முண்டகம், முதனீர், முதுகயம், முதுநீர், முந்நீர், முழங்கனீர், யாதபதி, வளைநீர், வாகினிபதி, வாகினீபதி, வாங்கம், வாரகம், வாரணம், வாரம், வாராகரம், வாராநிதி, வாரி, வாரிணாதம், வாரிதி, வாரிநாதம், வாரிநிதி, வாரிராசி, வாரீசம், வாருணம், வீசிமாலி, வீரை, வெள்ளம், வேலாவலயம், வேலை.★

சேந்தன் திவாகரம்

கடலின் பெயர் குறித்து சேந்தன் திவாகரம் இருபது பெயர்களைக் குறிப்பிடுகிறது.

செந்தமிழ் அகராதி

கடல் என்றால் மிகுதி என்ற பொருளும் உண்டு என்பார் ந.சி.கந்தையாபிள்ளை.

★ சா.வை. ஸ்வாமி அய்யர், மணி அகராதி, கும்பகோணம், 1935, பக். 43-46

ச. பவானந்தம் பிள்ளை

கடல் என்றால் ஓரெண் என்பர் ச.பவானந்தம் பிள்ளை.

கடல் - இராஜ சின்னம்

கடல் இராஜ சின்னத்தொன்று என்பார் நா.கதிரைவேற்பிள்ளை.* உ.வே.சாமிநாதையர் முன்னுரையுடன் வெளிவந்த மதுரைத் தமிழ் பேரகராதியும்** இதையே வலியுறுத்துகிறது. ஆதியில் கடல் இராஜ சின்னமாகக் கருதப்பட்டது.

பிங்கல நிகண்டு

அம்பரம் துவங்கி, கார்கோள் என 50 பெயர்களைக் கடலுக்குத் தருகிறது பிங்கல நிகண்டு***

71 விழுக்காடு

பழங்கால நாகரிகங்களில் பெரும்பாலானவற்றின் புராண இலக்கியங்களில் கடல்களைப் பற்றி ஏராளமான தகவல்கள் காணப்படுகின்றன. பாற்கடல், நெய்க்கடல் சேர்ந்து 7 மாக்கடல்கள் என்று இந்துமதப் புராணங்கள் கூறும். புவியில் 71 விழுக்காடு பரப்பை (510 இலட்சம் சதுர கிலோ மீட்டர்) மாக்கடல்கள் உள்ளடக்கியுள்ளன. அதாவது 100 கோடியே 3610 லட்சம் கியூபிக் கிலோ மீட்டர் அளவுடையது.****

பூமியில் கண்டங்கள் எனப்படும் பெருநில பரப்புகளைச் சூழ்ந்துள்ள பரந்த நீர்ப்பரப்பு சமுத்திரம் (Ocean) எனப்படும்.

பண்டைக் கால சமுத்திர இயலாளர்கள் பூமி மிகப்பெரிய ஆறு ஒன்றால் சூழப்பட்ட தீவு எனக்கருதினர். டாலமியின் காலத்தில் இக்கருத்து மாறிவிட்டது. அவர் தாம் வரைந்த உலகப் படத்தில் அட்லாண்டிக், இந்து மகா சமுத்திரங்களை

---

*தமிழ் மொழியகராதி, சென்னை, 1911, ப. 355

**மதுரைத் தமிழ்ப் பேரகராதி முதல் பாகம், மதுரை, 1956, ப. 466

***பிங்கல முனிவர் செய்த பிங்கலந்தையென்னும் பிங்கல நிகண்டு, தி.சிவன்பிள்ளை உரை, சென்னை, 1890, ப.85

**** டி.கே.எஸ். மூர்த்தி, கடலில் சுரங்கம் அமைத்தல், சென்னை, 2000, பக்.12

மத்திய தரைக்கடல் போன்ற உள்நாட்டுக் கடல்களாகக் காட்டியுள்ளார்.*

குமரிக் கண்டம்

இப்போதுள்ள கடல்கள் போல் அப்போது இருக்கவில்லை. ஒரு காலத்தில் குமரிக் கண்டம் என்ற பெரிய நிலப்பரப்பு இருந்தது. அது கடலில் மூழ்கிய பிறகு இப்போதைய இந்து மகா சமுத்திரப் பகுதி ஆகிவிட்டதாக ஆராய்ச்சியாளர்கள் கருதுகிறார்கள்.

ஏழு கடல் ஏழு மலை தாண்டி அரக்கன் உயிர்நிலையை மறைத்து வைத்துள்ளான் என்று மந்திர தந்திர சிறுவர் கதைகள் படித்திருப்போம். பசிபிக் மகாசமுத்திரம், அட்லாண்டிக் மகாசமுத்திரம், இந்து மகாசமுத்திரம், ஆர்டிக் மகாசமுத்திரம் என நான்கு பெருங்கடல்கள் தாம் வரையறுக்கப்பட்டிருந்தன. அண்டார்டிகா கண்டம் உள்ள பகுதியைச் சுற்றிச் சூழ்ந்த பகுதியை வரையறுத்தது கி.பி. 2000 ஆண்டில்தான், ஐந்தாவது பெருங்கடல் என சர்வதேச அளவில் ஏற்கப்பட்டது.**

ஆர்டிக் பெருங்கடலும், அண்டார்டிக் மகாசமுத்திரமும் பனிப்படலங்களால் ஆனவை. வட துருவத்தைச் சுற்றி அமைந்துள்ள ஆர்டிக் மகாசமுத்திரமும், தென்துருவத்தைச் சுற்றி அமைந்துள்ள அண்டார்டிக் மகாசமுத்திரமும்*** பனிப்பாறைகளால் உருவாகி உள்ள இந்த இரண்டு சமுத்திரங்களும் கடல்வழிப் போக்குவரத்துக்குப் பயன்படாதவை, இவற்றை நீக்கிவிட்டுப் பார்த்தால் பசிபிக், பூகோள ரீதியாகவும் வரலாற்று ரீதியாகவும் முக்கியமான சமுத்திரங்களாகக் கருதவேண்டும்.****

---

* கலைக்களஞ்சியம் தொகுதி -4, சென்னை, 1956, ப.466.

** த.வி.வெங்கடேஸ்வரன், கடல்கள், தமிழ்நாடு அனைவருக்கும் கல்வி இயக்கம், வெளியீடு, ப.7

*** பி.சி.கணேசன், நமது கடல்கள், செய்தி ஒளிபரப்பு அமைச்சகம், இந்திய அரசு, டில்லி, 1992, ப.5

**** கு. ராஜாராம் எழுதிய அதிசய அண்டார்டிகா (2008), முகில், எழுதிய ஸ்.!, (2006), வால்டர் சலீவன் எழுதி எம்.செல்லப்பன் தமிழாக்கிய பனிக்கண்டம் (1961) ஆகிய நூல்களின் வாயிலாக அண்டார்டிகா குறித்து மேலும் அறியலாம்.

எவரெஸ்ட்டை விழுங்கும் ஆழம்

அட்லாண்டிக் சமுத்திரத்தில் போர்ட்டோரிக்கோ பள்ளம் ஐந்தரை மைல் (1 மைல் 1.6 கி.மீ.) ஆழம் கொண்டது. இது எவரெஸ்ட் சிகரத்தின் உயரத்திற்கு சமமாகும். எவரெஸ்ட்டையே விழுங்கக்கூடிய ஆழமுள்ளவை. பசிபிக் பெருங்கடலில் 32 இடங்களிலும், அட்லாண்டிக்கில் 19 இடங்களிலும் காணக்கிடைக்கிறது. இந்த ஆழமான இடங்கள் ஏதோ நடுக்கடலில் இருக்கின்றன என்று எண்ண வேண்டாம். அவை கரைக்கு அருகில்தான் உள்ளன.*

உலகக் கடல்கள்

அசாவ் கடல், அயோனிக் கடல், அரபிக்கடல், ஆரல் கடல், ஈஜியன் கடல், ஏட்ரியாட்டிக் கடல், ஐரிஷ் கடல், ஒக்காட்ஸ்க கடல், கரிபியன் கடல், கருங்கடல், காராக்கடல், காஸ்பியன் கடல், கிராண்டு பாங்க் சார் காசோக் கடல், சீனக்கடல், சூலூக் கடல், செங்கடல், டாஸ்மன் கடல், டிரினியன் கடல், டீமார் கடல், மார்கடல், தென்கடல், பவளக்கடல், பாண்டாக் கடல், பால்ட்டிக் கடல், பிஸ்மார்க் கடல், பேரிங் கடல், மஞ்சள் கடல், மத்திய தரைக்கடல், மார்மாராக் கடல், லிகூரியக்கடல், வடகடல், வெள்ளைக் கடல், ஜப்பானியக் கடல், ஜாவாக் கடல் என உலகக் கடல்களை** பட்டியலிட்டவாறே செல்லலாம்.

நிறத்தாலும் கடல்கள்

சிவப்பு நிற ஆல்கே கடல் பாசிகள் மேல்மட்ட நீரில் அதிகம் இருப்பதால் செங்கடல், தண்ணீரின் உயிர்வளியான ஆக்சிஜன் இல்லாததால் உயிர் வளம் இழந்து கருப்பாகிய கருங்கடல், மஞ்சள்நிறச் சேற்றை கடலுக்குள் கொண்டு வரும் நதிகளால் மஞ்சள் கடல், நிறமாலையில் உள்ள நீலவண்ணத்தை மட்டுமே பிரதிபலிக்கும் நீலக்கடல்கள் என நிறத்தாலும் கடல்கள் மாறுபடுகின்றன.

இந்தியப் பெருங்கடல்

இந்தியப் பெருங்கடலுக்கு மேற்கே ஆப்பிரிக்காவும், கிழக்கே ஆஸ்திரேலியாவும் உள்ளன. வடக்கே அரேபியா, இந்தியா,

---

* சம்பந்தம், உலகக் கடல்கள், சிதம்பரம், 1986, ப. 13

** கலைக்களஞ்சியம் தொகுதி – 3, சென்னை, 1956, ப. 50.

மலேசியா ஆகிய தீபகற்பங்களும், தெற்கே அண்டார்டிக் கடலும் உள்ளன.

இந்துமாக் கடல் ஆசியா, ஆப்பிரிக்கா, ஆஸ்திரேலியா ஆகிய மூன்று கண்டங்களுக்கிடையில் வியாபித்துள்ளது. இது தோற்றத்தில் நெருக்கமாய் அமைந்த கடல்.

பருவக் காற்றுகளுக்குப் பிறப்பிடம்

இந்தோனேஷியாவிலிருந்து ஆப்பிரிக்கா வரை பரவியுள்ள இந்துப் பெருங்கடல் பருவக் காற்றுகளுக்குப் பிறப்பிடமாகும். இதற்குக் கிழக்கிலும் மேற்கிலும் அரபிக்கடலும், வங்காள விரிகுடாவும் துணைக் கடல்களாகப் பரவியுள்ளது.

செங்கடலும், பாரசீக நீரோட்டமும் இதன் உள்நாட்டுச் சிறுகடல்களாக உள்ளன. இவை தவிர உலகத்துப் பெரும் சிறுகடல்கள் எல்லாம் இந்து மகாசமுத்திரத்தில் கலக்கின்றன. கங்கை, பிரம்மபுத்திரா வழியாக இமயத்தில் உருகும் பனி இதில் கலக்கிறது.

சிந்து, ஐராவதி, காவிரி முதலிய பேராறுகளும் இதில் கலக்கின்றன. ஒரு கோடியில் மட்டும் திறந்துள்ள ஒரு பெருங்கடல் இந்து மகாசமுத்திரமே, இதன் இயற்கை வளம் மதிப்பிடற்கரியதாகும். இந்தக் கடலில் ஆங்காங்கு தீவுக் கூட்டங்கள் நிறைய இருப்பதால் கப்பல் போக்குவரத்திற்கு நன்கு பயன்படுகிறது.

இந்தியக் கடல் வளம்

இந்தியக் கடற்கரையின் நீளம் சுமார் 8016 கி.மீட்டர்கள் ஆகும். இதில் 22.6 விழுக்காடு தீவுப்பகுதிகளைச் சார்ந்தது ஆகும். அரபிக்கடல், வங்காள விரிகுடா, அந்தமான் கடல் மற்றும் இலட்சத்தீவு கடல் ஆகியவை இந்தியப் பெருங்கடலில் அடங்கும். கட்ச், காம்ப்ட், மன்னார் ஆகிய மூன்று முக்கிய வளைகுடாக்களும் இந்தியப் பெருங்கடல் பகுதியில் அடங்கும்.

தமிழ்நாட்டின் கடல் வளம்

சுமார் 1060 கி.மீட்டர் நீளம் கொண்ட தமிழ்நாட்டின் கடற்கரை இந்திய கடற்கரையின் மொத்த நீளத்தில் 17 விழுக்காடு ஆகும். இதில் வங்களா விரிகுடா 355 கி.மீட்டர்

அளவிலும், பாக் ஜலசந்தி, மன்னார் வளைகுடா, அரபிக்கடல் ஆகியவை 625 கி.மீட்டர் அளவிலும் இடம் பெற்றுள்ளன.★

கடல்களும் மனிதர்களும்

மனிதன், முத்துநகை விரித்தாடும் கடலைக் கண்டான். அங்கு அலைந்தாடும் அலைகளையும் கண்டான். துள்ளும் அலைகளினிடையே வெட்டி வெட்டிக் கண் சிமிட்டிச் சுற்றித் திரியும் மீன்களைக் கண்டான், தானும் நீந்தக் கற்றான். நீந்திய அவன் நீந்தக் கற்பித்த மீனை உப்பிட்டு உணவெனக் கொண்டான். நீந்திக் களைத்துப் பக்கத்தே மிதக்கும் மரத்துண்டைக் கண்டு அதைப் பிடித்தான்.

இலைகள், பூக்கள், மரக்கட்டைகள், மிதப்பதையும், மிதந்து செல்லுதலையும் கண்ணுற்ற மனிதன் நீருக்கு இயல்பாக அமைந்துள்ள மிதக்க வைக்கும் தன்மையை உணர்ந்தான்.

அது மட்டுமா! அம் மிதப்புப் பொருள்களின் மீது வண்டு, தவளை, நீர்வாழ் பறவைகள் ஆகிய பிராணிகள் தங்குதலும், உணர்தலும் கண்டு நிலத்தில் தாம் வண்டி முதலியவற்றில் செல்லுதல் போல நீரிலும் மிதவை மீது ஊர்ந்து செல்ல முயன்றான். அம் முயற்சியின் விளைவு மிதவை, தெப்பம் ஆயிற்று. உட் குடைவுள்ள மரங்கள் நீரோட்டத்தில் மிதந்து வருதலையும், அவற்றில் பறவை முதலியவை தங்கிச் செல்லுதலையும் கண்ணுற்றுக் கட்டுமரங்கள் அன்றி மரங்கள் உட்குடைந்து ஓடங்களைச் செய்து நீரில் ஊர்ந்தான்.

இவ்வகையான இயற்கைக் காட்சியறிவே முற்கால மக்களுக்கு நீரில் செல்லும் தெப்பம், மிதவை, கட்டுமரம், ஓடம் முதலியவற்றைச் செய்து கொண்ட தொழிலறிவிற்குக் காரணம் என வரலாற்று அறிஞர்கள் கருதுகிறார்கள்.

நாளடைவில் அனுபவத்தின் பேரில் மனிதன் துடுப்பினால் தள்ளும் படகை அமைத்தான். அதற்குப் பிறகு பாய்மரக் கப்பல் தோன்றிற்று.

★ விகே. மெல்கானி, வீ.நாகநாதன், ஆர். உமாமகேஸ்வரி, மன்னார் வளைகுடா, உயிர்க்கோளப்பகத் தகவல் குறு ஏடு, இராமநாதபுரம், 2007, ப.1

பழந்தமிழர் வாணிபமும் பன்னாட்டுத் தொடர்பும்

எகிப்தியக் கப்பல்கள்

எகிப்தியர் கி.மு. 3000க்கு முன்பே கப்பல் கட்டத் தெரிந்திருந்தனர். எகிப்திய ஓவியங்களிலிருந்தும் சிற்பங்களிலிருந்தும் அவர்களுடைய கப்பல்களின் அமைப்பை அறிந்து கொள்கிறோம்.

பீனிஷியர்கள் (Phoenicians)

கப்பல் கட்டும் கலையை மேலும் வளரச் செய்த பெருமை பீனிஷியர்களைச் சாரும். இவர்கள் மிகுந்த பொருட்களை ஏற்றிச் செல்லக்கூடிய வணிகக் கப்பல்களைக் கட்டினர். இந்தியா முதலிய கிழக்கு நாடுகளுடனும், பிரிட்டன் முதலிய நாடுகளுடனும் கடல் வாணிகம் செய்தனர். இரண்டு வரிசை, மூன்று வரிசை துடுப்புக் கப்பல்களைக் கண்டுபிடித்தவர்கள் இவர்களே என்று கருதப்படுகிறது. துடுப்பு வரிசைகளை பெருக்கியதால் கப்பலின் வேகம் மிகுந்தது. (இதே காலத்தில் தமிழர்களும், சீனர்களும் கப்பல்களை கட்டிக் கடல் பயணம் செய்து வந்தார்கள்)

கிரேக்கர்கள்

கப்பல் கட்டும் கலையில் வல்லவர்களாக கிரேக்கர்கள் இருந்தனர். இவர்கள் பல தீவுகள் நிறைந்த நாட்டில் வாழ்ந்ததால் கடல் பயணம் செய்ய வேண்டியது இன்றியமையாததாக இருந்தது. ஆகவே கப்பல்கள் கட்டி அவைகளை வணிகத்திற்கும் போருக்கும் பயன்படுத்தினர். கார்த்தஜினியர்களும் (Carthaginians) ரோமானியர்களும் கிரேக்கர்களோடு போட்டியிடத் தொடங்கிய பின் இவர்களது கப்பல் கட்டும் கலை துரிதமாக வளர்ந்தது. பெரிய போர்க் கப்பல்களைக் கட்டி 4,5,6 வரிசைத் துடுப்புகளை அமைத்தனர். அக்கப்பல்களில் 170 பேர் கப்பலோட்டிகளாக இருந்தனர்.

ரோமானியர்கள்

போர்க் கப்பல்கள், வணிகக் கப்பல்கள், பிரயாணக் கப்பல்கள் என மூவகை கப்பல்களை ரோமானியர்கள் வைத்திருந்தனர். வணிகக் கப்பல்கள், பாய்மரக் கப்பல்களாக இருந்தன. அவைகள் எகிப்திலிருந்து உணவுப் பொருட்களையும்,

பளிங்குக் கற்களையும் கொண்டு வருவதற்குப் பயன்பட்டன. ரோமானியர்களின் வீழ்ச்சிக்குப் பின் கப்பல் கட்டும் கலை வட ஐரோப்பிய நாடுகளில் வளர்ச்சியடைந்தது.

14–ஆம் நூற்றாண்டில் திசைகாட்டும் கருவி கண்டுபிடிக்கப்பட்டது. இது முதல் கப்பல் கட்டும் கலை, துரிதமாக வளர்ச்சியடைந்தது. இங்கிலாந்து, பிரான்ஸ், ஸ்பெயின், ஜெர்மனி முதலிய நாடுகளில் பெரிய கப்பற் படைகள் நிறுவப்பட்டன.

அரபிக்கடல்

அரபிக் கடலின் எல்லை கோவாவில் தொடங்கி, இலட்சத் தீவுகளின் மேற்குக் கடற்கரை வழியாகப் புவியிடைக் கோட்டைத் தொட்டு பின் தென்மேற்காகச் சாய்ந்து 5^0 தெ–ல் கிழக்கு ஆப்பிரிக்கக் கடற்கரையில் மோம்பாஸா (Mombasa) என்ற இடத்தில் முடிந்து, வடக்கு நோக்கிச் சோமாலியக் கடற்கரை வழியாகச் செல்கின்றது.

வடக்கில் அரேபியத் தீவக்குறையின் தெற்குக் கடற்கரையும் பாகிஸ்தானும் எல்லைகளாக உள்ளன.

ஏடன் வளைகுடா $51^0 15$கி. நெடுங்கோட்டாலும், ஓமன் வளைகுடா, ஓமனில் ராஸ் லீமா (Raslimh) விலிருந்து ஈரானின் ராஸ் அல்கட் (Rasalkuh) வரை வரையப்பட்டும் கோட்டாலும் அரேபியக் கடலிலிருந்து பிரிக்கப்படுகின்றது. இலட்சத் தீவுகளுக்கும் இலங்கைக்கும் இடையே உள்ள நீர்ப்பகுதியை இலட்சத் தீவுக்கடல் என்பர்.

அரேபியக்கடலின் வடமேற்குப் பகுதியில் உள்ள அரேபியர்கள் முதலில் இக்கடல் பற்றித் தெரிந்து கொண்டவர்கள் ஆவர். இக்கடலின் பரப்பு 74,56,000 ச.கி.மீ. ஆகும். பருவ கால மாற்றங்கள் இக்கடலிலும் பெருமளவில் பாதிக்கின்றன.

அரேபிய வணிகர்கள் தாம் இக்கடலில் பன்னெடுங்காலம் பல கடற்பயணங்களை மேற்கொண்டவர்கள் ஆவார்கள். இதனால் தான் அரேபியர்களை வைத்தே இக்கடலுக்கு அரேபியக் கடல் (அரபிக் கடல்) என்ற பெயர் வரலாயிற்று.★

★ச. சுப்பையா, பேராழியியல், தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம், 604–வது வெளியீடு, சென்னை. ப.32.

அரேபியா

அரேபியாவை மூன்று திசைகளில் **கடலும்**, நான்காவது திசையில் **மணலும்** சூழ்ந்த ஒரு தீவாகவும் கருதலாம். அதன் பெரும்பகுதி பாலையாகும். கடற்கரைப் பகுதிகளில் மக்கள் வாழ்ந்தார்கள். ஆப்பிரிக்காவில் தொடங்கி, ஆசியாக் கண்டத்தில் ஈரான் நாட்டின் இடைப்பகுதி வழியே நீண்டு கோபிப்பாலை வரை பரந்து கிடந்த சகாராப்பாலை வரை பரந்து கிடந்த சகாராப் பாலைவனத்தின் தொடர்ச்சியாகவே அரேபிய மணல் வெளி இருந்தது. பிற்காலத்தில் நைல் ஆற்றுப் பள்ளத்தாக்கும், செங்கடலும் அதனைப் பிரித்தன.

அரேபியாவின் நிலப்பரப்பு அமெரிக்க ஐக்கிய நாடுகளின் நிலப்பரப்பில் மூன்றில் ஒரு பகுதியும், ஐரோப்பாவின் பரப்பில் நான்கில் ஒரு பகுதியும் ஆகும்.

அரேபியாவின் மேலைக்கரையையொட்டி தெற்கு வடக்காக ஒரு மலைத்தொடரும், அதன் கிழக்கில் பல்வேறு உயரங்களில் மேட்டு நிலங்களும் உள்ளன.

மலையும் நிலமேடும் நீங்கலாகப் பாலைநிலமும் புல்வெளியுமாகவே அரேபியா நாடு காட்சியளிக்கிறது. கிழக்கிலும் மேற்கிலும் உள்ள குறுகிய கடல்களால் நாட்டின் வெப்பத்தை குறைக்க முடியவில்லை.

தென்கடலிலிருந்து வீசும் பருவக்காற்றும், அது சுமந்துவரும் மழைமுகிலும் கடற்கரைப் பகுதியின்றி உள்நாட்டிற்குப் போதுமான நீர்வளத்தை அளிக்கவில்லை.

வற்றாத ஆறுகளோ, ஏரிகளோ அரேபியாவில் இல்லை. சிறு குளங்கள், நீருற்றுகள் உண்டு. பாலைவனச்சோலைகள், மக்களும், மிருகங்களும் வாழ்வதற்கான உணவுப் பொருட்களை வழங்கின. பசும்புல் தரைகள், பேரீச்சம்பழத்தோட்டங்கள், கோதுமை, பார்லி விளையும் கழனிகள் அங்கு உண்டு. மலையில் காப்பியும், பழங்களும் விளைகின்றன.

ஜஸீரதுல் அறப்

அரேபியர் தாம் வாழ்ந்த பூமியை ஜஸீரதுல் அறப் (அரேபியத் தீபகற்பம்) என்று அழைத்தனர். உலகில் வாழ்கின்ற அனைத்து

மக்களைவிடவும் தாமே பேச்சாற்றல் மிக்கவர்கள் என்று அரேபியர்கள் பெருமைப்பட்டனர். இதனால் அவர்கள் தம்மை அறப் (பேச்சாற்றல் உடையவர்கள்) என்று அழைத்தனர்.*

மக்கள் வாழ்ந்த இடம் **அறபு** இலக்கியங்களில் அரபா (Arabah) என்று அழைக்கப்பட்டது. செமித்திய மொழியில் இப்பதம் **'பாலைவனம்'** எனும் பொருளைத் தருகின்றது. இத்தீபகற்பம் பாலைநிலம் என்பதால் இப்பெயரால் அழைக்கப்பட்டது. பண்டைய கவிதையில் அரேபியா – அறபா என்று அழைக்கப்படுகிறது.**

செமித்திய இனத்தவரான அராபியரை அரப் அல்பாஇதா, அரப்அல்ஆரியா, அரப் அலி முஸ்தஃரிபா என்று மூன்று குழுக்களாக வரலாற்றாசிரியர் வகைப்படுத்துவர்.

காடுகள் - அரபுக் குதிரைகள்

நாட்டுக் காடுகளில் அழகிய மான்கள், காட்டுப் பசுக்கள் வாழ்கின்றன. ஒட்டகங்கள், **புகழ்பெற்ற அரபுக்குதிரைகள்,** வலிமைமிக்க கழுதைகள், கொழுத்த ஆடுகள் அரபு மக்களின் செல்வங்களாகும்.

எண்ணெய் வளம்

நீர்வளமில்லாத குறையை நிவர்த்தி செய்கின்ற வகையில் நாட்டில் எண்ணெய் வளம் (பெட்ரோல்) உள்ளது.

அல்யாமன் - ஆசிர்

மேலைக்கரையில் அல்யாமன் – ஆசிர் இடங்களில் பருவமழையின் காரணமாய் கடற்கரையிலிருந்து 320 கி.மீ. தூரத்திற்கு உள்நாட்டில் பயிரிடக்கூடிய வளமான பகுதிகள் உள்ளன.

அரபத் - அரப்

'அரபத்' என்னும் வார்த்தையின் சுருக்கம் **'அரப்'**.

★★முகம்மத் றிழா, முகம்மது (ஸல்) 1961, கெய்ரோ, நான்காம் பதிப்பு, பக்கம் 8.

★ *ShibliNu'Mani, SeerathunNabi, 1979, Lahore Volume I, Page 93.*

ஷாமி பாஷையில் அரபத் என்னும் பதத்திற்கு காடு, வனாந்திரம் என்பது அர்த்தம். அரப் தேசத்தின் பெரும்பாகமானது காடும் வனாந்திரமுமாயிருப்பதனால் அந்நாட்டிற்கே அப்பெயர் வழங்கப்பெற்றது. ★

பிலிப் கே.கிட்டி

அரபு மக்களின் வரலாற்றை அறிந்து கொள்ள பிலிப் கே.கிட்டியின் நூலை அவசியம் படித்தாக வேண்டும். **'History of the ARABS from the earliest Times to the present'** என்னும் 822 பக்கங்களைக் கொண்ட ஆங்கில நூலை 1937இல் Philp K.Hitti நியூயார்க்கிலிருந்து வெளியிட்டார். அது சிறந்த நூல். பல பதிப்புகளை கண்டுள்ளது. இதில் இரண்டாவது அத்தியாயத்தில் அரேபியக் குதிரைகளைப் பற்றி அழகுறச் சொல்லியிருப்பார்.

நஜ்து (Najd)

அரேபியாவின் நஜ்துப்பிரதேசம் குதிரை வளர்ப்பிற்கு பிரதானமானது. 'This animal, for Which Najd is famous'★★

குதிரை

அரேபியக் குதிரை அழகும் கூர்மையான புத்தியும், எஜமானுக்காகத் தன்னை அர்ப்பணம் செய்யும் பண்பும் கொண்டது. ஒட்டகம் சாதாரண குடிமக்களின் சொத்தாக இருந்தது. எனினும் குதிரை பணம் படைத்தவர்களின் சொத்தாகவே இருந்தது. வேட்டையாட, துரித கதியில் செல்ல, விளையாட்டுப் போட்டிகளில் போர்க்களங்களில் பெருமளவில் பங்கு கொள்ள குதிரை பயன்பட்டது.★★★ அரேபியாவின் குதிரைகளோ, வடிவத்திலும், வேகத்திலும் உலகத்திலேயே நிகரற்றவை.

★மௌலவி ஹாஜி, தொ.கு. அப்துல்கரீம் பாகவி, திரு.மதீனாவின் சரித்திரம், பள்ளபட்டி, 1961, பக்கம் 2

★★ பிலிப் கே. கிட்டி முற்கூறிய நூல் பக்கம் 20, 1964வது ஆண்டையப் பதிப்பு

★★★ எம்.ஐ.எம். அமீன், அரேபியர் வாழ்வியல் இஸ்லாத்துக்கு

முற்பட்டகாலம், பேராதனை, கொழும்பு, 2011, பக்கம் 20)

வி.டி.செல்லம்

அரேபியர்களுக்கு குதிரை மிகவும் பிடித்தமானது என்பார் பேராசிரியர் வி.டி.செல்லம்.★

ஒட்டகமும், குதிரையும் அராபியர் வாழ்வில் முக்கிய பங்கு வகிக்கின்றன என்பார் நா.ஜெயபாலன்.★★

அரபு உலகம் - ஹெச்.சி. ரசூல்

அரபு உலகம் தன்னகத்தே இருபத்தி இரண்டிற்கும் மேற்கொண்ட நாடுகளைக் கொண்டு இயங்குகிறது. மேற்கில் மௌரிடேனியாவில் துவங்கி கிழக்கில் ஓமன் வரையிலும் நீண்டு கிடக்கிறது. அரேபியாவை உள்ளடக்கிய ஆசியப்பகுதி 'மஷ்ரக்' (Mashreq) என அழைக்கப்படுகிறது.★★★

எல்லைகள் - டாக்டர் க.மு.அ. அஹ்மது ஜுன்பர்

மேற்கிலே வட ஆப்பிரிக்கா
கிழக்கிலே ஓமன்
வடக்கிலே சிரியா
தெற்கே சூடான் வரையும்
விரிந்துள்ள அரபு நாடுகள்★★★★

★ *V.T.Chellam, A History & Civilization of the Arabs, Madras, 1984, Page 2 Price Rs.10, Book Totally 108 Pages.*

★★*நா.ஜெயபாலன், அராபியர்களின் வரலாறு, சென்னை, பக்கம் 4.*

★★★ *ஹெச்.சி.ரசூல், அரபு மார்க்சியம், சென்னை, 2006, பக்கம் 9.*

★★★★ *டாக்டர் க.மு.அ. அஹ்மது ஜுன்பர், நவீன அரபுலகக் கவிதைகள், சென்னை, 2010, முன்னுரை பக்கம் V.*

அரேபியரின் வணிகம்

அரேபியர் கிறிஸ்து ஈசா (அலை) பிறப்பதற்கும் 3500 ஆண்டுகளுக்கு முன் பிறைச்சந்திரன் வடிவில் அமைந்த வளமிக்க நாட்டில் (Fertile Crescent) குடியேறி பாபிலோனியர்களாகவும், அசிரியர்களாகவும், பினீசியர்களாகவும், ஹுப்ருக்களாகவும் நாகரீக வரலாற்றில் இடம் பெற்றனர்.

கி.மு.1200 - அல்யாமன்

அரேபியாவின் பண்டைய வரலாறு அல்யாமன் பகுதியில் கி.மு.1200க்கு முன்னால் தொடங்குகிறது. மன்னர்களின் பெயர்கள் பாபிலோனிய எழுத்துப் பொறிப்புக்களில் குறிக்கப்பெற்றுள்ளன.

கி.மு.950 - சபா (Saba)

நாகரிகம்பெற்றவர்களாக முதன் முதலில் அரேபியாவில் திகழ்ந்தவர்கள் சேபியர்கள் (Sabeans) கி.மு. 950க்குப் பின்னால் அணைகள்கட்டி, நீர்த்தேக்கிப் பாசனத்திற்கு ஏற்பாடுகள் செய்தனர்.

தென் அரேபியர்கள்

நல்லதோர் வாழ்க்கையினை நடத்திய சேபியர்களின் நாகரீகத்தின் அடிப்படையாக வேளாண்மையும் வாணிபமும் இருந்தது.

வலிவும் பொலிவும் பெற்றுத்திகழ பல வணிகமார்க்கங்களைக் கண்டனர். கீழை நாடுகளுக்கும் மேல்நாடுகளுக்கும் இடையே நடைபெற்ற வணிகம் முழுவதும் தென் அரேபியர்கள் கைகளில் இருந்தது.

அல்ஹிஜாஸ்

வளமற்ற வறண்டபகுதி அல்ஹிஜாஸ் அது அல் யாமனைச் சிரியா நாட்டோடு இணைத்த நறுமணச் சரக்குப் பாதையில் (Spice Road) மக்கா – மதீனா நகரங்கள் அமைந்திருந்தன. முக்கிய வாணிபப் பாதையில் அமைந்திருந்த அல்ஹிஜாஸ் வாணிக நடவடிக்கைகளுக்கு ஈடு இணை இல்லாத வாய்ப்பினைப் பெற்று விளங்கிற்று.

கிரேக்க இலக்கியம்

கிரேக்க இலக்கியம் **Historia Plantarum** Book IX, Chapter 4, Page 2, Theophrastus (288 B.C.) அரேபிய சேபியின்கள் (Sabaeans) பிறபகுதிகளோடு கொண்டிருந்த வணிகத்திற்கு சான்று பகர்கிறது.

இந்திய வாள்

சீனாவிலிருந்து பட்டும் (Silk From China) **இந்தியாவிலிருந்து வாட்களும்** Swords from India இதர பொருட்களும் வணிகத்தில் இருந்தது.*

பெரிப்ளுஸ்

The Periplus of the Erythraean sea எனும் நூல் (A.H. 50 & 60) Translated by W.H. Schoff, Newyork, 1912, Page *24* இல் மக்கா நகரில் நடந்த வாணிபம் பற்றி குறிப்பிடப்பட்டுள்ளது.

மக்கா

அல் – ஹிஜாஸ் பிரதேசத்தில் மக்கா புராதன நகரமாகும்.

‘பக்கா’ – உம்முல்குரா (நகரங்களின் தாய்) என்று அழைக்கப்பட்டது.

‘பிவாதின் கைரதீ ஜர்யீன்’ (விவசாயத்திற்கு தகுதியற்ற பள்ளத்தாக்கு)** என்றும் குறிப்பிடப்படுகிறது.

ஹஜ்ஜுக்காக அங்கு சென்று கொண்டிருந்த மக்கள் பலர் அங்கு குடியேறி அந்த ஊர் **நெருக்கடியானதாக** ஆகிவிட்டபடியால் அதனை ‘பக்கா’ என்றனர். அது நாளடைவில் ‘மக்கா’ ஆகியது.

திசையை வணங்குதல் இல்லை

‘திக்கு நோக்கித்தொழும் துருக்கர்’ என்று மகாகவி பாரதி பாடியுள்ளார். ஆனால் மக்காவில் கஃபாவில் **மிஹ்ராப்** (முன்நின்று தொழவைப்பவர் நிற்குமிடங்கள் கிடையாது)

★ *Philip K. Hitti, History of the Arabs, Eight Edition, 1964, Newyork, Page 49.*

★★ திருகுர்ஆன் அத்தியாயம் 14, இப்ராஹிம் 37வது வசனம்.

மக்கள் எத்திசையிலும் நின்று அங்கு இறைவணக்கம் புரியலாம். மதீனா வாசிகள் தெற்குத் திசையிலும் அரபாத், மினா, முஸ்தலிபா, ஜித்தாவாசிகள் வடக்கு திசையிலும், இந்தியர்கள் மேற்குத் திசையிலும் அவ்ஆலயத்தை நோக்கித் தொழுது வருகிறார்கள்.★

அப்ரஹா - Abrahah

கி.பி. 570 – 571இல் அபீசீனியா நாட்டின் இராஜப்பிரதிநிதி அப்ரஹா கஃபாவை இடிப்பதற்கு 60,000 அறுபதாயிரம் போர்வீரர்களுடன் 13 யுத்த யானைகளுடன் படையெடுத்ததையும், பின் அப்ரஹா தோற்று ஓடியதையும் சரித்திரச் சான்றுகள் பகர்கின்றன. பிலிப் கே.கிட்டியும் தமது முற்கூறிய தமது நூலில் பக்கம் 64இல் அதனை உறுதிப்படுத்துகிறார்.

அண்ணல் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இப்புவியில் அவதரிக்கும் முன்பே அரேபியா உலகின் பல பகுதிகளோடு தொடர்பு கொண்டிருந்ததற்கு எண்ணற்ற சரித்திரச் சான்றுகள் உள்ளன.

தென் அரேபியா

தென் அரேபியாவின் வளமிக்க கடல்சார்ந்த நாகரீகம் இந்தியாவையும் ஆப்பிரிக்காவையும் இணைத்தது என்பர் பேராசிரியர் தி.வை.சொக்கப்பா.★★

கஃபா

புனித கஃபா (சதுரத்திண்மம்) அரபு வர்க்கத்தினர் நடுநிலையமாக விளங்கியது. அரபு மக்கள் வியாபாரத்திற்காக அங்கு வந்தனர்.★★★

கடற்கரைப் பிரதேச மாகாணங்கள்

அல்ஜஸூரத்துஸ்ஸூனா தீபகற்பம், பாலஸ்தீனம், ஸிரியா, இராக், உம்மான் ஹல்ரமௌத்து, பஹ்ரைன், யமன், அஸீர்,

---

★ அல்ஹாஜ் வி.எம்.ஏ. பாச்சா ஜான், முதல் ஆலயம், திருகுர்ஆன் மன்றம், திருச்சிராப்பள்ளி, 1975, பக்கம் 3.

★★ அரபு மக்களின் வரலாறு, சென்னை, 1977, பக்கம் 9.

★★★ எம்.எம். உவைஸ், மக்காப் பயணம், சென்னை 1987, பக்கம் 49.

ஹிஜாஸ் ஆகிய பத்துமாகாணங்கள் கடற்கரைப் பிரதேச மாகாணங்கள் ஆகும்.

ஸீனா

ஸீனா ஒரு பக்கம் தரை மூன்று பக்கம் நீரினால் சூழப்பட்ட தீபகற்பம். வடக்கில் மத்திய தரைக்கடல், தெற்கில் செங்கடலும் உள்ளது.

பாலஸ்தீனம்

ஷாம் மாகாணத்தின் ஒரு பகுதியாகத் திகழ்ந்த பாலஸ்தீனத்தில் உக்கா, ஹைபா, யாபா, அஸ்க்கலான் துறைமுகப்பட்டினங்கள் இருந்தன.

சிரியா (ஷாம்)

பீருத், லாதிக்கியா, திருப்போலி, இஸ்கந்தரூனா, சூர், ஸைதாஉ துறைமுகப்பட்டினங்கள் இருந்தன.

இராக்

தஜ்லா, புராத், தயால் என்ற மூன்று பெரிய நதிகள் இங்கு உள்ளன.

பஹ்ரைன்

ஹிஜ்ரு என்னும் அல்ஹஸாஉ- அல் இஹ்ஸாஉ என்றும் அழைக்கப்பட்ட கடல் பஹ்ரைனின் கிழக்கில் பார்ஸீக்குடாக் கடல் உள்ளது. கடலில் இருந்து முத்துக்கள் எடுக்கப்படுகின்றன.

உம்மான்

ஹிந்துமகா சமுத்திரத்தின் கிளையாகிய உம்மான் கடற்கரையில் இது உள்ளது. கிழக்கில் உம்மான் கடல் எல்லையாக உள்ளது. இங்கு முத்து எடுத்திடும் பணி சிறப்பாக நடக்கிறது.

ஹலர மௌத்து

யமன் நாட்டின் ஒரு துண்டுப்பகுதி இது. தெற்கிலும், கிழக்கிலும் இந்து மகாசமுத்திரம் உள்ளது. தூரமான அயல் நாடுகளுக்குச் சென்று வணிகம் புரிதல் இவர்களது பிரபலமான தொழிலாகும்.

யமன்

'தெற்கு' என்று பொருள் தருவது யமன் அரேபியத் தீபகற்பத்தின் தெற்கே அமைந்திருப்பதால் இப்பெயர் வந்தது. பண்டைக்காலத்தில் இந்தியாவுக்கும் யமன் நாட்டுக்குமிடையே பண்டமாற்று வர்த்தகத் தொடர்பு இருந்தது என்பதற்கு சரித்திரச் சான்றுகள் உள்ளது. ஏடன், ஹுதைதா, மகா இங்குள்ள துறைமுகப்பட்டினங்களாகும்.

அஸீர்

செங்கடற்கரையில், ஹிஜாஸுக்கும் யமனுக்கும் மத்தியில் உள்ளது அஸீர். மலைகள் மிக உயரமானவை, பிரயாணத்திற்கு பேரிடர் தருபவை. எனவே கஷ்டம் என்று பொருள்தரும் அரபிச் சொல்லான அஸீர் என்று இப்பகுதி அழைக்கப்பட்டது. அல்கன்பது, மைதீ இரண்டு துறைமுகப்பட்டினங்கள்.

ஹிஜாஸ்

அரேபிய நாட்டின் தென்மேற்கில் செங்கடலோரமாய் உள்ள நீண்ட பிராந்தியம் ஹிஜாஸ். இஸ்லாம் இங்குதான் தோன்றியது. அண்ணலார் (ஸல்) பிறந்த மக்காவும், அவர்கள் அடங்கப் பெற்றிருக்கும் மதீனாவும் (யத்ரீப்) இம்மாகாணத்திலே இருக்கின்றன. நபிகள் நாயகம் (ஸல்) அங்கு விஜயம் செய்து வாழ்ந்தபோது அதன் பெயர் மதீனத்துந்நபி (தீர்க்கதரிசியின் பட்டணம்) என்றாகி, அது நாளடைவில் அல்மதீனா என்று ஆயிற்று.

ஜித்தா, ராபிக், எம்போ, வஜ்ஹு, ஹௌரா, அக்பா, லைத் இங்குள்ள துறைமுகப்பட்டினங்கள் ஆகும். **ஜித்தா** துறைமுகம் வழியாகவும் செங்கடற்கரையிலுள்ள **யம்போத்** துறைமுகம் வழியாகவும் மதீனாவிற்குள் செல்லமுடியும்.

ஜித்தாவிலிருந்து கடல்வழியாக யம்போத் துறைமுகம் சேரலாம்.

ஹரம் – புனிதப் பகுதி

மலைகளால் சூழப்பட்ட மக்கா நகர் விவசாய பூமியல்ல. கஃபா எனும் புனித தலத்தைக் கொண்டிருந்த அந்நகர் வர்த்தக நிலையமாகவே வளர்ச்சி கண்டது. மக்காவில்

மக்களுக்கு கொடுமை இழைப்பது வரலாற்றுக் காலம் முதல் தடுக்கப்பட்டிருந்தது. எனவே அங்கு மக்கள் அச்சமின்றி கூடினர். **ஏமனுக்கும் சிரியாவுக்கும் செல்லும் வர்த்தக பாதைக்கும் அபிசீனியாவுக்கும் ஈரானுக்கும் செல்லும் வர்த்தகப் பாதைக்கும்** அருகே மக்கா அமைந்திருந்தது.

ஆதலால் ஏமன், சிரியா, அபிசீனியா, ஈராக் நான்கு நாடுகளில் இருந்து பெறக்கூடிய பொருட்களை மக்காவில் வாங்க முடிந்தது.

ஜம் ஜம் கிணறு

எப்போதும் வற்றாத ஜம் ஜம் கிணறு அங்கிருந்ததால் போதிய நீர் வசதி வர்த்தகக் குழுவுக்கு கிடைத்தது. எனவே மக்கா பிரசித்திபெற்ற வர்த்தகச் சந்தையாக வளர்ந்தது.

ஹாசிம்பின் அப்துல் மனாப்

அண்ணல் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களது பாட்டனாரான ஹாசிம் பின் அப்துல் மனாப் மக்காவில் முதன் முதலில் வர்த்தகத்தில் பங்கு கொண்டவர் ஆவார். இவரது காலத்தில் உரோம – பாரசீகர்களுக்கிடையே பகைமை முற்றியது. எனவே தென் அரோபியாவினூடாக செங்கடற்கரை ஓரமாக சிரியா முதலிய நாடுகளுக்கு சென்ற வர்த்தக பாதை அரேபியரின் கட்டுப்பாட்டின் கீழ் வந்தது.

சீசரதும் குசரோவதும் பாதுகாப்பு உத்தரவாதம்

புனிதப் பயணக் காலங்களில் மக்காவிற்கு வருவோரை உபசரித்து அனுப்புவதால் குரைஷியர் வர்த்தகக் குழுக்களுக்கு பிற அரபுக் கோத்திரங்கள் பாதுகாப்பை வழங்கினர். இது தவிர்த்து சில பாதைகளில் வர்த்தகக் குழுக்ககள் பாதுகாப்பாகச் செல்ல அயல் அரசுகளுடன் ஒப்பந்தம் செய்து கொண்டனர். இது சீசரதும் குசரோவதும் பாதுகாப்பு உத்தரவாதம் (Guarantee of the Caeser and the Khusaraw) என்றழைக்கப்பட்டது.[*]

மூன்று சகோதரர்கள்

ஹாசிம் பின் அப்துல் மனாப் 'கஸ்ஸானி' சிற்றரசுடனும், தனது சகோதரர் அப்துல் முத்தலிப் யெமனுடனும், நவ்பல்

---

[*] *Eneyclopaedia of Islam Vol. iii, Articale Mecca*

ஈராக், ஈரான் நாடுகளுடனும் தத்தம் வர்த்தக உறவுகளை வலுப்படுத்தி சிறந்த வர்த்தகர்களாகத் திகழ்ந்தனர்.[*]

சீசர்

அபிசீனிய மன்னன் நஜ்ஜாசிற்கு ஹாசிமை அறிமுகப்படுத்தும் கடிதம் ஒன்றை சீசர் வழங்கினார்.[**]

ஹாசிம் தன் சகோதரர் அப்துஷ்ஷம்ஸ் மூலம் அக்கடிதத்தை அபிசீனிய மன்னரிடம் அளித்து தனது வணிகத்தை பெருக்கிக்கொண்டார். அபிசீனியாவிற்கு ஹிஜாஸில் இருந்து தரைமார்க்கமாகச் சென்ற பாதை பாலஸ்தீனம், எகிப்து ஆகிய நாடுகளுடாகவே சென்றது.

மழைக் காலத்தில் யெமனுக்கும் கோடை காலத்தில் சிரியாவிற்கும் அரேபிய வர்த்தக குழுக்கள் சென்றன. யெமனில் வாங்கிய பொருட்களை எகிப்து, சிரியா சந்தைகளில் விற்றனர்.

வாசனைத் திரவியம் - பட்டு

கிழக்கின் வாசனைத் திரவியங்களுக்கும் பட்டு (சீனா) முதலிய பொருட்களுக்காக உரோமர்கள் அரேபியாவில் தங்கியிருந்ததால் அரேபியரின் வணிகம் செழித்து வளர்ந்தது. மக்காவிலிருந்து பாலைவனங்களைக் கடந்து செல்லும் வணிகக் குழுக்களில் 2500க்கும் அதிகமான ஒட்டகைகள் 300க்கும் அதிகமான வர்த்தகர்கள் இடம் பெற்றனர்.[***]

ஏ. அமீன்

உரோமர்களும், அபிசீனியர்களும் தத்தம் வர்த்தக நலன்களைப் பேணுவதற்காக மக்காவில் தங்கியிருந்ததை வரலாற்றாசிரியர்கள் உறுதிப்படுத்துகின்றனர். [****]

★*M.H.Hykal, The Life of Muhammed, Nigerai, 1982, Page 36.*

★★ *I.M. Raana, Economic System Under Umar the great, Lahore, 1987, Page 29.*

★★★ *S.A.Q. Hussaini* (கல்கத்தா பல்கலைக்கழக விரிவுரையாளர்) *Arab Administration, 1976, Page 11.*

★★★ *A.Ameen, Fajrul Islam, Cairo, 6th Edition, 1950, Page 10.*

ஊகிய்யா - தீனார் - திர்ஹம்

அரேபியாவில் ஊகிய்யா (Auqiyab) தீனார், திர்ஹம் என்னும் நாணயங்கள் வழக்கில் இருந்தன. ஊக்கியா 40 திர்ஹம்களுக்கு சமமான தீனார் உரோமரிடம் வழக்கில் இருந்த தங்க நாணயம் 1 தீனார் 12 திர்ஹம்களுக்கு சமமாகக்க கருதப்பட்டது திர்ஹம், பாரசீகரிடையே வழக்கில் இருந்த வெள்ளி நாணயம் ஆகும்.*

மூன்று பாதைகள்

இந்தியாவிலிருந்து செல்ல மூன்று பாதைகள் இருந்தது. அரேபியாவின் கீழைக் கடற்கரையேரமாகச் சென்று செங்கடலை அடைந்தது. இது மிக முக்கியமான முதலாவது பாதை.

சிந்து நதியின் முகவாயிலிலிருந்து புறப்பட்டுப் பாரசீக வளைகுடா, யூப்ரட்டீஸ் நதிவரை சென்று, பின்னர் அங்கிருந்து இரண்டாகப் பிரிந்து ஒரு பாதை அரேபியாவிற்கும் மற்றொரு பாதை லெவண்டின் துறைமுகத்திற்கும் சென்றது. இது இரண்டாவது பெரும் பாதை.

சிந்து வெளியிலிருந்து புறப்பட்டு கைபர், போலன் கணவாய்களைக் கடந்து பாக்திரியா, கான்ஸ்டாண்டின் நோபிள் வரை சென்றது மூன்றாவது பாதை.

ஹிராடட்டஸ் (கி.மு. 484 - 408) Herodotus

இந்தியர்கள் – பருத்தி உடைகளை அணிந்திருந்தனர். தங்களது கரங்களில் மூங்கில் வில்லையும், இரும்பு முனையைக் கொண்ட அம்புகளையும் கொண்டிருந்தனர். **அர்டாபேடஸின்** (Artabates) மகன் **பர்னஸாத்ரிஸ்** (Pharnzathres) என்பவரது தலைமையில் படையெடுப்பில் கலந்து கொண்டதை வரலாற்றின் தந்தை ஹிராடட்டஸ் பதிவு செய்துள்ளார்.**

★ *I.M.Raana, Economic System, Under Umar the great, Lahore, 1987, Page 139.*

★★*Herodotuhs Histories, Translated with notes by George* ***Rewilnson*** *with an Introduction by Tomcriffith, Words worth Classisc of world,Literature, 1996, Page 539.*

ஜெர்க்ஸிஸ் (Xerxes) (கி.மு. 486 - 455)

பலேத்தியா என்னுமிடத்தில் நடந்த போரில் கிரேக்க **மார்தோனியசின்** படைகளை, பாரசீகத்தரப்பில் முதலாம் **தாரியசின் மகன் ஜெர்க்டைஸ்** தரப்பில் நின்று இந்திய வீரர்கள் வீர உணர்ச்சியோடு போராடியதை வரலாறு சுட்டிக்காட்டுகிறது.*

வணிகமும் கடற்பிரயாணமும் (Trade and Navigation)

கி.மு. முதல் நூற்றாண்டிலேயே மௌரியப் பேரரசு காலத்தில் இந்திய - ரோமானியர்களுக்கிடையே வர்த்தகத் தொடர்பு இருந்தது. **நாகார்ஜுனகொண்டா** (Nagarjunikonda) கல்வெட்டுகளிலும் **மலிந்த பன்ஹா** (மினாந்தரின் கேள்விகள்) என்ற நூலிலும் இதுபற்றிய குறிப்புகள் உள்ளன.**

தமிழகத்தில் தொன்மைக்குடி

உலகில் தொன்மைக்குடியான தமிழர்கள் கடல் கடந்து சென்று பிறநாடுகளுடன் வணிகம் புரிந்தனர்.

தொல்காப்பியம்

ஏறத்தாழ ஏழாயிரம் எட்டாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட பழந்தமிழரின் வாழ்வியல் பேசும் இலக்கண நூலான தொல்காப்பியத்தில் பொருளதிகாரத்தில் அகத்திணை இயலில் 34வது சூத்திரத்தில்,

முந்நீர் வழக்கம் மகடூஉவோடு இல்லை

கடல் வழிப்பயணத்தில் பெண்களை அழைத்துச் செல்வதில்லை என்று வருகிறது.

திரைகடலோடியும் திரவியந்தேடு

'திரைகடலோடியும் திரவியந்தேடு' எனும் மூதுரைக்கு ஏற்ப தமிழர்கள் கடல் தாண்டிச் சென்று பொருள் ஈட்டினர்.

---

* கோ. தங்கவேலு, இந்திய வரலாறு கி.பி.1206 வரை, சென்னை 1976, பக்கம் 178.

** *R.C.Majumdar, H.C.Ray Chaudhuri, Kalikinkar Datta, An Advanced History of India Part I, Ancient India, Macmillan, 1988, Page 129.*

ந.சி.கந்தையா பிள்ளை

பழங்காலத்தில் மேற்கு நாடுகளோடு கடல் வழியாக வாணிகம் செய்தவர்களில் தென்னிந்தியர்களே அதிகப்பங்கு வகித்தார்கள் என்பர் ந.சி.கந்தையாபிள்ளை.[*]

திருக்குறள்

தித்திக்கும் திருக்குறளில் 496வது பாடல், நிலத்தில் ஓடும் வலிய உருளைகள் கொண்ட தேர் கடலில் ஓடாது என்ற கருத்துள்ளது.

'கடல் ஓடாகால்வில் நெடுந்தேர் கடல் ஓடும்
நாவாலும் ஓடா நிலத்து'

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே தமிழகத்தில் கப்பல்கள் இருந்தன என்பதற்கு திருக்குறளே சாட்சியாகும்.

சங்க இலக்கியம் - புறநானூறு

சோழன் நலங்கிள்ளியை உறையூர் முதுகண்ணன் சாத்தனார் பாடிய புறநானூறு 30வது பாடல், வெண்ணிக்குயத்தியார் சோழன் கரிகால் பெருவளத்தான் மீது பாடிய புறநானூறு 66வது பாடல், மலையான் திருமுடிக்காரியை மாறோக்கத்து நப்பசலையார் பாடிய புறநானூறு 126வது பாடல், குன்னூர் கிழார் மகனார் பாடிய புறநானூறு 338 வது பாடல், பரணர் பாடிய புறநானூறு 343வது பாடல் மரக்கலங்கள் நாவாய்கள் – வணிகம் பற்றி பேசுகின்றன.

அகநானூறு

வெள்ளாடியனார் பாடிய அகநானூறு 29வது பாடல், எருக்காட்டூர் தாயங் கண்ணனார் பாடிய அகநானூறு 143வது பாடல், மாமூலனார் பாடிய அகநானூறு 187வது பாடல், மதுரை மருதன் இளநாகனார் பாடிய அகநானூறு 255வது பாடல், கப்பல் – வணிகம் பற்றிய செய்திகளைத் தருகிறது.

பட்டினப்பாலை

கடியலூர் உருத்திரங்கண்ணனார் கரிகாற்சோழனைப் பாடிய பட்டினப்பாலை பாடலைச் சொல்லாதவர் இல்லை.

நீரின் வந்த நிமிர்பரிப்புரவி....

★ *தமிழர் பண்பாடு, சென்னை, 1966, பக்கம் 42*

கடல்வழியே வந்த குதிரைகள்

இடையூறு சிறிதுமின்றிப் பிற நாட்டிலிருந்து கடல்வழியே நாவாயிற் கொண்டு வந்த நிமிர்ந்து விரைவாய்ச் செல்லுங் குதிரைகள் பற்றி பட்டினப்பாலை பேசுகிறது.

மதுரைக் காஞ்சி

தலையாலங்கானத்துச் செருவென்ற பாண்டிய நெடுஞ் செழியனை மாங்குடி மருதனார் பாடிய மதுரைக்காஞ்சி நாவாய்கள் பற்றியும், வணிகம் பற்றியும் பேசுகிறது.

பெரும்பாணாற்றுப்படை

கடியலூர் உருத்திரங்கண்ணனார் பாடிய பெரும்பாணாற்றுப் படை கடல் வணிகம் பற்றி பேசுகிறது.

சிலப்பதிகாரம்

இளங்கோ அடிகள் பாடிய சிலப்பதிகாரத்தில் மனையறம்படுத்த காதையில், கடல் வணிகம் பேசப்படுகிறது.

மணிமேகலை

சீத்தலைச்சாத்தனார் பாடிய மணிமேகலையில் ஆபுத்திரன் சாவக நாட்டிற்குச் செல்வது – கடற்பயணம் பேசப்படுகிறது.

சீவகசிந்தாமணி

திருத்தக்கத்தேவர் பாடிய சீவகசிந்தாமணியில் 2793வது பாடல் கப்பல் குறித்து பேசுகிறது.

அரேபியர் - தமிழர் வாணிபம்

வி.கனகசபை (1855 - 1906)

'Madras Review' *இதழில் 1895 முதல் 1901 வரை* **Tamils Eighteen Hundred Years age'** *எனும் கட்டுரைத் தொடரை எழுதியவர் வி.கனகசபை* (V.Kanaka Sabhai) *1904இல் அது ஆங்கில நூலாக 264 பக்கங்களில் வெளிவந்தது.*

திருநெல்வேலி சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம்

நூறாண்டு கண்ட திருநெல்வேலி தென் இந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம் அந்த நூலை 1956 ஜூலையில் தமிழில் வெளியிட்டது. தொடர்ந்து பல பதிப்புகளைக் கண்ட அந்த நூல் 438 பக்கங்கள்.

பன்மொழிப் புலவர் கா.அப்பாத்துரை

அந்த நூலினை தமிழாக்கம் செய்தவர் பன்மொழிப்புலவர் கா.அப்பாத்துரை 16 அத்தியாங்களைக் கொண்ட அந்த நூலில் 3வது தலைப்பு **வெளிநாட்டு வாணிகம்.**

வெளிநாட்டு வாணிகம்

தமிழர் மேற்கொண்டிருந்த வெளிநாட்டு வாணிகம் பற்றி எடுத்துரைப்பார் அவைகளை விரிவாக அந்த நூலில் காணுங்கள்.

"அரேபியர்களும், கிரேக்கர்களும் தமிழக வாணிகத்தைத் தொடர்ந்து நடத்தினர்."★

Subsequently the Arabs and Greeks appear to have kept up the trade with Tamilakam.★★

ஹிப்பலாஸ் (Hippalus)

கிரேக்கக் கடலோடி ஹிப்பலாஸ் அராபிய இந்திய வணிகரிடம் பல செய்திகளை அறிந்தார். அராபியாவிலுள்ள

★ *ஆயிரத்தெண்ணூறு ஆண்டுகட்கு முற்பட்ட தமிழகம், சென்னை, 1973, பக்கம் 58.*

★★ *V.Kanakasabhai, The Tamils Eighteen Hundred years ago, Tirunelveli, 1956, Page 31.*

ஃபர்தக் (Fartak) முனையிலிருந்து இந்தியாவிற்கு கப்பல்களைச் செலுத்தினார்.

தென்மேற்குப் பருவக்காற்று ஹிப்பாலஸை நேரே அன்றைய தமிழகத்திலுள்ள மிளகு விளையும் நிலப்பகுதிக்குக் கொண்டு வந்துவிட்டது. இது முதல் தமிழகத்துடனுள்ள வாணிகத் தொடர்பு முன்பை விட மிகுதியாகப் பெருகிற்று.

அரேபிய ஸியாக்ரஸ்

அரேபியாவிலுள்ள ஸியாக்ரஸ் முனையிலிருந்து பாதெல என்ற இடத்துக்கு மேல்காற்றோடு (Favonius) பாதுகாப்பான பயணமாகக் கருதப்பட்டது. இக்காற்றுக்கு ஹிப்பலாஸ் என்று பெயரும் வைத்தார். 30 நாட்களில் வணிகர் அரேபியாவிலுள்ள ஓகெலிஸ் (தற்கால கல்லா Ghalla or ஸெல்லா Cella) சென்று சேர்வார்கள். இந்தியாவை நாடிச்செல்ல விரும்புவார்கள் ஓகெலிஸிலிருந்து புறப்பட்டு, நாற்பது நாட்களில் முசிரிஸை அடைவார்கள். இவ்வாறு அரேபிய – தமிழக வாணிபத் தொடர்பை விளக்கிக்கொண்டு செல்வார் வி.கனகசபை.

மறைமலையடிகள்

தமிழகத்தின் தலைசிறந்த அறிஞர்களில் ஒருவர் மறைமலையடிகள். இவர் பட்டினப்பாலை ஆராய்ச்சி உரையை 1906இல் தந்தார். மறுபதிப்பு 1966 இல் வந்தது.

‘நீரின் வந்த நிமிர்பரிப்புரவியும்‘ என்ற பாடல் வரிகளுக்கு விளக்கம் எழுதுகிறபோது மறைமலையடிகள் குறிப்பிடுவார்.

துருக்கித் தேசத்துச் சோனகர்

துருக்கித் தேசத்துச் சோனகர், சீனர், யவனர் முதலான பல தேயமக்களும் தமக்குரிய பல மொழிகளும் வழங்கிக் கொண்டு **காவிரிப்பூம்பட்டினத்தில் வந்து வாணிகம் நடத்தி வாழ்ந்தனர். இவரெல்லாம் இங்ஙனம் இந்நாட்டிற் குடியேறி வாழ்ந்தபோது தமக்குள் மாறின்றி (வேற்றுமையின்றி) ஒருமையுற்றிருந்தனர் (ஒற்றுமையோடு) என்பதும் இதனாற் தெரிகின்றது.***

---

* மறைமலையடிகள், பட்டினப்பாலை ஆராய்ச்சி உரை, சென்னை 1966, பக்கம் 67, 68

பைபிளில் கடல் வணிகம்

கிறித்தவர்களின் பழ்மைய ஏற்பாட்டில் இராஜாக்களின் முதலாவது புத்தகத்தில் ஒன்பதாவது அதிகாரத்தில் 26,27,28 வசனங்களும், இராஜாக்களின் முதலாவது புஸ்தகம் பத்தாவது அதிகாரம் 11, 12வது வசனங்களும் தெற்கிலிருந்து (நெல்லை மாவட்டம் உவரியிலிருந்து) கி.மு.977–937) கிரேக்கத்திற்கு கவி (கபிம்) தோகை (துகிம்) சென்றதை விளக்குகிறது.

பிளிநிஸ் (Pilinus) – பிளினி (Pliny) (கி.பி.23-79)

கேயஸ் பிளினஸ் செகண்டஸ் (Caius Plinus Secundus) *இத்தாலி சிசால்பைப், நோவம் கோமம்* (Novam Comum) *பகுதியில் கி.பி. 23இல் பிறந்தவர். குதிரைப்படை மேற்கொள்ள வேண்டிய* **‘ஈட்டியின் பயன்’** *நூலை முதலில் எழுதினார்.* (On the use of Javelin by the Cavalry)

‘பாம்பே வாழ்க்கையை’ (Life History of Pompeius Secundus) *இரு தொகுதிகளாக பிளினி எழுதினார்.*

ஜெர்மனியில் போர்

ஜெர்மனியில் போர் (War in Germany) *என்னும் 20 பாகங்கள் கொண்ட புத்தகத்தை அடுத்து எழுதினார்.* **மாணவன்** (Student) *என்ற தலைப்பில் 6 நூல்களை எழுதினார் பிளினி.*

இலத்தின் மொழியில் உள்ள இடர்பாடுகள் *என்னும் 8 புத்தகங்களை* (Difficulties in the Latin Language) *பிளினி எழுதினார்.*

அபிடியஸ் பாஸஸ்

அபிடியஸ் பாஸஸ் எழுதிய வரலாற்றின் தொடர்ச்சி 37 புத்தகங்களை (Continuation of the History of Aufidius Bassus) *பிளினி எழுதினார்.*

இயற்கை வரலாறு (Natural History)

கி.பி.77இல் 37 புத்தகங்களை கொண்ட இயற்கை வரலாறு நூலை பிளினி எழுதினார். பிளினி எழுதிய புத்தகங்கள் 111 நமக்கு இப்போது கிடைப்பது இயற்கை வரலாறு மட்டுமே.

அயோனியன் எழுத்துக்கள் (Ionian Alphabets)

அயோனியா என்பது கிரேக்கமாகும். அயோனியன் எழுத்துக்களை பிளினி போற்றுவார். அயோனியன் என்ற சொல்லே தமிழில் யவனர் என்று மருவி இவ்யவனர் என்ற சொல்லே வடமொழியிலிருந்து புகுந்து, பொதுவாக மேலைநாட்டினரை குறிப்பாகக் கிரேக்கர்களை குறிப்பதாயிற்று. ★

இந்தியா

இந்திய நாடுகள், கங்கை நதி, சிந்துநதி, தாமிரபரணி, அரியானியும், அதையடுத்த நாடுகளும் இந்தியாவிற்கு மேற்கொண்ட பயணங்களைப் பற்றி பிளினி தனது இயற்கை வரலாற்று நூலில் புத்தகம் VI அதிகாரம் 21– 26 வரை விவரிக்கிறார்.

தாப்ரபனே (Tabrobane)

இலங்கைத் தீவையும், தாமிரபரணி நதியையும் குறிப்பிடும்போது தாப்ரபனே என்று பிளினி குறிப்பிடுகிறார். கொற்கை துறைமுகம், கொற்கை முத்துக்களை பற்றியும் விவரிக்கிறார்.★★

கிறித்தவ ஆண்டு தொடங்குவதற்கு முன்னரே

கிறித்தவ ஆண்டு தொடங்குவதற்கு முன்னரே அரபிகள் இலங்கையில் குடியேறினர் என்று பிளினி குறிப்பிட்டுள்ளார்.

சர் ஜேம்ஜ் எமர்சன் டெனன்ட்

கி.பி.1850இல் இலங்கையில் கிறித்தவர்கள் என்ற நூலினை தந்தவர் சர் ஜேம்ஜ் எமர்சன் டெனன்ட். இவர் கி.பி. 1859இல் தனது சிலோன் என்ற நூலில் பிளினியின் கூற்றை மேற்கோள் காட்டுகிறார்.★★★

★ வி.எஸ்.வி. இராகவன், பிளினி, சிதம்பரம், 1977, பக்கம் 75.

★★ மேற்கூறிய நூல்.

★★★ *Sir James Emerson Tennent, Ceylon: An Account of the Island, Physical, Historical and Topographical; 2 Vols;Longman, London 1859.*

அரேபியா

பிளினி தனது இயற்கை வரலாற்று நூலில்* அரேபியாவை அரேபியா என்று குறிப்பிட்டுள்ளார்.

பெரிப்ளூஸ் (கி.பி. 50 -80)

கி.பி. முதல் நூற்றாண்டில் இந்தியப் பெருங்கடலில் நடைபெற்ற வாணிக வரலாற்றை பெரிப்ளூஸ் என்ற நூல் தருகிறது.

அரேபியா, ஆப்பிரிக்கா, ரோம் முதலிய நாடுகளுடன் நடந்தேறிய வாணிக முறைகள், இந்தியாவின் துறைமுகங்கள், ஏற்றுமதி, இறக்குமதி செய்யப்பட்ட பொருட்கள், சேர, சோழ, பாண்டிய அரசர்களின் தலைநகரங்கள் **இலங்கையின் ஆதாம் சிகரம்** போன்ற பல விஷயங்கள் இந்த நூலில் பேசப்படுகிறது. இதனை எழுதியவர் பெயரை அறியமுடியவில்லை.

ரோமானியர்

ரோமானியர் கால கடல் பயணக்குறிப்புகள் (பயணக்குறிப்புகள்) (கடற்படம்) பெரிப்ளூஸ் ஆகும். ப்ளூஸ் (Ploos) என்பதற்கு கடற்பயணம் என்று பொருள். பெரி (Peri) என்ற சொல்லுக்கு 'சுற்றி' என்ற பொருளும் உண்டு. இலத்தீன் மொழிச் சொல்லான பெரிப்ளூஸ் (Periplus) என்பதற்கு கடல் சுற்றுப்பயண வரலாறு என்று பொருளாகும்.

அரபிக் கடல் (Arabian Sea)

பெரிப்ளூஸ் நூலில் செங்கடல், அரபிக்கடல், இந்தியப் பெருங்கடல், வங்காள விரிகுடா ஆகியவற்றில் கி.பி. முதல் நூற்றாண்டில் நடைபெற்ற கடல் வணிக முறைகளைக் காணலாம்.

கடல் வணிகம்

முதன் முதலாக கடல் வணிகத்தைப்பற்றி (Sea trade) எழுத்துக்களால் பொறிக்கப்பட்ட அதிசய மனிதப் பண்புகள்

---

*பிளினி குறித்த முழுவிவரங்களை அறிய *H.M.A. Rackhm* தொகுத்த *Historianaturalis (Natural History Volume I to X* நூலை (1938) வாசித்தறியலாம்.*

அடங்கிய ஆதாரச் சான்றுப் புத்தகம் (Human Document) பெரிப்ளூஸ் என்பார் வி.எஸ்.வி. ராகவன்.*

பாரசீகம்

கிரேக்கமும், ரோமும் நாகரிகத்தின் சிகரம் எனப்போற்றப்படுவதற்கு பல நூற்றாண்டுகளுக்கு முன்னரே பாரசீகமும் அதைச் சுற்றியுள்ள பகுதிகளும் உயர்ந்த நாகரிக நிலையை அடைந்திருந்தன.

அன்றையத் தமிழ்நாட்டு நீர்வளமும், மலை வளமும், கடல் வளமும் அயல்நாட்டினரை அன்புடன் அழைத்தது.

அகிலும், துகிலும், ஆரமும், முத்தும், மணியும் குவிந்து கிடந்த தமிழகத்தில் மேலைநாட்டு வாணிபம் மேன்மேலும் வளர்ச்சியுற்றது.

நைல்நதி (Nile)

நைல்நதி வழியாகவும் யூப்ரடீஸ் (Euphrates) டைகிரீஸ் (Tigris) நதிகள் வழியாகவும் இந்தியாவிலிருந்து கொண்டு செல்லப்பட்ட மிளகு, முத்து போன்ற பிற பொருட்கள் ரோமப் பேரரசுக்குச் சென்றன. அங்கு அரசனும் அரசியும் மக்களும் அதிக விலை கொடுத்து அவைகளை வாங்கினர். இந்திய – ரோம வாணிபம் செழித்தோங்கியது.

ஸ்டராபோ – ஸ்திராபோ (Strabo)

ஸ்ட்ராபோ ஆர்மீனியாவிலிருந்து கி.பி.22இல் இந்தியாவிற்கு வந்தவர். உலகம் முழுவதையும் சுற்றிப்பார்த்து உலகயாத்திரை என்ற நூலை எழுதினார்.**

பழைய பெருநிலப்பிரிவுகளை நன்கு சுற்றிப்பார்த்ததற்குப் பின்னர் உலக நூலை 17 தொகுதிகளாக வெளியிட்டார்.***

---

* பெரிப்ளூஸ் (கி.பி. 50–80) சென்னை, 1977 பக்கம் V.

** வித்துவான் அ.சி. மிக்கேல்சாமி, பண்டையத் தமிழகமும் பல நாட்டறிஞரும், திருச்சி, 1967, பக்கம் 153.

***வரதவீரப்பன், மேனாட்டறிஞர் கண்ட தமிழகம், திருநெல்வேலித் தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக்கழகம், திருநெல்வேலி, 1963, பக்கம் 77.

தம்முடைய காலத்தில் வாழ்ந்த ரோமானியர்கள் இந்தியாவைப் பற்றி தங்களுடைய முன்னோர்களைக் காட்டிலும் அதிகமான செய்திகளை அறிந்திருந்தார்கள் என்று ஸ்ட்ராபோ எழுதி வைத்துள்ளார்.

ஏடன் – செங்கடல் வழி

ரோமுக்கும் இந்தியாவுக்கும் நடைபெற்ற வணிகம் 'பார்த்தியா' வைக் கடந்து செல்ல வேண்டியிருந்தது. பார்த்தியா ரோமுடன் அடிக்கடி பகைமை கொண்டது. எனவே ஏடன் – செங்கடல் வழியையே ரோமானியர்கள் மிகவும் விரும்பினார்கள். அந்த வழியை ரோமப் பேரரசின்கீழ் கொண்டுவர காலிஸ் என்ற தளபதி தலைமையில் அகஸ்டஸ் கி.மு.25இல் கடற்படையை அனுப்பி வெற்றி கொண்டதையும் ஸ்ட்ராபோ குறித்து வைத்துள்ளார்.

காலஸ் எகிப்தின் படை ஆட்சியாளராக இருந்தபோது அவருடன் இருந்த ஸ்ட்ராபோ, மயோஸ் ஹார்மஸ் (Myos - Hormos) என்ற இடத்திலிருந்து சுமார் 120 கப்பல்கள் இந்தியாவிற்குச் சென்றதைக் குறித்துள்ளார்.★

இயூடிமான் அரேபியா (Eudemon Arabia)

ஏடென் துறைமுகமே இயூடிமான் அரேபியா ஆகும். அயல்நாடுகள் பெருமளவில் இந்தியாவுடன் வணிகத் தொடர்பு கொள்ளாதிருக்கும்பொழுது இயூடிமான் அரேபியா பெரும் புகழ்பெற்றிருந்தது. வட அரேபியாவில் செல்வாக்கு மிக்க இயூடிமான் என்ற அரசர் ரோமில் இருந்தார். அதனால் வடக்கு அரேபியாவின் ஒரு பகுதி இடூமியா எனவும் மக்கள் இடூமியர்கள் என்றும் அழைக்கப்பட்டனர்.

இந்தியாவில் இருந்தும், மற்றும் கீழ்க்கோடியிலிருந்தும் கப்பலில் வரும் பொருட்கள் இயூடிமான் அரேபியாவில் இறக்குமதி செய்யப்பட்டு, மீண்டும் மத்திய தரைக்கடல் நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டது, வணிகப் பண்டங்களுக்கு சுங்கவரி வசூலிப்பதில் தகராறு ஏற்பட்டது. அதனால் கி.மு.50இல்

★*McCrinde, Ancient India, as Described in Classical Literature, West Minster, 1901 Page 98.*

கரிபெல் (Charibeal) என்ற அரசரால் இத்துறைமுகம் அழிக்கப்பட்டது. ஏடென் இன்று மிகப்பெரியதும், முக்கிய துறைமுகமாகவும் விளங்குகிறது.

அரேபியா

பெரிப்ளூஸ் நூலில் அரேபியா குறித்து விரிவாகச் சொல்லப்பட்டுள்ளது. முஸெல், பெரனிஸ் முதல் பாரிசதே, ராம்பெய்கா வரையிலான அயல்நாடுகளைப்பற்றி பெரிப்ளூஸ் குறிப்பிடுகிறது.

டிமிரிகா

இந்தியா குறித்து விரிவாக குறிப்பிடும் பெரிப்ளூஸ் நூல் டிமிரிகா (Dimirica) என்ற கிரேக்க உச்சரிப்பை தமிழகத்திற்குப் பயன்படுத்துகிறது.

தாப்ரபனே (Taprobane)

தாமிரபரணி எனும் சொல்லின் திரிபாகக் கருதப்படுகிறது தாப்ரபனே என்று பெரிப்ளூஸ் நூல் தரும் தகவல் ஆகும்.

த்வீப ராவண (Dvipa Ravana)

'த்வீபராவண' என்ற சொல் கிரேக்க மக்கள் நாவில் '**தாப்ரபனே**' என மருவிற்று என்று மாக்ரிண்டில் குறிப்பிடுகிறார்.*

வணிகத்தின் பெரும் பகுதி

"மிகப் பழங்காலத்திலிருந்தே இந்துமாக்கடல் வாணிகத்தின் பெரும்பகுதி அரேபியர்கள் கையில் இருந்தது. இஸ்லாம் தோன்றியதும் அரேபியர்களுடையே ஆதிக்கம் வேகமாய் விரிவடைந்தது."

From very ancient times much of the trade of the Indian Ocean had been in the hands of the Arabs and with the rise of Islam there came a sudden expansion the effects of which were not confined to religion and politics, but spread to commerce and science. **

★*Mc Crindle, Ancient India as Described by Megasthenes and Arrian, Calcutta, 1877.*

★★ *K.A. Nilakanta Sastri, Foreign notices of South India From Megastaenes to the Mahuan, University of Madras, 1972, Page 20 (First Edition 1939).*

அரேபிய ஆதிக்கத்தின் விளைவுகள் மதத்துறை, அரசியல் துறை ஆகியவற்றோடு நின்றுவிடாமல் வணிகம், அறிவியல் ஆகிய துறைகளுக்கும் பரவியதை கே.ஏ.நீலகண்ட சாஸ்திரி தனது **தென்னிந்தியாவைப்பற்றி வெளிநாட்டினர் குறிப்புகள்** நூலின் முன்னுரையில் தெளிவாகவே குறிப்பிட்டுள்ளார்.

பாரசீகத் தொடர்பு

ரோமானியப் பேரரசு தன்னுடைய வலிமையை இழக்கத் தொடங்கியது. கிரேக்கப் பகுதியிலும் கி.பி.மூன்றாம் நூற்றாண்டின் இறுதியில் சோர்வுநிலை நீடித்தது.

முகம்மது நபி (ஸல்)யினைப் பின்பற்றிய இஸ்லாமியர் பல நாடுகளை வென்று மேற்கையும், கிழக்கையும் மீண்டும் இணைத்து ஒழுங்கான தொடர்புகளை ஏற்படுத்திய பின்னர் துணிவும், அறிவும் புத்துயிர்பெற்றன.

'...the followers of Mohammed again brought East and West in to contact and orderly reactions. ⋆

தபரி (Tabari)

தென்னிந்தியாவிற்கும், பாரசீகத்திற்கும் கி.பி. ஏழாம் நூற்றாண்டின் முதற் பகுதியில் சுறுசுறுப்பான தொடர்பு இருந்தது என்பதற்கு சிறந்த சான்று இருக்கிறது என்று வலியுறுத்தும் கே.ஏ.நீலகண்ட சாஸ்திரி பாரசீக வரலாற்றாசிரியர் தபரீ (கி.பி.838 – 923) குறிப்பிடும் சான்றுகளைக் கொண்டு நிறுவுகிறார்.

சீனா

சீனாவுக்கும் இந்தியாவிற்கும் இருந்த கடல்வழித் தொடர்பு கி.பி. ஆறாம் ஏழாம் நூற்றாண்டுகளில் மிகவும் சுறுசுறுப்பில் இருந்தது. மிகத்தொலைவில் இருந்த நாடுகளில் இருந்து கப்பல்கள் பல இலங்கைக்கு வந்தன என்று காஸ்மாஸ் (Cosmas) குறிப்பிடுகிறார்.

இந்தப் பண்டைக்காலத்தில் சீனாவுக்கும் மேலைநாடுகளுக்கும் நடைபெற்ற கடல் வாணிகம் வளர்வதற்கு அரேபியர்களும்,

---

⋆ *Schoff Periplus of the Duter Sea by Marcian of Heraclea, Philadelphia, 1927 page 6.*

இந்தியர்களும் காட்டிய துணிவும் அவர்கள் மேற்கொண்ட முயற்சிகளுமே காரணமாயின என்பதை குறிப்பிடுதல் பொருத்தமாகும் என்று நீலகண்ட சாஸ்திரி குறிப்பிடுகிறார்.★

ஔவை. சு. துரைசாமிப்பிள்ளை

1957இல் ஔவை சு.துரைசாமிப்பிள்ளை 'பண்டைய நாளைச் சேரமன்னர்கள்' என்ற நூலை வெளியிட்டார். அதன் மறுபதிப்பு 1960இல் சென்னை சாந்தி நூலகம் சார்பில் 408 பக்கங்களில் வெளிவந்தது.

அரபியர்

'யவனர்கட்குப் பல்லாண்டு முன்பிருந்தே அரபியரும் இந்தியரும் கலஞ்செலுத்தி வாணிகம் செய்து வந்தனர்' *என்று அந்த நூலில் பக்கம் 36இல் ஔவை சு.துரைசாமிப் பிள்ளை குறிப்பிட்டுள்ளார்.*

டாக்டர் எ. சுப்பராயலு

'தமிழ நாட்டோடு வாணிகத் தொடர்பு கொண்ட நாடுகள் கிரேக்கம், ரோமனியப் பேரரசு, எகிப்து, **அரேபியா** *ஆகிய மேற்குநாடுகள், மலாயா உள்ளிட்ட சில கிழக்கிந்தியத் தீவுகள், சீனா, ஈழம் ஆகியவை என்பார் டாக்டர் எ.சுப்பராயலு.★★*

நரசய்யா

இந்தியக் கப்பற்படையில் 14 ஆண்டுகள் மாலுமியாகப் பணிபுரிந்தவர்; பாகிஸ்தான் போரில் பங்கேற்றவர். இந்திய அரசாங்கத்தால் 1991இல் இந்தியத் துறைமுகத்துறையைப் பற்றிய புள்ளிவிவரங்களைச் சேர்க்கும் பணியில் நியமிக்கப்பட்டவர். அவர் 2005இல் 394 பக்கங்களில் தந்த நூல் **'கடல் வழி வணிகம்'.**

★ *Hirth and Rockhill, Chau Ju-Kua: His work on the Chinese and Arab Trade in the twelfth and thirteenth Centuries, entitled chu-fan-chi, Academy of Sciences, st. Petersburg 1912 page 7.*

★★ *பொருளியலும் வணிகமும், தமிழ்நாட்டு வரலாறு, சங்ககாலம், வாழ்வியல் தமிழ்நாட்டு வரலாற்றுக்குழு, சென்னை, 1983, பக்கம் 171.*

கடல்சார் வணிகம்

அந்த நூலில் பக்கம் 14இல் கடல் சார் வணிகத்தைக் குறித்து பல ஆய்வாளர்கள் மிக அதிகாரப் பூர்வமானவையாகவும், விளக்கமளிப்பவையாகவும் உள்ள சிறந்த நூல்களை ஏற்கனவே எழுதியுள்ளனர். ஒவ்வொருவரும் தம் நோக்கில் தீர்க்கமாய் ஆராய்ந்து எழுதியுள்ளனர் என்று குறிப்பிட்டுள்ளார்.

ரோமர்கள்

யவனர்களும் (அக்காலத்தில் மேலைநாட்டினர் எல்லோருமே யவனர்கள் என்றுதான் அறியப்பட்டார்கள்) இந்தியாவுடன் வாணிகம் செய்யலாயினர். **கி.மு. முதலாம் நூற்றாண்டில் (கி.மு.31)** எகிப்து ரோமநாட்டவர் கீழ் வந்தது.

கீழை நாட்டு வாணிபம்

ரோம அரசர்கள் அங்கு வரும்வரை **கீழை நாட்டு வாணிபம் அரேபியர் கையில்தான் இருந்தது.**

அரேபியர்கள் சிறந்த மாலுமிகள்

கிறிஸ்து பிறப்பதற்கு பல நூற்றாண்டுகளுக்கு முன்னரே அரேபியர்கள் இந்தியாவுடன் வணிகம் வைத்து கொண்டிருந்தனர். அரேபியர்கள் சிறந்த மாலுமிகள். ரோம அரசு எகிப்து நாட்டைக் கைப்பற்றியபிறகு, முதல் நூற்றாண்டின் ஆரம்பத்திலே, ரோமர்கள் அரேபியர்களை ஒதுக்கிவிட்டுத் தங்கள் கடல் வழி வியாபாரத்தைப் பெருக்கிக்கொண்டனர்.★

வரலாற்று உண்மை

அரேபியர்களின் இந்திய வணிகத்தில் பின்னர் சுணக்கம் ஏற்பட்டது என்றாலும் தொடர்ந்து கொண்டிருந்தது. அண்ணல் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களது காலத்திலிருந்து அரேபிய வணிகம் வீறு கொண்டு எழுந்து நடைபெறத்துவங்கியது என்பது வரலாற்று உண்மையாகும்.

அரபிக்கடல்

உலகத்திலுள்ள எல்லாச் சமுத்திரங்களையும்விட மத்திய தரைக்கடலும், செங்கடலுந்தாம் சரித்திரத்தில் குறிப்பிட்டு

★ நரசய்யா, கடல்வழி வணிகம், சென்னை, 2005, பக்கம் 28.

புகழப்படும் இடங்கள். கடல்வழி வணிகத்தின் ஆரம்பமே அங்குதான் நிகழ்ந்தது. இக்கடல்களைச் சுற்றித்தான் உலகத்தின் சிறந்த நாகரிகங்கள் வளர்ந்தன. மேற்கத்திய நாகரிகத்தின் தாக்கத்தால் மேம்பட்ட இந்த இடங்கள் சரித்திர ஆசிரியர்களைப் பெரிதும் ஈர்த்தன. அதற்குப்பிறகு கடல்வழிச் சரித்திரத்தை எழுதியதே அரபிக்கடலும், இந்து மஹாசமுத்திரமும்தான்.

ராதாகுமுத்முகர்ஜி

1912இல் லாங்க்மன் நிறுவனத்தார் இலண்டனிலிருந்து பிரேஜீந்திரநாத் சீல் (BRAJENDRANATH SEAL) முன்னுரையோடு ராதாகுமுத்முகர்ஜி எழுதிய 'Indian Shipping' என்ற ஆங்கில நூலை 283 பக்கங்களில் வெளியிட்டுள்ளனர்.

Book I, Hindu Period, Part I, Indications of Maritime Activity in India. Literature and Art. Part II . The History of Indian Maritime Activity, Hindu Period page 19இல் துவங்கி 78 வரை முதல் புத்தகமும், 81இல் துவங்கி 182வது பக்கம் வரை இரண்டாவது புத்தகமும் உள்ளது. அதில் பக்கம் 90இல் ராதாகுமுத் முகர்ஜி குறிப்பிடுகிறார்.

"Have established the existence of a maritime commerce between India and Arabia from the very earliest period of humanity" *.

இந்தியாவிற்கும் அரேபியாவிற்கும் இடையிலான வாணிபம் மனித இனத்தின் ஆரம்பத்திலிருந்தே துவங்கிவிட்டது என்கிறார் ராதாகுமத்முகர்ஜி. தொடர்ந்து அதே நூலில் கூறுகிறார்.

அலெக்சாந்தரின் மறைவிற்குப் பிறகு எகிப்தை முஸ்லிம்கள் கி.பி.640இல் கைப்பற்றும்வரை அரேபியர்கள் மேற்கு ஆசியாவுடனான வியாபாரத்தில் தன்னந்தனியாக 900 ஆண்டுகள் திகழ்ந்தார்கள்.

'They retained with the Arabians a monopoly of this Commerce for about 900 years between Alexander's death and the conquest of Egypt by the Musalmans in the year 640 A.D. **

★ *Indian Antiquary, Volume XIII, Page 28 Quoted in Indian shipping, A History of the sea – Bore Trade and Maritime Activity of the Indians From the Earliest Times, by Radhakumad Mookerji, London, 1912, Page 90.*

★ முற்கூறிய நூல் பக்கம் 94.

மனித குலத்தின் வரலாற்றில் வாணிபம் துவங்கிய காலம் முதலே அரேபியருக்கும் இந்தியாவிற்கும் இடையிலான வாணிப உறவுகள் இருந்தது என்பதை எவரும் மறுத்திடல் முடியாது.

ஹிராடாடஸ்

வரலாற்றின் தந்தை என்று போற்றப்படும் ஹிராடாடஸ் (கி.மு. 484 – 408) வரலாறு (Histories) எனும் அற்புதமான நூலைத் தந்துள்ளார். மேலும் 10 நூல்களை எழுதியவர்.

அரேபியாவின் வாசனைப் பண்டங்கள்

ஹிராடாடஸ் தனது நூலில் அரேபியன் கடலை ஒட்டி விளங்கும் இந்திய மேற்குக் கடற்கரைப் பகுதியையும் எத்தியோபியாவின் வடக்கு கிழக்குப் பகுதியையும் அரேபியா என்றே கருதினார். ஹிராடாடஸின் கருத்தின் அடிப்படையில் இந்தியாவின் கேரளப் பகுதியில் விளையும் வாசனைப் பண்டங்கள் யாவும் அரேபியாவில் உள்ள சில துறைமுகங்களுக்கு அனுப்பப்பட்டது. பின்னர் அங்கிருந்து ரோம், கிரேக்கம், ஆசியாமைனர் ஆகிய பகுதிகளுக்கு அனுப்பப்பட்டது என்பார் வி.எஸ்.வி. இராகவன்.*

ஆதிப் பழங்காலத்தில் இருந்தே அரேபியாவிற்கும் இந்தியாவிற்கும் வர்த்தகத் தொடர்பு இருந்தது. அதிலும் குறிப்பாக கேரளப் பகுதியில் அதிகமாக இருந்தது என்பதற்கு அநேக வரலாற்றுச் சான்றுகள் உள்ளது.

அழகன்குளம்

இராமநாதபுரம் மாவட்டத்தில் வைகை ஆற்றின் தென்கரையில் அமைந்துள்ள ஊர் அழகன்குளம். வைகை ஆறு வங்கக்கடலுடன் கலக்கும் ஆற்றங்கரை என்னும் ஊரிலிருந்து 3 கி.மீட்டர் தொலைவில் உள்ளது. அழகன்குளத்தில் அகழ் ஆய்வில் கண்டறியப்பட்ட பொருட்கள் இவ்வூர் வரலாறு கி.மு.4ஆம் நூற்றாண்டிலிருந்து கி.பி.5ஆம் நூற்றாண்டுவரை அறியமுடிகிறது.

★ வி.எஸ்.வி. இராகவன், ஹிராடாடஸ், சிதம்பரம் 1982, பக்கம் 283 (நூல் மொத்தம் 528 பக்கங்கள்) George Rawlinson மொழிபெயர்த்த Herodottus Histories 734 பக்கங்களைக் கொண்ட ஆங்கில நூலையும் வாசித்திடலாம்

ரோம்

அழகன்குளத்தில் அகழ்ஆய்வில் கிடைத்த பல பொருட்கள் ரோமபுரிக்கு தொடர்பு கொண்டிருந்ததை உறுதிப்படுத்துகிறது.

அரேபியாவுடன் தொடர்பு

அழகன்குளத்தில் மேற்கொண்ட கள ஆய்வின்போது சில சங்குகளின் உடைந்த பகுதிகள் கண்டெடுக்கப்பட்டன. அவற்றில் 'அரபு' எழுத்துக்கள் இருந்தது.

அரபி எழுத்துப்பொறித்த சங்கு



அரபி எழுத்துப்பொறித்த சங்கு ஒன்று முதன்முதலாக அழகன்குளம் மேற்பரப்பு ஆய்வில் சேகரிக்கப்பட்டது குறிப்பிடத்தக்க ஒன்றாகும்.

சங்கினால் செய்த அச்சு (குதிரை வடிவம்)



*சங்கினால் செய்த குதிரை வடிவம் பதித்த அச்சு ஒன்று அகழாய்வில் சேகரிக்கப்பட்டது. இதுவும் குறிப்பிடத்தகுந்த சிறப்பு வாய்ந்த தொல்பொருளாகும்.**

தீக் - சேவல்

'தீக்' என்று அரபு மொழியில் எழுதப்பட்ட சொல் காணப்பட்டது. தீக் என்றால் அரபியல் 'சேவல்' என்று பொருள்.

இதன் மூலம் அரேபியாவுடன் பண்பாட்டுத் தொடர்போ வணிகத் தொடர்போ கொண்டிருந்த மக்கள் இவ்விடத்தில் வாழ்ந்ததற்கான சாத்தியக்கூறுகள் தென்படுகின்றன. வணிகத்தின் மூலம் இத்தொடர்பு ஏற்படுவதில் வியப்பில்லை. எனவே அழகன்குளம் அரேபியாவுடன் பண்பாட்டுத் தொடர்பு கொண்டிருந்ததெனக் கருதலாம் என்பர் தமிழ்நாடு அரசு தொல்லியல் ஆய்வுத்துறை இயக்குநர் பணிநிறைவுபெற்ற அ.அப்துல் மஜீத்.**

டாக்டர் புரட்சிதாசன்

தமிழ் எழுத்தாளர் கழகத் தலைவராயிருந்த டாக்டர் புரட்சிதாசன் 1996இல் **செங்கடல் தாண்டிய சிந்து வணிகம்** *எனும் நூலை 112 பக்கங்களில் தந்துள்ளார் அதில்,*

அரபு வணிகம்

"கிரேக்க – அரபு வணிக மொழிகளில் துறைமுகங்களின் பெயர் மாற்றம் ஏற்பட்டாலும் பொருள் வணிகம் கி.மு. 4000 – கி.மு.3000த்திற்கும் மேற்பட்ட காலந்தொட்டே நடந்த தடயங்களைக் கடல் கடந்த வணிகக் குறிப்புகள் தெளிவாக எடுத்துக்கூறுகின்றன." என்பார்.

**செல்வராஜ், புதையுண்ட தமிழகம், சென்னை, 2018 பக்கம் 280 நூல் மொத்தம் 459 பக்கங்கள்.*

***அழகன்குளமும் அயல்நாட்டுத் தொடர்பும் கட்டுரையில், ந.அதியமான், பா.ஜெயக்குமார் பதிப்பாசிரியர்கள், தமிழகக் கடல்சார் வரலாறு, அண்மைக்கால ஆய்வுகள், தமிழ்ப் பல்கலைக்கழகம் தஞ்சாவூர், 2006, பக்கம் 11.*

அரபிகள்

அரபி, ஸ்மலைட் என்ற இருதலைப்புள்ள ஒரு மொழிக்கலப்படமான அரபு மொழியைப் பேசியவர்கள் நெடுங்கடல் கப்பல் வணிக ஏற்றுமதி, இறக்குமதி தொடர்பு கொண்டிருந்த சிறப்புகளில் சுறுசுறுப்பும், துடிதுடிப்பும் செய்யும் தொழிலில் கண்ணுங்கருத்துமாக, ஊக்கம், தளராநம்பிக்கை, முயற்சி என்ற வகையில் உடல் வலிமை, உயரம் படந்த மார்பு எனபார்வைக்கும் பெரிய உடலமைப்பு உள்ளவர்களாகவும், கப்பல் உரிமையாளர், வணிகர், பயணி, விற்பனைத்தரகர், வழிகாட்டி என பல துறைகளிலும் வல்லவர்களாக அரேபியர்கள் இருந்தனர். இந்த அரபு வணிகர்களே ஆரம்ப முதல் நீண்ட தூர நெடுங்கடல் மாலுமிகளாக விளங்கினர்.

பாரசீக, யூத, கிறிஸ்தவ மதம்

தலைமுடியும், பெரியதாடிகளும் வைத்திருந்த வலிமைமிக்க அரபு வணிகர்கள் கி.பி.622 – கி.பி.633இல் அண்ணல் முஹம்மது நபி நாயகம் (ஸல்) காலத்தில்தான் அன்று வரை தாங்கள் பின்பற்றி ஒழுகிவந்த பாரசீக மதம், யூத மதம், கிறிஸ்தவ மதம் ஆகியவற்றிலிருந்து இஸ்லாம் மார்க்கத்திற்கு மாறினார்கள் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.★

பல்தியோசகாய் (Baldeo Sahai)

Indian Shipping A Historical Survey *எனும் நூலை பல்தியோசகாய் 1996இல் 372 பக்கங்களில் தந்துள்ளார். இதனை வெளியிட்டது இந்திய அரசாங்கத்தின் பப்ளிகேஷன் டிவிஷன்* (Publication Division) *இதில் இரண்டாவது அத்தியாயம்* Indo - Arab Relations.

இந்திய - அரபுத் தொடர்புகள்

பல்தியோசகாய் நூலில் 30வது பக்கம் முதல் 56வது பக்கம் வரை இதுகுறித்து எழுதிஉள்ளார்.

“The Arabs were a peace – loving people only intent on trade.... The Arabs settled down mostly on the Konkan and the Malabar Coasts much before the advent of Islam many of them Married Local

---

★ *புரட்சிதாசன், செங்கடல் தாண்டிய சிந்து வணிகம், சென்னை, 1996 பக்கம் 28, 29, 31, 35.*

women and their progeny is known in kerala as the mopalahs. Many Hindus had travelled o Arabia in Pre – Islamic Period, Some along with their women and permanently settled there". ★

மாப்பிளைமார்

அரபு மக்கள் அன்புமிக்கவர்கள் அவர்களின் ஒரே நோக்கம் வியாபாரம் மட்டும். அவர்கள் கொங்கண் மற்றும் மலபார் பகுதிகளில் இஸ்லாம் வருவதற்கு முன்பே வந்துவிட்டார்கள். இங்குள்ள பெண்களை திருமணம் புரிந்தார்கள். அவர்களுக்கு பிறந்த குழந்தைகள், வாரிசுகள் மாப்பிள்ளைகள் என்று அழைக்கப்பட்டார்கள்.

அதுபோல இந்துக்களும் இஸ்லாம் வருவதற்கு முந்தைய காலகட்டத்திலே அரேபியாவிற்கு வணிகத்திற்காகப் பயணஞ் செய்தார்கள். அங்கு தங்களது குடும்பப் பெண்களுடன் நிரந்தரமாக தங்கியிருந்தார்கள் என்று பல்தியோவ் சகாய்★★ குறிப்பிடுகிறார்.

ந. சுப்ரமண்யன்

மதுரை காமராஜர் பல்கலைக்கழக வரலாற்றுத்துறைப் பேராசிரியர், பல கல்லூரிகளில் பணியாற்றியவர் டாக்டர் ந.சுப்ரமணியன், சரித்திரத் தேர்ச்சிபெற்ற பல நூல்களைத் தமிழிலும் ஆங்கிலத்திலும் தந்தவர்.

அரேபிய வணிகர்கள்

கி.பி.ஏழாம் நூற்றாண்டில் முகம்மது நபி (ஸல்) இஸ்லாம் மதத்தை (மார்க்கத்தை) நிறுவுவதற்கு முன்பே

★ *Baldeosahai, Indian shipping A Historical Survey, Newdelhi, 1996, page 38.*

★★ *பல்தியோவ்சகாய் இல்லஸ்டிரேட் வீக்லி, இந்துஸ்தான் டைம்ஸ் இதழ்களில் பணியாற்றியவர். 200க்கும் மேற்பட்ட கட்டுரைகள் ஆங்கிலத்திலும் இந்தியிலும் எழுதியவர்.* 'Ports of India' *என்னும் இந்தியத் துறைமுகங்கள் நூலை எழுதியவர். மத்திய அரசின் தகவல் ஒலிபரப்புத்துறை, வெளிவிவகாரத்துறை அமைச்சகங்களில் பணியாற்றியவர். 1976இல் கப்பல் போக்குவரத்து துறை அமைச்சரகத்தில் இயக்குநராகப் பணியாற்றியவர் என்பதனை அவசியம் குறிப்பிட்டாகவேண்டும்.*

அரேபிய வணிகர்கள் இந்தியாவில் வாணிபம் செய்ய வந்து கொண்டிருந்தனர்.*

N. Subramanian

'An Introduction to the cultural History of India' எனும் ஆங்கில நூலை 1959இல் 119 பக்கங்களில் தந்தவர் பேராசிரியர் ந.சுப்ரமண்யன்.

"The Arabs had been visiting the west coast of South India even before they were converted by Muhammad, after the advent of Islam many muslim communities settled down in South India and the Moplah community of Malabar descends from settlers of a pre-Ghazniage and it includes many local converts to Islam". **

தென்னிந்தியாவில் அரேபியர்கள்

தென்னிந்தியாவில் இஸ்லாம் மார்க்கம் பரவுவதற்கு முன்பே அரேபியர்கள் இங்கு குடியேறினார்கள். முகம்மது நபி (ஸல்) காலத்தில் ஏராளமானவர்கள் இஸ்லாத்தைத் தழுவிக் கொண்டார்கள். இங்கே 'மாப்ளா' என்ற பெயரில் வாழ்ந்து வந்தார்கள். இது பேராசிரியர் ந.சுப்ரமண்யன் தரும் கருத்தாகும்.

E.H. வார்மிங்டன்

E.H. Warmington The Commerce between the Roman Empire and India (Cambridge, 1928) என்ற நூலைத் தந்துள்ளார்.

" not a year passed without the Empire (Roman) Paying out 100 Million Sesterces about 1,08,75,00 or nearly one and a half crores of rupees to India, Chera Land and Arabia." ***

---

* ந.சுப்ரமண்யன், இந்தியப் பண்பாட்டு வரலாறு, மதுரை, 1987, பக்கம் 130.

** *Dr. N.Subramanian, An Introduction to the Cultural History of India, Madras 1959, Page 104.*

*** *N.Subrahmanian, Sangam Polity, The Administration and social life of the Sangam Tamils, Madurai, 1980, Page 248-249.*

ஆண்டிற்கு ஒன்றரை கோடி ரூபாய்

‘ஒவ்வோராண்டும் பேரரசு (ரோம) ஏறத்தாழ ஒன்றரை கோடி ரூபாய் இந்தியாவிற்கு பொதுவாக சேர நாட்டிற்கும் அராபியருக்கும் தருகின்றனர்.*’

‘ஒவ்வொரு ஆண்டும் குறைந்தது 10 கோடி ஸெஸ்டர்சுகளை இந்தியா, பட்டு விளைவிக்கும் வடசீனா, அரேபியத்தீபகற்பம் ஆகிய நாடுகள் சேர்ந்து ரோமப் பேரரசின் செல்வத்தை எடுத்துக் கொள்கின்றன என்கிறார் பிளினி.**

பெரிப்ளூஸ் (கி.பி.50–80) நூல் எழுதப்பட்ட காலத்தில் தமிழகத்திற்கும் அரேபியா, எகிப்து, ரோம் ஆகிய நாடுகளுக்கிடையே நேரடி வாணிபத் தொடர்பு ஏற்பட்டுவிட்டது.

ராஸ்டாவ்ட்செப்

*1926*இல் ஆகஸ்போர்டு பல்கலைக்கழகம் வெளியிட்ட நூல் ROSTOVTZEEF எழுதியது Social and Economic History of the Roman Empire அந்த நூலில் பக்கம் *93*இல் பெரிப்ளூஸ் நூலின் *93*வது பிரிவை மேற்கோள் காட்டுகிறபோது, அரேபியாவிற்கும் இந்தியாவிற்கும் ஆதிகாலத்திலிருந்த வணிக உறவுகளை விளக்கியிருப்பார்.

“The trade with India Gradually developed in to regular exchange of goods of different kinds between Egypt on the side and Arabia and India on the other”. ***

இர.ஆலாலசுந்தரம்

30 ஆண்டுகள் தமிழகத்தில் கல்விச் சேவை செய்தவர் இர.ஆலாலசுந்தரம் *1990*இல் திருச்சிராப்பள்ளி பாரதிதாசன் பல்கலைக்கழக முனைவர் பட்டத்திற்கு பதினெண்கீழ்கணக்கு

---

* டாக்டர் ந.சுப்ரமண்யன், சங்ககால வாழ்வியல் சங்கத்தமிழரின் அரசு முறையும் சமுக வாழ்வும், சென்னை, 3ஆம் பதிப்பு, 2018, பக்கம் 312.

** *J. Innesmiller, The spice Trade of the Roman Empire Page 223.*

*** *N.Subrhmanian, Original Sources for the History of Tamil Nadu Udumalpet- 1994, Page 352.*

காலத்தில் (சுமார் கி.பி. 250 – 700) தமிழர் வாழ்வு என்ற ஆய்வேட்டை அளித்தார்.

ம. இளங்கோவன்

அதனை முனைவர் ம. இளங்கோவன் 2016இல் தமிழில் மொழிபெயர்த்து 328 பக்கங்களில் தமிழர் சமூக வாழ்வு என்னும் நூலாக அது வெளிவந்தது.

இந்தியர்களும் – அரபியர்களும்

கி.பி.6ஆம் 7ஆம் நூற்றாண்டுகளில் கடல்வழி வர்த்தகத் தொடர்பு முழுவீச்சில் இருந்தது. 'இந்தியர்களும் அரபியர்களும்தான்' இக்கடல் வழி வாணிபத்தில் துணிச்சலாக முன்முயற்சி எடுத்தனர் என்று கே.ஏ.நீலகண்ட சாஸ்திரி குறிப்பிடுவதை மேற்கோள் காட்டுகிறார்.*

பல்லவர் காலத்தில்

பல்லவர் ஆட்சிக்காலத்தில் அரேபிய – பல்லவர்கள் பற்றிய குறிப்பு ஏதும் உள்ளதா? என்று தேடினேன். 1972இல் மதுரையிலிருந்து ந.சுப்ரமணியன் வெளியிட்ட History of Tamil Nadu (To A.D. 1336) எனும் 431 பக்கங்களைக் கொண்ட ஆங்கில நூலில் பக்கம் 152இல் பல்லவ மன்னன் நரசிம்மவர்மன் (Narasimhavarman II) (Cheli Nalo – Seng-kia) (Sri Narasimha) **திபெத்தியர்களிடமிருந்தும் அரபியர்களிடமிருந்தும்** பாதுகாத்துக்கொள்ள படை உதவியை சீன அரசரிடம் கி.பி. 720இல் வேண்டினார் என்று தெரிவித்துள்ளார்.

டாக்டர் மு.ராஜேந்திரன் இ.ஆ.ப.

'பல்லவர் காலச் செப்பேடுகள்' எனும் நூலினை 2015இல் 284 பக்கங்களில் வெளியிட்டவர் மு.ராஜேந்திரன். அதில் 40வது பக்கத்தில் மேலே கூறிய செய்தியை உறுதிசெய்கிறார்.

பல்லவர் செப்பேடுகள் முப்பது

பி.ஸ்ரீ. அவர்கள் ஜெனரல் எடிட்டராகவும், தி.நா.சுப்பிரமணியன் அவர்களை ஸ்பெஷல் எடிட்டராகவும் கொண்டு தமிழ் வரலாற்றுக் கழக வெளியீடு 1, பல்லவர்

---

* இரா. ஆலால சுந்தரம், தமிழர் சமூக வாழ்வு, தமிழில் ம.இளங்கோவன், சென்னை 2016, பக்கம் 115–116.

செப்பேடுகள் முப்பது எனும் நூல் 1966இல் முதற்பதிப்பாக வெளிவந்தது. அதன் மறுபதிப்பு 1999இல் 584 பக்கங்களில் வந்துள்ளது.

பல்லவர் வரலாற்றுச் சுருக்கம்

அந்த நூலில் பல்லவர் வரலாற்றுச் சுருக்கம் 26 பக்கங்கள் உள்ளது. அதில் பக்கம் XVII, XVIII *இல் உள்ள செய்தி இதோ;*

திபெத்தியர் - சீனர் போர்

"கி.பி.720ஆம் ஆண்டு கொண்டதாகச் சீனதேசத்து வரலாற்றிலே காணும் குறிப்பு ஒன்று முக்கியமான செய்தியைத் தெரிவிக்கிறது. **திபெத்தியர்களோடு** *போர் நடந்துவதற்காக அவன் அப்போது ஆயத்தங்கள் செய்து வந்தானாம். அதற்கு உதவி அளிக்கக்கோரியும், குறைந்தபட்சம் தன் முயற்சிக்கு ஆதரவு அளிக்க வேண்டியும் அவன், சீன சக்கரவர்த்திக்குத் தூதுவனை அனுப்பியிருந்தானாம். சீன வேந்தனும் அதற்குத் தன் நல்ஆசியை அளித்துப் போர்ப்படைக்குப் புதிய நாமகரணமும் செய்தானாம். போரின் முடிவு என்ன ஆயிற்று? பல்லவனுக்கு சீனதேசம் உதவியதா? என்பன போன்ற விவரங்கள் ஏதும் தெரியவில்லை."* **இதில் திபெத் மட்டுமே குறிப்பிடப்பட்டுள்ளது. அரபு தேசம் குறிக்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.**

அரபுகளின் வாணிபம்

அந்நாளிலே அரபுகள் கடலிலே கலங்களைச் செலுத்தி வேறு நாடு சென்று தங்கள் வாணிபத்தைப் பெருக்கி வந்தார்கள். கிழக்கு நாடுகளிலிருந்து ஐரோப்பாவுக்குப் பாரசீக வளைகுடாவின் மூலம் செல்லும் வாணிபத்தை அவர்கள் தடுத்துத் தங்கள் மூலமாகவே நடத்த வேண்டுமென்பதையும் வற்புறுத்தி வந்தார்கள். அதே காலத்தில் சீன தேசமும் தன்னுடைய வெளிநாட்டு வியாபாரத்தைப் பெருக்கிக் கொள்வதில் அக்கறை கொண்டது. திபெத்தும் அந்நாளிலே பேரரசாகத் தலையெடுத்து அண்டைநாடுகளுக்குத் தலைவலி உண்டாக்கி வந்தது. சீன சக்கரவர்த்தியை அவன் தலைநகரிலேயே சிறைப்பட்டதுபோல் கிடக்கும்படி அது ஆட்டிவைத்தது. இந்தோ - சீனாவில் பல்லவர் பெற்றிருந்த ஆதிக்கத்திற்கும் அது உலைவைத்தது.★

★ *பல்லவர் செப்பேடுகள் முப்பது, சென்னை, 1999, பக்கம்* XVII

திபெத்திற்கும் – சீனாவிற்கும் கி.பி.720இல் வணிகரீதியாகவும், அரசியல் ரீதியாகவும் பிரச்சினை இருந்துள்ளது. இதில் அரபு நாடும் இழுக்கப்பட்டுள்ளது. சீனா – திபெத் – அரபு நாடுகளுக்கிடையே போர் நடந்ததாகத் தெரியவில்லை அனுமானந்தான். இதனை நடுநிலையாளர்கள் அறிந்து கொள்வார்களாக!

மா. இராசமாணிக்கம்பிள்ளை

1944இல் பல்லவர் வரலாற்று நூலை 348 பக்கங்களில் தந்த மா.இராசமாணிக்கம் பிள்ளையின் பல்லவர் வரலாற்று நூலில் இதுகுறித்து எதுவும் சொல்லப்படவில்லை.

ஆராய்ச்சி முடிவற்றது

இவற்றுடன் ஆராய்ச்சி நின்றுவிடவில்லை, ஆராய்ச்சி முடிவற்றது. எந்த நேரத்திலும் எந்தப் பழைய இடத்திலும் புதிய பொருள் கிடைத்தல் கூடும் என்ற மா.இராசமாணிக்கம் வரிகளையே நினைவுபடுத்திக்கொள்வோம்.★

பி.டி.சீனிவாச ஐயங்கார்

1913இல் திராவிடன் ஆகிய நான் என்று தம்மை அழைத்துக் கொண்டவர் பி.டி.சீனிவாச ஐயங்கார், வி.ஆர்.இராமச்சந்திர தீட்சிதர், கிருஷ்ணசாமி ஐயங்கார், டி.ஆர்.சேசையங்கார், ரா.இராகவ ஐயங்கார் இவர்களை நாம் மறந்திடல் முடியாது.

வி.கோ. சூரிய நாராயணசாஸ்திரி

வி.கோ.சூரிய நாராயண சாஸ்திரியார் என்ற பரிதிமாற்கலைஞரை மறக்கவும் இயலாது. இவர்கள் தமிழின் தொன்மை – சிறப்பு பற்றி பலவாறு விளக்கியுள்ளனர்.

History of the Tamils From the earliest times to 600 A.D.

சென்னைப் பல்கலைக்கழக சிண்டிகேட் ஆணைப்படி, சென்னை சி.குமாரசாமி நாயுடு அண்ட் சன்ஸ் நிறுவனத்தாரால் 1929இல் அச்சிடப்பட்டு வெளியான நூல் History of the Tamils From the earliest times to 600 A.D. அப்போது சென்னைப் பல்கலைக்கழக இந்திய வரலாற்றுத்துறையில் ரீடராக (Reader) பணியாற்றிய பி.டி.ஸ்ரீனிவாச அய்யங்கார் எம்.ஏ. அவர்களால்

★ பல்லவர் வரலாறு, சென்னை, 1964, பக்கம் 24,25

ஆங்கிலத்தில் 635 பக்கங்களில் வெளியான நூல் அது. சென்னை AES நிறுவனம் 1995இல் அதன் புதிய பதிப்பை வெளியிட்டுள்ளது.

தமிழ் உணர்வு உள்ளவர்கள்

தமிழ் உணர்வு உள்ளவர்கள் அனைவரும் வாசித்தறிய வேண்டிய அற்புதமான நூல் அது. அது சரி ஆங்கிலத்தில் இருப்பதை எப்படி அறிவது? நீங்கள் கேட்பது புரிகிறது.

புலவர் கா.கோவிந்தன்

திருநெல்வேலி, தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக்கழகம் 1989இல் பி.டி.சீனிவாச அய்யங்காரின் தமிழர் வரலாறு முதல் பகுதியை 540 பக்கங்களிலும், இரண்டாவது பகுதியை 543 பக்கங்களிலும் வெளியிட்டுள்ளது. பி.டி.சீனிவாச அய்யங்காரின் நூலின் தமிழாக்கம் மட்டும் செய்யாமல், திறனாய்வும் இடைஇடையே செய்துள்ளதால் நூல் நீண்டுவிட்டது.

பி. இராமநாதன்

பி.டி.சீனிவாச ஜயங்காரின் தமிழர் வரலாறு கி.பி.600 வரை நூலை சென்னை தமிழ் மண் பதிப்பகம் கோ.இளவழகனை பதிப்பாளராகவும், பி.இராமநாதனை மொழிபெயர்ப்பாளராகவும் கொண்டு 2007இல் 270 பக்கங்களில் சுருக்கமான மொழிபெயர்ப்பை வெளியிட்டுள்ளது. மிகமுக்கியமானது அந்த நூல் என்பதால் நூல் குறித்து இவ்வளவு விரிவான விளக்கம் தரவேண்டியதாயிற்று.

தொடக்க கால அயல்நாட்டு வணிகம்

The peoples of that region, the various Arab tribes and more especially those ancestors of the Phoenicians, the mysterious Red men, were the active carries of inter mediaries*

அரபிய இனக்குழுவினரும் பினிசியர்களின் முன்னோர்களும் பழங்கால வாணிபத்தில் பங்கேற்றனர். அல்லது இடைத்தரகராக

★ *1929, பி.டி. சீனிவாச அய்யங்காரின் ஆங்கில நூல் பக்கம் 39.*

இருந்தனர். இது அத்தியாயம் 3இல் தரும் தகவல்.

கி.மு. 2000 – கி.மு.1000 கால அளவில் தமிழகத்தின் அயல்நாட்டு வாணிகம்

பி.டி.சினிவாச அய்யங்கார் தனது நூலின் 7வது பகுதியில் கி.மு.2000 – கி.மு.1000 கால அளவில் தமிழகத்தின் அயல்நாட்டு வாணிகம் குறித்து எழுதியுள்ளார். எகிப்து, பாலஸ்தீனம், சீனாவுடன் தமிழகம் மேற்கொண்ட வணிகத்தை அதில் விளக்கியுள்ளார். **சேர நாட்டுப் பகுதியிலிருந்தும் சீனாவிலிருந்தும் அரேபியர் இலவங்கத்தை எகிப்துக்கு எடுத்துச் சென்றனர்.**

தென்இந்தியாவிற்கும் பாபிலோன் அரேபியா, எகிப்து ஆகிய நாடுகளுக்கும் வேதகாலத்திலேயே இருந்த தொடர்பு கி.மு.2000 – 1000 காலகட்டத்தில் தொடர்ந்தது என்பதற்கு ஆதாரம் உண்டு *என்பதனை உறுதிபடச் சொல்கிறார் பி.டி.சீனிவாச அய்யங்கார். வணிக உறவு கி.மு. 2000இல் செழிப்புற வளர்ந்திருந்தது என்று தெளிவாக கூறியுள்ளார்.*

“There is some evidence that the commercial relation which existed between South India on the one hand and Babylonia, Arabia and Egypt on the other, in the vedicage, flourished in the II Millennium B.C. *

அயல்நாட்டு வணிகம் கி.மு.1000 - 500

பி.டி.சீனிவாச அய்யங்கார் தனது நூலில் 30 அத்தியாங்களில் 3,7,10,14,18 ஆகிய 5 அத்தியாயங்களில் அயல்நாட்டு வாணிகம் குறித்தே எழுதியுள்ளார். 10வது அதிகாரத்தில் அவர் கூறியிருக்கும் கருத்துக்களைப் பார்ப்போம்.

The Indian trade in this early period was with Arabia and East Africa. **

இந்திய வாணிகம்

இந்திய வாணிகம், அப்பழங்காலத்தில் நடைபெற்றது. அரேபியாவுடனும் கிழக்கு ஆப்பிரிக்காவுடனுமாம். அது

---

*பி.டி.சீனிவாச அய்யங்காரின் 1929 வருட ஆங்கில நூல் பக்கம் 96.

**1929 வருடத்தில் பி.டி.சீனிவாச அய்யங்காரின் நூரல் பக்கம் 133.

பண்டமாற்று முறையிலேயே நடைபெற்றது. இந்தியப் பொருட்கள் அராபிய நாட்டு ஏடனுக்கு எடுத்துச் செல்லப்பட்டது.

but above all to Arabia Eudeemon (Aden) *

அயல்நாட்டு வாணிகம் கி.மு.600 - கி.பி.14

பி.டி.சீனிவாச அய்யங்காரின் நூலின் 14வது அத்தியாயம் அயல்நாட்டு வணிகம் கி.மு.600 – கி.பி.14. ஜூலியஸ்சீசரால், அலெக்ஸாண்டிரியா கி.மு.47இல் கைக்கொள்ளப்பட்டது என்றாலும், **கடல் வாணிகம்** *அராபியப் படகுகளில் கடற்கொள்ளைக்காரர்களின் பிடியில் சிக்குண்டிருந்த கடற்கரையை ஒட்டி நடைபெற்று வந்தமையால் அக்கால வாணிகம், சிறிய அளவில் நிலையற்ற தன்மையிலேயே நடைபெற்று வந்தது.**

அயல்நாட்டு வாணிகம் கி.பி.1-500

பி.டி.சீனிவாச அய்யங்காரின் நூலில் 18வது அத்தியாயம் அயல்நாட்டு வணிகம் கி.பி. 1–500, 30 அத்தியாயங்களில் 5 அத்தியாயங்கள் அயல்நாட்டு வணிகம் பற்றியே அதாவது ஆறிலொரு பங்கு எழுதியவர் பி.டி.சீனிவாச அய்யங்கார்.

ஏழாம் நூற்றாண்டில் **அராபியர்,** *சிரியா, எகிப்து, பெர்ஸியா ஆகிய நாடுகளை வெற்றிகொண்டு மீண்டும் (ரோமானியரிடமிருந்தும் கிரேக்கரிடமிருந்தும் மீட்டு) இந்திய வாணிகத்தின் இடைத்தரகராயினர்.*

In the VII Century the Arabs Conquered Syria, Egypt and Persia and became again the intermediaries of Indian Commerce. ***

அரேபியர் இந்திய வணிகத்தில் அதிலும் குறிப்பாக

★ *E.H.Warmington, Commerce between the Roman Empire and India, 1928, page 13.*

★★ *புலவர் கா.கோவிந்தன், பி.டி.சீனிவாச அய்யங்காரின் தமிழர் வரலாறு முதல் பகுதி, திருநெல்வேலி 1989, பக்கம் 292.*

★★★ *பி.டி.சீனிவாச அய்யங்காரின் 1929 வருடத்திய ஆங்கில நூல் பக்கம் 321.*

மலையாளக்கரை ஓரம் சேரநாட்டுப் பகுதியில் நடத்திய வணிகத்திற்கு வரலாற்றில் சான்றுகள் குவிந்து கிடக்கின்றன.

வி.ஆர் இராமச்சந்திர தீட்சிதர்

தமிழக வரலாற்றாசிரியர்களில் தலைசிறந்த சிலருள் ஒருவர் வி.ஆர். இராமச்சந்திர தீட்சிதர் (1896 – 1953)

29.11.1940 - 30.11.1940

சென்னைப் பல்கலைக்கழகத்தில் சங்கராபார்வதி அறக்கட்டளைச் சொற்பொழிவாக 29.11.1940இல் **பழந்தமிழ் நாகரிகத்தை உருவாக்கியவர்கள்** என்ற தலைப்பிலும் 30.11.1940இல் **அயல்நாடுகளில் தமிழ் நாகரிகத்தின் பரவல்** எனும் தலைப்பிலும் வி.ஆர்.இராமச்சந்திர தீட்சிதர் உரையாற்றினார்.

The Orgin and Spread of the Tamils

1947இல் 'The Orgin and Spread of the Tamils எனும் ஆங்கில நூலாக 53 பக்கங்களில் அது வெளிவந்தது. அந்தப் பொழிவுக்கான அடிக்குறிப்புகள் மட்டும் 47 பக்கங்களில் தரப்பட்டது. நூல் மொத்தம் 100 பக்கங்கள் ஆகும்.

தமிழர் தோற்றமும் பரவலும் புலவர் கா.கோவிந்தன்

புலவர் கா.கோவிந்தன் அந்த நூலை 'தமிழர் தோற்றமும் பரவலும்' என்று மொழி பெயர்த்தார். 1991இல் திருநெல்வேலி சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம் வெளியிட்டது. (நூல் 177 பக்கங்கள்)

தமிழரின் தோற்றமும் பரவலும் - பி.இராமநாதன்

தமிழ் மண் பதிப்பகம் சார்பில் அந்த நூலை பி.இராமநாதன் மொழிபெயர்த்து 2006இல் வெளியிட்டார். நூல் 79 பக்கங்கள்.

அரேபியாவின் ஷீபா - சபா (Saba)

நமக்கென ஒரு வரலாறு இருக்கிறது என உரிமைகோரும் நாளுக்கு அணித்தான கி.மு. பத்தாவது நூற்றாண்டில் **உலகப்பெருவாணிக நிலையமாக இருந்தது.** அரேபியாவின் தென்மேற்கு மூலையில் உள்ள கிறிஸ்தவ விவிலிய நூலில் '**ஷீபா**' என அழைக்கப்படும் **சபா** (Saba) எனும் நகராகும்.

அரேபியாவின் சபா என்ற இடத்தில் தான் இந்திய வணிகப்

பெருமக்களால் பண்டப்பொதிகள் இறக்கப்பட்டன. இங்குதான் எகிப்தியர்களும் இன்றைய சிரியாவும், பாலஸ்தீனமுமான பொய்னீஸிய நாட்டவரும் (Phoenicians) (லெபனான்) இந்திய வணிகர்களைச் சந்தித்துத் தங்கள் பண்டப்பொருள்களை இந்தியப் பொருள்களுக்கு மாற்றிக் கொண்டனர்.

சபா நகரத்து வணிகர்கள்

இடைத்தரகர்களாக சபா நகரத்து வணிகர்கள் செயலாற்றி, நடைபெறும் பல்வகை வணிகங்களில் கிடைக்கும் அங்கத்தின் பெரும்பகுதியைத் தமதாக்கிக்கொண்டதாகத் தெரிகிறது.

மன்னர் சாலமன் (சுலைமான்)

சிறந்த அறிவாளரான மன்னன் சாலமன் இவ்இடைத்தரகர்கள் இன்றி இந்திய வாணிகத்தோடு நேரடித் தொடர்பு கொண்டார்.

ஒப்ஹிர் Ophir

இவ்வணிகம் நடைபெற்றது ஒப்ஹிர் மற்றும் பொய்னிச என்னும் லெபனான் நாட்டின் கடல்துறைமுகமாகிய டையர் (Tyre) நகரங்களில் ஆகும். இது இந்திய வாணிபத்தை இயல்பாகப் பெருக்கியது.

மோகனரூபன்

உவரியும் ஒபிரும் எனும் நூலை 2002இல் தந்த மோகனரூபன் திருநெல்வேலி மாவட்டம் உவரிதான் 'ஒபீர்' துறைமுகம் என்று வலியுறுத்துகிறார்.

சந்தன உவரியில் சாலமன் கப்பல்

2014இல் மோகனரூபன் தந்த நூல் **சந்தன உவரியில் சாலமன் கப்பல்** 152 பக்கங்களைக் கொண்ட நூலின் பக்கம் 139இல் தென்னாட்டின் உவரியில் இருந்தது ஒபீர் துறைமுகம் என்பதைக் கூறுகிறார்.

கி. பாரிமுருகன்

பரவ மக்களும், உவரி கிராமமும் மானிடவியல் நோக்கில் எனும் நூலைத் தந்த முனைவர் கி.பாரிமுருகன் ஒபீர்பட்டணம் உவரி

என்கிறார். (நூல் பக்கம் 12)

க.த. திருநாவுக்கரசு

பேராசிரியர் க.த.திருநாவுக்கரசு **1962இல் வெளியிட்ட தமிழர் நாகரிக வரலாறு முதற்பகுதி விடிவெள்ளி** என்ற நூலில் பக்கம் 47இல் ஓபிர் உவரி என்பதைச் சொல்லியுள்ளார்.

கணியன் பாலன்

பழந்தமிழ்ச் சமுதாயமும் வரலாறும் என்று நூலை 2016இல் பெரிய சைஸில் (டபுள்டம்மி) 896 பக்கங்களில் தந்தவர் கணியன்பாலன். அந்த நூலில் பக்கம் 126இல் ஓபீர்துறைமுகம் தற்போதைய உவரி என்று குறிப்பிட்டுள்ளார்.

ஆய்வறிஞர் முன்னீர்பள்ளம் பூரணலிங்கம் பிள்ளையும் தனது Tamil India நூலில் ஓபீர் உவரி என்பதை உறுதி செய்கிறார் தமிழறிஞர் ந.சி. கந்தையா பிள்ளையும் அதனை உறுதிப்படுத்துகிறார்.

தாமஸ் நாடார்

முதலாவது இந்திய பிஷப் நெல்லை மாவட்டம் நெடுவிளை மெஞ்ஞானபுரத்தில் பிறந்த அசரியா அவர்களின் அருமைத்தம்பி தாமஸ் நாடார் எம்.ஏ. சென்னைக் கிறிஸ்தவக் கல்லூரி மேகசீன் வெளியீட்டில் 'ஓபீர்' திருநெல்வேலி மாவட்ட உவரி என்று உறுதிப்படுத்துகிறார்.

மதுரம் ஐயர்

இதனை ஆதரித்து இடையன்குடி பாதிரியார் மதுரம் ஐயர் பல சொற்பொழிவுகள் அந்தக்காலத்தில் ஆற்றி உள்ளார்.*

The Paravars of Uvari Village An Anthropological Profile

Dr.K.Parimurugan 2002 இல் தந்த The Paravars of Uvari Village என்ற ஆங்கில நூலில் பக்கம் 4இல் Obirpattinam (Uvari to day) ஓபிர்பட்டினம் தற்போதைய உவரி என்று வலியுறுத்துகிறார்.

எஸ்.பி.அந்தோணி சாமி

---

* அ.இராகவன், நம் நாட்டுக் கப்பற்கலை, சென்னை, 1968, பக்கம் 196–197.

உவரி மீனவர் வாழ்வியல் எனும் நூல் எஸ்.பி. அந்தோணிசாமியால் எழுதப்பட்டது. அந்த நூலில் ஒபீர் உவரிதான் என்று மகா. சோமாஸ்கந்தமூர்த்தியும், ஆ.சிவசுப்பிரமணியனும் கருதுகிறார்கள். இது நிற்க. இனி வி.ஆர்.இராமச்சந்திர தீட்சிதர் கூறும் விஷயங்களைத் தொடர்வோம்.

அச்செமனிட்

தென் இந்தியாவுக்கும் பாரசீகக் கடற்கரை மற்றும் ஏடனுக்கும் இடையிலான வாணிகப் பெரும் நடவடிக்கை மேற்கு ஈரான் நாடாகிய சுசா (Susa) நாட்டு நகரமாகிய அச்செமெண்ட் (Achaemenid) நகரம் ஈரான் நாட்டுப் பழம்பெரும் பேரரசின் தலைநகரமாக இருந்தபோது நேர்ந்த அழிபாடுகளிலிருந்து கண்டுபிடிக்கப்பட்டது.

எகிப்துடன் வணிகம்

கி.மு.63க்கும் கி.பி.64க்கும் இடையில் செங்கடல் வழியாக எகிப்து நாட்டுடனான வாணிக வளர்ச்சியை நில நூல் ஆய்வாளர் ஸ்ட்ராபோ (Strabu) விளக்கியுள்ளார். கி.பி.4ஆம் நூற்றாண்டில் உரோமப்பேரரசின் வீழ்ச்சியோடு வாணிக உறவிலும் சோர்வு ஏற்பட்டது. **அந்நிலையில் தென் இந்திய வணிகம் மீண்டும் அராபியர் கைக்கு மாறிவிட்டது.**

மூன்று வணிகங்கள்

தென்பால் வாணிகம்: அதாவது அராபியாவுடன் கிழக்கிந்தியாவுடனும் எகிப்துடனும் நடைபெற்ற வாணிகம்.

கீழ்ப்பால் வாணிகம் : அஸ்ஸிரியாவுடனும் பாபிலோனியாவுடனும் நடைபெற்ற வாணிகம்.

வடக்கு நோக்கிய வாணிகம் : அர்மீனியாவுடனும் காக்கஸ் மலைத்தொடர் நாட்டுடனுமான வாணிகம் இம்மூன்று வணிகக் கிளைகளில் **நனி மிக முக்கியத்துவம்** வாய்ந்தது என்று உறுதிப்படும்.

Arabian - Fast - Indian அரேபிய இந்திய நட்புறவு என்று அழைக்கிறோம். அதற்கு காரணம் பொய்னிஷியர்களே அரேபியாவைக் கடந்து இந்தியாவுக்குப் பயணம் செய்தனர் என்று உறுதிப்பட்ட ஒன்றை நாம் மேற்கொள்வது அன்று.

மாறாக அவர்கள் அப்போது வாணிக நிலையங்களில் **பெருமளவில் வேண்டப்பட்ட கிழக்கிந்தியப் பண்டங்கள் அரேபியாவில் வாங்கியதே காரணமாம் என்பார் வி.ஆர்.இராமச்சந்திர தீட்சிதர்.**

வணிகத் தூதுக்குழு

உரோமுக்கும் தென்னிந்தியாவிற்கும் இடையில் நடைபெற்ற கடல் வாணிபத்தில் பாண்டியர்களும், சோழப் பேரரசும் தூதுவர்களளை அனுப்பியது. இத்தூது அனைத்தும் அலெச்சாந்திரியாவையும் சிரியாவையும் சேர்ந்த கிரேக்கர்களால் முடிந்தால் இடைத்தரகர்களாகிய **அராபியர்களை** அகற்றுதற் பொருட்டுத் திட்டமிட்டு மேற்கொண்ட வாணிகத்தூதுக்கள் என்பார் வி.ஆர். இராமச்சந்திர தீட்சிதர்.*

சஞ்சீவ் கன்யால்

'ஏழுநதிகளின் நாடு' Land of the seven rivers' என்று ஆங்கில நூலை பெங்குயின் (Penguin) நிறுவனம் மூலம் தந்தவர் சஞ் சீவ் கன்யால்.

சிவ.முருகேசன்

அந்த நூலை 2016இல் தமிழாக்கம் செய்து சந்தியா பதிப்பகம் மூலம் வெளியிட்டவர் சிவ.முருகேசன். தமிழ் மொழிபெயர்ப்பு பக்கம் 171இல் சஞ்சீவ்கன்யால் கூறுகிறார்.

மெக்காவிலிருந்து வணிகர்கள்

இஸ்லாமிய சமயத்தின் தோற்றத்திற்கு முன்பே மெக்காவிலிருந்து வணிகர்கள் இந்தியாவுடன் மும்முரமாக வணிகத்தில் ஈடுபட்டு வந்தார்கள். கி.பி.ஏழாம் நூற்றாண்டின் தொடக்கத்திலிருந்தே இந்தியாவின் மேற்குக்கடற்கரைத் துறைமுகங்களுக்கு கீழை ரோமானியப் பேரரசு, பாரசீகம், யேமன், ஓமன், எத்தியோப்பியா போன்ற நாடுகளைச் சேர்ந்த வணிகர்கள் வந்து கொண்டிருந்தார்கள். **மெக்காவிலிருந்து வணிகர்கள் இங்கு வந்தார்கள்.**

இஸ்லாம் மார்க்கம் துவங்கப்படுவதற்கு முன்பே இந்தியாவில் அரேபியர்கள் வணிகம் புரிந்ததை சஞ்சீவ்கன்யால் வலியுறுத்தியுள்ளார்.

---

* *E.H.Warmington, The Commerce between the Roman Embire and India, Cambridge, 1928*இல் அச்சான நூலில் பக்கம் 37.

பெருங்கடல்

வரலாறு என்பது ஒரு பெருங்கடல்.

H.W. வான்லூன்

கடந்த காலம் என்னும் எல்லையில்லாப் பெருவெளியில் காலத்தச்சன் காட்டியுள்ள அனுபவம் என்னும் மாபெரும் கோபுரமே வரலாறு. இப்பழம்பெரும் கோபுரத்தின் கொடுமுடியில் ஏறி, அங்கிருந்து அப்பெருவெளியின் முழுத்தோற்றத்தைக் காணமுயல்வது எளிய செயலன்று. எனினும் இளைஞர்கள், ஆற்றல்மிக்கவர்கள் முயன்றால் அப்பெருவெளியின் முழுத்தோற்றத்தையும் காணலாம் என்ற H.W.வான்லூன் வரிகளை எண்ணிப் பார்த்தவாறே தொடர்வோம்.

எம். ஸ்ரீனிவாச அய்யங்கார் எம்.ஏ.,

'Tamil Studies of Essays on the History of the Tamil People, Language, Religion and Literature' *எனும் நூல் 1914இல் சென்னையிலிருந்து 427 பக்கங்களில் வெளியிட்டவர் எம்.ஸ்ரீனிவாச அய்யங்கார்.*

Asian Educational Services

புதுதில்லியிலும் சென்னையிலும் இயங்கிவந்த ஆசியன் எஜுகேசனல் சர்வீஸஸ் நிறுவனத்தால் அந்த நூலை 1982, 1998, 2001 ஆண்டுகளில் மறுபதிப்புச் செய்துள்ளனர். அதில் பக்கம் 47, 48இல் கூறுகிறார்.

அரேபியர்களின் முந்தைய வணிகம்

'The Ionians and the Romans and very lately the Arabs had commercial inter course with the early Tamils.'

அயோனியர்கள், ரோமர்களையும் முந்தி அரேபியர்கள் தமிழர்களுடன் வணிகம் புரிந்ததை விளக்கியுள்ளார் எம்.ஸ்ரீனிவாச அய்யங்கார்.

கே.ஏ.நீலகண்ட சாஸ்திரி (12.8.1892 15.5.1975)

வரலாறே சத்தியம், சத்தியமே வரலாறு, கற்றனைத்தும் ஊறும் அறிவு, மேன்மேலும் கற்பதன் மூலம் அறியப்பெறலாம். **வரலாற்று ஆய்வு நிலை பெற்றதோ** *முழுமை அடைந்ததோ அன்று; வரலாற்று ஆசிரியன் தீர்க்கதரிசியும் அன்று. ஆயினும் ஒரு வித்தைக்காரனை போல் பண்டைய*

நிகழ்ச்சிகள் பல வகைப்பட்ட மறைமுகமான செய்திகளுடன் வெளிப்படுகையில், அவன் அவற்றை சுட்டிக்காட்ட முடியும் என்பார் வரலாற்றாசிரியர் கே.ஏ.நீலகண்ட சாஸ்திரி.*

29 நூல்கள்

1929 இல் பாண்டியப் பேரரசு (Pandya Kingdom) துவங்கி அவரது மறைவிற்கு பிறகு *1978*இல் மைசூர் பல்கலைக்கழகம் வெளியிட்ட நூலில் தி ஹிந்து *2018* இல் வெளியிட்ட நூலோடு சேர்த்து *29* நூல்கள் நீலகண்ட சாஸ்திரியார் தந்தது.

6 புக்லெட்ஸ் (Booklets)

K.K. தாஸ்குப்தா மற்றும் நி.யாஸ்டனி நூலுக்குத் தந்ததும் மற்றும் பத்திரிகைகள் இதழ்களில் எழுதுவதும், மொழி பெயர்ப்புகளும் வாழ்க்கை வரலாற்றுக் குறிப்புகளும் உட்பட ஏறத்தாழ *160* ஆய்வுக்கட்டுரைகள் கே.ஏ.நீலகண்ட சாஸ்திரியால் நமக்கு கிடைத்தது.**

சங்க கால ஆட்சி முறையும், சமூக வாழ்வும்

கே.ஏ.நீலகண்ட சாஸ்திரியின் சங்க கால ஆட்சி முறையும், சமூக வாழ்வும் ஆங்கில நூல் கே.வி.ராமன் தமிழாக்கம் செய்து *2013*இல் அது வெளிவந்தது. அதில் பக்கம் *27*இல் K.A. நீலகண்ட சாஸ்திரி கூறுகிறார். ''நில வழியாக வணிகம் நடைபெற்றது என்றாலும், **எகிப்திற்கும், அரேபியாவிற்குமிடையேயும், அரேபியாவின் வழியாக இந்தியாவிற்கும் ஏற்பட்ட கடல் வாணிகமே மிகச் சிறப்புற்றிருந்தது.** ரோமபுரி வணிகர், **அரேபியர்** மூலம் பெற்ற ஆடம்பர பொருட்களுக்குரிய விலையைப் பெரும்பாலும் பொன்னாகவும், வெள்ளியாகவும் கொடுத்தனர் என்று பிளினி தெரிவித்துள்ளார்.***

---

*மஞ்சரி பிப்ரவரி 1993 தென்னக வரலாற்றுத்துறையில் முன்னோடி பேராசிரியர் கே.ஏ.நீலகண்ட சாஸ்திரி, ஆர்.திருமலை (நன்றி இந்து, தமிழில் பக்கம் 22 கட்டுரை எம்.சி.சீனிவாசன்).

***M.Grace Hepzibah Anbumani K.A.Nilakanta Sastri, A Study in Ancient Indian Historiography, Palayamkottai 2009, Page 226-239.*

***வார்மிங்டன், தி காமர்ஸ் பெட்வீன் தி ரோமன் எம்பயர் அன்ட் இண்டியா கேம்பிரிட்ஜ், 1928, பக்கம் 274.

சோழர்கள்

கே.ஏ.நீலகண்டசாஸ்திரியின் சிறப்பு மிக்க நூல் சோழர்கள் வரலாறு பற்றியது. பெரிய சைஸ் அளவில் முதல் தொகுதி *1935*இலும், இரண்டாவது தொகுதி *1937*இலும் வெளிவந்தது. பின்னர் விரிவுபடுத்தப்பட்டு *1955*இலும், அதன் மறுப்பு *1975* இலும், *1984*லும், *812* பக்கங்கள் படங்கள் *34* பக்கங்களுடன் வெளிவந்துள்ளது. அதில் *22*வது அத்தியாயம் Industry and Trade (தொழிலும் வியாபாரமும்) அதில் கூறியுள்ளார்.

சிராப் துறைமுகம் (Siraf Tahiri)

பந்தர் இ டாயர் கிழக்கு கடற்கரையில் உள்ள சிராப் என்னும் துறைமுகம் தான் இக்காலத்தில் இந்தியாவுக்கு மேற்கே பிரபலமான வியாபார கேந்திரமாகச் சிறப்பு அடைந்திருந்தது. இங்கு பல நாட்டவர் கூடினர்.

இபின் ஹவ்கல் (Ibn Hawgal)

சம காலத்திய அரபி வரலாற்றாசிரியர் இபின் ஹவ்கல் சிராப் துறைமுகத்திற்கு அருகில் விவசாயத் தொழில் கிடையாது. மரங்கள் கூட இல்லை. தண்ணீர் தூரத்திலிருந்து தான் வர வேண்டும். இங்கே இருப்பவர்கள் எல்லோரும் எந்த நேரத்திலும் வியாபாரம், பொருட்கள், விற்பனை, கொள்முதல் ஆகியவற்றிலேயே கண்ணும் கருத்துமாக இருக்கிறார்கள்.*

வணிகர்கள் சிறப்பாக கவனிக்கப்படுதல்

சிராப் துறைமுகத்திற்கு வரும் வியாபாரிகள் சிறப்புடன் அவரவர்க்குரிய முறையில் நன்கு கவனிக்கப்படுவார்கள் என்று அபுஜெய்த் (Abu Zayd) கூறுகிறார்.

தென்னிந்திய வரலாறு

1947 இல் History of South India from Prehistoric Times to the Fall of Vijayanagar என்ற நூலை கே.ஏ.நீலகண்டசாஸ்திரி

---

* *Wilson – The Persian Gulf P.94* என்று *K.A.* நீலகண்டசாஸ்திரி அடிக்குறிப்பு தருகிறார். இந்த நூலைத் தேடினேன். *Sir A.Wilson* 1927 இல் *'A Periplus of the Persian Gulf* என்ற நூலை எழுதியதை அறிந்தேன். மற்றொரு வில்ஸன் *A.T.Wilson* அவர் எழுதியதே *The Persian Gulf* என்னும் நூல். இது 1928 இல் *London Allen & Unwin* நிறுவனத்தாரால் வெளியிடப்பட்ட நூலாகும்.

வெளியிட்டார். அதன் மறுபதிப்பு 1958இல் சென்னைப் பல்கலைக்கழகத்தினரால் 508 பக்கங்களில் வெளிவந்துள்ளது.

அதில் 7வது அத்தியாயம் சங்க காலமும், அதற்குப்பிறகும் The Age of the Sangam and After *அதில் பக்கம் 134 இல் கூறுகிறார்.*

அரேபிய கிரேக்கர்கள்

Muziris abounded in Ships send there with Cargoes from Arabia and by the Greeks.

அரேபியரின் கப்பல்கள்

கிரேக்கர்களும், அரேபியர்களும் அனுப்பிய சரக்குகளை சுமந்து வந்த கப்பல்கள் முசிறியில் *ஏராளமாக இருந்தன என்று பெரிப்ளஸ் நூலாசிரியர் (கி.பி. 75) குறிப்பிடுவதை நீலகண்டசாஸ்திரி சுட்டிக்காட்டுகிறார்.**

AGE OF THE NANDAS AND MAURYA

கே.ஏ.நீலகண்டசாஸ்திரி, ஜெ.என்.பானர்ஜி (J.N.Banerjea) *ஹெச்.சி. ராய்சௌத்திரி* (H.C.Raychaudhari) U.N.கோசல் (U.N.Ghoshal) H.C.*பக்ஷி* (P.C.Bagchi) S.K.*சட்டர்ஜி* (S.K.Chatherji), M.*ராகவன்* (V.Ragavan) *நிகர்சன் ராய்,* (Nharjan Ray) *ஆகியோர் இணைந்து வெளியிட்ட நூல்.* AGE OF THE NANDAS AND MAURYA. *1951இல் வெளியான இந்த ஆங்கில நூல் 449 பக்கங்கள் கூடுதலாக 29 புகைப்படங்கள் பக்கம் கொண்டது. அதில் பக்கம் 223 இதோ.*

சக்தி வாய்ந்த அரபு வாணிகம்

Like the Indian route to Egypt stretching along the east shore of the Red sea, the route through the Persian Gulf was **controlled by powerful Arab tribes engaged ina highly developed trade.**

Dr. G.N.Ghoshal, Industry, Trade and currency page 273 மேற்கோள் M. Rostovtzeff, the Social and Economic History of the Hellentic World, oxford, three volumes, page 457.

---

* *K.A. நீலகண்டசாஸ்திரி தமிழாக்கம் மு.ரா.பெருமாள் முதலியார், தென்னிந்திய வரலாறு, வரலாற்றுக்கு முற்பட்ட காலம் வரை விஜயநகரப் பேரரசின் வீழ்ச்சி வரை சென்னை, முதற்பதிப்பு 1977 மறுபதிப்பு 1979 பக்கம் 220.*

அரேபியர்கள் சக்தி வாய்ந்த நிலையில் தங்களது கட்டுப்பாட்டிற்குள் வைத்து பெர்சியன் செங்கடல் வழியாக வணிகத்தை சிறப்பாக நடத்தினர் என்பது வரலாற்று ஆசிரியர்களால் ஒப்புக்கொள்ளப்பட்ட செய்தியாகும்.

கே.ஏ.நீலகண்டசாஸ்திரி - G. ஸ்ரீநிவாச்சாரி G.Srinivasachari

1970இல் கே.ஏ.நீலகண்டசாஸ்திரியும், G. *ஸ்ரீநிவாச்சாரியும் இணைந்து வெளியிடப்பட்ட நூல்* Advanced History of India *தொடர்ந்து 1975, 1980, 1982, 1986 மறு பதிப்புகள் கொண்டது. 1986 ஆம் வருட பதிப்புகள், 874 பக்கங்கள். அதில் 436 வது பக்கம் இதோ.*

When the Arbs conquered Egypt and Persia, direct communication between Europe and India was effectively checked. It was at this time that the trade between India and Europe fell almost completely into the hands of the muslims.

ஏழாம் நூற்றாண்டில் முஸ்லிம்கள்

ஏழாம் நூற்றாண்டில் முஸ்லிம்கள் எகிப்தையும், பாரசீகத்தையும் வெற்றி கொண்டதற்கு பின்னர் ஐரோப்பா – இந்தியா வணிகம் முழுவதுமாக அரேபிய முஸ்லிம்கள் கரங்களில் வந்து விட்டது.

19.6.1960 தி ஹிந்து

கே.ஏ.நீலகண்டசாஸ்திரி 19.6.1960 தி ஹிந்து ஆங்கில நாளிதழில் எழுதிய கட்டுரை South India and the Sea. *அதில் கூறுகிறார்.*

கி.பி. முதல் நூற்றாண்டிலேயே அரேபிய இந்திய வணிகம் சிறப்பாக நடைபெற்றது. இரண்டாம் நூற்றாண்டில் அரேபியர்கள் வணிகத்தில் இடைத்தரகர்களாக விளங்கினர்.

Towards the end of the second century, the direct trade between the Egyptian Greeks of the Roman Empire and India declined, and the Arabs and still move Auxuites of East Africa began to act as intermediaries.*

**The Hindu History series, K.A. Nilakanta Sastri, writings in the Hindu, Chennai, 2018,Page 79.*

எகிப்துடன் வணிகம்

தமிழகத்திற்கும் எகிப்துக்கும் இடையே ஏற்பட்டிருந்த வணிகத் தொடர்பு மிக பழமையானதாகும். 'பெரிப்ளூஸ்' நூலைப் பதிப்பித்த ஸ்காப் பதிப்புரையில் கிரேக்க மக்கள் அநாகரிகத்தினின்றும் விழித்தெழுவதற்குப் பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே எகிப்தும் பண்டைய இந்திய நாடுகளும் வணிகத் தொடர்பு கொண்டிருந்தன என்று குறிப்பிடுகிறார். *

(இந்த நூல் 325 பக்கங்கள், மூல நூல் 28 பக்கங்கள் மட்டுமே, மீதிப் பக்கங்கள் அந்த காப்பியின் விரிவான விளக்கங்களே ஆகும்.)

க்யுசியர் (Qusier)

எகிப்து நாட்டின் பண்டையத் துறைமுகமான **க்யுசியரில்** கண்டெடுக்கப்பட்ட இரண்டு பானை ஓடுகளில் **'கணன்'**, **'சாதன்'** என தமிழில் பொறிக்கப்பட்டுள்ளது. இம்மண்பாண்ட ஓடுகள் கெய்ரோ அருங்காட்சியகத்தில் உள்ளது. 'கணன்', 'சாதன்' என்ற பெயர்கள் வணிகர்கள் குறிக்க பொதுவாக வழங்கிய சொற்களாகும். பாரசீக வளைகுடாவின் வடபால் இந்நாடுகள் ஒன்றொடொன்று பண்டமாற்றுச் செய்தன என்றும் குறிப்பிட்டுள்ளார்.

கி.பி. முதல் நூற்றாண்டில்

கி.பி. முதல் நூற்றாண்டில் தமிழர்கள் எகிப்துடன் கொண்ட உறவை வலுப்படுத்த இக்கண்டுபிடிப்பு துணைபுரிகிறது என்பர் ஐராவதம் மகாதேவன்.**

தமிழ்நாட்டு வரலாறு - தொல் பழங்காலம்

தமிழக வரலாற்றை தொல் பழங்காலத்திலிருந்து எழுதிடும் முயற்சி 1975 இல் துவங்கி அது குறித்த நூல் 397 பக்கங்களில்

---

* *W.H.Schoff: The Peri plus of the Erthraean Sea, New York. 1912, Introduction Page 3.*

** *Iravatham Mahadevan, Ancient Tamil* ஐராவதம் மகாதேவன் *Contact Abroad - Recent, Epigraphical evidence, paper presented at Thaninayagam Foundation Trust, Colombo, Srilanka, on 8th February 1994.*

வெளி வந்தது. தமிழ்நாட்டு வரலாற்று வெளியீட்டகம் அந்த நூலை வெளியீட்டது. (அதன் தொடர்ச்சியாக பல பகுதிகள் வந்துள்ளது என்றாலும் இன்று வரை கி.பி.2021 வரை அந்தப் பணி பூர்த்தியடையவில்லை என்பது வருத்தத்திற்குரிய விஷயமாகும்.)

பழைய கற்காலம்

பழைய கற்காலம் என்ற கட்டுரை இதில் உள்ளது. 20 லட்சம் ஆண்டுகளிலிருந்து கி.மு.4000 வரையிலான காலத்தை தொல் பழங்காலம் அதாவது எழுத்துச் சான்று இல்லாத வரலாற்றுக் காலம். (Pre – Literary Historical Period) *என்று அழைக்கப்பட்டது.*

ராபர்ட் புரூஸ்புட்

கி.பி. 1869 இல் ராபர்ட் புரூஸ்புட் (Robert Bruce Foote) *பழைய கற்காலம் பற்றி சென்னை பல்லாவரம் அருகே ஆய்வு செய்தார். 1930 இல் பர்கிட்* (Miles Burkitt) *அதைத்தொடர்ந்து பாட்டர்ஷன்* (T.T.Patterson) *ஆய்வு செய்தனர்.*

சூனர் – ஆல்சின்

தமிழகத்தில் திருநெல்வேலிக் கடற்கரையில் கிடைக்கும் கடைக்கற்கால கருவிகளைப் பற்றி சூனர் (F.E.Zenner) *ஆல் சீன் அம்மையார்* (Bridget Allchin) *ஆய்வு செய்தனர். கடற் பயணம் மேற்கொள்வதற்குரிய திறமை ஏதோ ஒரு வகையில் இக்கால மக்களிடம் அமைந்திருந்தது என்று ஆல்சீன் அம்மையார் கருதுகிறார்.* *

மோதி சந்திரர்

பழங்கால கடல் வணிகம் நன்றாகவே ஆராயப்பட்டு பல நல்ல நூல்கள் வெளி வந்துள்ளது. மோதி சந்திரரின் இந்தி நூலைக் குறிப்பிடாமல் இருக்க முடியாது.

இந்திய வணிக நெறிகள்

எம்.சுப்பிரமணியம் அந்த நூலை தமிழில் மொழி பெயர்த்தார். சாகித்திய அகாதமியால் 1970 இல் வெளியிடப்பட்டது. இந்திய

**Bridget Allchin Stone – Tipped Arrow Phoennix House, London, 1966 P.P.140-141. தமிழர்களின் கடற்பயணம் எவ்வளவு நீண்ட நெடியது கற்காலம் தொட்டே இருந்தது என்பது ஆய்வாளர்களின் முடிவாகும்.*

வணிக நெறிகள் 417 பக்கங்கள் கொண்டது. அதில் பக்கம் 222–223 இல் கூறுகிறார்.

கி.பி. முதலாவது நூற்றாண்டில் இந்தியக் கப்பல் வியாபாரம் முன்னேற்றமடைந்திருந்தது. இந்தியக் கப்பல்கள் கிழக்கு ஆப்பிரிக்கா, பாரசீக வளைகுடா நாடுகளுடன் தொடர்பு கொண்டிருந்தது. அரபு நாட்டவர்கள் தடை செய்ததால் அதற்கு மேலும் முன்னேற முடியவில்லை. இந்தியாவின் தென்மேற்கு கடற்கரையில் இருந்து கிளம்பிச் சென்று சில பெரிய கப்பல்கள் அரபி நாட்டவர்களின் அனுமதியுடன் வடகிழக்கு ஆப்பிரிக்கா கார்காடியா வரை சென்றது. மோதி சந்திரர் கூறுகிறார். அதே நூலில் பக்கம் 218, 219 இல்.

சேரப்ரோத் - கேரளம்

சேரப்ரோத் அல்லது கேரளத்திலிருந்து ஏராளமான மிளகு ஏற்றுமதி செய்யப்பட்டது. ஒரு காலத்தில் கன்னியாகுமரியில் இருந்து கார்வார்முனைவரை கேரளம் பரவியிருந்தது. ஆனால் பெரிப்ளூஸ் நூல் வந்த காலத்தில் (கி.பி. 50 – 80) கேரளத்தின் வடபகுதி பிரிந்து விட்டது. தென்பகுதி தெற்குத் திருவிதாங்கூர் பாண்டியர்களின் கைக்கு மாறி விட்டது. கேரளம், மலபார், கொச்சின், திருவாங்கூர் கொண்ட பிரதேசமாக இருக்கலாயிற்று.

டிண்டிஸ்

டிண்டிஸ் என்பது அதன் வடக்கு துறைமுகம். முஜரிஸ் பெயர் பெற்ற துறைமுகம். இங்கிருந்து ரோம் **அரபு** நாட்டு கப்பல்கள் ரோம் நாட்டிற்கு சரக்குகளை கொடுத்து இந்திய நாட்டுச் சரக்குகளை வாங்க வந்தனர். எந்தப் பேரமும் இல்லாமல் வியாபாரம் நடந்தது.

பாண்டியப் பேரரசு

பாண்டியப் பேரரசு மதுரை, திருநெல்வேலி முதலான பகுதிகளைக் கொண்ட பிரதேசமாக விளங்கியது. மிளகு வியாபாரத்தில் பாண்டியர்களுக்கும், சேர நாட்டவர்களுக்குமிடையே பொறாமையிருந்து வந்தது. **நெல்கிஸ்டாவிற்கு** வந்த கிரேக்க வியாபாரிகளிடம் முஜிரிஸில்

சரக்குகள் குறைவாக கிடைக்கின்றன என்று பாண்டிய நாட்டவர்கள் கூறியதாக பிளினி கூறுகிறார்.*

முசிறி, கரூர், கருவூர்

முசிறி கேரளத்தில் அங்கீகரிக்கப்பட்ட துறைமுகமாக இருந்தது. வஞ்சி என்ற கருவூர் அல்லது கரூர் டாலமியின் காலத்தில் சேர்ந்த நகரமாக இருந்தது. கரூர் என்னும் இடம் இப்போது கொடுங்களூருக்கு அருகில் கரூர் என்ற பெயருடன் விளங்கி வருகிறது.

சோழ நாடு - வைடூரியம் - பாண்டிய நாட்டு முத்து - சேரர் - மிளகு

கோயம்புத்தூரில் வைடூரிய சுரங்கங்கள் இருந்தது. சோழர்களிடம் வைடூரியமும், மஸ்லின் துணிகளும் இருந்தது. ஒரத்யூரா (உறையூர்) சோழர்களின் தலைநகராக இருந்தது. சேரர்கள் கையில் மிளகு இருந்தது. பாண்டியர்களிடம் முத்து இருந்தது.

3வது நூற்றாண்டில்

ரோமப் பேரரசு 3வது நூற்றாண்டில் வீழ்ச்சியுற்றது.

மீண்டும் அரபுகள் வணிகம்

இந்திய – ரோம கடல் வணிகங்கள் மூடப்பட்டு விட்டது. மூன்றாம் நூற்றாண்டில் அரபு நாட்டவர் கையில் மீண்டும் வணிகம் வந்தது. ஏழாவது நூற்றாண்டின் நடுப்பகுதியில் வியாபாரத்தை பெருக்கிக் கொண்டார்கள்.

ஏழாவது நூற்றாண்டின் கடைசிப் பகுதியில் பாரசீக வளைகுடாவின் கப்பல் வியாபாரம் அரேபியர்களின் கையில் இருந்தது.* இஸ்லாம் மார்க்கம் தோன்றிய பிறகு வியாபாரம் மேலும் விருத்தியடைந்தது. **

---

* ஈ.எச்.பாமிங்டன், திகாமர்ஸ் பிட்வீன் தி ரோமன் எம்பயர் அண்டு இந்தியா பக்கம் 58, 59.

* மோதி சந்திரர், இந்திய வணிக நெறிகள், பண்டைய இந்தியாவின் சாலையமைப்புகள். *Moti Chandras Hindi treati so on Ancient Indian travel routes entitled SARTHA* ஹிகிபிகி சாகித்ய அகாதெமி, புதுதில்லி, 1970 பக்கம் 353 – 354.

ஏழுரா

கி.மு. 5ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த ஏழுரா, யூதர்களின் எபிரேய சமய வழிபாட்டு நூல்களுக்கான மறுபதிப்பு செய்த முக்கிய மத குரு. இவர் வருகைக்குப் பல நூற்றாண்டுகளுக்கு முன்பிருந்தே இந்தியாவின் வணிகப் பொருட்கள் சோமாலியா தாண்டி, நைல் நதிக்கும் அப்பால் விற்கப்பட்டது.

*நாகரீக வளர்ச்சி பெருக மிகப் பழங்காலத்தில் ஒரு பழங்குடியினர் மூலம் மற்றொரு பழங்குடியினருக்கும், ஒரு கடல் துறை நகரிலிருந்து பிறிதொரு கடல் துறைமுகமாக வாணிகம் நடைபெற்றதை அறிஞர் சுகாப் உறுதிபடுத்துகிறார்.**

ந.சி.கந்தையாபிள்ளை

யாழ்ப்பாணத்து நாவலியூர் சி.கந்தையாபிள்ளை ஏராளமான ஆய்வு நூல்களை எழுதியவர். இவர் உவரி துறைமுகம் பற்றி கூறுகிறார். அங்கு பெரும் மழை பொழியும் போது மணல் மேடுகள் கரையும். மக்கள் அம்மணல் மேடுகளிலிருந்து பொன் நாணயங்கள் எடுக்கிறார்கள் என்று Essays of S.V.Thomas, M.A. Page *85 மேற்கோள் காட்டுகிறார்.*

திராவிடர் நாகரீகம்

ஆராய்ச்சி வெளியீடு 15, திராவிடர் நாகரீகம் பகுதி I *என்ற நூல் ந.சி.கந்தையாபிள்ளையால் 52 பக்கங்களில் எழுதப்பட்டுள்ளது. அதில் பக்கம் 43 இல் கூறுகிறார்.*

''குளாடியஸ் (Cladius) *என்னும் ரோம அரசருக்குப் பின், தென்னிந்தியாவிலும் வாணிகப் பண்டங்கள் கடல் வழியாகச் சென்றன. அவை* **அரேபிய** *வணிகத் துறைமுகங்களையும், அலெக்ஸ்சாந்திரியாவையும் அடைந்தன. இந்திய வணிகப் பொருள்களைப் பெரிதும் கையாண்டவர் எகிப்திய கிரேக்கர் ஆவர்'' என்பர் ந.சி.கந்தையாபிள்ளை.*

வரலாற்று காலத்துக்கு முற்பட்ட பழந்தமிழர்
Pre Historic – Tamils

ந.சி.கந்தையாபிள்ளை 1948 இல் வெளியிட்ட நூல் வரலாற்றுக் காலத்திற்கு முற்பட்ட பழந்தமிழர், 144 பக்கங்களைக் கொண்டது அந்த நூல். அதில் பக்கம் 52 இல் கூறுவார்.

---

* *W.H.Schoff, the Periplus of Erithryan sea page 227-228*

அரேபிய வணிகர்

''அக்காலத்தில் அரேபிய வணிகர் இலங்கை, இந்தியா முதலிய இடங்களில் இருந்து மணச்சரக்குகளை (நறுமணப் பொருட்கள்) அரேபியாவுக்கு கொண்டு சென்று பின் அவைகளை பிறநாட்டு வணிகருக்கு அதிக லாபத்திற்கு விற்றார்கள்.

தமிழகம்

1934 இல் யாழ்பாணத்துக் நாவலியூர் சி.கந்தையாபிள்ளை **'தமிழகம்'** என்னும் நூலில் 282 பக்கங்களில் வெளியிட்டுள்ளார். அதில் 185வது பக்கத்தில் கி.மு.1462 இல் பதினெட்டாவது முறையாக அரசாண்ட எகிப்திய அரசரின் **'மம்மீஸ்'** (பிரேதங்கள்) இந்திய **'மஸ்லின்'** துணிகளால் மூடப்பட்டிருந்ததையும், எகிப்தியர் இந்தியாவில் கிடைக்கும் **'அவுரி'** யிலிருந்து எடுக்கப்படும் நீலத்தினால் ஆடைகளுக்குச் சாயமூட்டுகிறார்கள் என்றும் தெரிவித்துள்ளார்.

தமிழர் சரித்திரம்

1947 இல் N.S. கந்தையாபிள்ளை 'தமிழர் சரித்திரம்' என்னும் நூலை 224 பக்கங்களில் வெளியிட்டுள்ளார். அதில் பக்கம் 145 இல் கூறுகிறார். ''பண்டைத் தமிழர் வாணிகத்துறையில் மிக முன்னேற்றம் அடைந்திருந்தார்கள். அசீரியர், பாபிலோனியர், எகிப்தியர், கிரேக்கர், ரோமர், சீனர், **அரேபியர்,** பினீசியர் முதலிய பழைய நாகரீக சாதியர் தமிழ்நாட்டோடு வியாபாரத் தொடர்புடையவர்களாக இருந்தனர்.

தென்னிந்திய வாணிகம்

பக்கம் 146 இல் சொல்கிறார்.பிற நாடுகளுக்குப் பண்டங்களை ஏற்றிச் செல்லும் மரக்கலங்களும், பிற நாட்டுச் சரக்குகளுடன் வந்த நாவாய்களும், தென்னிந்தியத் துறைமுகங்களில் குழுமி நின்றன.

மலையாளக் கரை தேக்கு

சாலடியாவின் நவ நகராகிய ஊர் (ஹிஸி) என்னும் நகரத்தின் அழிபாடுகளில் மலையாளக் கரைகளில் மாத்திரம் காணப்படும் தேக்கு மரத்துண்டுகள் கண்டெடுக்கப்பட்டது. **''ஊர்''** நகரின் காலம் கி.மு.4000.*

---

* *A. Zenaide Ragozin, History of vedic India, Mittal Publication Delhi,1984. Page 305.*

கி.மு.1700

கி.மு.1700 இல் எகிப்துக்குச் சென்ற யோசேப்பின் வரலாறு (நபி யூசுப் (அலை) அக்காலத்தில் இந்திய வியாபாரப் பொருட்கள் வணிகர் கூட்டத்தாரால் தரைமார்க்கமாக அரேபியாவுக் கூடாக எகிப்து, சிரியா, பாபிலோன் முதலிய நாடுகளுக்குக் கொண்டு செல்லப்பட்டதைக் கூறுகிறது.

வெப்பர் (weber)

கி.மு.17 ஆம் நூற்றாண்டில் இந்தியாவுக்கும், மேற்கே உள்ள நாடுகளுக்கும் வியாபாரத் தொடர்பு இருந்ததற்கு எகிப்திய சித்திர எழுத்து நூலில் ஆதாரம் உள்ளது.*

பிசன்ரியம் - பைசாண்டியம்

மலையாளக்கரையிலுள்ள பைசாண்டியம் (Byzantium) என்னும் இடத்தில் கிரேக்கர் குடியிருந்தனர். பிற நாட்டு வர்த்தகர் மிளகு, கசகசா, சந்தனம் ஆகியவற்றை மலையாளக் கரையினின்றும் வாங்கினர் என்பர் ந.சி.கந்தையாபிள்ளை.**

அரேபிய வணிக உறவு

செங்கடல், மத்திய தரைக்கடல் பகுதிகளில் தங்கள் கடல் ஆர்வத்தை வளர்த்துக் கொண்ட அரேபியர்கள் பருவக்காற்றுகள் பற்றி மர்மங்களைத் தெரிந்து கொண்டதும் கி.பி. முதலாம் நூற்றாண்டு மத்தியில் அதிகளவில் மலபார் கடற்கரைக்கு வர ஆரம்பித்தனர்.***

முசிறி - தேக்கு மரம் - ஹௌரானி

தேக்கு மரத்திற்காக அரேபியர்கள் கி.பி. முதல் நூற்றாண்டுக்கு முன்னரே தௌ (Dhow) எனப்படும் அரபு படகுகள்

---

* *Weber, History of Indian Literature page 3 Foot notes*

** *தமிழர் சரித்திரம்* History of the Tamils, Madras, 1947, page153,155

*** *முனைவர் ஆ.சற்குணன், கட்டுமரத்திலிருந்து கப்பல் வரை, தெற்கு கொரமண்டல் கடற்கரையின் பண்டைய கப்பல்கள், சென்னை 2011, பக்கம் 77.*

மூலம் முசிறிக்கு வந்திருக்கக் கூடும் என்று ஹௌரானி கூறுகிறார். *

வின்ஸ்டெண்டு ஆர்தர்ஸ்மித் (1843 - 1920)

இந்திய வரலாற்றில் புகழ் பெற்ற வரலாற்றாசிரியராக வின்ஸ்டென்ட்ஸ்மித் பண்டைய இந்திய வரலாற்றை மீட்டுருவாக்குவதற்குத் தேவையான கற்பொறிப்பு, இலக்கியம், அகழாய்வு உள்ளிட்ட சான்றுகளை இவர் தம் ஆய்விற்கு பயன்படுத்தியுள்ளார்.**

தமிழர்கள் வட இந்தியாவின் பாதிப்பின்றி உயர்ந்த நாகரீகத்து சொந்தக்காரர்களாக இருந்தார் என்று துணிவுடன் எழுதியவர் வின்ஸ்டெண்டு ஆர்தர்ஸ்மித் (Vincent Arthursmith). ***

இந்தியத் தொடக்க கால வரலாறு

ராயில் ஆசியாட்டிச் சொசைட்டியில் தங்க மெடல் பெற்ற வின்ஸ்டெண்டு ஆர்தர்ஸ்மித் 20 ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் (1904) The Early History of India என்னும் நூலினை 535 பக்கங்களில் எழுதினார். அசோகர், பௌத்த பேரரசர், அக்பர், இந்திய சிங்கள நுண்கலை வரலாறு இந்திய பொருட்காட்சி சாலையிலுள்ள காகசார் பட்டியல் என பல நூல்களைத் தந்தார்.

ஆக்ஸ்போர்டு இந்திய வரலாறு

முதன் முதல் இயற்றப்பட்ட முழு அளவு இந்திய வரலாற்று நூல் ஆக்ஸ்போர்டு இந்திய வரலாறு எனும் நூலைத் தந்தார். ****

---

* *G.F. Hourani, Arab seafaring in the Indian ocean in Ancient and Early Medieval Times, Khyats Beirut,* 1963 நூலில் இதுகுறித்த விவரங்களை மேலும் அறிந்து கொள்ளலாம்.

**முனைவர் வீ.மாணிக்கம், வரலாறும், வரலாற்றியலும் மதுரை 2010 பக்கம் 86, 87.

***க.வெங்கடேசன், வரலாற்று வரைவியல், மதுரை 2002 பக்கம் 198.

**** ந.சுப்பிரமணியன், வரலாற்று வரைவியல் சென்னை, பக்கம் 240. இது 1911 வரை உள்ள வரலாறு. 1918 இல் இந்த நூல் வெளியாயிற்று.

S.M. எட்வர்ட்ஸ்

S.M. எட்வர்ட்ஸ், வின்ஸ்டன்ட்ஸ்மித் மறைவிற்குப் பிறகு *1921* வரையிலான வரலாற்றையும் சேர்த்து இரண்டாம் பதிப்பை *1922* இல் வெளியிட்டார். நூல் *814* பக்கங்கள்.

சர்ச்சைக்குரிய பகுதி

இந்தியாவில் ஆங்கில ஆட்சியைப் பற்றிக் கூறும் பகுதி சர்ச்சைக்கு ஆளாகி பெர்சிவல்ஸ்பியரால் பின்னர் அது மாற்றி எழுதப்பட்டது. எனினும் இந்திய வரலாற்றினை முழுமையாக முதன்முதலில் எழுதிய வரலாற்றாளர் என்னும் பெருமை வின்ஸ்டன்ட்ஸ்மித்துடையதே.*

SIR MORTIMER WHEELER - A.L BASHAM

வின்ஸ்டன்ட்ஸ்மித்தின் ஆக்ஸ்போர்டு இந்திய வரலாற்று நூலின் முதல் பகுதியை வீலரும், ஏ.எல்.பாசமும் திருத்தி எழுதினர்.

ஹாரிசன் J.B.HARRISON

இரண்டாவது பகுதியை ஹாரிசன் திருத்தி எழுதினார்.

பெர்சிவல்ஸ்பியர் (PERCIVALSPEAR)

பெர்சிவல்ஸ்பியர் மூன்றாவது பகுதியை திருத்தி எழுதினார். வின்ஸ்டன்ட்ஆர்தர்ஸ்மித்தால் எழுதப்பட்டு (அதிலும் தற்சார்பு உள்ளது. அது தனி விஷயம்) அந்த நூலும் நான்கு ஆசிரியர்களால் திருத்தப்பட்டது என்பது வரலாற்று மாணவர்கள் அறிந்து கொள்ள வேண்டிய ஒன்றாகும்.

1958

திருத்தப்பட்ட ஆக்ஸ்போர்டு இந்திய வரலாறு *1958* இல் வெளி வந்தது. மூன்றாவது பதிப்பு *1964* இல் வெளி வந்தது. *899* பக்கங்கள்.

கி.மு. நான்காம் நூற்றாண்டு

கி.மு. நான்காம் நூற்றாண்டில் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு வாணிபம் வளர்ந்தோங்கியிருந்தது. The Indians of

---

*****N.Subrahmanian, Historiography, Madurai First Edition 1973 Second Edition 1978, page 392.*

the fourth century B.C.were advanced Material civilization.* என்கிறார் வின்ஸ்டன்டஸ்மித்.

பல்ராம் ஸ்ரீ வஸ்தவா

காசி ஹிந்து பல்கலைக்கழக விரிவுரையாளர் பல்ராம் ஸ்ரீ வஸ்தவா The CHOWKAHAMBA SANSKRIT SERIES OFFICE வாரணாசி மூலம் 1968 இல் வெளியிட்ட 59வது நூல். TRADE AND COMMERCE IN ANCIENT INDIA (from the earliest times to C.A.D 300) 356 பக்கங்கள் கொண்டது.

அரேபிய வணிகம்

அந்த நூலில் பல இடங்களில் அரேபிய வணிகம் பற்றி சொல்லப்பட்டுள்ளது. குறிப்பாக 106வது பக்கத்தில் கூறப்பட்டுள்ளது.

G. OPPERT

On the Ancient commerce of India, என்ற நூல் நி. ஓபர்ட் என்பவரால் எழுதப்பட்டு 1879 இல் சென்னையில் இருந்து வெளிவந்துள்ளது. இதில் அரேபியரின் தென்னக வணிகம் பற்றிய குறிப்புக்கள் உள்ளன.

R.C. மஜூம்தார் (கி.பி. 1888)

புகழ்பெற்ற வரலாற்றாசிரியர் ஆர்.சி.மஜூம்தார்,வங்காள அறிஞர் 1971 இல் பண்டைய கால இந்தியா Ancient India என்னும் நூல் தில்லியில் இருந்து புகைப்படங்கள் நீங்கலாக 538 பக்கங்களில் வெளியிட்டார். அதில் பக்கம் 211, 212 இல் **இந்தியாவிற்கும், அரேபியாவிற்கும்** இன்ன பிற நாடுக்கும் இடையே கி.மு.8 ஆம் நூற்றாண்டிலேயே வணிகம் நடைபெற்றது என்று குறிப்பிட்டுள்ளார்.

Archaeo logical evidence shows that as early as the eightb century B.C., there was a regular trade relation, both by land and sea, between India on the one hand and Mesopotomia, Arabia, Phoenica and Egypt on the other. **

---

* *Vincentasmith, the oxford History of India, oxford, 1964, page 92.*

** *R.C Majumdar, Ancient India, Delhi,1971, page 211,212.*

பாரதிய வித்யா பவன்

The History and culture of the Indian people. *என்று மும்பை பாரதிய வித்யாபவன் இந்திய வரலாற்றை 11 தொகுதிகளாக வெளியிட்டுள்ளது. இதன் பொதுப் பதிப்பாசிரியர் ஆர்.சி.மஜூம்தார்.*

The Classical Age

அதில் மூன்றாவது தொகுதி **The Classical Age** *1954 இல் முதல் பதிப்பு வந்தது. 1997 இல் 5 ஆம் பதிப்பு புகைப்படங்கள் நீங்கலாக 758 பக்கங்களில் வெளி வந்துள்ளது.*

அதில் 23வது அத்தியாயம் R.C.*மஜூம்தாரால் வணிகத் தொடர்புகள் குறித்து எழுதபட்டுள்ளது. அந்த நூலில் பக்கம் 638 இல் வந்துள்ள செய்தி கீழே:*

'There was commercial intercourse between India and Arabia even in pre Islamic days'

இஸ்லாம் மார்க்கம் தோன்றுவதற்கு முன்னரே அரேபியாவிற்கும், இந்தியாவிற்கும் (கேரள கடற்கரைப் பகுதிகள்) வணிகத் தொடர்புகள் இருந்ததை ஆர்.சி.மஜூம்தார் தெளிவாகச் சொல்லியுள்ளார்.

பப்ளிகேஷன் டிவிஷன்

இந்திய அரசாங்கத்தின் பப்ளிகேஷன் டிவிஷன் 1981 இல் வெளியிட்ட நூல். India prehistoric and proto-Historic periods. *அதில் பக்கம் 50 இல் கி.மு. 500 – கி.பி. 500க்குள் முதலில் இந்தியாவிற்கு வந்தவர்கள் அரேபியர்கள் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.*

தாமோதர் தர்மானந்த கோசாம்பி (31.7.1907 - 28.6.1966)

வரலாற்றியலின் வழிகாட்டி, ஆசான்களின் ஆசான் பன்முகப் பங்களிப்பு செய்தவர், பல்துறை அறிஞர் தாமோதர் தர்மானந்த கோசாம்பி 1956 இல் முதல் பதிப்பாகவும், 1975 இல் புதிய பதிப்பாகவும் வெளிவந்த நூல் An Introduction to the study of Indian History. *414 பக்கங்கள் கொண்ட நூல் இது. அதில் பக்கம் 59, 60 இல் கூறுகிறார்.*

We have conclusive evidence for long-distance trade. நெடுந்தொலைவு வணிகம் பற்றிய முடிவான சான்றுகள் நம்மிடம் உள்ளன. இந்தியச் செம்பு கடல் மூலமாக பஹ்ரைனுக்கு எடுத்துச் செல்லப்பட்டது. Indian copper was taken by sea in the Island of Bahrein (Timun) அதற்கு பதிலாக பெறப்பட்ட பண்டங்கள் சிறப்பு வணிகக் குழுவால் கொண்டு வரப்பட்டன. தொடக்க கட்டத்தில் இதற்கு ஆதரவு “ஊர்”இல் (UR) இருந்த நம்மு (Nammu) வில் உள்ளதைப் போன்ற பெரும் கோயில்களில் கிடைத்தது. பஹ்ரைனைச் சேர்ந்த வணிகத்தில் ஏகபோகம் செலுத்திய (AlikTilmun) அலிக்தில்முன் வணிகர்களைப் பற்றியும் பெருமளவில் அறிய முடிகிறது.*

இந்தியாவிலிருந்து பஹ்ரைனில் நடைபெற்ற வணிகத்தையும், இதர வணிகங்களைப் பற்றியும் அந்த நூலில் விளக்கியுள்ளார் டி.டி.கோசாம்பி.

உலகின் முதல் பெண்ணரசி

பண்டைய எகிப்திய அரசர்களின் பொதுப்பட்ட பெயர் Phar’aoh. பாரோ. Nitokerty நிட்டோகெர்டி கி.மு. *2175* இல் எகிப்தில் அரசு புரிந்தார். Sobeknefru கி.மு. *1760 – 1755* இல் எகிப்தில் ஆட்சி புரிந்தார்.

ஹெட்செப்சுட்

ஹெட்செப்சுட் HATSHEPSUT கி.மு. *1479 – 1473* வரை எகிப்தில் ஆட்சி புரிந்தார். Tawosret கி.மு. *1198 – 1190* இல் ஆட்சி புரிந்தார்.**

கிளியோபாத்ரா

கிளியோபாத்ரா உலகப்பேரழகி. கிளியோபாத்ரா (கி.மு.*69 – 27*) அவளது வீழ்ச்சி துவங்குகிறது. கஷ்டமான சூழ்நிலையில் வீழ்ந்த ஒரு நல்ல பெண் அவள் என்று மைக்கேல் கிராண்ட் குறிப்பிடுவார். ***

---

* *A.L. Oppenheim the sea faring merchants of ur. Journal of the American oriental society 74,1954,pp.6-17*

** *National geograpuic , April 2009, page 96,97*

*** *பாத்திமுத்து சித்திக், நைல் நதிக்கரையில், சென்னை 1998 பக்கம் 299 – 300.*

முகில்

எனது பிரிய சகோதரர் தூத்துக்குடி முகில். பல சரித்திர நூல்கள் எழுதியவர். உலகம் வியக்கும் பேரழகியான சர்ச்சைக்குரிய சரித்திரம் என்று கிளியோபாட்ராவின் வரலாற்றை 2010 இல் 165 பக்கங்களில் வெளியிட்டுள்ளார்.

அரேபியா - இந்தியா

*கிளியோபாட்ரா தனது முக்கிய செல்வங்களையெல்லாம் திரட்டினாள். அவற்றை எகிப்தின் வடகிழக்கிலுள்ள சூயஸ் நகரத்துக்கு அனுப்பி வைத்தாள். அவை அங்கே நிறுத்தி வைக்கப்பட்டிருந்த இரண்டு கப்பல்களில் ஏற்றப்பட்டன. செல்வங்களை செங்கடல் வழியாக ஆக்டேவின் ஆதிக்கத்தில் இல்லாத அரேபியாவுக்கோ அல்லது இந்தியாவுக்கோ பத்திரமாக கொண்டு சேர்த்து விட வேண்டும் என்று கூறுகிறார். கிறிஸ்து பிறப்பதற்கு முன்னரே அரேபிய – இந்திய கடல் போக்குவரத்து எளிதாக இருந்ததை இது காட்டுகிறது.**

---

* முகில், கிளியோபாட்ரா, சென்னை 2010 பக்கம் 136.

குதிரை

ஐநூறு லட்சம் ஆண்டுகளுக்கு முன்பு முன்னங்கால்களில் நான்கு குளம்புகள், பின்னங்கால்களில் மூன்று குளம்புகள் உள்ள மிருகம் இயோபிபஸ்.

இயோபிபஸ்

பின்னர் அவை மாற்றங்கள் அடைந்தது. உருவம் பெரிதானது, கழுத்தும் கால்களும் நீண்டது. நான்கு கால்களிலும் மூன்று குளம்புகள் தோன்றின.

மிஸ்ஸோ ஹிப்பஸ்

அந்த மிருகத்தை மிஸ்ஸோ ஹிப்பஸ் என்று அழைத்தனர். ஆண்டுகள் பல கடந்தன. மூன்று குளம்புகளும் இணைந்து உறுதியாயின.

பிளயோ ஹிப்பஸ்

அவை **பிளயோ ஹிப்பஸ்** என்று அழைக்கப்பட்டன. அவை தான் குதிரைகளின் வடிவம் பெற்றன. மாமிசத்திற்காக, கூடாரங்கள் அமைத்திட, தோலுக்காக அவை பயன்பட்டது அவைகள் தாம் குதிரைகள் ஆகும்.

கி.மு.4000

கி.மு.4000 இல் மத்திய ஆசியாவில் வளர்ப்பு மிருகங்களாக குதிரை ஆயிற்று.

கி.மு.2100

கிரேக்கத்தில் இந்தோ – ஐரோப்பியர்கள் மூலமாக குதிரைகள் பரவின. பூசபேலஸ் என்கிற அடக்க முடியாத முரட்டுக் குதிரையை சிறுவனாக இருந்த அலெக்ஸ்சாண்டர் தனது நிழலைப் பார்த்து பயப்பட்டு வருவதைப் பார்த்து அந்த பலவீனத்தைப் பயன்படுத்தி முகத்தைத் திருப்பி வெற்றி கண்டது வரலாறு.

கி.மு.1900

'ட்ராய்' நாட்டில் கி.மு. 1900இல் குதிரைகள் பரவ ஆரம்பித்தன.

கி.மு.1200

சீனாவில் 'ஷேங்' சாம்ராஜ்ஜியத்தில் கி.மு. 1200 இல் குதிரைகள் தோன்ற ஆரம்பித்தன.

ரிக் வேதத்தில்

ரிக் வேதத்தில் குதிரைகள் பற்றிய குறிப்புகள் இடம்பெற்றிருக்கிறது.

அரேபியக் குதிரைகள்

இஸ்லாமியக் கருத்துப்படி வடக்கில் வீசும் காற்றிலிருந்து மன உறுதியும், தெற்கிலிருந்து வீசும் காற்றிலிருந்து வலிமையும், கிழக்கிலிருந்து வீசும் காற்றிலிருந்து வேகத்தையும், மேற்கில் வீசும் காற்றிலிருந்து புத்திக் கூர்மையும் கொண்டு ஏக இறைவன் அல்லாஹ் அரேபியக் குதிரையைப் படைத்தான் என்பார்கள்.

நபி இப்ராஹிம் (அலை) இஸ்மாயில் (அலை)

ஆபிரஹாம் (நபி இப்ராஹிம் (அலை)) அவர்களின் புதல்வர் நபி இஸ்மாயில் (அலை) அவர்களைத் தூக்கத்திலிருந்து எழுப்பிட ஜிப்ரீல் (கபிரியேல்) அவரைச் சுற்றி சின்ன சூறாவளியை எழுப்பினார். பின் அதனை நிறுத்த தானே குதிரை வடிவம் எடுத்ததாக ஒரு கருத்து உள்ளது.

நபி சுலைமான் (அலை) சாலமோன்

உலகைக் கட்டி அரசு புரிந்த நபி சுலைமான் (அலை) மன்னர் சாலமோன். தன்னுடைய பிரியமான ஆண் குதிரையை தனக்கு கப்பம் கட்டி வந்த **'பானுஹசர்'** *மக்களிடம் கொடுத்தார். அவ்வாறு வழங்கப்பட்ட குதிரை வேகமாகச் செல்லும் என்றும், வேட்டைக்குச் செல்ல பெரிதும் உதவும் என்று அந்த குதிரையைக் கொண்டு 'தான்' அரேபியர்கள் கலப்பு செய்து புதிய ரகக் குதிரைகளை உற்பத்தி செய்தார்கள். இது ஒரு கருத்து.*

சபானத்

ஷிபா நாட்டு அரசியால் நபி சுலைமான் (அலை) அவர்களுக்கு வழங்கப்பட்ட 'சபானத்' என்ற குதிரையின் மூலம் கலப்பு செய்து உருவானது அரேபியக் குதிரை. இப்படியும் ஒரு கருத்து.

அண்ணல் முஹம்மது நபி (ஸல்)

பாலைவனத்தில் பயணம் செய்து கொண்டிருந்த அண்ணல் முஹம்மது நபி (ஸல்) அவர்கள் நீண்ட பயணத்தில் களைத்து போயிருந்த குதிரைகளை அவிழ்த்து விடச் சொன்னார்கள் என்றும், பாலைவனச் சோலையில் தண்ணீர் இருக்கிற பகுதிக்கு அவை காற்றைப் போல பாய்ந்து சென்றன. அக்குதிரைகள் தண்ணீரை அடைவதற்குள் அவைகளை தன்னிடம் திரும்ப வருமாறு அழைப்பு விடுக்கப்பட்டது. அவ்வாறு சென்ற குதிரைகள் சில, தண்ணீரை நோக்கியே ஓடியது. அவற்றில் ஐந்து குதிரைகள் மாத்திரம் கடுமையான தாகத்தையும் பொருட்படுத்தாமல் அண்ணலார் (ஸல்) அவர்களிடம் திரும்ப ஓடி வந்தன.

அல் ஹம்ஸரி

அக்குதிரைகளை அண்ணலார் (ஸல்) அல் ஹம்ஸா என்று அழைத்தார்கள். அவை அனைத்தும் பெண் குதிரைகள். இக்குதிரைகள் தான் பிரபலமான அரேபியக் குதிரைக்கு அடித்தளமிட்டது என்பது அரபுலக ஐதீகம் என்பர் இறையன்பு.*

தர்மானந்த கோஸம்பி

மராட்டிய மொழியில் தர்மானந்த கோஸம்பி எழுதிய நூல் பகவான் புத்தர். அதனைத் தமிழில் தந்தவர் கா.ஸ்ரீ.ஸ்ரீ. சாகித்திய அகடாமிக்காக பழனியப்பா பிரதர்ஸ் 1957 இல் வெளியிட்ட நூல் அது. 458 பக்கங்களைக் கொண்டது.

பாபிலோனியாவில்

பாபிலோனியாவில் கி.மு.2000 வரை குதிரையைப் பயன்படுத்துவது பற்றி தெரியாமல் இருந்தது.

கேசி

பாபிலோனியாவின் வடக்கே உள்ள மலைப்பிரதேசத்தில் வாழும் 'கேசி' என்ற மக்கள் முதன் முதலில் சரக்குகளை ஏற்றிச் செல்வதற்கு குதிரைகளைப் பயன்படுத்தினர்.

---

* வெ.இறையன்பு, பத்தாயிரம் மைல் பயணம், சென்னை, ஐந்தாம் பதிப்பு 2012 பக்கம் 115.

போர்க்கலை

போர்க்கலையை பாபிலோனிய மக்களிடமிருந்து கேசி மக்கள் கற்றார்கள். அவர்களே முதன்முதலில் போரில் குதிரைகளைப் பயன்படுத்தினார்கள்.*

கந்தச்

பாபிலோனியாவில் 'கந்தச்' கி.மு. 1760 இல் பேரரசைக் குதிரைப் படைகளின் வலிமையைக் கொண்டு நிறுவியதை எல்.டபிள்யூ.கிங்கின் நூல் 214வது பக்கம் தெரிவிக்கிறது.

கி.மு. 1800 ஆண்டுகளுக்கு முன்பு போரில் குதிரைகளைப் பயன்படுத்தியதற்கு எங்கும் ஆதாரம் கிடையாது.**

அசுவாதி சாஸ்திரம் (1883)

அரசியல் நோக்கத்திற்காக குதிரை பயன்பாட்டுடைய விலங்காக இருந்துள்ளது. குதிரையின் வளர்ப்பு பற்றியும், நோய்கள் ஏற்படின் குணமாக்குவது பற்றியும் 1883 இல் தமிழகத்தில் அசுவாதி சாஸ்திரம் என்ற நூலை திவான் நயினாத்தை சபாபதி முதலியார் சென்னை செல்லியார் பிரஸ்ஸில் அச்சிட்டு வெளியிட்டுள்ளார்.

மாட்டு வாகடம்

மாட்டு வாகடம் (1913), முத்துக்கருப்பபிள்ளையின் மாட்டு வாகடம் என்ற நூல் 1923இல் மாட்டு வாகடம் பற்றி வந்தாலும் அவைகள் குதிரையைப் பற்றி பேசுகின்றன. ***

**L.W.King, A History of Babylon, 1915 page125*

** தர்மானந்த கோஸம்பி, பகவான் புத்தர், சென்னை, 1957 பக்கம் ஏழு. இதனை 2000 விடியல் பதிப்பகம் வெளியிட்டுள்ளது. 2006 இல் கோவை புத்தா வெளியீட்டகமும் இதனை வெளியிட்டுள்ளது அது பக்கம் 37.

*** முத்துக்கருப்பபிள்ளை நூல் பக்கம் 148, சு.லதா, குதிரை வளர்ப்பு பற்றிய தமிழ் நூல்கள் ஓர் ஆய்வு (1880 - 1930) உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனம், சென்னை 1970 - 1995 வெள்ளி விழா மலர் பக்கம் 88 - 90.

கி.கிருஷ்ணசாமி மாஹாடிக் ராவ்சாஹேப்

1956 இல் தஞ்சை தெரளபோஸ்கோ அச்சகத்தில் அச்சிடப்பட்டு ஸ்ரீ S.கோபாலனால் வெளியிடப்பட்ட A. கிருஷ்ணசாமி மாஹாடிக் ராவ்சாஹேப் பதிப்பாசிரியராக இருந்து வெளிவந்த நூல் சரபேந்தியர் வைத்திய முறைகள் மாடுகள், குதிரைகள், பறவைகள் லட்சணங்களும், வைத்தியமும் தஞ்சை சரஸ்வதி மஹால் வெளியீடு 11 ஆக வந்த இந்த நூலில் குதிரை குறித்த செய்திகள் பக்கம் 112 முதல் 148 வரை காணப்படுகிறது. குதிரையை தாஜாபடுத்தவும், ஆண் குதிரை பெண் குதிரையைக் கண்டு இச்சைவிக்க பெண் குதிரை ஆண் குதிரையை கண்டு இச்சைவிக்க என்ன செய்ய வேண்டும் என்று அந்த நூல் பக்கம் 142 இல் விளக்கம் தரப்பட்டுள்ளது.

சங்க இலக்கியத்தில் குதிரை 28

சிறுபாணாற்றுப் படை, குறுந்தொகை, கலித்தொகை, அகநானூறு, புறநானூறு ஆகியவற்றில் 28 இடங்களில் சங்க இலக்கியத்தில் குதிரை என்ற சொல் வருகிறது.

பரி 82

*சங்க இலக்கியங்களில் குதிரையைக் குறிக்கும் 'பரி' என்ற சொல் 82 இடங்களில் வருகிறது.**

உரையாடும் குதிரை

'யுனெஸ்கோ' கூரியர் இதழ் தமிழ் பதிப்பு நிர்வாக ஆசிரியர் மணவை முஸ்தபா அவர்களைக் கொண்டு வெளிவந்தது. அதில் ஏப்ரல் 1988 'மனிதனும் விலங்குகளும்' என்ற இதழ் விலை ரூ.2. அதில் ருமேனியாவில் **ஒரு மனிதனும் அவனுடையை குதிரையும் உரையாடுகின்றதை** *பக்கம் 17 இல் வெளியிட்டுள்ளார்.*

இஸ்லாத்தில் விலங்குகள்

அந்த இதழில் அப்துல்ஹமீது எஸ்.ஹம்தான எழுதிய 'இஸ்லாத்தில் விலங்குகள்' என்ற கட்டுரை உள்ளது. மெக்காவிலிருந்து ஜெருசேலம் சென்ற வியத்தகு இரவுப் பயணம் அண்ணல் நபிகள்நாயகம் (ஸல்) அத்தூரத்தை அத்தனை விரைவாக எப்படி கடந்தார்கள்?

---

* *பெ.மாதையன், சங்க இலக்கியச் சொல்லடைவு, தஞ்சைப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர், 2007, பக்கம் 451, 452.*

புராக்

அவ் இரவில் நபிகள் நாயகம் (ஸல்) 'புராக்' எனப்படும் விலங்கின் மேல் பயணம் செய்ததாகவும், அது **"ஒரே பாய்ச்சலில் பார்வையிலிருந்து மறையும்"** *வியத்தகு வேகத்தில் அண்ணலாரைச் சுமந்து சென்றதாகவும் பல வரலாற்று அறிஞர்களும், திருகுர்ஆன் உரையாசிரியர்களும் கூறுகின்றனர்". உரையாசிரியர்கள் இவ்விலங்கை ஒருவகை குதிரை எனவும் குறிப்பிட்டுள்ளார்கள்.*

இஸ்லாமிய மார்க்கத்தின் தொட்டில்

இஸ்லாமிய மார்க்கத்தின் தொட்டிலான அரேபியாவில் குதிரை, ஒட்டகம், வெள்ளாடு போன்ற வீட்டு விலங்குகள் முஸ்லிம்களின் வாழ்க்கையில் முக்கிய பங்கு பெற்றன.★

ந.சி.கந்தையாபிள்ளை

1934இல் ந.சி.கந்தையாபிள்ளை தந்த நூல் **'தமிழகம்'.** *இது 282 பக்கங்களைக் கொண்டது. அதில் பக்கம் 184 இல் கூறுவார்.*

தென்னிந்தியாவில்

'அரேபிய நாட்டுக் குதிரைகளும், தமிழ்நாட்டுத் துறைமுகங்களில் இறக்குமதியான இக்குதிரை வியாபாரங்கள் காரணமாகவும், பின்னர் கப்பல் மிகாமன்களாகவும், அரேபியர், தென்னிந்தியா, இலங்கை கரையோரங்களில் சில பாகங்களைத் தங்குமிடமாக்கி நாளடைவில் அங்கு குடிபகுதிகளாக்கி விட்டனர்.

இது ஆய்வாளர் இலங்கை நாவலியூர் சி.கந்தையாபிள்ளை தரும் தகவல் ஆகும்.

தமிழகக் கடற்கரைகளில்

ந.சி.கந்தையாபிள்ளை 1947 இல் தந்த நூல் தமிழர் சரித்திரம். அதில் பக்கம் 156 இல் கூறுகிறார்.

★ *அப்துல் ஹமீது எஸ்.ஹம்தான இஸ்லாத்தில் விலங்குகள் யுனெஸ்கோ கூரியர் உலகில் 34 மொழிகளில் வெளியாகும் ஒரே இதழ் ஏப்ரல் 1988 பக்கம் 28.*

தமிழகக் கடற்கரையில் அரேபியக் குதிரைகள்

முசிறி, தொண்டி, கொற்கை, மாந்தை, புகார் முதலியன தமிழ்நாட்டின் பிரதான துறைமுகங்கள் ஆகும். புகார் நகரின் சிறப்பைக் கூறிய நூல் உருத்திரங்கண்ணனார் பாடிய பட்டினப்பாலையில் விரித்துக் கூறியிருக்கிறார்.

கடை வீதிகளில் தென் கடலிற் குளித்த முத்தும் மேற்கு காற்றாபி மலையிற் பிறந்த சந்தனக்கட்டையும், **அரேபியாவில் இருந்து கடல் மார்க்கமாக வந்த குதிரைகளும் இருந்தன** *என்கிறார் ந.சி.கந்தையாபிள்ளை.*

தமிழ் இந்தியா

யாழ்ப்பாணத்து (நாவலியூர்) ந.சி.கந்தையாபிள்ளை தமிழ் இந்தியா என்னும் நூலினை 1945இல் தந்துள்ளார். 307 பக்கங்கள். அதில் 113வது பக்கத்தில்...

சீன நாவாய்கள் மலையாளக்கரையிலுள்ள கொல்லம் வரையிற் சென்றன. **அரேபியாவிலிருந்து குதிரை வியாபாரிகள் குதிரைகளைக் கொண்டு வந்தனர்.** *கொல்லம் மேற்கில் பெரிய வியாபாரப் பகுதியாக இருந்தது.*

தமிழர் பண்பாடும் வரலாறும்

பேராசிரியர் க.அ.நீலகண்டசாஸ்திரி எழுதி 'சிட்டி' அவர்களால் தமிழாக்கம் செய்யப்பட்டு சென்னை – 17, வாசகர் வட்டம் சார்பில் வெளியான நூல். **'தமிழர் பண்பாடும் வரலாறும்'** *1965 ஜூனில் வெளிவந்த இந்த நூல் 239 பக்கங்களைக் கொண்டது. அதில் பக்கம் 117 இல்...*

அயல் நாட்டுக் கப்பல்களில் குதிரைகள் வந்திறங்கின. மிளகும் மற்ற விலை உயர்ந்த பொருட்களும் ஏற்றுமதி செய்யப்பட்டன.

டோனி ஜோசப்

ஹரப்பா நாகரீகத்தவர் யார்?, ஆரியர்கள் இந்தியாவிற்கு இடம்பெயர்ந்தவர்களா?, சாதி அமைப்பு முறை எப்போது தோன்றியது? நம்முடைய மூதாதையார் யார்? அவர்கள் எங்கிருந்து வந்தனர்? என்பது குறித்த ஆய்வு நூலை டோனி ஜோசப் தந்துள்ளார்.

ஆதி இந்தியர்கள்

P.V.C. குமாரசாமி தமிழாக்கம் செய்த அந்த ஆங்கில நூல் 'ஆதி இந்தியர்கள்' என்ற பெயரில் *2020* இல் *281* பக்கங்களில் வெளிவந்துள்ளது.

குதிரைகளும், ஹரப்பர்களும்

அந்த நூலில் பக்கம் *217* முதல் *219* வரை குதிரைகள் குறித்த விரிவான ஆய்வைத் தந்துள்ளார். பக்கம் *217, 218* இல் இந்தியாவிற்கு குதிரைகள் இறக்குமதி செய்யப்பட்டதை அதில் நிறுவுகிறார். ஆய்வின் மூலம் உறுதிப்படுத்துகிறார்.

அண்ணலாரின் (ஸல்) வாகனங்கள்

அண்ணலார் (ஸல்) அவர்களின் வாகனங்களாக துல்துல், பள்ளத்து, கிஸ்ரா கொடுத்தது, தௌமத்துல்லல் (ஜன்தலிலிருந்து வந்தது) அபி சீனிய மள்ளர் (நஜ்ஜாஷி யிடமிருந்து வந்தது.) ஆசிய கோவேறு கழுதைகளும், யபூர் என்ற கழுதையும், அஸ்கஸ்வா 2, அல்ஜத்சூ2, அல்அஸ்பா2, மூன்று ஒட்டகங்களும் (மூன்றும் ஒன்றே என்பாரும் உண்டு) இருந்தது.

அண்ணலார் (ஸல்) குதிரைகள்

அண்ணலார் (ஸல்) அவர்களிடம் ஏழு குதிரைகள் இருந்தன.* அவைகளின் விவரங்களைத் தேடினேன்.

S.S. முஹம்மது அப்துல்காதிர் ஸாஹிப்

உத்தமபாளையம் பன்னூலாசிரியர் மௌலவி அல் ஹாஜ் S.S.முஹம்மது அப்துல்காதிர் ஸாஹிப் பாகவி மிகவும் எளிமையானவர். ஆனால் மார்க்கக் கல்வியில் வலிமையானவர்.

ஹஸ்ரத் முஹம்மத் ரஸூலுல்ராஹ் ஸல்லல்லாஹு அல்ஹிவஸல்லம்

1962 இல் அண்ணலார் (ஸல்) வாழ்க்கை வரலாற்றின் முதற் பாகத்தை *508* பக்கங்களில் வெளியிட்டார்கள். *1964* இல் இரண்டாம் பாகம் *309* பக்கங்களில் வெளி வந்தது. மூன்றாம்

---

*தங்கவயல் லோகிதாசனார், கடந்த கால கண்ணாடிகள், சென்னை, 1991, பக்கம் 58.

பாகம் 1968 இல் ஹஸ்ரத் அவர்களின் புதல்வர் S.M.ஹபீப் முஹம்மது அவர்களால் 509 பக்கங்களில் வெளியிடப்பட்டது. அதில் முதல் பாகம் பக்கம் 472 – 473 இல் அண்ணலார் (ஸல்) அவர்களின் குதிரைகள் பற்றிய குறிப்புகள் உள்ளன.

அஸ்ஸக்பு

சில குதிரைகள் புறப்படும் போதும் சென்று கொண்டிருக்கும் போதும் இடையில் அடித்தாலும் அல்லது தூண்டி விட்டாலும் இடக்குச் செய்யும். சவாரி செய்பவரை கீழே தள்ளவும் கூடும். அவ்வித குறும்புகள் எதுவுமின்றி ஆற்றொழுக்கு போல தங்கு தடையின்றி எப்பக்கமும் செல்லும் தன்மையுள்ள குதிரை என்பதால் அண்ணலார் (ஸல்) அதற்கு “அஸ்ஸக்பு” எனப் பெயரிட்டார்கள்.

காட்டு அரபி ஒருவரிடமிருந்து அண்ணலார் (ஸல்) அந்தக்குதிரையை விலைக்கு வாங்கினார்கள். காட்டு அரபி குதிரைக்கு வைத்திருந்த பெயர் **அல்ளர்ஸ்.** நெற்றி வெள்ளையுள்ள கருஞ்சிவப்புக்குதிரையான அதற்கு அண்ணலார் (ஸல்) வைத்த பெயர் **அஸ்ஸக்பு.**

அல்முர்த்தஜி

பார்வைக்கு மிக அழகானதும் வெள்ளை நிறமுள்ளதுமான **அல்முர்த்தஜி** என்ற குதிரையும் அண்ணலார் (ஸல்) அவர்களிடம் இருந்தது.

அல்லுஹைப்

ஷாம் தேசத்தில் (சிரியா) **அல்பல்காஉ** பிரதேசத்தில் **ஹிர்க்கல்** சக்கரவர்த்தியின் கவர்னராக இருந்து இஸ்லாமைத் தழுவியதற்காக ரோமச் சக்கரவர்த்தியால் தூக்கிலிடப்பட்ட பர்வத்துப்னுஅம்ர் (ரலி) அவர்களால் நபிபெருமானர் (ஸல்) அவர்கள் **தபூக்** போருக்கு போன போது அன்பளிப்பாக தரப்பட்ட குதிரை **அல்லுஹைப்.**

அல்லிஸ்ஸாஸ்

எகிப்தின் மன்னர் மக்கூக்கிஸ் அவர்களால் அண்ணலார் (ஸல்) அவர்களுக்கு அன்பளிப்பாக அளிக்கப்பட்ட குதிரை அல்லிஸ்ஸாஸ்.

அள்ளரிப்

நபி பெருமானர் (ஸல்) அவர்களிடமிருந்த உயர் ஜாதிக்குதிரை அள்ளரிப்.

அல்வர்த்

தமீமுத்தாரீ (ரலி) என்றும் நபித் தோழரால் அண்ணலார் (ஸல்) அவர்களுக்கு அன்பளிப்பாக தரப்பட்ட குதிரை அல்வர்த். இதனை நீதிக்கு ஒரு உமருனுல்கத்தாப் (ரலி) அவர்களுக்கு நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அன்பளிப்பாக அளித்து விட்டார்கள்.

ஸப்ஹறத்

அண்ணலார் (ஸல்) அவர்களிடம் வேகமாகச் செல்லும் ஸப்ஹறத் என்ற குதிரை இருந்தது.

யஃஸூப்

யாஸூப் என்ற குதிரையும் அண்ணலார் (ஸல்) அவர்களிடமிருந்ததாகச் சொல்லப்படுகிறது.

பெரும்பற்றப்புலியூர் நம்பி

குதிரைகளின் தலைவனாக வந்து குதிரைகளைப் பாண்டிய மன்னனிடம் ஒப்புவித்த சோமசுந்தரரை இராவுத்தன், இராவுத்தராயன் என்று கூறுகிறார் பெரும்பற்றப் புலியூர் நம்பி.

YSSHASWINI CHNDRA

The Tale of the Horse A History of Indian on Horseback *எனும் யஸ்வினிசந்திராவின் நூல் 2021இல் 297 பக்கங்களில் ஆங்கிலத்தில் வெளிவந்துள்ளது. பல வண்ணக்குதிரைப் படங்களும் இடம் பெற்றிருக்கின்றது. ரூபாய் 699 விலையுள்ள இந்த நூலை வாசித்திடலாம்.*

திப்புசுல்தான்

தீரன் திப்புசுல்தான் காலத்திய குதிரைச் சந்தை அந்தியூரில் சிறப்பாக நடைபெற்றது. கள்ளிக்கோட்டையில் இருந்து வரும் அரபுக்குதிரைகள் இங்கு வாங்கப்பட்டது.

இஸ்லாம்

அரபிச் சொல் 'இஸ்லாம்'. அதற்கு அடிபணிதல், அர்ப்பணித்தல், இணங்குதல், அமைதி என பல அர்த்தங்கள் உண்டு.

முதல் மரியாதை - அண்ணலார் முஹம்மது நபி (ஸல்)

முஹம்மது நபி அவர்களின் பெயர் வரும்போதெல்லாம் அவர்களுக்கு இறைவனின் சாந்தியும் சமாதானமும் உண்டாவதாக என்று பொருள்படும். ஸல்லல்லாஹூ அலைஹிவஸல்லம் என்பதைச் சுருக்கமாக (ஸல்) என்று குறிப்பிடுவர். எத்தனை தடவை அண்ணலார் (ஸல்) பெயர் இடம் பெற்றாலும் அத்தனை தடவை அண்ணலார் (ஸல்) பெயருக்கு அடுத்து (ஸல்) என்பது எழுதப்படும். முஸ்லிம் மக்களால் அவ்வாறே உச்சரிக்கப்படும். உலக வரலாற்றில் யாருக்கும் இல்லாத முதல் மரியாதை இது.

அனைத்து நிலைகளிலும் அழகிய முன்மாதிரி

எல்லாம் வல்ல ஏக இறைவனால் அண்ணல் நபி (ஸல்) அவர்களுக்கு 23 ஆண்டுகளாக அருளப்பட்டது திருகுர்ஆன் 30 பாகங்கள், 114 அதிகாரங்கள் கொண்டது. அதில் 33வது அதிகாரம் அல்அஹ்ஸாப்.

கூட்டுப்படைகள்

அல்அஹ்ஸாப் (Ahzab) என்றால் கூட்டுப்படைகள் (கோத்திரங்களின் போர்) என்று பொருள். 123வது அதிகாரத்தில் 21வது வசனம்.

'இறைத்தூதரிடம் (ஸல்) அழகான முன்மாதிரி இருக்கிறது. (முன்மாதிரி இருந்தது என்றும் மொழிபெயர்ப்புச் செய்யலாம்)

திருகுர்ஆனின் இந்த வசனம்தான் இறைத்தூதர் (ஸல்) அவர்களை அவர்களின் சொல், செயல், நிலை ஆகிய அனைத்திலும் பின்பற்றி ஒழுகவேண்டும் என்பதற்குப் பெரிய அடிப்படையாகும்.

அஹ்ஸாப் போர்

அஹ்ஸாப் போர் நடந்த நாளில் பொறுமையைக் கடைப்பிடிப்பதில் பொறுமை விஷயத்தில் எதிரிகளை விஞ்சிவிடுவதில், எதிரிகளிடம் விழிப்புணர்வோடு இருப்பதிலும் இறைத்தூதர் (ஸல்) அவர்களைப் பின்பற்றுமாறு இறைவன் கட்டளையிடுகிறான்.

அகழ்யுத்தம் (Battle of Trench)

அஹ்ஸாப்போர் (Ghazwa), கந்தக் (அகழ்) போர் எல்லாம் ஒன்றுதான். அந்த அகழ் யுத்தத்தின் மூலம் அல்லாஹ்வின் இஸ்லாம் மார்க்கத்திற்காக அவர்கள் செய்துள்ள தியாகம் அவர்களைப் பின்பற்றிய ஒவ்வொரு முஸ்லிமுக்கும் அழகிய உதாரணமாகவும் படிப்பினையாகவும் இருக்கிறது.

பசி - வயிற்றில் கல்

அகழிதோண்டியபோது பசியும் பட்டினியுமாக வேலை செய்ய வேண்டிய நிலை அப்போது. நாங்கள் அப்போது அண்ணலார் (ஸல்) அவர்களிடம் சென்றோம். பசி தாங்க முடியாமல் வயிற்றில் கட்டியிருந்த கல்லைக் காட்டினோம்.

அண்ணலார் (ஸல்) அடிவயிற்றில் இரண்டு கற்கள்

உடனே அண்ணலார் (ஸல்) அவர்கள் தங்களது மகிமை பொருந்திய வயிற்றில் இரண்டு கற்கள் கட்டியிருப்பதைக் காட்டினார்கள் என்று ஹஜ்ரத் அனஸ் (ரலி) அறிவிக்கிறார்கள்.*

உஹதுப் போரில்

உஹதுப் போர்க்களத்தில் அண்ணல் நபி (ஸல்) அவர்கள் திருமுகம் கடுமையாகத் தாக்கப்பட்டதால் பல் ஷஹீதானது (உடைந்தது) பசியால் வாடிய நேரம் பல.

ஹஜ்ரத் ஹம்ஸா (ரலி)

அண்ணலார் (ஸல்) அவர்களின் சிறிய தந்தையார் ஹஜ்ரத் ஹம்ஸா (ரலி) உஹதுப் போரில் ஷஹீதானார்கள்

---

* தஃப்ஸீர் ஜவாஹிருல் குர்ஆன், திருக்குர்ஆன் விளக்கவுரை, பன்னிரண்டாம் தொகுதி, ஜாமிஆ அல்பாகியாத்துஸ் ஸாலிஹாத் அரபிக் கல்லூரி, வேலூர், 2015, பக்கம் 230.

(கொல்லப்பட்டார்கள்). அவர்களது புனித ஈரலை ஹிந்தா என்ற பெண்மணி கடித்துத் குதறினார். இச்சோதனையிலும் அண்ணலார் (ஸல்) பொறுமையுடன் சகித்துக் கொண்டிருந்தார்கள்.

நபி (ஸல்) அவர்களின் பிரார்த்தனை

கொடுமையான முறையில் தம்மை காயப்படுத்திய அக்கொடிய செயலைச் செய்தவர்களை அண்ணலார் (ஸல்) அவர்கள் சபிப்பதற்குப் பதிலாக, இறைவா! இக்கூட்டத்தாரை மன்னித்துவிடு; நிச்சயமாக அவர்கள் அறியாவதர்கள் என்றே பிரார்த்தித்தார்கள்.*

உஸ்வத் (அழகிய முன்மாதிரி)

திருகுர்ஆனின் 33:21 இத்திருவசனத்தில் 'உஸ்வத்' என்னும் சொல் அனைத்து நிலைகளிலும், அனைத்து செயல்களிலும் ஒருவரை முன்மாதிரியாகக் கொண்டு நடப்பதைக் குறிப்பதாகும். நம்பிக்கையாளர் ஒருவர் பிறந்த விநாடி முதல் இறைவனிடம் சென்றடையும்வரை, அவருக்கு அண்ணலார் நபி (ஸல்) அனைத்து நிலைகளிலும் அழகிய முன்மாதிரியாகத் திகழ்கிறார்கள்.

மனித குலம் அறிய வேண்டிய மாண்பு

இஸ்லாம் மார்க்கத்தின் சத்தியத்தையும் மாண்புகளையும் மனிதகுலம் அறிந்து ஏற்றுக் கொள்ளவேண்டும் என்பதற்காக தங்களின் இன்னுயிரைத் துச்சமாக மதித்து எத்தனையோ தியாகங்களை அப்பெருமானார் (ஸல்) அவர்கள் செய்து காண்பித்துள்ளார்கள்.

கடமை - போற்றத்தக்கது

அண்ணல் நபி (ஸல்) அவர்களின் அழகிய முன்மாதிரிகள்; மார்க்க விஷயங்களில் முற்றிலுமாகப் பின்பற்றுவது கடமையாகும் (வாஜிபாகும்) உலகியல் ரீதியானவற்றைப் பின்பற்றுவது போற்றத்தக்கதாகும் (முஹ்தஹப்பு) என திருக்குர்ஆன் விரிவுரையாளர்கள் விளக்கம் தந்துள்ளார்கள்.

---

* மௌலவி ஹாபிஸ் இ.எம். அப்துர்ரஹ்மான் நூரிய்யி, பாஜில்பாக்கவி, தென்காசி, அன்வாருல் குர்ஆன், ஆதம் டிரஸ்ட், கூத்தாநல்லூர் 4ஆம் பாகம் முதற்பதிப்பு, 1987-1989. புதிய பதிப்பு 2010, பக்கம் 34-38.

விசுவாசியின் கடமை

அல்லாஹ்வின் தூதரில் உஸ்வத் அழகிய முன்மாதிரி இருக்கிறது என்பது நபிகள் நாயகம் (ஸல்) அவர்களைப் பின்பற்றுவதும், அவர்களுக்கு மாறுசெய்வதைத் தவிர்த்துக் கொள்வதும் ஆகும் என்று அல்ஹக்கீமுத் திர்மிதி (ரஹ்) அவர்கள் கருத்துரைத்திருக்கிறார்கள். நபிகள் பெருமானார் (ஸல்) அவர்களைப் பின்பற்றுவது ஒவ்வொரு விசுவாசியின் கடமை ஆகும்.*

விளக்க வேண்டிய கடமை

அண்ணலார் (ஸல்) அமைதி வழிகாண்பவர் அன்பானவர் என்றெல்லாம் சொல்கிறாயே அப்புறம் போர்க்களம் ஏன்? அழகிய முன்மாதிரி அண்ணல் நபி (ஸல்) என்ற வசனமே அஹ்ஸாப் (கந்தக் – அகழ்) போர்க்களத்தின்போது வந்ததுதானே, கேள்விபிறப்பது விடைகாணத்தானே!

அகழ்ப்போர்

இஸ்லாமிய வரலாற்றில் அகழ்ப்போர் மிக முக்கியமானது. இது ஹிஜ்ரி 4வது ஆண்டில் அல்லது 5வது ஆண்டில் நடைபெற்றது என்று இருவித கருத்து உள்ளது.

யூதர்கள்

மதீனாவில் இருந்த யூதர்கள் முஸ்லிம்களுடன் போர் செய்யமாட்டோம் என்று ஒப்பந்தம் செய்திருந்தனர். ஆனால் பெருமானார் (ஸல்) அவர்களைச் சந்திக்க வந்தபொழுது யூதர் ஒருவர் ஒரு பாறையைத் தள்ளி அண்ணலார் (ஸல்) அவர்களைக் கொல்ல முயன்றார். அதிர்ஷ்டவசமாக அதிலிருந்து அண்ணலார் (ஸல்) தப்பினார்கள்.

அய்யாமுல் ஜாஹிலிய்யா (அறியாமைக்காலம்)

அரேபியா அப்போது அறியாமைக் காலத்தில் இருந்தது. யுத்தம் செய்வது, பழிக்குப்பழி வாங்குவது, கொலை செய்வது, சித்ரவதை செய்வது போன்றவை அரேபியர்களின்

---

*எஸ்.எஸ். முஹம்மது அப்துல்காதிர் சாஹிப் பாக்கவி, தப்ஸீருல் ஹமீத்ஃபீதஃப்ஸீரில் குர்ஆனில் மஜீத், 13ஆம் பாகம், மலேசியா (முதற்பதிப்பு 1959) இரண்டாம் பதிப்பு 2009, பக்கம் 256.

இரத்தத்தில் ஊறியவை. **‘ரம்தா’, ‘பத்தா’** *மலைப்பகுதிகளை முஸ்லிமாகிவிட்டவர்களைக் கொடுமைப்படுத்துவதற்கென்றே ஒதுக்கி வைத்திருந்தார்கள் அரபிகள். வன்முறையில் ஊறித்திளைத்தவர்கள். மதீனாவிலிருந்து துரத்தப்பட்ட யூதர்கள் மக்காவின் குறைஷிகளோடு உறவு கொண்டனர்.*

பனீநஸீர்

கோழைத்தனமாக நபி (ஸல்) அவர்களைக் கொலை செய்துவிடத் துணிந்த பனீநஸீர் யூத இனத்தவரை மதீனாவிலிருந்து முஸ்லிம்கள் விரட்டியடித்தனர். அந்த யூதர்களின் உள்ளங்களில் பகைத்தீ பற்றி எரிந்து கொண்டிருந்தது.

புழுங்கியவர்களின் புறப்பாடு

முஸ்லிம்களுக்கு எதிராக படைதிரட்டப்பட்டது.

பனூ அஸது

பனூ அஸது *கிளையினருக்குத் தூது அனுப்பினர். அக்கிளையின் தலைவர்* **தல்ஹா இப்னு குவைலிதும்** *அவர் கூட்டமும் யூதர்களோடு சேர்ந்து கொண்டது.*

பனீஃநுத்ஃபான் - அஸது

யூதர்களின் ஆசை வார்த்தையில் மயங்கி பனீஃநுத்ஃபான் கோத்திரத்தார் மக்காவின் குறைஷியர்களுடன் சேர்ந்து கொண்டனர். இவர்களது படை 3500 பேர்கள்.

ஃபஸாரா, முர்ரா, அஷ்ஜஉ

பனீஃநுத்ஃபான் கோத்திரத்தாரின் துணைக் கிளைஞர்களான **ஃபஸாரா** *குழுவில் 1000 பேர்களும்,* **பனீமுர்ரா** *குழுவில் 400 பேர்களும், அல்அஷ்ஜஉ குழுவில் 400 பேர்களும் சேர்ந்து கொண்டனர்.*

பனீசுலைம்

யூதர்கள் பனீசுலைம் குலத்தவர்கள் 700 பேர்களையும் தங்களோடு சேர்த்துக் கொண்டார்கள்.

கருப்பர் படை (ஹபஷி)

கருப்பர்களின் பெரிய கூலிப்படை ஹபஷி 4000 பேர்கள் யூதர்களோடு சேர்ந்து கொண்டார்கள்.

மக்கத்துக் குறைஷியர்

நபி (ஸல்) அவர்களை எதிர்த்து வந்த மக்கத்துக் குறைஷியரும் பெருமளவில் சேர்ந்து கொண்டனர்.

அரம்ரம்

அரம்ரம் என்ற இடத்திலிருந்து பெரும்படையுடன் மக்கா படையினர் கிளம்பி வந்தனர்.

ரூமா

மதீனாவிற்கு அருகில் 'ரூமா' என்னும சமவெளியில் படைகள் நிலைகொண்டது.

ஃநுத்ஃபான்கள் - பனீஅஸது

உஹது மலையின் புறப்பகுதியில் மறைந்து இருந்து மதீனாவவைத் தாக்கிட **ஃநுத்ஃபான்கள்** கூட்டத்தாரும், **பனீஅஸது** கூட்டத்தாரும் திட்டமிட்டிருந்தனர்.*

பெரும்படை

பெருங்கூட்டமே படையாகத் திரண்டது. 24000 பேர்கள் என்று சொல்லப்படுகிறது. அதில் பாதிக்கும் மேற்பட்டவர்கள் ஆயுதம் தாங்கியவர்கள். இவர்கள் மதீனாவை ஒரே மூச்சாகத் தாக்கி முஸ்லிம்களை ஒழித்துவிடுவது என்று முடிவு செய்திருந்தனர்.

மூன்று பக்கம் குன்றுகள்

மதீனாவின் மூன்று பக்கங்கள் தோட்டங்கள், கட்டடங்கள், குன்றுகள்; வடக்குப்பாகம் திறந்தவெளி.

ஹஜ்ரத் ஸல்மான்பார்சி (ரலி)

நபி (ஸல்) தோழர் ஸல்மான் பார்சி (ரலி) எங்களது பாரசீகத்தில் (ஈரானில்) நாங்கள் எதிரிகளால் முற்றுகையிடப்பட்டால்பகைவர்கள்எளிதில்நெருங்கிவிடாதபடி அகழி ஏற்படுத்திக்கொள்வோம் என்ற அரிய யோசனையைத் தந்தார். அண்ணலார் (ஸல்) அதனை ஏற்றுக்கொண்டு அகழி தோண்டிட தோழர்களுக்குச் சொன்னார்கள்.

---

* அதிரை அஹ்மத், நபி (ஸல்) வரலாறு, இலக்கியச் சோலை, சென்னை, 2017, பக்கம் 626–627 (நூல் மொத்தம் 924 பக்கங்கள்)

பத்து நபர்களுக்கு 40 முழங்கள்

அண்ணல் நபி (ஸல்) தனது தோழர்கள் பத்து பத்துப் பேராகப் பிரித்து ஒவ்வொரு பத்துப் பேர்களுக்கும் 40 முழங்கள் இடத்தில் அகழி தோண்டிடப் பணித்தார்கள்.

3000 முஸ்லிம் வீரர்கள்

எதிரிகளின் படைப்பலம் 24000, இதில் குறைஷிகள் மாத்திரம் 4000 பேர்கள். 300 குதிரைகள், 4500 ஒட்டங்கள். அண்ணலார் (ஸல்) அவர்களிடம் 3000 முஸ்லிம்களே இருந்தனர். அரேபியாவின் வரலாற்றின் மிக முக்கியமான, மிகப்பிரபலமான போர் இது.

நீரில்லாத அகழ்

9 முழ அகலம் சில இடங்களில் 7 முழ அகலம், 15 அடி ஆழம் கொண்ட அகழிவெட்டப்பட்டது. அகழி 5.5 கி.மீ. தூரம் கொண்டது. 10 நாட்களில் 30,800 சதுர முழம் அளவு அகழ் தோண்டும் பணி நடந்து முடிந்தது.[*]

அகழ்வெட்டும்போது அண்ணலார் (ஸல்)

கடும் குளிர், பட்டினி, பாதிக்கப்பட்டநிலை, எனினும் அகழ்வெட்டும்பணி அயராது நடைபெற்றது. அண்ணலார் (ஸல்) அவர்கள் மண்ணைவெட்டியெடுக்கவும், மண்ணை அள்ளுவதிலும் ஈடுபட்டிருந்தார்கள்.[**]

பாறை தகர்ந்தது; பார்வையில்பட்டது அதிசயம்

அம்ருபின் அவ்ப் என்னும் தோழர் ஸல்மான் (ரலி) உட்பட 10 பேர்களும் அவர்களுக்கு ஒதுக்கப்பட்ட இடத்தில் அகழி தோண்டிக் கொண்டிருந்தார்கள். அப்போது அங்கே பெரிய பாறை குறுக்கிட்டது. அதனை உடைத்து அப்புறப்படுத்திட எடுத்திட அனைத்து முயற்சிகளும் பலன்தரவில்லை. உடனே அண்ணலார் (ஸல்) அவர்களிடம் செய்தி சொல்ல ஸல்மான் (ரலி) அவர்களை அனுப்பினார்கள். அண்ணலார் (ஸல்) விஷயமறிந்து அந்த இடத்திற்கு வந்தார்கள்.

---

[*] கே. தாஜுதீன், மதீனாவில் மாநபி நிகழ்வுகளும் படிப்பினைகளும், சென்னை 2019, பக்கம் 349 (நூல் மொத்தம் 916 பக்கங்கள்)

[**] குலாம் ரசூல், அண்ணல் முஹம்மது நபி சரிதை, தஞ்சாவூர், முதற்பதிப்பு 1994, இரண்டாம் பதிப்பு 1997, பக்கம் 247 நூல் 420 பக்கங்கள்.

அல் அன்ஆம் (கால்நடைகள்)

திருகுர்ஆனில் 6வது அத்தியாயம் அல்ஆன்ஆம் (கால்நடைகள்) 115வது வசனம் (நபியே) உமது இரட்சகனின் வார்த்தைகள் உண்மையாலும் நீதத்தாலும் பூர்த்தியாகிவிட்டன. அவனுடைய வாக்குகளை மாற்றுவோர் எவருமில்லை. அவனே யாவையும் செவியேற்கிறவன்; நன்கறிகிறவன் என்ற வசனத்தை ஓதினார்கள். அல்லாஹூ அக்பர் (இறைவனே மிகப்பெரியவன்) என்று முழங்கி சம்மட்டியால் (குந்தாலி) அடித்தார்கள்.

சிரியா தேசம்

பாறையின்மீது 3 முறை அண்ணலார் (ஸல்) ஓங்கி அடித்தார்கள். மூன்றில் ஒரு பகுதி உடைந்தது; ஓர் ஒளி வீசியது. எனக்கு சிரியா தேசத்தின் சாவிகள் கொடுக்கப்பட்டன. அந்த நாட்டின் கோட்டையை நான் காண்கிறேன் என பெருமானார் (ஸல்) திருவாய் மலர்ந்தருளினார்கள்.

ஈரான்

இரண்டாம் முறையும் பெருமானார் சம்மட்டியால் ஓங்கி அடித்தனர். அப்பொழுது அடுத்த மூன்றில் ஒரு பகுதி உடைந்தது. அல்லாஹூ அக்பர். இப்போது பெர்சியா ஈரான் நாட்டின் திறவுகோல்கள் கொடுக்கப்பட்டன என்று நானிலத்தை நலம் பெறச்செய்ய வந்த நபிகள் நாதர் (ஸல்) நவின்றார்கள்.*

ஏமன்

மூன்றாவது அடி பாறைமீது விழுந்தது. பாறை பிளந்தது. ஏமன் நாட்டின் திறவுகோல்கள் எனக்குக் கொடுக்கப்பட்டன என்று பெருமானார் (ஸல்) கூறினார்கள்.

ரோமச்சக்கரவர்த்தி

கெய்ஸர் (Caesar) உடைய சிரியா நாட்டு அரண்மனையும், ஈரான் நாட்டு மன்னர் கஸ்ரா (Khasra) உடைய மதாயின் நகரத்து அரண்மனை இரண்டாவதாகவும், ஏமன் நாட்டில் ஸன்ஆ நகரிலுள்ள அரண்மனை மூன்றாவதாகவும் எனக்கு

---

* ஸையித் இப்ராஹீம், முஹம்மது நபி (ஸல்) திருச்சிராப்பள்ளி, 1973, பக்கம் 266, 267 (நூல் மொத்தம் 683 பக்கங்கள்)

காண்பிக்கப்பட்டது என்று நபிகள் நாயகம் (ஸல்) விளக்கிச் சொன்னார்கள்.

அபூபக்கர் (ரலி) (கி.பி.632 - 634)

அண்ணல் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களது ஆட்சியைத் தொடர்ந்து கலீபா அபூபக்கர் (ரலி) கி.பி.632 – 634 வரை ஆட்சி புரிந்தார்.

கலீபா உமர் (ரலி) (கி.பி.634 - கி.பி. 644)

கலீபா உமர் (ரலி) அவர்களது ஆட்சி கி.பி. 634 லிருந்து கி.பி.644 வரை நீடித்தது. அவர்களது ஆட்சியின்போது சிரியா, ஈரான், ஏமன் மூன்று நாடுகளும் அரேபிய முஸ்லிம்களால் வெற்றி கொள்ளப்பட்டது.

வலிமையான சக்தி

அகழ்ப்போரை விவரிக்கப்போவதில்லை. எதிரிகளின் கூட்டணி சிதறியது. அண்ணல் நபி (ஸல்) அவர்கள் இறைவனிடம் பிரார்த்தித்தார்கள். இரவு நேர குளிர்ந்த சூறைக்காற்றின் உதவியால் அண்ணலார் (ஸல்) வெற்றிபெற்றார்கள். இந்தப் போருக்குப்பின் மதீனாவைத் தாக்கிட எவரும் முன்வரவில்லை. கடந்த ஐந்து ஆண்டுகளில் தற்காப்பு நிலையை எடுத்து வந்த நிலையில், அகழ்ப்போருக்குப் பின் முஸ்லிம்கள் வலிமைமிக்க சக்தியாக மாறிவிட்டனர்.

மாதமுற்றுகை ஆறுபேர் இழப்பு

அகழ்ப்போர் ஒரு மாதம் முற்றுகை; ஆறுபேர்கள் முஸ்லிம் தரப்பில் இழப்பு; அபாரமான வெற்றி, அரேபியாவின் சரித்திரமும் மாறியது. மதீனாவின் யூத எதிர்ப்புகள் ஒடுக்கப்பட்டன. நயவஞ்சகர்கள் மறுபடியும் அமைதியானார்கள். இஸ்லாத்தின் அடுத்தகட்டம் தொடங்கப்பட இது காரணமாயிற்று.*

அழகிய அண்ணலார் (ஸல்)

அகழ்ப்போரின்போது சிவப்பு நிற மேலங்கியினை அணிந்தவர்களாக, தூசுபடர்ந்த மார்புடன் தோள்களைத்

---

* அல்அஸூமத், உலகின் பேரொளி இறைத்தூதர் (ஸல்) ரஹ்மத் பதிப்பகம், சென்னை, 2018, பக்கம் 446 (ஒரு இலட்சம் ரூபாய் பரிசுபெற்ற இந்த நூல்) 714 பக்கங்களைக் கொண்டது.

தழுவும் வகையில் நீண்டிருந்த கருநிறத்தலைமுடியுடன் அழகுடன் காணப்பட்டார்கள். அண்ணலார் (ஸல்) என்பார் பராஅ.*

மனித மனங்களின் ஆழத்தில் மாநபி (ஸல்)

சுத்தசெமிட்டிக்கும் சுத்த அரபியுமான நபிகளார் (ஸல்) மனித மனங்களின் ஆழங்களினுள் புகுந்து வலுவுடனும் சாதுரியத்துடனும் ஏகத்துவத்தை நோக்கி அழைப்பு விடுக்கிறார். அது இதயங்களினுள் ஆழ்ந்திறங்கி மனிதனை ஆன்மிகத்தின் உன்னதநிலைக்கு உயர்த்துகிறது என்பார் முஹம்மது ஹுஸைன் ஹைகல்.**

அல்அன்பியா - நபிமார்கள்

திருகுர்ஆனின் 21வது அத்தியாயம் அல்அன்பியா (நபிமார்கள்) அதில் 107வது வசனம் ‘நபியே உம்மை அகிலத்தார்க்கு ஓர் அருட்கொடையாகவேயன்றி அருளாகவேயன்றி நாம் அனுப்பவில்லை’ என்று இறைவன் அண்ணல் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை அகிலத்தின் அருள்கொடை என்கிறான்.

அருட்கொடை - கருணை

ஏக இறைவன் திருகுர்ஆனில் அண்ணல் நபி (ஸல்) அவர்களை அகிலத்தாருக்கும் அருளாகத்தான் ஆக்கியிருப்பதாகத் தெரிவிக்கிறான். அதாவது அகிலத்தார் அனைவருக்கும் அண்ணல் முஹம்மது (ஸல்) அவர்களை அருளாக அனுப்பியுள்ளான்.

அபூஹுரைரா (ரலி)

நபி (ஸல்) அவர்களிடம் அல்லாஹ்வின் தூதரே!

---

* மார்ட்டின் லிங்ஸ், ஸெய்யித் அபூபக்கர் ஸிராஜுத்தீன், மூலாதார நூல்களின் அடிப்படையில் முஹம்மத் அவர்களது வாழ்வு, ஸ்ரீலங்கா, 1983 பக்கம் 401, 402. (நூல் மொத்தம் 670 பக்கங்கள்)

** முஹம்மத் நபி (ஸல்) குறித்து முஹம்மத் ஹுஸைன் ஹைகல் எழுதிய ஹயாத் முஹம்மத், பல்வேறு மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டது. மலையாளத்திலிருந்து தமிழில் குளச்சல் யூசுஃப் காலச்சுவடு நாகர்கோவில் 2016, பக்கம் 328 (நூல் மொத்தம் 567 பக்கங்கள்)

தாங்கள் இணைவைப்பவர்களுக்கு எதிராகச் (சாபமிட்டுப்)* பிரார்த்தியுங்கள் என்று கூறப்பட்டது. அதற்கு நபி (ஸல்) அவர்கள், **நான் சாபமிடுபவனாக அனுப்பப்படவில்லை, அருளாகவே நான் அனுப்பப்பெற்றுள்ளேன் என்றார்கள்.*** (சாபமிடுதல் – லஅனத் – இறைஅருளிலிருந்து விலக்கி வைக்க வேண்டுதல்.)

நிச்சயமாக நான் அருளாவேன்

அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள். நிச்சயமாக நான் அருளாவேன், அல்லாஹ்வே என்னை அனுப்பி வைத்துள்ளான். அல்லாஹ் தனது மார்க்கத்தை மேலோங்கச் செய்யாதவரை எனக்கு மரணத்தை ஏற்படுத்த மாட்டான் எனக்கு (ஐந்து) பெயர்கள் உண்டு.

ஐந்து பெயர்கள்

நான் ‘**முஹம்மத்**’ (ஸல்) புகழப்பட்டவர்

நான் ‘**அஹமத்**’ இறைவனை அதிகமாகப் புகழ்பவர் ஆவேன்

நான் ‘**மாஹீ**’ (அழிப்பவர்) ஆவேன்; இறைவன் என் மூலம் ஏக இறைமறுப்பை அழிக்கிறான்.

நான் ‘**ஹாஷிர்**’ ஒன்று திரட்டுபவர் ஆவேன். மக்கள் என் தலைமையில் ஒன்று திரட்டப்படுவார்கள்.

நான் ‘**ஆகிப்**’ இறுதியானவர் ஆவேன்.

(எனக்குப் பிறகு வேறெந்த இறைத்தூதரும் இல்லை) இதனை ஜுபைர் பின் முத்இம் (ரலி) அறிவிக்கிறார்கள். **

கருணை

திருகுர்ஆன் 21 அதிகாரம் 107வது வசனத்தில் அண்ணலார் (ஸல்) அவர்களை இறைவன் கருணையாகவே அனுப்பினேன்

---

*ஸஹீஹ் முஸ்லிம், தமிழாக்கம் ஹதீஸ் 5065. நபிகளாரின் பொன்மொழிகள் ஸஹீஹ் முஸ்லிம் மூலம் தமிழாக்கம் அடிக்குறிப்பு நான்காம் பாகம், ரஹ்மத் அறக்கட்டளை, சென்னை 2007, பக்கம் 499.

**நபிகளாரின் பொன்மொழிகள், ஸஹீஹுல் புகாரி மூலம், தமிழாக்கம் அடிக்குறிப்பு, ரஹ்மத் பதிப்பகம், சென்னை, 2010, பக்கம் 37. நூல் 1260 + 140 = 1400 பக்கங்கள்)

என்று அறிவிக்கிறான். கருணை – கிருபை ஆகும். அண்ணலார் (ஸல்) உள்ளும் புறமும் கருணையாகவே இருந்தார்கள்.

அரபியின் கோபம்

நாட்டுப்புறத்தைச் சேர்ந்த ஓர் அரபி பெருமானார் (ஸல்) அவர்களுடைய கழுத்தில் இருந்து துண்டை வேகமாக இழுத்து **‘ஏதாவது பொருள் கொடும்’** என்று கேட்டார். அந்த அரபி இழுத்ததால் அண்ணலார் (ஸல்) அவர்களின் கழுத்தில் அந்தத் துண்டின் ஓரம் பதிந்து சிவந்துவிட்டது. அந்தநிலையிலும் அண்ணலார் (ஸல்) சிரித்துக்கொண்டே ஏதாவது அவருக்கு கொடுக்குமாறு உத்திரவிட்டார்கள்.

மக்களின் மனநிலை

அண்ணலார் முஹம்மது நபி (ஸல்) அவர்கள் நபியாக அனுப்பப்பட்டபோது மக்கள் அறியாமையிலும் இறை நிராகரிப்பிலும் வழி கேட்டிலும் அகப்பட்டுக் கொண்டிருந்தார்கள். மக்களிடையே பலதரப்பட்ட கொள்கைகள் பிளவுபட்ட நிலை; நாளுக்கு நாள் சச்சரவு; சண்டைகள்; இந்த நிலையில் தான் இப்புவிக்கு நபியாக அண்ணலார் (ஸல்) வந்தார்கள். சட்டங்களை விளக்கினார்கள். செய்யத்தகுந்ததைச் சொன்னார்கள். செய்யத்தகாததையும் விளக்கினார்கள். ஆனால் அன்றைய மக்கள் அவர்களது போதனையை ஏற்றுக்கொள்ளவில்லை. பற்பல தொல்லைகளைத் தந்தனர். அவைகளை எல்லாம் சகிப்புத்தன்மையுடன் அண்ணலார் (ஸல்) ஏற்றுக்கொண்டார்கள். அக்கூட்டத்தாருக்கு நற்போதனைகளைச் செய்தார்கள். தம்மைக் கொடுமைப்படுத்தியதற்காக அவர்கள் வருத்தப்படவில்லை. ‘இறைவா, இந்த மக்களுக்கு நேர் வழியைக்காட்டு; இவர்கள் அறியாதவர்களாக இருக்கிறார்கள்’ என்றே இறைவனிடம் கேட்டார்கள்.

கருணை நபி

இவைகள் அண்ணலார் (ஸல்) கருணை நபி என்பதற்கு எடுத்துக்காட்டு ஆகும். அவர்கள் மீது விசுவாசம் கொண்டாலும், கொள்ளாவிட்டாலும் அவர்கள் மீது அன்பையே அண்ணலார் (ஸல்) பொழிந்தார்கள். அவர்களை விசுவசாங் கொண்டவர்களுக்கு இவ்வுலகிலும் மறுஉலகிலும்

அவர்கள் கருணை நபி ஆவார்கள் என்பதே இஸ்லாம் போதிக்கிறது.

முதல் சிருஷ்டி

இறைவன் முதன் முதலாக 'நூர்' என்னும் பிரகாசத்தினால் நபிகள் பெருமானார் (ஸல்) அவர்களைச் சிருஷ்டித்தான். அந்தப் பிரசாகத்திலிருந்துதான் பின் ஏனைய ஜீவராசிகளை உருவாக்கினான். தாதுவர்க்கங்கள், தாவர வர்க்கங்கள் மற்றவைகளும் இப்பிரபஞ்சத்தில் தோன்றுவதற்கும் மூலாதாரமாக இருப்பதால் அகிலத்திலுள்ள யாவற்றுக்குமே நாயகம் (ஸல்) அவர்கள் கருணையாகத் தோன்றியுள்ளார்கள்.*

தாயிஃப் நகரத்தில்

தாயிஃப் நகரத்தில் இஸ்லாம் மார்க்கப் பிரச்சாரத்திற்குச் சென்ற அண்ணல் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மீது கல்லடியும் சொல்லடியும் விழுந்தது; குருதி கொட்டியது. படுகாயமுற்ற அண்ணலார் (ஸல்) அவர்களிடம் வானவர் தலைவர் ஜிப்ரயீல் (அலை) (காபிரியேல்) இம்மலைகளைப் பெயர்த்து இம்மக்கள் மீதிட்டு அழித்துவிடவா? என்று கேட்டார்கள். **சத்தியமார்க்கத்தை சந்ததிகள் ஏற்பார்கள்** வேண்டாம்! ஜிப்ரயீலே! இவர்கள் இல்லாமற் போனாலும், இவர்களுடைய சந்ததிகள் இஸ்லாத்தை ஏற்கக்கூடும் என்று அண்ணல் நபி (ஸல்) அவர்கள் மிக்கக் கருணையுடன் கூறினார்கள்.**

கருணை காட்டுங்கள்

'புவியில் உள்ளோன் மீது கருணை காட்டுங்கள்; வானங்களின் இறைவன் உங்கள் மீது கருணை காட்டுவான்' என்று அண்ணல் நபி (ஸல்) கூறினார்கள். *(அன்வார் 06:240)*

---

* *எஸ்.எஸ். முஹம்மது அப்துல்காதர் ஸாஹிபு பாகவி தப்ஸீருல் ஹமீத்பீ தப்ஸீரில் குர்ஆனில் மஜீத், நான்காம் பாகம், சென்னை முதற்பதிப்பு 1956, இரண்டாம் பதிப்பு 1983. பக்கம் 585, நூல் மொத்தம் 872 பக்கங்கள்.*

** *அண்ணலாரின் பொன்மொழிகள் அன்வாருல் மிஷ்காதத்தில் மஸாபீஹ் பக். 523.*

எனவே அண்ணல் நபி (ஸல்) அவர்கள் மறுமை நாள் வரை இவ்அகிலத்திற்கு அருட்கொடையாக இருப்பார்கள்.*

அகிலத்திற்கும் அருட்கொடையாகவும் அழகிய முன் மாதிரியாகவும் தோன்றிய அண்ணலார் (ஸல்) அவர்கள் சத்திய சன்மார்க்கமான இஸ்லாத்தை எடுத்துரைத்தார்கள்.

டாக்டர் முஹம்மத் ஹமீதுல்லா

Introduction of Islam எனும் நூலை டாக்டர் முஹம்மது ஹமீதுல்லா தந்தார்கள். ஹிலால் பப்ளிஷிங் ஹவுஸ், திருநெல்வேலி அதனை 'இஸ்லாம் ஓர் அறிமுகம்' எனும் நூலாக 1978இல் வெளியிட்டார்கள்.

கே.எஸ். மக்தூம் முகைதீன்

கே.எஸ். மக்தூம் முகைதீன் அதனை தமிழாக்கம் செய்திருந்தார்கள். 397 பக்கங்களில் வெளிவந்த அற்புதமான நூல் அது.

கி.பி. 632

ஹிஜ்ரி 11ஆம் ஆண்டில் ஹஜ் என்னும் புனித யாத்திரையை மேற்கொண்டு, அரேபியாவின் பல பாகங்களிலிருந்தும் வந்த மக்களிடையே அண்ணலார் (ஸல்) உரை தந்தார்கள்.

அண்ணலார் தந்த அறிவுரைகள்

ஏக இறைவன்மீது நம்பிக்கை கொள்ளுங்கள். இனம், வர்க்கம் என்னும் பேதமற்ற சமத்துவத்தை நம்பிக்கையாளர்கள் மத்தியில் பேணுங்கள். பயபக்தியுடையோரே மனிதரில் மேலானோர், தூய்மையான வாழ்க்கை நடத்துங்கள். நேர்மையாகப் பொருளைத் தேடுங்கள். பிறரைக் கண்ணியப்படுத்துங்கள். வட்டியை ஒழித்துவிடுங்கள். தீய வழக்கங்களைக் கைவிட்டுவிடுங்கள். தனிப்பட்டோரின் எதேச்சதிகார நீதியை அகற்றிவிடுங்கள்.

பெண்களை கண்ணியமாக

பெண்களை கண்ணியமாக நடத்துங்கள். வாரிசு உரிமைகளைச் சரிவர நிறைவேற்றுங்கள். இறந்தோர்

---

*தஃப்ஸீர் ஜவாஹிருல் குர்ஆன், திருக்குர்ஆன் விளக்கவுரை ஒன்பதாம் தொகுதி, வேலூர் 2011, பக்கம் 581. (நூல் 584 பக்கங்கள்)

சொத்துக்களை அவருடைய உறவினர்கள் (ஆண் – பெண்) மத்தியில் முறையாகப் பாகம் செய்யுங்கள். ஒரு சிலர் கைகளில் மட்டும் பொருள் முடங்குவதை அகற்றுங்கள். இதுதான் அன்றைய உரையில் நபிகள் நாயகம் அவர்கள் தந்த நல்லுரைகள்.*

இஸ்லாத்தின் கொள்கை

இம்மையிலும் மறுமையிலும் நல்வாழ்வு (திருகுர்ஆன் 2:201) இஸ்லாத்தின் இலட்சியத்தைச் சுருக்கமாக திருகுர்ஆன் உணர்த்துகிறது.

லா இக்ரா ஹபித்தீன்

மதசம்பந்தமாகக் கட்டாயம் வேண்டாம். 'லா இக்ராஹபித்தீன்' என்று திருக்குர்ஆன் போதிக்கிறது.**

இறை நம்பிக்கை

'மார்க்கத்தில் நிர்பந்தமே இல்லை' (திருகுர்ஆன் 2:256) என்று திருகுர்ஆன் அறிவுறுத்துகிறது.

இறை நம்பிக்கை
ஐவேளைத் தொழுகை
ரமலான் மாதத்தில் நோன்பு
ஏழைகள் வரி ஜகாத்
புனித ஹஜ்

இந்த ஐம்பெரும் கடமைகளை இஸ்லாம் வலியுறுத்துகிறது. இஸ்லாம் மார்க்கம் குறித்து ஆயிரக்கணக்கில் நூல்கள் வந்துள்ளது. எனவே அதுகுறித்து இத்துடன் நிறுத்திக் கொள்கிறோம்.

---

* இஸ்லாம் ஓர் அறிமுகம் நூல் பக்கம் 23, 24.

** பா. தாவூத் ஷா, நாச்சியார் கோவில் முஸ்லிம் சங்க முதற்கமலம், நாச்சியார் கோவில், 1920, பக்கம் 50.

சந்திரன்

சந்திரனை குறிக்க ஆங்கிலத்தில் வழங்கும் Moon என்னும் சொல் 'அளப்பவன்' என்னும் வேர்ப்பொருள்படுவதாகும். ஆங்கிலம் Mona (மோனா) கிரேக்கம் மீன் Men என்னும் சொற்கள் இவ்வேரினின்றும் தோன்றியது. திங்கள் என்றால் **சந்திரன், மாதம்** என இருபொருள் சொல்லப்படுகிறது.

திங்கள், சந்திரன் மக்கள் கண் எதிரே வளர்வதும், தேய்வதுமாய் இருத்தலால் மக்கள் திங்களையே கால அளவையாகக் கொண்டனர். மூன்றாம் பிறை பல சமயத்தினராலும் போற்றப்படுகிறது.

இஸ்லாமியர் பிறைக்கொடி; கிறிஸ்தவர் கன்னிமேரியின் (மரியம் (அலை) காற்கீழ் வரைவதும் பிறை; சிவனார் தலையில் அணிவது பிறை; பதிணென்கணலால் ஏற்றப்படுவதும் பிறை.*

ஹாஹாபு

இஸ்லாமிய மார்க்கத்தை நிறுவிய அண்ணல் முஹம்மது நபி (ஸல்) ஹாஹாபு என்றும் பெரியவர் விருப்பப்படி, மக்காவிலுள்ள கஃபாவைச் சுற்றிச் சந்திரனை ஏழுமுறை வலம் வரச் செய்தனர் என்பது வரலாறு.

சிலப்பதிகாரம்

'திங்கள் போற்றுதும்' 'திங்கள் போற்றுதும்' என்றுதான் சிலப்பதிகாரம் துவங்கும்.

தட்சயாகம்

தட்சயாகத்திலும், கந்தபுராணம் முதலிய புராணங்களில் சந்திரன் பற்றிய செய்திகளைக் காணலாம்.**

ஜேம்ஸ் எஸ். பிக்கரிங்

'**கதிரவனின் கைதிகள்**' என்னும் நூல் ஜேம்ஸ் எஸ். பிக்கரிங் என்பவரால் எழுதப்பட்டு, ஆர். போற்றிவேலு பிள்ளையால்

---

* *ந. சுப்ரமண்யன், தமிழ் வரலாறு, இலக்கியச் சிந்தனைகள், உடுமலைப்பேட்டை 1990, பக்கம் 149.*

** *கி.வா. ஜகந்நாதன், நவக்கிரகங்கள், சென்னை, 1993, பக்கம் 33.*

தமிழாக்கம் செய்யப்பட்டு, சென்னை ஹிக்கின் பாதம்ஸ் நிறுவனத்தாரால் 1966இல் 408 பக்கங்களில் வெளிவந்துள்ளது. இதில் சந்திரன் குறித்து 88வது பக்கம் முதல் 156 வது பக்கம் வரை விரிவான விஞ்ஞானக் குறிப்புக்கள் உள்ளது.

சந்திரனை நோக்கி

ஐயாயிரம் ஆண்டுகளுக்கு முன்னால் பாபிலோனியாவில் செதுக்கப்பட்ட ஒரு சிலிண்டர் வடிவமான முத்திரையில் பறந்து செல்லும் பெரிய பறவையின் மேல் ஒரு மனிதன் உட்கார்ந்து பிறைச்சந்திரனை நோக்கிச் செல்வதுபோல பொறிக்கப்பட்டிருக்கிறது என்ற தகவலைத் தருவார் ஜேம்ஸ் எம் பிக்கரிஸ்.*

நிலா நானூறு

கவிஞர் சிற்றரசுவும், புலவர் கல்லை ஆ. துரையும் நிலா நானூறு என்ற நூற்றுக்கணக்கான கவிஞர்கள் பாடிய நூலை 1974இல் கவியரசர் கண்ணதாசன் அணிந்துரையோடு வெளியிட்டுள்ளனர். நிலாவைப் பாடாத கவிஞர்கள் இருந்திட முடியாது.

சங்க இலக்கியத்தில் திங்கள்

டாக்டர் தா.வே. வீராசாமி சங்க இலக்கியத்தில் திங்கள் என்னும் ஆய்வுக்கட்டுரையில்

பதிற்றுப் பத்தில் திங்கள் குறித்து 2 சதவீதம்
ஐங்குறுநூறு 3 சதவீதம்
குறுந்தொகை 5 சதவீதம்
நற்றிணை 10 சதவீதம்
பரிபாடல் 10 சதவீதம்
பத்துப்பாட்டு 13 சதவீதம்
அகநானூறு 14 சதவீதம்
புறநானூறு 20 சதவீதம்
கலித்தொகை 23 சதவீதம்
நிலா பற்றி பேசப்படுகிறது என்கிறார்.

---

* மேலே கூறிய நூல் பக்கம் 88.

சந்திரவிலாசம்

மாம்பழக்கவிச் சிங்க நாவலர் 'சந்திர விலாசம்' என்னும் இலக்கியத்தையே தந்துள்ளார்.

பண்டிதமணி மு.கதிரேசன் செட்டியார்

1950இல் பண்டிதமணி மு.கதிரேசன் செட்டியார் தந்த 'மணிமலர்த்திரட்டு' நூலில் 12 கட்டுரைகள்; அதில் ஒன்று பிறை தொழுதல்.

பிறை தொழும் பெண்கள்

இராவாண்டைப்பாட்டு பிறை தொழும் பெண்கள் என்னும் நூலை டாக்டர் இராம. பெரிய கருப்பன் 1975இல் மதுரையிலிருந்து தந்துள்ளார்.

பண்டித எஸ். ரத்நம்

'அம்புலிப்பாட்டு' என்ற நூலை அருட்கவிஞர் பண்டித எஸ்.ரத்நம் 1943இல் புதுச்சேரியிலிருந்து தந்துள்ளார். ஆறணா விலையில் புதுவை பாரதி சக்தி நிலையம் வெளியிட 29 பக்கங்களைக் கொண்ட நூல் அது. அதில் பக்கம் 17 இல் வரும் வரிகள்.

> ***முன்னம் முகமதுவும் தன்னிருகையால்***
> ***முடி எனப் பிளந்து வேடிக்கை செய்தார்***
> ***என்ன இவை பலவும் ஒன்றன்பின் ஒன்றாய்***
> ***ஈன்ற கதைகள் பல எண்ணிறந்துள்ள***
> ***முன்னம் எழுந்த மதி தானிது வென்றே***
> ***முடி மொழிந்து வரும் இந்த உலகம்***

என்று பண்டித எஸ்.ரத்நம் பாடியுள்ளார்.

அண்ணலார் முஹம்மது நபி (ஸல்) சந்திரனைப் பிளந்து காட்டிய சரித்திரச் சம்பவத்தைப் பார்ப்போம்.

யூதரின் யுக்தி

சூனியம் செய்யும் தொழில் செய்பவருக்கு அவர்களது மந்திர சக்தி இவ்வுலகில் மட்டும்தான் பலிக்கும். விண்ணில் அவர்களது மந்திரசக்தி பலிக்காது. ஆதலால் 'அண்ணல் முஹம்மது (ஸல்) அவர்களிடம் **விண்ணிலுள்ள காரியங்களில் எதையேனும் நிகழ்த்துமாறு கேட்க வேண்டும்**' *என்று யூதர் ஒருவர் அபூலஹபுக்கு யுக்தி சொல்லிக் கொடுத்தார்.*

கி.பி. 617

அண்ணலார் (ஸல்.) மக்காவைத் துறந்து மதீனாவிற்குச் சென்றது கி.பி.622இல் அதற்கு சரியாக ஐந்து வருடங்களுக்கு முன்பு, அதாவது கி.பி.617இல் ஒருநாள் இரவு நேரம் பூரண சந்திரன் நிறைவான ஒளியை உமிழ்ந்து கொண்டிருந்த நேரம்.

குறைஷிகளின் கோரிக்கை

முனபுரா, அபூஜஹ்ல், ஆஸிப்னுவாயில், ஆஸிப்னு ஹிஷாம், அஸ்வதிப்னு அப்துயகூஸ், அஸ்வதிப்னு முத்தலிப், ஜம்ரத்திப்னுல் அஸ்வத், நள்ரிப்னு ஹாரிஸ் மற்றும் சிலர் அண்ணலார் (ஸல்) அவர்களிடத்தில் வந்தார்கள்.

'உண்மையிலேயே நீங்கள் அல்லாஹ்வின் தூதராயிருக்கும் பட்சத்தில் அதற்குரிய ஒரு பெரிய ஆதார அடையாளமாக இதோ தெரியும் இந்தப் பூரண சந்திரனை இரண்டாகப் பிளந்து காட்டுங்கள் பார்க்கலாம்' என்றார்கள். அங்கு கூடியிருந்தோரில் அவிசுவாசிகளும் இருந்தனர். விசுவாசிகளும் இருந்தனர். இன்னும் தீர்மானமேதும் எடுக்காதோரும் இருந்தனர். சந்திரனைப் பிளக்க வேண்டுகோள் விடுக்கப்பட்டதும் அனைவரது கண்களும் சந்திரனை நோக்கித் திரும்பின.

நபி (ஸல்) பிரார்த்தனை

வானத்தை நோக்கியவாறு நபி (ஸல்) அவர்கள் பிரார்த்தனை செய்துகொண்டே தங்கள் சுட்டு விரலால் ஜாடை காட்டினார்கள். பூரண சந்திரன் இரண்டாகப் பிளந்தது, பிரிந்தது. ஹிரா மலையின் இருபுறத்தும் அரை வட்டவடிவில் விளங்கியமைக் கண்டு அனைவரும் வியப்பில் மலைத்து நின்றனர். 'நீங்கள் சாட்சிகளாக இருப்பீர்களாக!' என்றனர் நபிகளார் (ஸல்) எனினும் வேண்டுகோள் விடுத்தவர்கள் இக்கட்புல அற்புதத்தைத் தொடர்ந்து சூனியமென்றும், தனது மந்திரச் சக்தியினால் முஹம்மது (ஸல்) தம்மை மயக்கிவிட்டார் என்று கூறலாயினர். விசுவாசிகள் மகிழ்ந்தார்கள். இதுவரை நிலையான தீர்மானம் ஏதும் எடுக்காதிருந்தோரில் பலர் இஸ்லாத்தில் இணைந்தார்கள். சிலர் அந்நிலையை அண்மினார்கள் (நெருங்கினார்கள்). *

---

* மார்டின் லிங்ஸ், முஹம்மது, ஸ்ரீலங்கா, 1983, பக்கம் 122-123.

ஏற்க மறுப்பு

இதற்குப் பிறகு வேற்றிடங்களிலிருந்து வந்த பலரும், வேறு நாடுகளிலிருந்து வந்த வியாபாரிகளும், பிரயாணிகளும் தாங்களும் சந்திரன் பிளவுபட்டதைப் பார்த்ததாகச் சொன்னார்கள். ஆனால் குறைஷிகள், சூனிய சக்தியால் சிறிதுநேரம் இப்படித் தெரிவது சகஜம் தான் என்று வெகு அலட்சியமாகக் கூறிவிட்டு, தாங்கள் தந்த வாக்குறுதிப்படி அண்ணலார் (ஸல்) அவர்களை நபியாக ஏற்கமறுத்துவிட்டனர்.* இந்த வேளையில் திருகுர்ஆனில் அத்தியாயம் 54 வசனம் 12 வெளியாகியது.

கண்ணால் கண்டவர்கள்

நபி (ஸல்) அவர்கள் சந்திரனைப் பிளந்து காட்டிய அற்புதத்தை நிகழ்த்தியதை ஹஜ்ரத் அலி (ரலி), ஹஜ்ரத் அப்துல்லாஹ் பின் மஸ்வூத் (ரலி), ஹஜ்ரத் ஹுதைஃபா (ரலி), ஹஜ்ரத் அப்துல்லா பின் உமர் ஆகிய நபித் தோழர்கள் கண்ணால் கண்டார்கள்.**

ஜுபைர் பின் முத்இம் (ரலி) அவர்களும் அறிவித்துள்ளார்கள். ***

அப்துல்லாஹ் பின் மஸ்வூத் (ரலி)

அந்த இடத்தில் தாம் இருந்ததாகவும் அதனை நேரில் கண்டதாகவும் ஹஜ்ரத் அப்துல்லாஹ் பின் மஸ்வூத் (ரலி) கூறியுள்ளார்கள். **ஷக்குல் கமர்** (கமர் – சந்திரன்) எனப்படும் இந்நிகழ்வு **தவாத்துர்** வகையில் பதிவாகியுள்ள மிக்க நம்பகமான செய்தியென இமாம் **தஹாவீ இப்னுகஃதீர்** ஆகியோர் கூறுகின்றனர்.

சாட்சியாக இருங்கள்

‘சந்திரன் பிளவுபட்டதும், இணைவைப்பவர்களை நோக்கி’, அண்ணல் முஹம்மது நபி (ஸல்) அவர்கள் ‘இன்னாரே,

---

* அல்பிதாயா, இப்னுகதீர், ஃபத்ஹுல்பாரீ.

** ஸையித் இப்ராஹீம், முஹம்மது நபி (ஸல்), திருச்சிராப்பள்ளி, 1973, பக்கம் 391.

*** ஃபத்ஹுல்பாரீ, உம்தத்துல் காரீ.

இன்னாரே' எனப்பெயர் கூறி அழைத்து நன்றாகப் பார்த்துக்கொள்ளுங்கள். நீங்கள் இதற்குச் சாட்சியாக இருங்கள் எனக்கூறினார்கள்.*

ஸஹீஹ் முஸ்லிம்

நபிகளாரின் (ஸல்) பொன்மொழிகளான ஸஹீஹ் முஸ்லிம் நான்காம் பாகம் (ரஹ்மத் அறக்கட்டளை வெளியீடு) 1072 பக்கங்கள் முதற்பதிப்பு 2007 பக்கம் 744இல் அனஸ் பின் மாலிக் (ரலி) அவர்கள் சந்திரன் பிளவுபட்டதை நபி (ஸல்) சான்றாகக் காட்டினார்கள் என்று அறிவித்துள்ள செய்தி வருகிறது.

ஸஹீஹுல் புகாரீ

ஸஹீஹுல் புகாரி பாகம் 3 நபி (ஸல்) பொன்மொழி 3636, 3637, 3838, 3868, 3869, 3870, 3871 ஸஹீஹுல் புகாரி பாகம் 4 (பக்கம் 262, 263) நபி (ஸல்) பொன்மொழி எண்கள் 4864, 4865, 4866, 4867 ஆகியவற்றில் சந்திரன் இரண்டாகப் பிளவுண்ட நிகழ்ச்சி தெளிவாகச் சொல்லப்பட்டுள்ளது.

அரபு மக்களின் கருத்திற்கேற்ப சந்திரன் அவர்களது அரசுக்குரிய அடையாளமாகும். அந்த சந்திரனை அண்ணலார் (ஸல்) இரண்டாகப் பிளந்துகாட்டி அற்புதம் புரிந்தார்கள்.

திருக்குர்ஆன் விரிவுரை தஃப்சீர் இப்னு கஸீரி

திருக்குர்ஆன் விரிவுரை தஃப்சீர் இப்னுகஸீரின் தொகுதி 8 பக்கம் 797இல் அனஸ் (ரலி) அறிவிப்பும், பக்கம் 797 இல் ஜுபைபின் முத்இம் (ரலி), இப்னு அப்பாஸ் (ரலி) அறிவிப்பும், பக்கம் 798இல் இப்னுமஸ்ஊத் (ரலி) அறிவிப்பும், பக்கம் 799இல் இமாம் அஹ்மத் (ரஹ்) அவர்களது அறிவிப்பும், முஜாஹித் (ரஹ்) அறிவித்ததாக லீஸ் (ரஹ்) பதிவு செய்துள்ள நபிகள் நாயகம் (ஸல்) பொன்மொழியில் சந்திரன் பிளவுபட்டதற்கு அபூக்கர் (ரலி) யை அண்ணலார் (ஸல்) சாட்சியாக வைத்ததாக வருகிறது.

இமாம் பைஹகி (ரஹ்) ஜிப்னுஜரீர் தபரீ (ரஹ்) அவர்களும் சந்திரன் பிளவுண்ட செய்தியை பதிவு செய்துள்ளார்கள். சந்திரன்

---

* இப்னுமஸ்ஊது, இப்னு உமர் அனஸ், ஜுபைர் பின் முத்இம், இப்னு அப்பாஸ் (ரலி) நூல் புகாரீ 2:22, குர்துபீ பக்கம் 123.

பிளவுபட்டதை (the moon was eleft as sunder) உலகில் உள்ள அனைவரும் ஒருவர்கூட தவறாமல் பார்த்திருக்க இயலாது. உலகெங்கும் உள்ள காலஅளவு வித்தியாசம் உண்டு. மக்காவில் இரவு எட்டு மணிக்கு நிகழ்ந்ததாக வைத்துக்கொண்டால் இந்தியாவிலுள்ளவர்களுக்கு அது பத்துமணியாக இருக்கும்.

சந்திரன் பிளந்ததைக் கண்ட இந்திய மன்னர்

வேலூர் அரபிக் கல்லூரி அல்பாக்கியாத்துஸ் ஸாலிஹாத் வெளியிட்ட திருக்குர்ஆன் விளக்கவுரை 15வது தொகுதியில் (2018) பக்கம் 113, 114 இல் **மன்னர் சேரமான் கண்ட நிலவின் இரு துண்டுகள்** *என்ற தலைப்பில், சந்திரன் பிளவுபட்ட அற்புதத்தை மலபார் (கேரளா) மன்னர் சேரமான் பெருமான் ஸாமிரீ அந்தப்புர உப்பரிகையில் உலவிக் கொண்டிருந்தபோது பார்த்தார். அண்ணல் நபி (ஸல்) அவர்களைக் காணச் சென்றார்; சந்தித்தார். இஸ்லாத்தைத் தழுவினார்.* **தாஜுத்தீன்** *என தனது பெயரை மாற்றினார். திரும்பிவரும்போது பயணத்தில் மரணமடைந்தார். ஸலாலா தீவில் அடக்கம் செய்யப்பட்டார் என்று குறிப்பிட்டுள்ளார்கள்.*

அன்வாருல் குர்ஆன் தொகுதி 5

பிரியத்திற்குரிய மௌலவி ஹாபிஸ் தென்காசி இ.எம். அப்துர்ரஹ்மான் திருகுர்ஆனுக்கு அன்வாருல் குர்ஆன் என்றும் விரிவுரை டபுள் டம்மி சைஸில் 5017 பக்கங்களில் தந்துள்ளார்கள். அதில் பக்கம் 4329 – 4330 களில் அவர்கள் தந்துள்ள விளக்கம் இதோ;

“இந்தியாவிலுள்ள மலபார் ராஜ்யத்தை (இன்றைய கேரளத்தை) ஆண்டு வந்த ஜமூரன் ஸாமிரி என்பார் சந்திரன் பிளவுபட்ட சம்பவம் நடைபெற்ற அன்றிரவு தனது மாளிகையின் உப்பரிகையில் உலவிக் கொண்டிருக்கும்போது அந்த அற்புதத்தைக் கண்டார்.” அது, முக்கிய நிகழ்வின் அரசாங்கத் தினசரிக்குறிப்பில் பதிவிடும் முறைப்படி பதிவும் ஆனது. பின்னர் இதுகுறித்து ஆராய அரசர் உத்திரவிட்டார்.

அரபுநாட்டில் புதிய தூதர் முஹம்மது(ஸல்)தோன்றியிருப்பதும் அவர்களால் இவ்அற்புதம் நிகழ்த்தப்பட்டதையும் மன்னர் அறிந்தார்.

இஸ்லாத்தைத் தழுவினார்

சேரமான் பெருமான் பெருமானார் (ஸல்) அவர்களை ஏற்றுக்கொண்டார். இஸ்லாத்தை தழுவினார். அதன்பின்னர் அண்ணலார் (ஸல்) அவர்களைச் சந்திக்க முடிவெடுத்தார். ராஜ்யப் பொறுப்பை இளவரசரிடம் ஒப்படைத்துவிட்டு பெருமானார் (ஸல்) அவர்களைச் சந்திக்க பாய்மரக்கப்பலில் அரபு நாட்டை நோக்கிப் பயணித்தார். ஆனால் துரதிர்ஷ்டவசமாக பாதிவழியிலேயே காலஞ்சென்றார். அவரது உடல் ஏமன் நாட்டில் அடக்கம் செய்யப்பட்டது. இவ்வரலாறு உலக சுற்றுப்பிரயாணி **இப்னுபத்தூத்தா** தனது உலக சுற்றுப்பயணக்குறிப்பில் கூறியுள்ளதாகத் தெரிவிக்கிறார்.

பெரிஷ்டா

பிரபல சரித்திர ஆசிரியர் பிரிஷ்டா இவ்வரலாற்றை இவ்வாறு எழுதுகிறார்.

ஆதிபிதா ஆதம் (அலை)

ஆதிபிதா ஆதம் (அலை) அவர்களின் பாத தரிசனத்தை முன்னிட்டு அரபியரும் அரபியர் அல்லாதவரும் இலங்கையைச் சேர்ந்த சரந்தீவை நோக்கி வருவது வழக்கம்.

மாலிக் இப்னு தீனார்

இவ்வாறு வந்த குழுவில் ஒரு சந்தர்ப்பத்தில் மாலிக் இப்னுதீனார் குழுவினர் வந்தபோது அவர்களை ஏற்றிவந்த கப்பல் திசைதப்பி மலபாரின் பக்கம் திரும்பிவிட்டது.

அன்பான வரவேற்பு

எனவே கள்ளிக்கோட்டை துறைமுகத்தில் அவர்கள் இறங்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது. அங்கு இறங்கிய அவர்களை மேற்கொண்ட ஸாமிரி மன்னர் அன்புடன் வரவேற்றார். அவர்கள் தங்குவதற்கான சகல வசதிகளையும் செய்து கொடுத்தார். பலதரப்பட்ட விஷயங்கள் பற்றி அவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தினார். அவ்விருந்தினரின் மார்க்கத்தைப் (மதத்தை) பற்றி விசாரித்தார்.

முஸ்லிம்கள்

மன்னரிடம் தாங்கள் முஸ்லிம்கள்; முஹம்மது (ஸல்) அவர்கள் இறைவனால் அனுப்பப்பெற்ற தூதர் என்றும் அவர்கள் கூறினார்கள். உங்களது அத்தூதரைப் பற்றியும் அவர்களைப் பற்றியும் அறிந்து கொள்ளவும் விரும்புகிறேன் என்றார் அரசர்.

முக்கிய நிகழ்வுகள்

அண்ணலார் (ஸல்) அவர்களின் அழகிய போதனைகள் அரசரிடம் எடுத்து விளக்கப்பட்டது. அரசர் மனதில் அண்ணலார் (ஸல்) குறித்த அன்பு சுரந்துவிட்டது. அப்போது சந்திரன் பிளந்த அற்புதம் பற்றி சொல்லப்பட்டது. அப்படியா! முக்கிய சம்பவம் ஏதும் நிகழ்ந்திருந்தால் அரசாங்கத் தினசரிக் குறிப்பில் பதிவு செய்துவிடுவது எங்கள் வழக்கம் என்றார் அரசர்.

அரசாங்கத் தினசரி குறிப்பு

பெருமானார் (ஸல்) காலத்தில் எழுதப்பட்ட அரசாங்கத் தினசரி குறிப்பு ஆராயப்பட்டது. குறிப்பிட்ட தேதியில் சந்திரன் இரண்டு துண்டுகளாகி பின்னர் ஒன்றாக ஆனது பற்றி அதில் எழுதப்பட்டிருந்தது.

சேரமான் முஸ்லிமாகுதல்

இதனை அறிந்ததும் சேரமான் ஸாமிரி இஸ்லாத்தின் உண்மையை உணர்ந்தார். இஸ்லாத்தைத் தழுவினார். தாம் இஸ்லாம் மார்க்கத்தை தழுவியதை மறைத்துக்கொண்டார்.*

இப்னுபத்தூத்தா

அப்துல்லாவின் மகன் முஹம்மது. இப்னுபத்தூத்தாவின் இயற்பெயர் ஆகும். இப்னுபத்தூத்தா (Ibu-Battuta) என்பது குடும்பப் பெயராகும். மொரோக்கா (Morocco) நாட்டில் டாஞ்சீர் (Tangier) என்னும் பட்டணத்தில் *24.2.1304*இல் பிறந்தவர் இப்னுபத்தூதா. மொரோக்காவில் இன்னும் இப்னுபதூதா

---

* தாரீகே இஸ்லாம், இஸ்துஸ்தான்பர் இஸ்லாமீ ஹுக்கூமத், தாரீகே இப்னு பத்தூரத்தா, தாரீகே பரிஸ்தா, அன்வாருல்குர்ஆன் தொகுதி 5. பக்கம் 4329, 4330.

என்ற குடும்பப்பெயர் காணப்படுகிறது. இவர் மறைவு (பெஸ் (Fez)) என்னுமிடத்தில் கிபி 1377 அல்லது கிபி 1368 அல்லது கிபி 1369 என்ற கருத்துக்கள் உள்ளது.

அர்ரிஹ்லத்து இப்னு பதூதா

கிபி 1325 இல் தாயகத்திலிருந்து கிளம்பிய இப்னுபதூதா தனது 21வது வயதில் புனித ஹஜ் யாத்திரையை நிறைவு செய்துவிட்டு பயணத்தைத் தொடர்ந்தார்.*

எகிப்து, சிரியா, ஈராக், பெர்சியா, அரேபியா, ஜான்சிபார் (Zanzibar) ஆசியாமைனர் (Asiaminor) கிப்பக் (Qipchaq) கான்ஸ்டாண்டின் நோபிள், குவாரிசம் (Khwarizam) புக்காரா (Bukhara) இந்தியா, மாலத்தீவு, இலங்கை, சுமத்ரா, ஏதேன், ஓமன், ஜல்யா (Zalya) மொகதீஸு (Mogadisha) எதியோப்பியா, ஆப்பிரிக்கா, கீழ்வா (Kilwa) மொசாம்பிக் (Mozambique) டெய்ரா (Deira) துறைமுகம் ஆகிய பகுதிகளுக்குச் சுற்றுப்பயணம் செய்தவர்.**

28 வருடங்கள்

இப்னுபதூதா 28 வருடங்கள் உலகில் சுற்றுப்பயணம் செய்தார். 75,000 மைல்கள் (5 மைல் 8 கி.மீ.) பயணம் செய்தார்.***

ஏழு ஆண்டுகள் பயணம்

இபுனுபதூதா இந்தியாவில் சுமார் ஏழு ஆண்டுகள் தொடர்ந்து பிரயாணம் செய்துள்ளார். இந்தப் பயணத்தினால் கிடைத்த அனுபவங்கள் இந்தியாவைப் பற்றி அறிய விரும்புபவர்களுக்கும் ஆராய விரும்புபவர்களுக்கும் அரிய விருந்தாக அமையும்.****

---

* *B.N.Luniya, Some Historians of Medieval India, Agra, 1969 Page 76.*

** *Ibu-Battua, the Travels of Ibu-Battata AD 1325-1354. Translation C.Defremery and B.R.Sanguinetti, 1958. Cambridge University Press.* இது நான்கிற்கு மேற்பட்ட தொகுதிகள் ஆகும்.

****Majid Husain, Evolution of Geographical Thought, Jaipur, 2007, Page 139.*

**** எம்.ஐ. மரைக்காயர், தமிழகத்தில் மார்க்கோபோலா, இபுனுபதூதா, சென்னை 1981, பக்கம் 22.

H.A.R. GIBB

IBN BATTUTA Travels in Asia and Africa 1325 -1354 Translated and selected by H.A.R.GIBB with An Introduction and Notes *என்ற நூல் 1929 இல் இலண்டனில் வெளிவந்தது.*

AES

ஆசியன் எஜுகேஷனல் சர்வீஸஸ் நிறுவனத்தார் 1992, 1997, 2001 இல் மறுபதிப்பு செய்தார்கள். 398 பக்கங்கள் மட்டுமே உள்ள சுருக்கப்பட்ட நூல் அது.

Good Word

குட்வேர்ட் நிறுவனத்தார் 2011இல் அதனை அப்படியே மறுபதிப்பு செய்தனர்.

L. FIETCHER

L.Fietcher Ibu Batutah is Southern India *என்னும் 25 பக்கங்களைக் கொண்ட ஆங்கிலக் கட்டுரையை எழுதியுள்ளார்.*

அர்ரிஹ்லத்து இப்னுபதூதா (Rihlah of Ibn Batutah)

(இப்னுபதூதாவின் பயணங்கள்) என்ற தமது பிரயாண அனுபவங்களை அரபியல் எழுதியவர் இப்னுபதூதா.

பிரயாண அற்புதங்கள் குறித்த அன்பளிப்பு

துஹ்ஃபத்துன் நுள்ளார் ஃபீகராயிபில் அம்ஸார் வ அஜாயிபில் அஸ்ஃபார் (Tuhfathun Nuzzaarfi Gharaibil Amsar WaAjaibil Asfar) *வாசர்களுக்கு நாடு, நகரவிசித்திரங்கள் பிரயாண அற்புதங்கள் குறித்த அன்பளிப்பு* A Present to the Readers rest range things of the cities and wonders *என்ற பெயரில் 1928இல் எகிப்து கெய்ரோவில் வெளிவந்த பயனுள்ளதும் பல வகையிலும் முக்கியமானதும்ஆன இப்னுபதூதாவின் குறிப்புகளைப் பார்ப்போம்.*

C.Defremery – Dr.B.R.Sanguninetti

இப்னுபதூதாவின் 'Voyages D' Ibn Batutah *நூலின் நான்காம் பாகம் 46வது பக்கம் முதல் 210 வது பக்கம் வரை தென்இந்தியப் பயணம் பற்றிய குறிப்புகள் உள்ளது.*

மலபார்

கடற்கரையில் **சந்தாபூரிலிருந்து (கோவா) கூலம்** *(கொல்லம்) வரையிலும் இரண்டு மாதப்பயணத்திற்கு நீண்டு கிடக்கிற மிளகு நாடாகிய மலபாரை அடைந்தோம்.* **மலபார் வழியாகச் செல்லும் வழியில் உள்ள ஊர்கள் அனைத்திலும் முஸ்லிம் வீடுகள் இருக்கின்றன.** In all the places on the road through Malabar there are Muslim Houses where their co-religion sits can alight and buy all their requirements.*முஸ்லிம் வழிப்போக்கர்கள் தங்களுக்கு வேண்டிய பொருட்களை எல்லாம் அங்கு வாங்கிக் கொள்ளலாம்.*

அபுசரூர் (பரசலூர்)

மலபாரில் இபுனு பதூதா கண்ட முதல் நகர் அபுசரூர் (Abusarur) *பரசலூர்* (Barcelore) *அங்கு முஸ்லிம்களின் முதன்மையானவர் ஷெயிக்ஜூமா* (ShaikhJum'a) *அவரை அபுசித்தா* (Abusittah) *அறுவரின் தந்தை* (Father of six) *என்று அழைக்கிறார்கள் என்கிறார் இப்னுபதூதா.*

பகனூர்

அடுத்து பகனூர் (Bakanur) *சென்றோம். முஸ்லிம்கள் வாழ்கின்றனர். ஹூசைன் உல்சலாத்* (Husain-ul-salat) *தலைவராக இருக்கிறார். அங்கு பள்ளிவாசல் உள்ளது. மங்களூர், ஹிலி, கண்ணனூர் வழியாக கோழிக்கோட்டை அடைகிறார் இபுனுபதூதா. பயணவிவரங்களை நிறுத்திக்கொண்டு அவர் குறிப்பிடும் ஒரு விஷயத்தைப் பார்ப்போம்.*

தர்மபட்டம்

ஜர்பட்டனிலிருந்த புறப்பட்டு தஹ்பட்டன் நகருக்குப் போனோம். தஹ்பட்டன், புத்பட்டன், ஜர்பட்டன் இவைகளில் வலிமைமிக்கவர் அமான் (Aman) (Oman), *பார்ஸ்* (Fars) *ஏமன்* (Yemen) *நாடுகளுகது அவரது நாட்டிலிருந்து கப்பல்கள் போய்வருகின்றன.*

தஹ்பட்டன் (Dahfattan)

ஒரு விரிகுடாவில் அமைந்துள்ளது தஹ்பட்டன். இதனை தர்மபட்டம் (Dhamapattam) *என்று யூல்* (Yule) *கருதுகிறார். 500 அடி நீளம் 300 அடி அகலம் கொண்ட குளம் உள்ளது. இதன் சுவர் முகப்புகள் சிவப்பு நிறக்கல்லால் ஆனது. நான்கு*

பக்கமும் கல்லினால் கட்டப்பட்ட 28 கவிகை மடங்கள். ஒவ்வொன்றிலும் நான்கு நான்கு கல்லினால் செய்யப்பட்ட இருக்கைகள். (அதாவது ஒழுச் செய்யுமிடம்) குளத்திற்கு எதிரில் பெரிய பள்ளிவாசல். பள்ளிவாசலிலிருந்து குளத்திற்குள் இறங்கி கை, கால், முகம் கழுவி (ஒழுச்செய்திட) ஏற்றவாறு படிகள் அந்தப் பள்ளிவாசலைக் கட்டிய முன்னோர் ஒருவர் இஸ்லாத்தைத் தழுவியவர் என்று இபுனுபதூதா குறிப்பிடுகிறார்.

திரக்தீ மரம்

பள்ளிவாசலுக்கு அருகில் அதிசய மரம், அதில் பச்சை இலைகள், அத்திமரத்து இலைகளைப் போல இருந்தன. அந்த மரத்தை திரக்தீ – ஷஹாதத் (சான்று மரம்) Dirakht-i-sshahadat (the tree of testimony) என்று அழைத்தனர்.

இறைவனைத் தவிர வேறு இறைவன் இல்லை

இலையுதிர்காலத்தில் அந்த மரத்தின் பச்சை இலைகள் மஞ்சள் நிறமாகி பின்னர் சிவப்பாகி மாறி கீழே விழும். அந்த இலையின்மீது **இறைவனைத் தவிர வேறு கடவுள் இல்லை. அண்ணல் முஹம்மது (ஸல்) இறைவனின் தீர்க்கதரிசி** என்று எழுதப்பட்டிருக்கும். இதனை

'There is no god but God, and Muhammad is the prophet of God' என்று ஆங்கிலத்தில் கே.ஏ.நீலகண்ட சாஸ்திரி தனது தென்னிந்தியாவைப் பற்றிய வெளிநாட்டவர் குறிப்புகள் நூலின் பக்கம் 240இல் குறிப்பிட்டுள்ளார்.

கோயலின் முன்னோர்

இந்தப் பள்ளிவாசலைக் கட்டியவர் கோயலின் (Koyal) முன்னோர்களில் ஒருவர் என்று தர்மபட்டத்திலுள்ள இறையியல் வல்லுநரான ஹூசைன் (Husain) தெரிவித்தார். ஹூசேன் தவிர வேறு சிலரும் அந்த இலையையும் அதிலிருந்த வாசகத்தையும் தாங்கள் கண்டதாக என்னிடம் தெரிவித்தார்கள் என்கிறார் இபுனுபதூதா.

நோய் நீக்கும் இலை

அந்த இலை உதிர்கின்ற காலம் வரும்போது முஸ்லிம்கள், முஸ்லிம் அல்லாதவர்கள் அந்த மரத்தின் அடியில் அமர்ந்து காத்துக் கொண்டிருப்பர். இலை கீழே விழுந்ததும், துண்டாக்கி

அதனை எடுத்து இரண்டு கூறாக்கி ஒன்றினை முஸ்லிம்கள் வைத்துக் கொள்வார்கள். மற்றதை அரசருடைய கருவூலத்தில் வைத்துக் கொள்வார்கள். அந்த இலையை நோய் நீக்கத்திற்குப் பயன்படுத்தினார்கள் என்று கூறுவதை நான் கேள்விப்பட்டேன் என்று இபுனுபதூதா குறிப்பிடுகிறார்.*

கோயலின் பாட்டன் இஸ்லாத்தில்

கோயலின் பாட்டனுக்கு அரபுமொழி தெரியும். இலையின் மீது எழுதப்பட்டிருந்த வாசகத்தை வாசித்தறிந்து இஸ்லாத்தைத் தழுவினார். இம்மியும் பிசகாது நடந்தார். அவரது மகன்களில் திரும்பவும் இஸ்லாத்தை விட்டு விலகினார். அதிசய மரத்தை வெட்டினார். ஆனால் மரம் மீண்டும் உயிர்பெற்று வளர்ந்து பழைய நிலையை அடைந்தது. இது கே.ஏ.நீலகண்ட சாஸ்திரியார் நூலில் வரும் தகவல் அது மட்டுமா?

Buzurg Ibu Shabriyar

இலண்டனில் இருந்து 1928இல் வெளிவந்த 'மார்வெல்ஸ் ஆப் இந்தியா' மான்கியருக்கு (Mankir) அருகில் அயக்கியா (Atakia) என்னும் இடத்தில் ஒரு மரத்தைக் கண்டேன். அதன் அடிமரம் கெட்டியாயிருந்தது. பார்ப்பதற்கு அது வாதுமை Walnut மரம்போல இருந்தது. **அதில் பூத்த சிவப்பு ரோஜாப் பூக்களில் Red roses இதனுடைய இலைகளில் (Or leaves) இறைவனைத் தவிர வேறு இறைவன் இல்லை. முஹம்மது (ஸல்) அவருடைய தீர்க்கதரிசி என்று வெள்ளைநிற எழுத்தில் எழுதப்பட்டிருந்தது.****

இபுனுபதூதாவின் குறிப்புக்களிலிருந்து அவர் மலபார் பகுதிக்குச் செல்வதற்கு பல தலைமுறைகளுக்கு முன்னரே பலர் இஸ்லாத்தைத் தழுவியதையும் அதிசயங்கள் நிகழ்வதையும் அரபி மொழி அறிந்திருப்பதையும் தெள்ளத்தெளிவாக விளக்கி இருக்கிறார்.

---

* கே.ஏ. நீலகண்ட சாஸ்திரி, தென்னிந்தியாவைப் பற்றிய வெளிநாட்டினர் குறிப்புகள் பக்கம் 399.

** *Buzurg Ibn Shahriyar, The Book of the Marvels of India, English Translation by L.Marcel Devic, The Goiden Dragon Library, London, 1928, Page 146.*

பெரிஷ்டா

Translated from the original Persian of Mohamed Kasim Ferishta History of the Rise of the Mohamedan Power in India Till the year AD 1612 with copious notes in four volumes by John Briggas M.R.A.S. Lietatenant – colonel in the Madras Army *என்ற நூல் 2006இல்*

வால்யூம் I 360 பக்கங்கள்
வால்யூம் II 352 பக்கங்கள்
வால்யூம் III 328 பக்கங்கள்
வால்யூம் IV 423 பக்கங்கள்

மொத்தம் 1463 பக்கங்கள். டில்லி ஆதம் பப்ளிஷர்ஸ் வெளியீடு.

முஹம்மது காசிம் பெரிஷ்டா

முகம்மது காசிம் ஷா (Mohomed Kasim Hindooshah) *வின் மற்றொரு பெயர் பெரிஷ்டா* (Ferishta) *பெர்சிய வரலாற்றாய்வாளர், 1570 இல் பிறந்தார். (1550இல் பிறந்தார் என்ற கருத்தும் உள்ளது) 1612இல் மறைந்தார் (1623இல் மறைந்தார் என்ற கருத்தும் உள்ளது)*

அலெக்சாந்தர் டௌவ்

வரலாற்றாசிரியர் அலெக்சாந்தர் டௌவ் (Alexander Dow) *1768-1772 ஆம் ஆண்டுகளில், மூன்று தொகுதிகள் பெரிஷ்டாவின் நூலை* 'The History of Indostan' *என்று வெளியிட்டார்.*

ஜொனாதன் ஸ்காட்

வரலாற்றாசிரியர் ஜொனாதன் ஸ்காட் (Jonathan Scott) *அதைத் தொடர்ந்து* History of the Dekkan *என்று 1794இல் இரண்டு தொகுதிகளை வெளியிட்டார்.*

சர்ஜேம்ஸ் மெக்கின்டிஷ்

பெரிஷ்டாவின் நூல்கள் இவ்வாறு வெளிவந்ததில் விருப்பமில்லாத சர்.ஜேம்ஜ் மெக்கின்டிஷ் (Sir James Mackintosh) *ஜான்பிரிக்ஸை அழைத்தார்.*

கர்னல் ஜான் பிரிக்ஸ்

Colonel John Briggs *கர்னல் ஜான்பிரிக்ஸ் 20 ஆண்டுகள் மொழிபெயர்த்து 1829 இல் பெரிஷ்டாவின் நூலை வெளியிட்டார்.*

கல்கத்தா காம்பிரே

1908இல் கல்கத்தா காம்பிரே (R. Cambray 8 Co) *இதனை மறுபதிப்பு செய்தது. அந்த நூல் 2006இல் புதுதில்லி ஆதம் பப்ளிஷர்ஸரால் மீண்டும் பதிப்பாயிற்று.*

நான்காம் தொகுதி

பெரிஷ்டாவின் நூலின் இறுதியில் கடைசி அதிகாரத்தில் Chapter XI Some Accounts of the Mahomedans in Malabar *என்ற தலைப்பில் 305வது பக்கம் முதல் 312வது பக்கம் வரை மலபாரில் முஸ்லிம்கள் என்ற தலைப்பில் பெரிஷ்டா எழுதியுள்ளார். அந்த நூல் பக்கம் 305இல் கிறிஸ்தவர்களும், யூதர்களும் மலபார் ராஜ்யத்திற்குள் வியாபாரிகளாக வந்தார்கள் என்று இஸ்லாமியரின் நம்பிக்கை இருக்கிறது.*

சாமுரி

மலபாரின் மன்னர் சாமுரி (Samiry) *என்று அழைக்கப்படுகிறார்.*

Some vessels from Arabia having Mahomedans on board, going on a Pilgrimage to the foot steps of Adam, on Island of selandeep (Ceylon) which is also called Lunka. Were driven into the port of cranganore, where the samiry Raja resided. This prince received the strangers with hospitality and was so pleased with the society of some holy men who were among the pilgrims, that having enquired respecting the Mohamedean faith, **he became a convert** and leaving his kingdom. Went to Mecca and died in one of the Ports of the Red sea. Before his death, he wrote to his representative in Malabar to receive the Mahomedans in future. With hospitality, and permit them to settle and build masjids.

This communication was written in the language of Malabar. Whose ruler hence forwards assumed the title of Samiry. In consequence of this letter the Mahomedeans were treated with kindness by the reigning prine, who worte to the governors of his districts in these words:

"Whereas Mullik the son of Hubeeb, and certain other Mahomedans, have come to visit this our country, and intend residing among us, it is our royal or det agreeably to the imperial command of the late Samiry, that wherever the said, Mullik or any of his tribe wish to reside, ground shall be allotted to them, in order to build either habitations or places of worship"

Mullik first settled at cranganore, where he built a masjid, and cultivated some garden land; after wards, having gone farther into the country, he established a colony of Mahomedans in the town of Quilon. There he went to hurry puttan, Daraputtan, Mundra, Jay-Fakoor, Managalore and Kalinjunkote (Many of these place are either erroneously written in any Ms., or they have changed their names)

In each of which towns he built masjids and established moollas to preach the true faith.

Mullik

I Colculde that Mullik the son of Habeeb, was also of the same faith. From this period, the Mahomedans extended their religion and their influence in Malabar and many of the princes and inhabitants be coming coverts to the true faith, gave over the managements of some of the sea ports to the strangers, whom they called nowwyits (Literally, the New Race).*

ஆதம் பாதம்

இலங்கைக்கு ஆதிபிதா ஆதம் (அலை) அவர்களது பாதத்தை தரிசிக்க வந்த அரேபியர்கள் மலபாரில் சாமுத்திரி மன்னரைச் சந்தித்ததும், மன்னர் அவர்களை அன்போடு உபசரித்தும், அவர்கள் மன்னரிடம் இஸ்லாம் பற்றி எடுத்துரைத்ததும், மன்னர் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டதும் பின்னர் புனித மக்கா சென்றதும், வழியில் இறந்ததும், இறப்பதற்கு முன் மலபாரிலுள்ள தனது அரசப் பிரதிநிதிகளுக்கு தனது

**John Briggs, History of the Rise of the Mohamdean powet in India till the year 1812. Translated from the original Persian of Mohamed kaslm, Ferishta 2006, Newdelhi, Volume III, Page 305-306.*

ஆணையிட்ட கடிதம் கொடுத்ததும், கடிதம் கொண்டு வந்த மாலிக் தான் பின்பற்றும் இஸ்லாம் மார்க்கத்தை பரப்பிடவும், ஏக இறைவனை வழிபட பள்ளிவாசல்கள் அமைத்திடவும் அனுமதி அளித்ததும், அவ்வாறே மாலிக் செய்ததும், கிராங்கனூரில் (கொடுங்கள்ளூரில்) பள்ளிவாசல் அமைத்ததும், தொடர்ந்து பல இடங்களில் பள்ளிவாசல்கள் அமைத்ததும், பல இளவரசர்கள் தொடர்ந்து இஸ்லாத்தைத் தழுவியதையும் பெரிஷ்டா குறிப்பிட்டுள்ளார்.

குலாம் ரசூல்

சந்திரன் பிளவுண்டதைத் தாம் கண்ணால் கண்டதாக கேரளாவிலுள்ள கள்ளிக்கோட்டையை ஆண்டு வந்த சேரமான் பெருமான் என்ற அரசர் தம் நாட்குறிப்பில் எழுதிவைத்துள்ளார்.

நீல் ஆம்ஸ்ட்ராங்

சந்திர மண்டலத்தில் முதன்முதலாகக் காலடி எடுத்துவைத்த விண்வெளிவீரர் நீல் ஆம்ஸ்ட்ராங் கூட சந்திரன் பிளவுண்டு பிறகு இணைந்ததற்கு அடையாளமாகயிருந்த ஒரு நீண்டவெடிப்பைக் கண்டுபிடித்துள்ளார்.*

யா. பெரல்மான்

வானவியலின் சிறந்த விஞ்ஞானச் சாதனைகளையும் மிக முக்கிய நிகழ்ச்சிகளையும் ரஷ்ய எழுத்தாளர் யா. பெரல்மான் **‘பொழுதுபோக்கு வானவியல்’** என்றநூலைத் தந்துள்ளார். அதனை சோ. வேங்கடசுப்பிரமணியன் மொழி பெயர்த்துள்ளார்.

சந்திரன் பிளவு

‘நேரானசுவர்’ என்ற பெயரில் ஒரு செங்குத்தான சுவர் சந்திர வெளியை இருபிரிவுகளாகப் பிரித்துக் கொண்டு நிற்கிறது. ஆனால் அருகே சென்று பார்த்தால் அதன் கம்பீரத்தைக் கண்டு ஆச்சரியத்தில் மூழ்கிவிடுவோம். இச்சுவரை அதன் கீழ் நின்று பார்த்தால் எவ்வாறு தோன்றும் என்று படம் மூலம் காட்டியிருக்கிறார்.

---

* குலாம் ரசூல், அண்ணல் முஹம்மது நபி சரிதை, புதிய பாணியில், தஞ்சாவூர், 1997, பக்கம் 129. ஸீரத்தே முஸ்தபா என்ற உருது நூலைத் தழுவி எழுதிய சரிதை இது.



தொலைநோக்கி வழியே சந்திரனில் தெரியும் "நேரான சுவர்"



சந்திரனில் "நேரான சுவரின்" அடிவாரத்தில் நின்று பார்ப்பவருக்கு அது தோன்றும் விதம்

அது தொடுவானம் வரை நீண்டிருக்கிறது. 100 கி.மீ. நீளமல்லவா? தொலைநோக்கியில் இலேசான பிளவுகள் போன்று காண்பவை எவ்வளவு ஆழமான பெரிய பள்ளங்களாக



ஒரு சந்திர "வெடிப்பின்" விளிம்பில்

இருக்கும் என்பதைக் காட்டுகிறது. சந்திரன் பிளவுபட்டதை விஞ்ஞானமும் அறிவியலும் உறுதிப்படுத்துகிறது.*

சந்திரன் பிளவுபட்ட அற்புதத்தை இந்தியாவில் மலையாளத்தில் சேரமான் என்னும் அரசர் கண்டு விசுவாசங் கொண்டு இலங்கைக்குச் சென்று திரும்பிய முஸ்லிம்களுடன் சென்று அங்கு இறந்துவிட்டதாகவும் கூறப்படுகிறது.

ராஜாபோஜ்

இதைபோன்று அண்ணலார் (ஸல்) சந்திரனைப் பிளந்து காட்டிய அற்புதத்தை மாளவ நாட்டில் தஹார் அரசர் ராஜாபோஜ் என்பவர் பார்த்தார்; பின்னர் இஸ்லாத்தில் விசுவாசம் கொண்டார்.**

---

* யா. பெரெல்மான், பொழுதுபோக்கு வானவியல், தமிழாக்கம் சோ. வெங்கடசுப்பிரமணியன், புரோகிரஸ் பதிப்பகம், மாஸ்கோ, ஆண்டு இல்லை, பக்கம் 100, 101. (நூல் மொத்தம் 269 பக்கங்கள்)

**ஸையித் இப்ராஹீம், முஹம்மது நபி, திருச்சிராப்பள்ளி, 1973, பக்கம் 391. (நூல் மொத்தம் 683 பக்கங்கள்) அருட்திரு அஜ்மாவுர் ரிஜால் பாஸ் வொர்டு நூல்களைத் தழுவி எழுதப்பட்ட நூல்.

புரவலர் போர்த்திய பொன்னாடை

'புர்தா ஷரீஃப்னி' *தமிழ் விரிவுரைப் பேரிலக்கியம் என்னும் தலைப்பில்* **புரவலர் போர்த்திய பொன்னாடை** *எனும் நூல் 1984இல் 1056 பக்கங்களில் வெளிவந்தது.*

என்.எஸ்.என். முஹம்மது அப்துல் காதிர்

கூடலூர் உத்தமபாளையம் ஆலிம் பன்னூலாசிரியர் என்.எஸ்.என். முஹம்மது அப்துல் காதிர் தமிழாக்கம் செய்த நூல் அது.

ஷர்புத்தீன் முஹம்மதுனில் பூஸிரி

எகிப்து நாட்டைச் சேர்ந்த அல்லாமா ஷர்புத்தீன் முஹம்மதுனில் பூஸிரி (ரஹ்) எழுதியது. அக்காவியம் 165 கண்ணிகளைக் கொண்டது.

75வது பாடல்

அண்ணலாரின் ஆணையால் பிளவுபட்ட சந்திரனில் இறைவன் மீது களங்கமில்லா உண்மை நிலையில்

*சத்தியமிட்டுச் சொல்கிறேன்! இந்தச் சந்திரனுக்கும் இனிய நபிகளாரின் (ஸல்) இதயத்திற்கும் மத்தியில் பிளவுக்குப் பின் தடயமின்றி இணைந்துவிட்ட விஷயத்தில் ஒரு உவமைப் பொருத்தம் நிச்சயமாக இருக்கிறது.**

பத்ஹுல்பாரீ

ஹதீதுக்கலை நிபுணரான இப்னுல்ஹஜர் (ரஹ்) தனது ஆய்வுப் பெருநூலான **'பத்ஹுல்பாரீ'** *யில் அண்ணலார் (ஸல்) சந்திரனைப் பிளந்து காட்டிய நிகழ்வை விவரித்துள்ளார்.*

அபூ இஸ்ஹாக்கில் ஸஜ்ஜாஜ்

ஹதீதுக்கலைத் திறனாய்வாளர் அபூஇஸ்ஹாக்கில் ஸுஜ்ஜாஜ் அண்ணால் நபி (ஸல்) காலத்தில் சந்திரன் பிளந்தது பற்றி 'கதஇ' (நிச்சயமான விபரம்) என 19 சான்றுகளைக் காட்டுகிறார்.

---

* *ஆலிம் கவிஞர் தேங்கை மிஸ்பாஹி, கன்னித் தமிழில் கஸீதத்துல் புர்தா, சென்னை, 2001, பக்கம் 45.*

ஷரஹஷ் ஷரீப்லில் மவாகிப்

இப்னு மஸ்ஊது (ரலி) என்ற நபித்தோழர் அண்ணலார் (ஸல்) சந்திரனைப் பிளந்தது பற்றிச் சொல்லியிருப்பதால் **'முத்தவாகிர்'** என்ற முதல் ரகத்தைச் சேர்ந்த நபி (ஸல்) பொன்மொழி இது என 'ஷரஹுஷ் ஷரீப்பில் மவாகிப்' என்ற ஹதீதுக்கலைத் திறனாய்வுக் கிரந்தத்தில் கூறப்பட்டிருக்கிறது.

சந்திரன் பிளந்ததைப் பார்த்ததற்கு கேரள நாட்டின் அதிபதியாயிருந்த சேரமான் பெருமாள் சாட்சியாக உள்ளார்.*

ஈதுமீலாதிந் நபவிய்யிசபை

கூந்தநல்லூர் ஈதுமிலாதிந் நபவிய்யிசபை கஸீதத்துல் புர்தாஹ் 1991இல் வெளியிட்டது. அதில் சந்திரன் பிளந்த அற்புதத்தை பக்கம் 122, 123இல் ஸுரத்துன் நபி நூலில் இருந்து சான்று காட்டி குறிப்பிட்டுள்ளது.

ம.கா.மு.காதிர் முஹ்யித்தீன் மரைக்காயர்

1960இல் மதுரையில் இருந்து கவிதை வடிவில் கஸீதத்துல் புர்தாஹ் மாலையை நூலாக வெளியிட்டவர் ம.கா.மு.காதிர் முஹ்யித்தீன் 'பிளவுண்ட சந்திரன் மேல் பிரமாணமால் அதற்கே தெளிவுண்ட நாதர் நெஞ்சம்' தனக்கும் ஒரு சேர்க்கையுண்டே என்று பாடியுள்ளார்.

துஹ்ஃபதுல் முஜாஹிதீன்

பதினாறாம் நூற்றாண்டில் அரபு மொழியில் எழுதப்பட்ட நூல் துஹ்ஃபதுல் முஜாஹிதீன் Tuhafat al-Mujahidin, A Historical Epic of the sixteenth century.

ஷெய்கு ஸைனுத்தீன் மக்தூம்

ஏமன் நாட்டு மக்தூம்களின் வம்சாவளியில் பிறந்தவர் ஷெய்கு ஸைனுத்தீன் மக்தூம் (Shaykh Zainudin Makdum) இவரது முன்னோர் கேரளம் பொன்னானியில் குடியமர்ந்து இஸ்லாம் பரவப் பெரும் பங்காற்றியவர்கள். ஷெய்கு ஸைனுத்தீன் மக்தூம் எழுதிய வரலாற்று நூல்தான் துஹ்ஃபதுல்

---

* புரவலர் போர்த்திய பொன்னாடை நான்காம் பதிப்பு, 1990, சென்னை பக்கம் 470-471.

முஜாஹிதீன். வீரத்தியாகிகளின் வெற்றிக்குச் சமர்ப்பணம் அல்லது போராளிகளின் காணிக்கை என்று பொருள்படும்.

லெப்டினெண்ட் எம்.ஜெ. ரவ்லண்ட்சன்

1833இல் இந்த நூலினை லெப்டினென் எம்.ஜே. ரவ்லண்ட்சன் (M.J. Rowlandson) மொழிபெயர்த்தார். ஆனால் அதற்கு முன் அரேபியர்கள் இந்த நூலை மறந்துவிட்டனர். அதனை யாரும் படித்தறியவும் இல்லை.

இலண்டனில் இந்திய ஆபீஸில்

இந்த நூலின் பிரதி இலண்டன் இந்திய ஆபீஸ் நூலகத்தில் உள்ளது. (London, India office Library)

ஜே.எல்.காக்ஸ்

இலண்டன் ஜான் முராரியின் John Murrary) ஆலன் கம்பெனியால் (Allen & Co) வெளியிட்ட இந்த நூல் ஜே.எல். காக்ஸ் அண்ட் சன்ஸால் அச்சிடப்பட்டு 1833இல் வெளிவந்தது.

ஹக்கிம் சம்சுல்லா காதிரி

ஹைதரபாத்தைச் சேர்ந்த ஹக்கிம் சம்சுல்லா காதிரி Hakim Shamsullah Qadiri இந்த நூலின் அரபுப்பிரதியை 1931இல் தக்காணத்தில் (Deccan) வெளியிட்டார். இதில் நூலின் பல பகுதிகள் விடுபட்டிருந்தது.

எஸ். முஹம்மது ஹுசைன் நயினார்

சென்னைப் பல்கலைக்கழகத்தின் அரபு, பார்சி, உருது ஆகிய மொழிகளின் துறைத்தலைவராகப் பணியாற்றியவர் எஸ்.முஹம்மது ஹுசன் நயினார். இவர் 1939இல் இலண்டன் சென்றார். அங்கு பல ஆண்டுகள் தங்கியிருந்தார். தனது முனைவர் பட்டத்தையும் பெற்றார்.

Thufat – al- Mujahidin

By Dr. S.Muhammad Husain Nainar

In this number of the Annals of oriental Research the remaining twelve sections of the fourth chapter of Tuhfat – al- Mujahidin have been published. The earlier portions of the text had been published in Volume X Part I of the Annals.

சென்னைப் பல்கலைக்கழகம்

சென்னைப் பல்கலைக்கழக இதழில் டாக்டர் மு. முஹம்மது ஹுசைன் நயினார் *1952 – 1953* வால்யூம் *10* பாகம் II முதல் துஹ்பத்துல் முஜாஹிதீன் அரபியில் உள்ளபடி வெளியிட்டுள்ளார். அது தொடராக வெளிவந்துள்ளது. அந்த இதழின் முகப்புப் பக்கம் இதோ;



ANNALS

OF

ORIENTAL RESEARCH

UNIVERSITY OF MADRAS

Editor-in-chief

Sri M. Mariappa Bhat

Editorial Board

Sri R. P. Sethu Pillai | Dr. S. K. Nayar
Sri N. Venkata Rao | Dr. V. Raghavan
Dr. S. Muhammad Husain Nainar
Sri S. Shankar Raju Naidu

1953

துஹ்ஃபதுல் முஜாஹிதீன்



الفصل الثالث فی مصالحة السامری الافرنج و بنائهم القلعة فی کالیکوت

و ذالک انه لما طال زمان المحاربة و اشتد ضعف المسلمین ومات السامری الذی کان صرف الاموال الجزیلة فی حروبهم و تولی اخوه رای ان المصلحة صلحهم لتحصل لرعایاه المسلمین التجارة کما حصلت لاهل کشی و کننور و یزول ضعفهم و فقرهم فصالحهم و اذن لهم فی بناء القلعة فی کالیکوت بشرط تمکین رعایاه من تسفیر اربعة مراکب الی برالعرب جدة و عدن فی کل عام فشرع الملاعین فی بناء القلعة باستحکام و شرع رعایاه فی تسفیر اربعة مراکب الی بر العرب بالفلفل و الزنجبیل و السفر للتجارة الی جزرات وغیرها باوراقهم کغیرهم وکان ذالک سنة عشرین او احدی و عشرین و تسعمائة .

فلما رجعت المراکب الاربعة الی کالیکوت و تم بناء قلعتهم منعوهم من سفر برالعرب و من تطلیع الفلفل و الزنجبیل فی المراکب و جعلوا تجارتهما خاصة بهم حتی اذا راؤا شیئا منهما فی مرکب اخذوه مع مافیه من الاموال و النفوس وکان یصدر منهم الظلم و الایذاء للمسلمین وغیرهم و السامری مقیم علی صلحهم صابر علی ایذائهم خوفاً من شرورهم و مع هذا کان یراسل سلاطین المسلمین خفیة فی الحث علی التجهیز لمحاربتهم فلم یجد شیئاً لما لم یرد الله تعالی وهم لعنهم الله اهل مکر و خدیعة عارفون بمصالح امورهم فیتذللون لاعدائهم وقت الحاجة غایة التذلل و اذا انقضت سلطوا علیهم بکل ممکن و کلهم علی کلمة واحدة لایخالفون امر کبراءهم مع بعد المسافة عن رعاتهم و قلما یصدر بینهم الاختلاف ولم یسمع ان احداً منهم قتل کبیرهم لاجل الولایة و لذا دانت لهم مع قلتهم رعاة ملیبار وغیرها بخلاف ما علیه عساکر المسلمین و امراءهم من الاختلاف و طلب الاعتلاء علی الغیر ولو بقتله .

A.—5

H.A.R.Gibb

இரண்டு ஆண்டுகள் இலண்டனில் தங்கியிருந்து, இந்தியா, ஆபீஸ் நூலகத்தையும் இதர ஆய்வகங்களையும் பார்வையிட்டு எஸ். முஹம்மது ஹுசைன் நயினார் தனது டாக்டர் பட்ட ஆராய்ச்சியைத் H.A.R. Gibb *வழிகாட்டுதலுடன் தொடர்ந்தார்.*

ஈ. டென்னிசன் ரோஸ்

சர் ஈ. டென்னிசன் ரோஸ் (E.Denison Ross) *தலைமையில் ஆக்ஸ்போர்டு பல்கலைக்கழகத்தில் பணியாற்றினார்.*

ஏ.எஸ். டிரைட்டன்

பேராசிரியர் ஏ.எஸ். டிரைட்டன் (Tritten)) *பேருதவி புரிந்தார்.*

செல்வி முராரி புரவ்ன்

இலண்டன் Oriental Studies *நிலைய நூலகர் செல்வி முராரி பிரவ்ன்* Miss O.Murray Browne *உதவிகள் செய்தார்.*

1942 ஜனவரி 15

தாயகம் திரும்பி சென்னைப் பல்கலைக்கழகத்தில் பணியாற்றிய எஸ். முஹம்மது ஹுசைன் நயினார் இரண்டு அரிய நூல்களை 1942 ஜனவரி 15இல் வெளியிட்டார்.

சென்னைப் பல்கலைக்கழக வெளியீடு

சென்னைப் பல்கலைக்கழக இஸ்லாமிய நூல் வரிசை எண் 5 Tuhfat – Al – Mujahidin An Historical work in Arabic Language Translated in to English by *எஸ். முஹம்மது ஹுசைன் நயினார் இந்த நூல் 112 பக்கங்களைக் கொண்டது.*

சென்னைப் பல்கலைக்கழக வெளியீடு 6

Arab Geographers Knowledge of Southern India (The Knowledge of India Possessed by Arab Geographers Down to the 14th Century AD with Special Reference to Southern India) *என்ற நூல் அதே 1942 ஜனவரி 15இல் சென்னைப் பல்கலைக்கழக இஸ்லாமிய நூல் வரிசை எண் ஆறாக 241 பக்கங்களில் வெளிவந்துள்ளது. இவ் இரு நூல்களில் சேரமான் பெருமான் சந்திரன் பிளவுபட்டதைப் பார்த்ததையும், இஸ்லாத்தை ஏற்றதையும் விரிவாகக் காணலாம்.*

இஸ்லாமிக் புக் டிரஸ்ட் கோலாலம்பூர்

Islamic Book Trust Kulalumpur *இந்த நூலை 2006இல் திரும்பவும் வெளியிட்டது.*

Other Books கள்ளிக்கோட்டை

கோழிக்கோடு அதர்புக்ஸ் நிறுவனத்தாரும் Calicut Farook College *முதுநிலைப் பட்டப்படிப்பு பழைய மாணவர்கள் சார்பில் இணைந்து இந்த நூல் 111 பக்கங்களில் வெளியாயிற்று.*

அடையாளம்

திருச்சி புத்தாநத்தம் அடையாளம் நிறுவனத்தார் 2009இல் இதனைத் தமிழ்ப்படுத்தி வெளியிட்டனர்.

ஷாகிர் அஸீம்

ஷாகிர் அஸீம் ஆங்கிலத்திலிருந்து இந்த நூலை தமிழில் மொழிபெயர்த்து 175 பக்கங்களில் வெளியிட்டார். நூல் வரலாறு போதும் என்று நினைக்கிறேன். நூலில் உள்ள விஷயங்களுக்கு வருவோம்.

யூதர்கள் - கிறிஸ்தவர்கள்

ஷெய்கு ஸைனுதீன் மக்தூம் History of the Advent and spread of Islam in Malabar *என்ற தலைப்பில் எழுதியதில் சில பகுதிகள்*

கிறிஸ்தவ, யூதர்கள் அடங்கிய குழு தத்தம் குடும்பத்தாருடன் மலபாரின் பட்டினமான கொடுங்களூருக்கு பெரிய கப்பலில் வந்து இறங்கினர். அக்காலத்தில் கொடுங்களூரே அரசரின் ஆட்சித் தலைமையகமாக இருந்தது. யூத, கிறிஸ்தவக் குடும்பத்தினர் கொடுங்களூர் அரசரிடமிருந்து தோப்புகள், நிலபுலங்கள், வீடுகள், சொத்துக்கள் என மானியமாகப் பெற்று அங்கே வாழ்ந்து வந்தனர்.

கொடுங்களூர் (Kodungallur)

முச்சிரா (Muchira) *முசிரீஸ்* (Musiris) *மஹோதயபுரம்* (Mahodayapuram) *என்று பல்வேறு பெயர்களால் கொடுங்களூர் வழங்கி வந்தது. திருச்சூர்* (Trichur) *மாவட்டத்தில் உள்ள ஊர் அது.*

யூதர்கள்

இங்கு கிறிஸ்தவர்களும், யூதர்களும் ஒன்றாக வரவில்லை. ஜெருஸேலத்தின் வீழச்சிக்குப் பிறகு யூத மதகுரு ரப்பீஜோசப் (Rabbi Joseph) தலைமையில் யூதர்கள் அகதிகளாக கொடுங்களூர் வந்தார்கள். யூதர்கள் எப்போது, எங்கிருந்து இங்கு வந்தார்கள் என்பன குறித்து எந்த முடிவையும் திட்டவட்டமாக எடுத்திடல் இயலாது.

சாலமோன் அரசர் (நபி சுலைமான் (அலை)) அவர்கள் காலத்தில் இது நிகழ்ந்ததாகச் சிலர் கருதுகின்றனர்.

கிறிஸ்தவர்கள்

கிறிஸ்தவர்கள் கொடுங்களூருக்கு முதலில் வந்தது கி.பி.52 இல் என்பதனை நிரூபிப்பதற்கு ஏராளமான சரித்திரச் சான்றுகள் உள்ளன.

இந்தியாவில் தோமையர்

'இந்தியாவில் தோமையர்' என்னும் நூல் 1912இல் வெளிவந்தது. பாப்பரசரின் இந்தியத் தூதுவராக 1892–1916 வரையில் பணியாற்றிய டாக்டர் எல்.ஸாலங்கி பல்வேறு வரலாற்றுச் சான்றுகளின் அடிப்படையில் அந்த நூலை எழுதியுள்ளார். அந்த நூலில் புனித தோமையருக்கும் மயிலாப்பூருக்கும் இருந்த தொடர்பை நிலைப்படுத்துகிறார்.*

மயிலை நகரின் திருத்தொண்டர் தாமஸ்

சென்னை – மயிலை மறைமாவட்டத் தலைமைக்குழு ஏ.பெரைரா – டி – ஆண்டர்டு (A.Pereirah De Anderd மயிலை நகரின் திருத்தொண்டர் தாமஸ் The Apostle St.Thomas in the city of Mylapore எனும் நூலில் கி.பி.1293க்கும் 1711க்கும் இடைப்பட்ட காலத்தில் உள்ள பல்வேறு சரித்திரச் சான்றுகளைக் கொண்டு புனித தோமையர் இந்தியாவிற்கு வந்ததை நிலைநிறுத்துகிறார்.**

---

* L.M.ZALESKY, The Appostle St. Thomas in India, History, Traditian and Legend, Mangalore, Kodiabail Press, 1912.

** முனைவர் சூ. இன்னாசி, கிறிஸ்தவரும் தமிழகமும், சென்னை 1990, பக்கம் 4,5

இந்தியாவும் தோமையரும்

எல்லா நாடுகளிலும் நற்செய்தியைப் பரப்புங்கள் என்றுகூறிய இயேசுவின் (ஈசா (அலை) கட்டளையை ஏற்று திருவுளச்சீட்டு (Casting Lost) முறையில் கிறிஸ்துவத்தை அறிவிக்க இந்தியாவுக்கு வந்த முதல்வர் தோமையர் ஆவார்.*

திருத்தொண்டர்களின் போதனை

சிரியாக்கு மொழியில் கி.பி.2ஆம் நூற்றாண்டில் எழுதப்பட்ட அப்போஸ்தலர்களின் போதனை (திருத்தொண்டர்களின் போதனை) என்னும் நூலின்மூலம் தோமையர் இந்தியாவிலிருந்து கடிதங்கள் எழுதினார். அவை பல்வேறு குழுக்களினால் படிக்கப்பட்டன என்பதை அறியமுடிகிறது.**

The Acta Thomae என்ற எடிசா (Edessa) தொகுத்த நூலும் இதனை உறுதிப்படுத்துகிறது.***

நூற்றாண்டுகளாக

கி.பி.3ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் எழுதப்பட்ட **'புனித தோமையரின் திருப்பணிகள்'** நூலினாலும், கி.பி.4ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த **தூய எபிரேம்** எழுதிய திருப்பாடல்களினாலும் நான்காம் நூற்றாண்டில் வாழ்ந்த **தூய அம்புரோஸ், தூய எரோணிமுஸ்** ஆகியோர் கூற்றுக்களிலிருந்தும் கி.பி.5ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த பிரேசிய நகர் ஆயர் புனித **கவுதன்சியுஸ்** குறிப்புகளாலும், கி.பி.6ஆம் நூற்றாண்டில் தூர்ஸ்நகர் ஆயர் **கிரகோரி** எழுதிய குறிப்புகளாலும், கி.பி.8ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த தூயபீட் குறிப்புகளாலும் புனித தோமையர் இந்தியாவில் மதப்பிரசாரம் செய்தது உறுதிப்படுத்தப்படுகிறது. **'வேதசாட்சிகளின் பட்டியல்கள்'**

---

* டாக்டர் ஜான்மேரி, கிறிஸ்தவப் பாரம்பரியப் பாடல்கள், சென்னைப் பல்கலைக்கழகம் அறிஞர்பட்ட ஆய்வேடு, 1987, பக்கம் 10.

**இரா. அருளப்பர், சென்னை - மயிலை பேராயர் இந்தியாவின் அப்போஸ்தலர் புனித தோமையர், (ஆண்டு இல்லை) விலை 30 பைசா) நூல் 31 பக்கங்கள்.

****W.P. Hares, A History of the christian church of the First Six centuries, CLS Madras, Page 206 (Book Totally 224 pages).*

இலத்தீன் மொழிவழங்கும் கீழ்த்திசை சபைகளிலும் தோமையரை இந்தியாவுடன் இணைத்துக்கூறுகின்றன.

ராபிபாவுல்

மலையாள நாட்டிற்கு வந்த தோமையருக்கு அங்கு யூதர்களுக்குத் தலைவராயிருந்த **ராபிபாவுல்** தங்க இடமளித்தார். அங்கிருந்து மதப்பிரச்சாரம் செய்தார் தோமா.*

இந்தியக் கிறிஸ்தவத்தின் தொட்டில்

கொடுங்களூரில் தோமையர் முதலில் திருச்சபையை நிறுவியதால் '**இந்தியக் கிறிஸ்தவத்தின் தொட்டில்**' Cradie of – Indian Christianity என அழைப்பார்.**

கிறிஸ்தவ ஆலயங்கள்

Malankara (Kodungallure) கொடுங்களூர், (Parur) கோட்டக்காவு (எ) பரூர் பள்ளூர் (அ) பலயூர், (Palayoor) கோட்டமங்கலம் (அ) கோக்கமங்கலம் (Kokkamangalam) நிர்ணம் (அ) நிராணம் (Noranam), கொல்லம் (அ) கோயிலோன் (Quilon) ஆகிய இடங்களில் தேவாலயங்கள் புனித தோமையரால் எழுப்பப்பட்டன.***

திருவிதாங்கோடு அரைப்பள்ளி

சேரமன்னன் இமயவரம்பன் நெடுங்சேரலாதன் காலம் அது. அப்போது திருவிதாங்கோடு அரைப்பள்ளியில் கிறிஸ்தவ தேவாலயத்தை தோமையர் கி.பி.57 இல் எழுப்பினார். உலக வரலாற்றிலேயே கிறிஸ்தவத்திற்கு நிறுவப்பட்ட முதல் கோயில் திருவிதாங்கோடு கோயில்தான் என்று கூறப்படுகிறது.****

---

* எம்.மோ.வாஸ் அடிகளார், இந்திய நாட்டு அப்போஸ்தலராகிய புனித தோமையர் வரலாறு, திருச்சிராப்பள்ளி 1971, பக்கம் 27 (நூல் மொத்தம் 110 பக்கங்கள்).

** புனித தோமையரின் இந்தியத் திருப்பணிகள் முக்கிய ஆதாரங்கள், கிறிஸ்தவ ஆய்வு ஆவணப்படுத்து மையம் *Centre for Christian Research and Documentation (CCRD)* சென்னை 2015, பக்கம் 22.

*** *L.P.Brown, The Indian Christians of church St.Thomas, An Account of the ancient Syrian church of Malabar, The university press, Cambridge, 1956, Page 52.*

****கிறித்துவ ஆய்வு, ஆவணப்படுத்து மையம், முற்கூறிய நூல் பக்கம் 25.

கி.பி. 52இல்

கி.பி.52இல் புனித தோமையர் இந்தியா வந்ததை பல்வேறு வரலாற்று ஆய்வாளர்களும் உறுதிப்படுத்துகின்றனர்.*

தாமஸ் கிறிஸ்தவர்கள்

புனித தோமையரால் (St. Thomas) கிறிஸ்தவத்தில் சேர்க்கப்பட்ட கிறிஸ்தவர்கள் தாமஸ் கிறிஸ்தவர்கள் (Thomas Christian's) என்று அழைக்கப்பட்டனர். அவர்கள் சிரியாணி (Suriani) சிரியக் கிறிஸ்தவர்கள் (Syrian Christians) என்றும் அழைக்கப்பட்டனர்.**

ஜி. மில்னேரே

ஜி.மில்னேரே தனது நூலில் புனித தோமையர் இந்தியாவில் கேரளப் பகுதிகளில் கிறிஸ்தவப் பணி ஆற்றியதை விவரித்துள்ளார்.***

தோமா மலபாரில் போதனை

23.11.0052இல் மலபாருக்கு வந்த தோமா 3000 நம்பூதிரி குடும்பங்களை மதம் மாற்றினார்.****

தோமையர் பாடல்கள்

'ரெம்பன்பாட்டு', 'தோமாபர்வம்', 'மார்க்கம் களிப்பாட்டு', 'மார்தோமா கீதம்', 'கல்யாணப்பாட்டு' என்ற பெயர்கள் புனித தோமையருடைய சரிதைப் பாடல்களாக பல நூற்றாண்டுகளாக வந்துள்ளன.*****

Rt. Rev. Herman D.Souza, In the steps of St. Thomas, Mylapore, 1983, Page 23.

***E.R. Baierlein, the Land of the Tamilians and its Missions First published 1875, Ams repirnt New Delhi, 1995, Page 96*

****G.Milnerae, The Syrian church in India, London 1892, page22-23.*

****வே. ஜான் பிரான்சிஸ், புனித தோமா வாழ்க்கையும் வரலாற்றுப்பின்னணியும், நாகர்கோவில் 2005, பக்கம் 48, 49

*****இரா. அருளப்பா, தமிழகத்தில் கிறிஸ்தவம், ஆண்டு இல்லை, பக்கம் 3

நூற்றாண்டுக் கொண்டாட்டம்

மலபாருக்கு கி.பி.52இல் தோமா வந்த 19 நூற்றாண்டு நிறைவு அழிக்கோட்டில் (Azhikode) சிறப்பாகக் கொண்டாடப்பட்டது.*

யூதர்கள்

தோமையர் இந்தியா வருவதற்கு முன்னரே யூதர்கள் கேரளத்தில் குடியேறி வாழ்ந்தனர். அவர் யூதர்களுக்கும் இந்துக்களுக்கும் கிறிஸ்துவின் நற்செய்திகளைப் போதித்தார்.**

சந்திரோக்மஹோசா

'தோமையர் செயல்கள்' என்ற நூல் தோமையர் சந்திரோக்மஹோசா என்ற ஊரில் ஆபானுடன் கப்பலில் வந்து இறங்கினார் என்ற செய்தியைத் தருகிறது. மஹோசா என்றால் ஊர் என்று பொருள். சந்திரா என்றால் நிலா ஹோசா என்றால் இருக்கை. புராணப்படி சிவன் தலையில் நிலவைச் சூட்டியிருக்கிறான். சிவனைக் குறிக்கும் வகையில் அமைந்த சந்திரோக்ஹோசாவின் பழைய பெயர் கொடுங்களூர்.***

காஸ்மாஸ்

கி.பி.522இல் அலெக்சாந்திரியா பட்டினத்து கிறிஸ்தவ வணிகர் காஸ்மாஸ் (Cosmas) **உலகெங்கும் உள்ள கிறிஸ்தவ உறைவிடங்கள்** Universal Christian To pograph என்னும் நூலில் இந்தியாவில் கிறிஸ்தவர்கள் அதிலும் பெரும்பான்மையோர் மலையாள நாட்டில் இருந்தது பற்றி குறிப்பிட்டுள்ளார்.

---

* *P.Thomas, Churches in India, NewDelhi, 1964, Reprinted 1990, Page 4.*

** *Juhanon Marthoma, Christianity in India and Brief History of the mar Thoma the most Rev. Syrian Chruch. Madras Published by K.M.Cherian, 1968, page 1.*

*** *V.C.George A Postolate and Martyrdorm of St.Thomas, 1971,* மேற்கோள் இ.தூரக்கோவளன் தூயர் தோமையர் பற்றி தமிழகத்தில் எழுந்த முதல் வரலாறு மயிலை நோக்கி சென்னை, 1975, பக்கம் 81 *F.A.D. Cruz, St.Thomas, the Apostle in India Madras 1929, 182* 182 பக்க நூலையும் வாசித்தறியலாம்.

தெரிசா பள்ளி

திருவிதாங்கோடு அரப்பள்ளி (அரைப்பள்ளி, Half Chruch) கி.பி.63இல் நிறுவப்பட்டது. தோமையர் ஆலயம் என்றும் புனித மேரிமாதா தேவாலயம் என்றும் அது அழைக்கப்படுகிறது. 55 அடி நீளம் 18 அடி அகலம் உள்ளது. ஒரு அடி அகலம் உள்ள கருங்கல் சுவர்களால் கட்டப்பட்டுள்ளது. இரண்டு அடி அகலமும் 10 அடி உயரமும் கொண்ட கருங்கல் தூண்கள் கூரையைத் தாங்கி நிற்கின்றன. ஆலயத்தின் மேல்பகுதி மரத்தினால் ஆன மாடி உள்ளது. ஆலயத்தின் தெற்குப்பக்கம் தோமையர் கிறிஸ்தவர்கள் வசிக்கிறார்கள். மக்கள் ஆலயத்தை **தெரிஸா பள்ளி** என்றும் அழைக்கின்றனர்.

த்றீசோ - தரீசா

'**த்றீசோ**' என்ற கிரேக்கச் சொல்லின் மருவல் **தரீசா** அதன் பொருள் ஆர்த்தடாக்ஸ் ஆதித்திருச்சபை எனலாம்.*

மலபார் சிரியன் செப்பேடுகள்

Kerala Society papers Volume I & II Kerala Gazetteers Thiruvanthapuram (1997) முதல் தொகுதி 352 பக்கங்கள், இரண்டாம் தொகுதி 366 பக்கங்கள் இதில் முதல் தொகுதி பக்கம் 201, 202, 203, 204, பக்கங்களில் The Malabar Christian Copper – Plates என்ற கட்டுரை பிரசுரமாகியுள்ளது. அதனை டி.கே.ஜோசப் T.K. Joseph B.A.,LT., எழுதியுள்ளார். இதில் கொல்லம் தரிசாப்பள்ளி செப்புப்பட்டயங்கள் (Tarish Chruch Plates), தாமஸ்கானா செப்புப் பட்டயங்கள் (Thomas can a Plates) அங்கு பழங்காலத்தில் வழங்கப்பட்ட தானங்களைப் பற்றி குறிப்பிட்டுள்ளார்.

அரபு மொழியில்

தெரிசாப்பள்ளி செப்பேடுகளில் ஒரு பகுதி பாலி மொழியிலும் ஒரு பகுதி அராபிய மொழியிலும் எழுதப்பட்டு, யூத மதப்பிரமுகர்களால் கையொப்பமிடப்பட்டுள்ளது.**

---

*சிட்டி சுதந்தரம், கிறிஸ்தவம் ஆய்விலும் திருமறையிலும் சிந்தனையிலும், பாளையங்கோட்டை 2015, பக்கம் 40.

**மு. தெய்வநாயகம், சான்றோர்யார்? சென்னை- 1972 பக்கம் 116.

Arabia (Kufic) Signatures on the Copper – Plate

கேரளா சொஸைட்டி பேப்பர்ஸில் வரிசை எண் 6இல் 9வது கட்டுரை C.P.T.Winck worth and F.C. Burkitt எழுதியது. Notes on the Pahlavi, Kufic (Arabic) and Hebrew signature to the Quilonplates என்ற கட்டுரை 320 முதல் 323 வரை உள்ளது. அதில் பக்கம் 323 இல் கேரள செப்புப் பட்டயங்களில் அரபி மொழியில் எழுதப்பட்டு கையெழுத்திடப்பட்டிருக்கிறது.

இதோ அந்தப் பக்கம்


KUFIC, PAHLAVI,
and
HEBREW
Signatures to the
Quilon copper-plates
of about 880 A.D.
T.K. JOSEPH
26-7-1930.

புனித தோமையர் காலத்திய செப்புப் பட்டயங்களில் அரபிமொழி இருப்பதால் அப்போதே அரபிகள் அங்கு நிலைகொண்டிருந்துள்ளனர் என்பது புலனாகிறது.

இலங்கையில் ஆதம் (அலை) பாதச்சுவடுகள்

ஷெய்குஸைனுத்தீன்மக்தூம் தனது துஹ்ஃபதுல் முஜாஹிதீன் நூலில் சொல்கிறார்.

இலங்கையில் ஆதம் (அலை) அவர்களின் பாதச்சுவடுகளைத் தரிசிக்க வந்த குழுவினர் வழியில் மலபார் வந்தனர். அரசர் அன்போடு வரவேற்றார். குழுவின் தலைவர் அரசருக்கு அண்ணல் நபி (ஸல்) அவர்கள் பற்றியும், இஸ்லாம் மார்க்கம் பற்றியும் எடுத்துரைத்தார்.

நிலவைப் பிளந்த அற்புத நிகழ்வு

அப்போது குழுவின் தலைவர் ஷெய்கு அண்ணலார் நபி (ஸல்) அவர்கள் அரேபியாவில் நிலவைப் பிளந்த அற்புதத்தை நடத்திய நிகழ்வை அரசரிடம் சொன்னார். அரசரும் மனதார அண்ணல் நபி (ஸல்) அவர்களை ஏற்றுக்கொண்டார். ஆதம் (அலை) பாதச்சுவட்டைத் தரிசித்துவிட்டுத் திரும்பும்போது தம்மை வந்து சந்திக்குமாறு அரசர் கேட்டுக்கொண்டார். தாமும் அவர்களுடன் அரேபியாவுக்குப் புறப்பட்டுச் செல்ல எண்ணுவதையும் அவர்களிடம் தெரிவித்த அரசர் இதனை இரகசியமாக வைத்திருக்குமாறும் கேட்டுக்கொண்டார்.

குழுவினர் இலங்கை சென்று ஆதம் (அலை) பாதச்சுவடுகளைத் தரிசித்துத் திரும்பி அரசரைச் சந்தித்தனர். அப்பொழுது அரசரும் அவர்களுடன் பயணம் செய்யத் தயாரானார்.

பயண ஏற்பாடுகள்

பயணத்திற்கான நாள் நெருங்கிக் கொண்டிருந்தது. தன்னை தனது குடும்பத்தினரோ, அமைச்சர்களோ சந்திக்க வரவேண்டாமென்று அரசர் கேட்டுக்கொண்டார்.

குமரி முதல் காஞ்சரக்கூட்வரை

தெற்கே கும்ஹுரியையும் (கன்னியாகுமரி) (Kumhuri) வடக்கே காஞ்சரக்கூட்டையும் (Kanjrakut) (Kasara god) எல்லைகளாகக் கொண்ட முழு மலபார் இராஜ்யத்தின் மீதும் இறையாண்மை கொண்ட முடியரசர் மலபார் மன்னர் சேரமான் பெருமான்.

சேரமான் பெருமான்

தனது இராஜ்யத்தைப் பல மாகாணங்களாகப் பிரித்தார். எல்லைகள் வகுத்தார். ஆளுநர்களை நியமித்தார். ஒருவர் மற்றொருவர் எல்லைகளை மீறி ஆக்கிரமிப்புச் செய்யாமலிருக்க திட்டங்களை வகுத்தார்.

ஃபண்தாரினா – பந்தலயானி கொல்லம்

ஓர் இரவு வேளை அரபிய முஸ்லிம்கள் குழுவினருடன் சேரமான் பெருமான் அரசரும் கப்பலேறிப் புறப்பட்டு பந்தலயானியை (Pantalayani) அடைந்தனர். இது கோழிக்கோடு மாவட்டம் கொயிலாண்டியின் அருகிலுள்ள பந்தலயாணி கொல்லம் ஆகும். அரபியில் ஃபண்தாரினா (Fandarina) என அழைக்கப்படுகிறது.

தர்மடம்

கேரள மாநில தலச்சேரியின் அருகில் **அஞ்சுரக்காண்டி, அழிமுக்காறு** ஆகிய ஆறுகளுக்கு இடையில் உள்ளது. தர்மடம் (Darmfatan), தர்மபட்டணம் (Darmadam) அரபியல் தஹ்ஃபதன் என்று அழைக்கப்படும். ஊருக்குச் சென்றனர் அரசரும் அரேபியக் குழுவினரும் அங்கு மூன்று நாட்கள் தங்கியிருந்தனர்.

சுஹ்ர்

தஹ்ஃபதனிலிருந்து புறப்பட்டு சுஹ்ரை (Shuhr) அடைந்தனர். ஏமன் (Yemen) அருகில் உள்ள இந்து மகாசமுத்திரக்கரையோரத்தில் (Indian Ocean) வீற்றிருந்த பண்டைய நகரம் ஷஹ்ர் அல்–முகல்லா (Sakar – al- Mukalla). இன்று சலாலா (Salalah)நகரின் ஒரு பகுதியாக உள்ள ஊர் இது.

மலபார் நோக்கி வந்த பயணக்குழு

இஸ்லாமிய மார்க்கப் பிரச்சாரத்திற்காக அரபியாவிலிருந்து மலபார் நோக்கி வந்த பிரயாணக்குழுவினர் ஷஹர் – சுல் – முகல்லாவில் சேரமான் அரசரையும் அரேபியா செல்லும் குழுவையும் சந்தித்தனர்.

ஷரஃப்பின் மாலிக் - மாலிக்பின் தீனார்

ஷஹ்ர் – அல் – முகல்லாவில் தங்கியிருந்த வேளையில் சேரமான் பெருமான் நோயுற்றார். **ஷரஃப்பின் மாலிக்கையும்** அவரது தாய் வழிச்சகோதரர் **மாலிக் பின் தீனாரையும்** மலபார் நோக்கிச் செல்லும் மற்றவர்களையும் சேர அரசர் அழைத்து ‘நான் நோய் வாய்ப்பட்டு மரணித்துவிட்டாலும்’ நீங்கள் மலபார் நோக்கிச் செல்லும் மகத்தான பயணத்தை நிறுத்திவிடக்கூடாது என்று கேட்டுக் கொண்டார்.

மலையாளத்தில் கடிதம்

மலபார் நோக்கிச் சென்று கொண்டிருந்த குழு “எங்களுக்கு உங்களது இராஜ்ஜியம் எங்கு உள்ளது என்று தெரியாதே” என்றனர். சேர அரசர் உடனே மலையாளத்தில் கடிதம் ஒன்றை எழுதினார். அதில் தமது நாடு, மாநிலங்கள் தமது குடும்பத்தார், சுற்றத்தார், மலபார் பகுதியில் உள்ள இன்னபிற அரசர்கள் அனைவர் குறித்தும் விரிவான தகவலைத் தந்துவிட்டு மலபார் கரையோரப் பகுதிகளான கொடுங்களூர், தர்மடம், பந்தலயானி, கொல்லம் ஆகிய உள்நாட்டுப் பகுதிகளுக்குள் மார்க்கப் பிரச்சாரப் பிராயணக்குழுவினர் எங்கு வேண்டுமானாலும் செல்லலாம் என்று அனுமதியும் அளித்தார். தாம் நோயுற்ற விவரத்தை மலபாரில் எவரிடமும் கூறவேண்டாமென்றும் சொன்னார். தாம் உடல் நலத்தோடு இருப்பதாக தம்மைச் சார்ந்தவர்கள் நம்பினால்தான் இவர்களுக்கு அவர்கள் உதவக்கூடும் என்று சேரமன்னர் நினைத்திருக்கக்கூடும்.

மலையாளத்தில் மாப்பிள்ளைமார்

மலையாளத்தில் மாப்பிள்ளைமார் (Malayalattil Mappilamar) (Mappilasin Kerala) என்னும் நூல் மங்களூரில் (Mangalore) பாசில் மிஷின் பிரஸில் (Basel Mission Press) *1917*இல் அச்சிடப்பட்டு வெளிவந்தது.

திவான் பகதூர் சி. கோபாலன் நாயர்

‘மலையாளத்தில் மாப்பிள்ளைமார்’ நூலின் ஆசிரியர் திவான்பகதூர் சி.கோபாலன் நாயர் (Diwan Bahadur C.Gopalan Nair) இவர் தமது நூலில் சேரமான் பெருமான் அரசர் மக்காவில் அண்ணலார் நபி (ஸல்) அவர்களை சந்தித்துவிட்டு திரும்பிவரும்

பயணத்தின்போது ஷஹ்ர் – அல் – முகல்லாவில் தங்கியிருந்தார் என்று குறிப்பிட்டுள்ளார். இப்பதிவு உண்மையானது என்றும், சாத்தியமானது என்றும் வரலாற்றாசிரியர்கள் நம்புகிறார்கள்.

அண்ணலார் (ஸல்) - பெருமாள் சந்திப்பு

அண்ணலார் (ஸல்) அவர்களுக்கு அப்போது வயது 57. ஜித்தாவில் பெருமானார் (ஸல்) அவர்களும் பெருமாளும் முஸ்லிம் மாதம் ஷவ்வால் பிறை 27இல் (கி.பி.626) காலை 9 மணி அளவில் சந்தித்தனர். பெருமானார் (ஸல்) பெருமானுக்கு கலீமா அல்–தவ்ஹீதைச் (இஸ்லாம் மார்க்கத்தை ஏற்பதற்கான உறுதியை) சொல்லிட மன்னரும் இஸ்லாத்தைத் தழுவிக்கொண்டார்.

தியாகுதீன்

சேரமான் பெருமாள் தனது பெயரை தியாகுதீன் (Thiauj-Ud-dien) என்று மாற்றிக்கொண்டார். (the Crown of the faith) ஐந்து ஆண்டுகள் அங்கு தங்கியிருந்தார். பின்னர் தனது நாட்டிற்குத் திரும்பினார். திரும்பி வரும்வழியில் ஷஹ்ர் – அல் – முகல்லாவில் இறந்தார் என்கிறார் ராவ்பகதூர் சி.கோபாலன் நாயர்.

அரபி ஆவணம்

கோழிக்கோடு பெரிய காஜியார் **‘ராஜாமணி ராஜா சையித்ஹுஸைன் பின் முஹம்மது பின் அலீ ஷிஹாபுத்தீன் பா அலவி என்ற முல்லக் கோயா தங்கள்’** வசம் இருந்த அரபி ஆவணத்தை அடிப்படையாகக் கொண்டு சி.கோபாலன் நாயர் மலையாளத்தில் மாப்பிள்ளைமார் என்ற தனது நூலில் சேரமான் பெருமாள், பெருமானார் (ஸல்) முன்னிலையில் இஸ்லாத்தைத் தழுவியதைக் கூறியுள்ளார்.

அண்ணலாரின் பொன்மொழிகள்

அண்ணல் நபி (ஸல்) அகிலத்திற்கு விட்டுச்சென்ற அரிய மொழிகள் (ஹதீஸ்கள்) இலட்சக்கணக்கில் இமாம் புஹாரி (ரஹ்) 6,00,000 பொன்மொழிகளில் 4000 மட்டுமே தேர்ந்தெடுத்தார்கள். இமாம் முஸ்லிம் (ரஹ்) 3,00,000 பொன்மொழிகளில் 9,200 மட்டுமே தேர்ந்தெடுத்தார்கள். இமாம் அபூதாவூத் (ரஹ்) 5,00,000 ஹதீஸ்களில் 1600 ஹதீஸ்களைத் தேர்ந்தெடுத்தார்கள். இவ்வாறு தொகுக்கப்பட்ட ஹதீஸ்கள் பல வகைகளாகப் பிரிக்கப்பட்டன.

எம்.ஆர்.எம். அப்துற் - ரஹீம்

1.1.1964 இல் தொண்டியிலிருந்து மார்க்க மேதை எம்.ஆர்.எம். அப்துற் ரஹீம் அல்ஹதீஸ் பெருமானாரின் பொன்மொழிப் பேழை என்ற மூன்று தொகுதிகளை வெளியிட்டுள்ளார்கள். அதில் *16* பக்கங்கள் முன்னுரை எழுதியுள்ளார்கள். அவைகளையும் வாசித்தறிந்து கொள்ளலாம்.

கேரளோல்பத்தி (Keralol Pathy)
The Origin of Kerala (Keralol Patti)

பழைய கருவூலங்களிலிருந்து கண்டெடுக்கப்பெற்ற இடைக்காலத்தில் வெளியான வரலாற்றுச் சார்புடைய நூல் கேரளோல் பத்தி.* இந்த நூல் மங்களூரில் அச்சிடப்பட்டதாகும். கேரளத்தை ஆட்சிபுரிந்த பெருமாள்கள் சரித்திரத்தை ஆரம்பம் முதல் இறுதிவரை கூறும் நூல் கேரளோற்பத்தி. மலையாள இலக்கியத்தின் தந்தை எனப்படும் துஞ்சன் (Tunjan) *16*ஆம் நூற்றாண்டில் எழுதிய முக்கிய நிகழ்ச்சிகளைக் கூறும் நூல் கேரளோற்பத்தி.**

ஹெர்மான் குண்டெர்ட்

ஹெர்மான் குண்டெர்ட் (H.Gundert) *1872*இல் மங்களூர் Basel Evangelical Mission Press இல் அச்சிட்டு வெளியிட்ட நூல் A Malayalam and English Dictionary அவர் தொகுத்த மற்றொரு நூல்தான் கேரளோல் பத்தி. இந்த நூலில் அண்ணல் நபி (ஸல்) காலத்திலே அவர்களைச் சந்தித்த சேரமான் பெருமாள் இஸ்லத்தைத் தழுவியதைப் பற்றிக் குறித்துள்ளார்.

வைக்கம் பாச்சுமுத்து

கேரளத்தில் வைக்கம் பாச்சுமுத்து (Vaikom Pachu Muthu) திருவிதாங்கூர் சுருக்க வரலாற்று நூலை *1863*இல் (Tiruvitamkur Charitram) (A History of Travancore) எழுதினார்.

**P.K.Parameswaran Nair, History of Malayalam Literature Sahitya Academi NewDelhi, Translated from the Malayalam by E.M.J. Venniyoor, 1967, Page 268.*

***P.K.S.Raja, mediaeval Kerala, Annamalai University, Chidambaram, 1953, page 1.*

கே.பி.பத்மநாபமேனன்

1857இல் பிறந்து 1919இல் மறைந்தவர் கே.பி.பத்மநாப மேனன் சிறந்த வரலாற்றாசிரியர்.

கொச்சி வரலாறு

1912–1914க்கு இடையில் அவர் வாழ்ந்த காலத்திலேயே கொச்சி வரலாறு History of Cochin *என்ற நூலை வெளியிட்டவர்.*

கேரள வரலாறு

கே.பி.பத்மநாபமேனனின் கேரள வரலாற்று நூல் நான்கு தொகுதிகளாக அவரது மறைவிற்குப் பிறகு 1924இல் வெளிவந்தது. முதல் தொகுதி 585 பக்கங்கள். இரண்டாவது தொகுதி 601 பக்கங்கள். மூன்றாவது தொகுதி 712 பக்கங்கள். நான்காவது தொகுதி 580 பக்கங்கள், ஆக மொத்தம் 2478 பக்கங்கள்.

History of Kerala

History of Kerala written in the Form of notes on visscher's letters from Malabar K.P.Padmanabha Menon *என்ற அந்த நூல் கடித பாணியில் அமைந்தது ஆகும்.*

டி.கே. கிருஷ்ணமேனன்

7.11.1924இல் எர்ணாகுளம் குமராலயத்தைச் சேர்ந்த டி.கே. கிருஷ்ணமேனன் T.K. Krishna Menon *பதிப்பித்து வெளியிட்டார்.*

1924க்குப் பின் 1982இலும் 2001 இலும் அந்த நூல் மறுபதிப்பு ஆனது. 2001இல் மறு பதிப்பான அந்த நூலின் விலை **ரூ. 3995.** *அந்த நூலின் முதற்பாகம் 431வது பக்கம் முதல் 467வது பக்கங்கள் வரை சேரமான் பெருமாள் இஸ்லாம் மார்க்கத்தைத் தழுவியதைப் பற்றி விவரித்துள்ளார்.*

கடிதம் 8

கேரள வரலாறு முதல் பாகம் கடிதம் 8இல் முதல் விஷயம்

1. Multiplicity of Kings and Party Hatred
2. Pandelakoers and chodderakores
3. Origin of the above two factions

4. Partition by last Perumal

5. Cheraman Perumal: Hisalleged Conversion to Islamisam and the Mecca pilgrimage

மௌலானா அத்தர் முபாரக்பூரி

‘கிலாஃபத்தே ராஷிதா அவ்ர் ஹிந்துஸ்தான்’ எனும் நூலில் மௌலானா அத்தர் முபாரக்பூரி புகழ்பெற்ற ஹதீஸ் அறிஞர் அல்ஹாகிமின் அஸ்முஸ்ததர்ரக்கில் அறிவிக்கப்படுவதாக மேற்கோள் காட்டியுள்ளார்.

இஞ்சி

இந்திய அரசர் ஒருவர் பெருமானார் (ஸல்) அவர்களுக்கு ஒரு பெரிய ஜாடி நிறைய ‘இஞ்சித் துண்டுகளால் ஆன ஊறுகாய்’ போன்றதை அன்பளிப்பாகத் தந்தார். அதனைப் பெற்றுக்கொண்ட அண்ணலார் (ஸல்) அதிலிருந்து சில துண்டுகளை மட்டும் தமக்காக எடுத்துக்கொண்டு, மீதி இருப்பவற்றை தம்முடன் இருந்த தோழர்களிடம் சாப்பிடத் தந்தார்கள். இதுதான் மௌலானா அத்தர் முபாரக்பூரி குறிப்பிடும் சம்பவம். இந்த அரசர் மலபாரின் சேரமான் பெருமாள் என்று நம்பிட அதிக வாய்ப்புள்ளது.

சேரமான், பெருமாள் இஸ்லாத்தைத் தழுவியதைப் பற்றி அண்ணலார் (ஸல்) அவர்களைச் சந்தித்ததைப் பற்றியும், புனித ஹஜ் யாத்திரை மேற்கொண்டதை பற்றியும் அதில் 37 பக்கங்களில் கே.பி.பத்மநாபமேனன் விவரித்துள்ளார். அதிலிருந்து சில பகுதிகள் மட்டும் இதோ;

Kerala History Page 433

The Maplah, or Mohamedan account embodied in the Kerala ot patti gives further particulars. It says that, having made a division of his kingdom, the Perumal secretly emparked on board a Moorish vessel from cranganur.

“He (Perumal) was hotly pursued by ships form the port; but carefully cluding their vigilance, he landed at the port of **Sahar Mukhal** on the Arabian coast.

The prophet (Sal) was then in the 57th year of his age and was (A.D.626) at the time, sojourning at **Jeddah**.

The Perumal proceeded thither and had an interview with Mohammed (sal) who canonised him under the name of Thiauj-uddien (the crown of the faith)

கி.பி.626 இல் அண்ணலார் அவர்களது 57வது வயதில் ஜித்தாவில் சேரமான் பெருமாள் அண்ணலாரைச் சந்தித்து இஸ்லாத்தை தழுவி தனது பெயரை **தியாஸ்உத்தீன்** *என்று மாற்றிக்கொண்டார்.*

ஹபிப்உத்தீன் - ரெஜியாத்

அங்கு ஹபிப்உத்தீன் (Hubib-ud-dien) *அவர்களது சகோதரி ரெஜியாத்* (Regiat) *என்பவரைத் திருமணம் செய்தார். ஐந்து வருடங்கள் அங்கு வாழ்ந்தார். அதன்பின் ஹபிப்உத்தீன் – ரெஜியாத், சேரமான் பெருமாள் என்ற தியாஸ்உத்தீன் அனைவரும் குடும்பமாக மலபாரில் இஸ்லாத்தைப் பரப்பிடும் நோக்கத்துடன் பயணித்தனர்.*

Kerala History page 434

He (Perumal) did not, however, live to fee the object of his Mission accomplished, as he died of an ague at Sahar Mukal, Where his remains were interred in a mosque he had erected.

மலபாரை நோக்கி குடும்பத்துடன் வரும் வழியில் சகர்முகல்லில் தங்கியிருந்தபோது சேர அரசர் தியாஸ்உத்தீன் மரணமடைந்தார். (ஹிஜ்ரி 10 கி.பி.632).

இது பத்மநாபமேனன் கேரள வரலாறு நூல் முதல் தொகுதி பக்கம் 433, 434இல் தரும் தகவல். மலபார் நோக்கி வந்த பயணக்குழுவினர் மன்னர் மறைந்த துக்கத்தில் தங்கள் பிரயாணத்தை தள்ளிவைத்தனர்.

மலபார் நோக்கிய பயணம்

சில ஆண்டுகளுக்குப் பின்னர் ஷரஃப் பின் மாலிக் (Shorfibn – Mailk), *மாலிக் பின் தீனார்* (Malik – ibn- Dinar), *மாலிக் பின் ஹபீப்* (Mailk – ibn Habib), *ஹபீப் இப்ன் மாலிக்* Habib - ibn-Malik, *மாலிக் பின் ஹபீப் துணைவியார் கமரிய்யா* (Kumarieth) *இவர்களது குழந்தைகள்.*

ஆண் பிள்ளைகள் பத்து

ஹபீப், முஹம்மது, அலி, ஹுசைன், தாகியுத்தீன் (Thaki-ud-din) அப்துர்ரஹ்மான், இப்ராஹிம், மூசா, உமர், ஹசன் ஆகிய பத்துப் பிள்ளைகளும் உடன் வந்தனர்.

பெண் பிள்ளைகள் ஐந்து

மாலிக் இபின் ஹபிப் பின் ஐந்து பெண் மக்களான பாத்திமா, ஆயிஷா, ஜெயனப், ஹலிமா, தளராத் (Thanitath) ஆகியோரும் அக்குழுவில் இடம் பெற்றிருந்தனர்.

மாலிக் பின் தீனார்

மாலிக் பின் தீனாரின் இரண்டு மகன்கள்; ஒரு பேரன், பேரனது துணைவியார் அவர்கள் குடும்பத்தைச் சேர்ந்த 15 பிள்ளைகள் அக்குழுவில் இருந்தனர்.* இருபத்தி இரண்டு இஸ்லாமிய மார்க்க அறிஞர்கள் அடங்கிய குழு மலபார் நோக்கிப் பயணித்தது.

தாபித்

தாபித் என்ற இயற்பெயர் தாங்கியவர் கப்பலில் ஒரு முறை பயணம் செய்கிறபோது, கையில் காசு ஏதும் இல்லாத நிலையில் மாலுமியின் தாக்குதலுக்குள்ளானார். அப்போது கடலில் உள்ள மீன்கள் தம் வாயிலே ஒரு தீனாரை (நாணயம்) கௌவிக் கொண்டே வர, இவர் ஒரு மீனின் வாயிலிருந்த தீனாரை எடுத்து மாலுமியிடம் செலுத்தினார். இதனால் இவருக்கு மாலிக் இப்னு தீனார் என்ற பெயர் ஏற்பட்டதென்றும் கூறப்படுகிறது.**

கொடுங்களூர் ஹிஜ்ரி 21 (கி.பி.643 - 644)

மலபாரை நோக்கிப் பயணித்த குழு கி.பி.643 - 644 இல் கொடுங்களூரை வந்து அடைந்தது. அப்போது கொச்சி சாம்ராஜ்ய மன்னர் அரசை நிர்வகித்துக் கொண்டிருக்கலாம் என்று

William Logan, Malabar Manual, Volume I, New Edition with commentaries state Editor, Dr.P.J.Cherian, Kerala Gazetteers Department, ThiruvananthaPuram, 2000 Page 193.

**M.R.M. அப்துற்றஹீம், வலிமார்களின் வரலாறு, முதற்பாகம், சென்னை, மூன்றாம் பதிப்பு 1999, பக்கம் 145, 146.

கருதப்படுகிறது. (இது வில்லியம் லோகன் கருத்து) அவர்களிடம் மன்னர் தியாஸ்உத்தீன் (சேரமான் பெருமாள்) தந்த கடிதத்தை குழுவினர் தந்தனர். அக்கடிதத்தில் உள்ள வழிகாட்டுதல், அரச உத்திரவுப்படி அவ்வூர் ஆட்சியாளர்கள் அரேபியாவிலிருந்து வந்தவர்களுக்கு நிலபுலங்களை வழங்கினார்கள். வணிகர்களாக அரேபியாவிலிருந்து வந்த முஸ்லிம்கள் ஏற்கனவே மலபார் கரையினில் வாழ்ந்து கொண்டிருந்தனர் என்பதை நினைவில் கொள்ள வேண்டுகிறேன்.

முதற் பள்ளிவாசல்

அக்குழு அங்கே குடியேறி முதற் பள்ளிவாசலை அமைத்தது. இப்பள்ளிவாசல் கட்டுவதற்குத் தேவையான செங்கற்கள், மரங்கள், மேற்பார்வையாளர்கள், பணிபுரிவோர் அனைத்தையும் அரச நிர்வாகமே அளித்தது. கி.பி.643 – 644ஆம் ஆண்டுகளில் ரஜப் பிறை 11இல் திங்கட்கிழமை அன்று இப்பள்ளிவாசல் கட்டி முடிக்கப்பட்டது என்று திவான் பகதூர் சி. கோபால் நாயர் தனது '**மலையாளத்திலே மாப்பிள்ளைமார்**' என்ற நூலில் பதிவு செய்துள்ளார்.

முஹம்மது பின் மாலிக்

இந்தப் பள்ளிவாசலின் காஜி மற்றும் இமாம் (தலைவர்) ஆக முஹம்மது பின் மாலிக் பொறுப்பேற்று இஸ்லாமியக் கடமைகளை நிறைவேற்றிட மக்களிடம் பிரச்சாரத்தைத் துவக்கினார். மாலிக் பின் தீனார் கொடுங்களூரில் குடியமர்ந்து வாழ்க்கை நடத்தினார்.

மாலிக் பின் ஹபீப்

மாலிக் பின் தீனார் தனது உடன்பிறந்தாரின் மகனான **மாலிக் பின் ஹபீ**பை மலபாரின் இதர பகுதிகளுக்கு அனுப்பி மார்க்கப் பிரச்சாரம் செய்திடவும், பள்ளிவாசல்கள் அமைத்திடவும் பணித்தார். மாலிக் பின் ஹபீப் தனது மனைவி பிள்ளைகள் அனைவரையும் அழைத்துக் கொண்டு கொடுங்களூரிலிருந்து கிளம்பி கொல்லத்தை அடைந்தார்.

கொல்லத்தில் பள்ளிவாசல்

கொல்லத்தில் பள்ளிவாசலை மாலிக் பின் ஹபீப் அமைத்தார். தனது மனைவி மக்களை அங்கே குடியிருக்கச் செய்தார். பின்னர்

தனது குடும்பத்தாரை அங்கேயே தங்கியிருக்கவிட்டு விட்டு தாம் மட்டும் இஸ்லாமியப் பிரச்சாரத்தைத் தொடர்ந்தார்.

எழிமலா - ஹய்லீமராவீ

இன்றைய கேரளத்தில் அன்றைய தமிழகத்தின் ஒரு பகுதியாக விளங்கிய சேர நாட்டில் இஸ்லாமியப் பிரச்சாரம் செய்ய முக்கியப் பங்கு வகித்தவர் மாலிக் பின் ஹபீப். இந்த நோக்கத்திற்காக முறையாகத் திட்டமிட்டு, முறைப்படி மார்க்கப் பணியைத் தொடர்ந்தார் மாலிக் பின் ஹபீப். கொல்லத்திலிருந்து எழிமலாவிற்கு வந்தார். இது ஒரு மலைத்தொடர். கண்ணூரிலிருந்து 25 கி.மீ. வடக்கே கடல் முனையில் கடல் மட்டத்திலிருந்து 855 அடி உயரத்தில் உள்ளது. எழிமலா (ஹய்லீமராவி) (Hayli-Marawi) *என்று அரபியில் அழைக்கப்படுகிறது.*

எழிமலா - ஹய்லீ மராவி பள்ளிவாசல்

மாலிக் பின் ஹபீப் முயற்சியில் எழிமலாவில் **(ஹய்லீ மராவி)** *யில் ஹிஜ்ரி 21ஆம் ஆண்டு துல்ஹஜ் பிறை 10 வியாழன் அன்று பள்ளிவாசல் அமைந்தது. (கி.பி.643 – 644)*

அப்துல் ரஹ்மான் பின் மாலிக்

எழிமலா பள்ளிவாசலுக்குத் தலைவராக இமாமாகவும் அப்துர் ரஹ்மான் பின் மாலிக் நியமிக்கப்பட்டார்.

பர்கூர் பள்ளிவாசல்

வட கர்நாடகத்தில் உள்ள பட்கல்தான் பர்கூர். அரபியில் ஃபாக்கனூர் என்று அழைக்கப்படுகிறது. இங்குள்ள பள்ளிவாசல் ஹிஜ்ரி 21 (கி.பி. 643 – 644) ரபியுல்அவ்வல் பிறை 10 வியாழனன்று கட்டிமுடிக்கப்பட்டது.

இப்ராஹிம் பின் மாலிக்

இப்ராஹிம் பின் மாலிக் பர்கூர் பள்ளிவாசலின் தலைவராகவும், நீதிபதியாகவும் (காழி) நியமிக்கப்பட்டார்.

மங்களூர் பள்ளிவாசல்

கர்நாடகத்திலுள்ள மங்களூர் (Mangalore) *இது அரபி மூலத்தில் மஞ்சலூர் ஆகும். இங்குள்ள பள்ளிவாசல் ஹிஜ்ரி 22 ஜமாதில்அவ்வல் பிறை 27 வெள்ளிக்கிழமையன்று கட்டி முடிக்கப்பட்டது. (கி.பி. 644 – 645)*

மூஸா பின் மாலிக்

மாலிக் பின் ஹபீப் மங்களூர் பள்ளிவாசலின் நீதிபதியாகவும் (காழி) இமாமாகவும் (தலைவராகவும்) மூஸா பின் மாலிக்கை நியமித்தார்.

காஸரக் கோடு (Kasaragod)

கேரளத்தின் வடமுனையிலிருந்தது காஸரக்கோடு. அரபியில் **'காஞ்சரகூத்'** *ஹிஜ்ரி 22 ரஜப் பிறை 18 திங்கட் கிழமையன்று இங்கு பள்ளிவாசல் கட்டிமுடிக்கப்பட்டது. (கி.பி. 644 – 645)*

மாலிக் பின் முஹம்மது

மாலிக் பின் முஹம்மது இதன் காழியாகவும் தலைவராகவும் நியமனம் செய்யப்பட்டார். பின்னர் மாலிக் பின் ஹபீப் எழிமலாவிற்குத் திரும்பினார். மூன்று மாதங்கள் அங்கு தங்கியிருந்தார்.

ஸ்ரீ கண்டபுரம் (Sree Kandapuram)

அரபியில் ஜுர்ஃபதன் (Jurfatan) என்று அழைக்கப்படும் ஊர் ஸ்ரீகண்டபுரம். எழிமலாவுக்கும் ஸ்ரீ கண்டபுரத்திற்கும் இடையில் 13 கி.மீ. தொலைவாகும். ஹிஜ்ரி 22 ஷவ்வால் பிறை 12 (கி.பி. 644 – 645 பள்ளிவாசலைக் கட்டும் பணியை மாலிக் பின் ஹபீப் நிறைவு செய்தார்.

ஷிஹாப் அல்தீன் உமர்பின் முஹம்மது பின் மாலீக்

ஷிஹாப் அல்தீன் உமர்பின் முஹம்மது பின் மாலிக் ஜுர்ஃபதன் பள்ளிவாசலின் தலைவராக நியமிக்கப்பட்டார்.

தர்மடம் (Darmfatan)

தர்மடத்தில் உள்ள பள்ளிவாசல் ஹிஜிரி 22 ஷாபான் பிறை 29 வியாழன் (கி.பி.644 – 645) கட்டி முடிக்கப்பட்டது.

ஹுசைன் பின் மாலிக்

தர்மடத்தின் பள்ளிவாசல் தலைவராக இமாமாக ஹுசைன் பின் மாலிக் பணியாற்றினார்.

பந்தலயானி (Panthalayani)

பந்தலயானி பள்ளிவாசல் ஹிஜ்ரி 22 ஷவ்வால் பிறை 21 வியாழக்கிழமை கட்டிமுடிக்கப்பட்டது. (கி.பி. 644 – 645).

ஸைனுத்தீன் பின் மாலிக்

பந்தலயானி பள்ளிவாசலில் ஸைனுத்தீன் பின் மாலிக் தலைவராகப் பொறுப்பேற்று மார்க்கப் பணியாற்றினார்.

சாலியம் (Chaliyam)

மாலிக் பின் ஹபீப் ஐந்து மாதங்கள் சாலியத்தில் தங்கி இருந்தார். கோழிக்கோடு மாவட்டத்திலுள்ள பேப்பூர் அருகில் உள்ளது சாலியம் அரபியில் ஷாலியாத் (Shaliyat) என்று அழைக்கப்படுகிறது.

சாலியம் புகழ்கரா பள்ளிவாசல்

மாலிக் பின் ஹபீப் இங்கு கட்டிய பள்ளிவாசல் சாலியம் புகழ்கராபள்ளிவாசல் ஆகும்.

ஸைனுத்தீன் பின் முஹம்மது பின் மாலிக்

ஸைனுத்தீன் பின் முஹம்மது பின் மாலிக் சாலியம் பள்ளிவாசலின் தலைவராக இருந்தார்.

இரண்டாவது பயணம்

முதற்கட்டமாக **கொடுங்கல்லூர், எழிமலா, பர்கூர், மங்களூர், காஸரக்கோடு, ஸ்ரீகண்டபுரம், தர்மடம், பந்தலயானி, சாலியம்** ஆகிய இடங்களில் பள்ளிவாசல்களைக் கட்டி அங்கு இஸ்லாமிய மார்க்க முறைப்படி தொழுகைக்கான ஏற்பாடுகளை எல்லாம் செய்துவிட்டு மாலிக் பின் ஹபீப் தனது மாமாவான மாலிக் பின் தீனாருடன் வந்து கொடுங்கல்லூரில் தங்கியிருந்தார். அப்போது மலபாரின் பல்வேறு பகுதிகளில் கட்டப்பட்ட பள்ளிவாசல்கள் அனைத்துக்கும் இரண்டாவது தடவையாக பிரயாணம் செய்தார். மாலிக் பின் ஹபீப் புதிதாகக் கட்டப்பட்ட பள்ளிவாசல்களில் தொழுகை நடத்திவிட்டுத் திரும்பினார். ஏக இறைவனுக்கு நன்றி செலுத்தியவராக திரும்பவும் கொடுங்கல்லூரை அடைந்தார்.

கொல்லத்தில்

அதனைத் தொடர்ந்து மாலிக் பின் தீனாரும், மாலிக் பின் ஹபீபும் அவர்களது தோழர்கள் மற்றும் பணியாளர்களுடன் கொல்லம் சென்றனர். அங்கிருந்து மாலிக் பின் தீனாரும் வேறு

சிலரும் கப்பல் மூலம் ஷஹர் அல் முல்லாவிற்குப் பயணமானார். மீதம் இருப்பவர்கள் கொல்லத்திலேயே தங்கியிருந்தனர்.

குராசனில்

மாலிக் பின் தீனார் ஷஹர் அல் முகல்லாவில் மறைந்த கேரள சேரமான் மன்னரின் அடக்கஸ்தலத்திற்குச் சென்றார். அங்கிருந்து புறப்பட்டு குராசானுக்குப் பயணமானார். ஈரானில் வடகிழக்கில் உள்ளது குராசான். பரந்த நிலப்பரப்பைக் கொண்டது. மாவீரன் அலெக்சாந்தர் இந்தியாவிற்கு குராசான் வழியாகவே வந்தார். குராசானில் இருக்கும்போது மாலிக்பின் தீனார் காலமானார்.

கொடுங்கல்லூரில்

மாலிக் பின் ஹபீப் கொல்லத்தில் தமது குழந்தைகள் சிலருக்கு தங்குவதற்குரிய ஏற்பாடுகளையும், வசதிகளையும் செய்து கொடுத்தார். பின்னர் தனது மனைவியை அழைத்துக்கொண்டு கொடுங்கல்லூருக்கு வந்து அங்கே வாழ்ந்த மறைந்தார். கொடுங்கல்லூரில் சேரமான் பள்ளிவாசலின் தென்புறத்தில் அமைந்துள்ளது மாலிக் பின் ஹபீப் மற்றும் அவரது துணைவியாரின் கல்லறைகள்.*

கெ.என். கோபால பிள்ளை

குறுப்பம் வீட்டில் கெ.என். கோபால பிள்ளை எழுதிய நூல். கேரளமஹாசரித்திரம் மலையாளத்தில் வெளிவந்த இந்த நூலின் முதல் பாகத்தில் பக்கம் 297–298இல் அண்ணல் நபி (ஸல்) அவர்களின் காலத்திலேயே சேரமான் பெருமாள் இஸ்லாத்தைத் தழுவிய செய்தியை கேரளோற்பத்தி நூலில் இருந்து மேற்கோள் காட்டி எழுதியுள்ளார்.

---

* ஷெய்கு ஸைனுத்தீன் மக்தூம், துஹ்ஃபதுல் முஜாஹிதீன், கேரளமும் போர்ச்சுக்கீசிய காலனி ஆதிக்கமும், பதினாறாம் நூற்றாண்டின் வரலாற்று ஆவணம், அரபு மொழியிலிருந்து ஆங்கில மொழி பெயர்ப்பும் ஆய்வுக் குறிப்புகளும், முஹம்மது ஹுஸைன் நைனார், ஆங்கிலத்திலிருந்து தமிழில் ஷாகிர் அஸீம், அடையாளம், புத்தாநத்தம் 2009, பக்கம் 140.

உமர் பின் முகம்மது சுஹ்ரவர்தி

வரலாற்றாசிரியர், மெய்ஞ்ஞானி (சூஃபி) உமர் பின் முஹம்மது சுஹ்ரவர்தி.

ரிஹ்லா அல் மாலிக்

உமர்பின் முஹம்மது சுஹ்ரவர்தி எழுதிய புகழ்பெற்ற நூலான ரிஹ்லா அல் மாலிக்கில் (ரிஹ்லதுல் முலூக்) **சேரமான் பெருமாள் அண்ணலார் (ஸல்) காலத்திலேயே தாஜுத்தீன்என்று பெயர் மாற்றி இஸ்லாத்தைத் தழுவினார்** *என்பதை தெளிவாக உரைத்துள்ளார் சேரமான் பெருமாள் மலையாள நூலில்.*

இந்திய வாள்

அண்ணல் நபி (ஸல்) அவர்கள காலத்தில் 'இந்தியா' அறியப்பட்டிருந்ததா?

பானத்சுஆத்

பானத்சுஆத் எனும் அண்ணல் நபி (ஸல்) மீது புகழ்மாலை கவியரசர் கஃபுஇப்னு ஸுஹைர் (ரலி) அவர்களால் பாடப்பட்டது. ஸுஹைர் இப்னு அபீ கல்மீ கப்ஷாபிந்த் அம்மார் தம்பதியரின் மூன்றாவது புதல்வராக அரபு நாட்டில் முஸைனா குலத்தில் பிறந்தவர் கஃபு இப்னு ஸுஹைர். தந்தையும் பெருங்கவிஞர் இவரது பாட்டனார் அபூகல்மீ கவிஞர், மாமன் கவிஞர், மாமியார்கள் கன்ஸா, ஸல்மா பெண்பாற் கவிஞர்கள் அண்ணன் புஜைர் கவிஞர்.

கஸீதத்துல் புர்தா

கஃபு முதலில் அண்ணலாரைத் (ஸல்) தாக்கி கவிதை புனைந்திருந்தார். பின்பு மனம் திருந்தி அண்ணலார் (ஸல்) அவர்களிடம் வந்தார்.

மஸ்ஜிதுன் நபவி

அண்ணலார் (ஸல்) மஸ்ஜிதுன் நபவி பள்ளிவாசலில் இருந்தார்கள். அங்கு மாறுவேடத்தில் வந்த கஃபு பாவமன்னிப்புக் கோரினார். பெருமானார் (ஸல்) அவரை மன்னித்தார்கள். அப்போது உள்ளம் உருகி பானத்சுஆத் எனும் கவிதையை இயற்றினார் கஃபு.

62 கண்ணிகள்

பானத்சுஆத் 62 கண்ணிகளைக் கொண்டது. அதில் 52வது கண்ணி இதோ;

இன்னர் ரசூல லஸய் ஃபுன்யுஸ்தழாஉபிஹி
முஹன்னதுன் மின்ஸுயூஃபில்லாஹி மஸ்லூலு

உறையிலிருந்து உருவியெடுக்கப்பட்ட அல்லாஹ்வின் வாட்களுக்கு மத்தியில் அருமைத் தூதர் அவர்கள் இருட்டில் ஒளியைப் பாய்ச்சி வழிகாட்டப் பயன்படுத்தப்படும் (முஹன்னதுன் (வேர் சொல்) (ஹிந்து இந்தியாவில் தயாரிக்கப்பட்டது.) **இந்தியத் திருநாட்டு வாளுக்கு ஒப்பானவர்கள் ஆவார்கள்** என்று அண்ணலார் (ஸல்) அவர்களை இந்தியத் திருநாட்டின் வாளுக்கு ஒப்புமை காட்டி கஃபு பாடினார்கள்.*

பொன்னாடை

அண்ணல் நபி (ஸல்) இந்த வரிகளைக் கேட்டதும் தனது பொன்மேனியில் தவழ்ந்த மேலாடையைக் கவிஞர் கஃபுக்குப் பொன்னாடையாகப் போர்த்தினார்கள்.

பத்தாயிரம் திர்ஹம்கள்

அந்தப் பொன்னாடையை எனக்குத் தந்தால் பத்தாயிரம் திர்ஹம்கள் தருகிறேன் என்று ஹஜ்ரத் முஆவியா (ரலி) கேட்டார். கஃபு அப்போது மறுத்துவிட்டார். அவரது மறைவிற்குப் பின் அவரது வாரிசுகளிடம் 20,000 திர்ஹம்கள் கொடுத்து முஆவியா அந்தப் பொன்னாடையை பெற்றுக்கொண்டார் என்பது வரலாறு.

துருக்கி தலைநகரில்

துருக்கி நாட்டின் தலைநகர் இஸ்தான்பூலில் மஸ்ஜிது கிரகாஹ் ஷரீஃப் (புனிதப் போர்வை பள்ளிவாசலில்) என்ற பள்ளிவாசலில் இன்று வரை அண்ணலாரின் மேலாடை பாதுகாக்கப்பட்டு வருகிறது.

---

* ஆலிம் கவிஞர் தேங்கை மிஸ்பாஹி பானத்சுஆத், சென்னை, 2001, பக்கம் 153.

இந்திய வாள்

கவிஞர் கஃபு பாடிய பானத்சுஆத் கவிதைத் தொகுப்பில் 62 கண்ணிகளில் 52வது கண்ணியில் அண்ணலாரை இந்தியாவின் வாளுக்கு ஒப்புமைகாட்டிப் பாடப்பட்டுள்ளது. இதிலிருந்து என்ன தெரிகிறது. இந்தியாவை அண்ணலார் காலத்தில் தெளிவாக அறிந்திருந்தார்கள் என்பதாகும்.

The Classical Age

The History and culture of the India ùeople என்னும் வரலாற்றுத் தொகுதியை பாரதிய வித்யாபவன் மும்பை 11 தொகுதிகளாக வெளியிட்டுள்ளது. அதில் மூன்றாம் தொகுதி The Classical Age ஒப்புக்கொள்ளப்பட்ட சிறப்புடைய காலம். அதில் 23வது பகுதி Inter course with the outside world ஆர்.சி. மசூம்தார் எழுதிய கட்டுரை அதில் ஏழு பிரிவுகள். அதில் 7வது பிரிவு Western Countries அது H.G.RawLinson எழுதிய Inter course between Indian and the western world cambride 1916 M.Hamidulla, Ancient India Proceeding of the India History congress Volume V, PAGE 246-248, பிலிப் கே.கிட்டியின் The History of Arabs ஆகிய நூல்களையும், கட்டுரைகளையும் தழுவி ஆர்.சி.மஜீம்தாரால் எழுதப்பட்டது.

இஸ்லாத்திற்கு முந்திய காலத்திலேயே
இந்திய - அரபியோ - வணிகத்தொடர்பு

There was commercial inter course between India and Arabic even in pre-Islamic days; இஸ்லாம் தோன்றுவதற்கு முன்பே அரேபியாவிற்கும் இந்தியாவிற்கும் இடையே வணிகத்தொடர்பு இருந்தது என்று கூறிவிட்டு அடுத்துக் சொல்கிறார்.

The Sword

The sword made of Indian steel is proverbial in Arabic Literature அரபிய இலக்கியங்களில் இந்திய இரும்பால் செய்யப்பட்ட வாள்களைப் பற்றிய பழமொழி போன்ற மூதுரையான செய்தி உள்ளது.*

---

* *W.Schoff (Edited) the Periplus of the Erythrean sea, London, Longmansgreen, 1912, Page 70-71.*

அரபுக் கவிஞர் கஃபு பாடிய பானத்சுஆத்தில் 52வது கண்ணியில் அண்ணலார் (ஸல்) அவர்களை **இந்திய வாளுக்கு ஒப்பானவர்** என்று புகழ்ந்து பாடியதை எண்ணிப் பார்ப்போமாக!

அண்ணலார் (ஸல்) காலத்தில் அவர்களுக்கும் இந்தியாவிற்கும் தொடர்பு இருந்தது தெள்ளத்தெளிவான உண்மையாகும்.

அண்ணலார் காலத்தில் இந்தியா வந்த தோழர்கள்

அண்ணலார் (ஸல்) அவர்கள் காலத்திலேயே அவர்களது தோழர்கள் பலர் இந்தியாவிற்கும் சீனாவிற்கும் வந்த வரலாறு பதிவாகியுள்ளது.

பரங்கிப்பேட்டை - மஹ்மூது பந்தர்

ஆதி மூலேஸ்வரம் முத்துக்கிருஷ்ணபுரி, வருணாபுரி, போர்டோ நோவோ (Portonovo) மஹ்மூத் பந்தர் என்றெல்லாம் அழைக்கப்பட்ட ஊர் பரங்கிப்பேட்டை. குஜராத்தின் போர்பந்தர் மும்பையின் மஸ்ஜித்பந்தர், வாடி பந்தர் போன்று கடற்கரைப்பட்டினமான இவ்வூருக்கு அண்ணலார் (ஸல்) திருப்பெயர் சூட்டி முஸ்லிம்கள் மஹ்மூதுபந்தர் என்று அழைத்தனர்.*

பந்தர் அப்பாஸ்

பந்தர் என்னும் சொல்லுக்கு மும்முரமாக இயங்கிக் கொண்டிருக்கும் துறைமுகம் என்பது பொருளாகும். பாரசீகத்தில் (ஈரானில்) பந்தர் அப்பாஸ் என்னும் துறைமுகம் உள்ளது. **

உக்காஷா (ரலி)

முஹம்மது நபி (ஸல்) அவர்களின் தோழர் உக்காஷா (ரலி) மஹ்மூது பந்தருக்கு வந்தார்கள்.

---

* எல். ஹமீது மரைக்காயர், மஹ்மூத்பந்தர் பரங்கிப்பேட்டை முஸ்லிம்கள் ஒரு பார்வையும் பதிவும், பரங்கிப்பேட்டை, 2017, பக்கம் 11.

** டாக்டர் செல்லன் கோவிந்தன் பண்டைய மலபார் சரித்திரம் *Early History of Malabar* கி.பி.100 – 700, சித்தூர் – பாலக்காடு (தமிழ்) 2003, பக்கம் 125 (நூல் 222 பக்கங்கள் விலை ரூபாய் 105).

360 அடக்கஸ்தலங்கள்

மஹ்மூது பந்தர் (எ) பரங்கிப்பேட்டையில் 360 இறை நேசச் செல்வர்கள் அடக்கமாகியுள்ளனர். தெருவுக்கு ஒன்றிலிருந்து மூன்று தர்காக்கள் உள்ளது. அண்ணல் நபித் தோழர் உக்காஷா (ரலி) அவர்கள் இங்கு அடக்கமாகி உள்ளார்கள்.

கண்டெடுத்த சாஹிபு தர்கா

நபி (ஸல்) தோழர் உக்காஷா (ரலி) அடக்கமாகியிருக்கும் தர்ஹாவிற்கு கண்டெடுத்த சாகிபு தர்கா என்று பெயர்.

ஆயினெ ஹகீகத்நுமா

அக்பர் ஷா கான் நஜீப் ஆபாதி எழுதிய **ஆயினெஹகீகத்நுமா** என்ற நூலின் 47வது பக்கத்தில் உக்காஷா (ரலி) இங்கு அடங்கப்பெற்ற செய்தி உள்ளது.

SAINTS OF INDIA

'Saints of India' என்ற நூலின் 137வது பக்கத்தில் உக்காஷா (ரலி) மஹ்மூது பந்தர் என்ற பரங்கிப்பேட்டையில் அடக்கமாகியுள்ள செய்தி குறிப்பிடப்பட்டுள்ளது.*

தமீமுல் அன்ஸாரி

தமீமுல் அன்சாரி (ரலி) அவர்கள் வங்கக் கடலோரம் வாழும் பெருமானாரின் (ஸல்) அன்புத் தோழர் இவர்களுடைய சரிதையை தமீமுல் அன்சாரி கிஸ்ஸா என்று ஆமூர் பேட்டை வாலைபாவாசாஹிபு இயற்றி சென்னை இட்டா பார்த்த சாரதி நாயுடு சன்ஸ் அவர்களால் மதுரை மீனாட்சி விலாஸ் பிரஸில் 1929இல் பதிப்பிக்கப்பட்டு ஆறு அணா விலையில் 40 பக்கங்களில் வந்துள்ளது.

அண்ணலார் (ஸல்) அவர்களுக்கு மதீனாவில் உதவி புரிந்த தோழர் தமீமுல் அன்சாரி இவர்கள் இறப்பதற்கு முன் பட்டயம் எழுதி, தாம் இறந்த பின் தனது உடலை ஒரு பெட்டியில்

---

* எம்.ஆர்.எம். அப்துற் றஹீம் இஸ்லாமியக் கலைக்களஞ்சியம் தொகுதி மூன்று யுனிவர்ஸல் பப்ளிஷர்ஸ், சென்னை, ஜூலை 1979 பக்கம் 486. (மூன்று பாகங்கள் அடங்கிய இக்கலைக்களஞ்சியம் தற்போது பிரியத்திற்குரிய அண்ணன் எஸ்.எஸ்.ஷாஜகான் அவர்களது முயற்சியால் நான்கு பாகங்களாக மறுபதிப்பு செய்யப்பட்டுள்ளது).

வைத்து கடலில் விடுமாறு வேண்டினார்கள். அவ்வாறே அது நடந்தது. சென்னையை அடுத்த கோவளத்தில் அது கரை ஒதுங்கியது.

ஸஆதத் பந்தர்

அங்கு அந்தப் பெட்டியிலிருந்து தமீம் அன்சாரி (ரலி) அவர்களின் உடல் அடக்கப்பட்டது. அதுவே கோவளம் என்ற ஸஆதத் பந்தர் ஆகும்.*

சீனாவில்

கி.பி.618இல் சீனாவிற்குள் இஸ்லாமிய மார்க்கம் முதன்முதலாகப் பிரவேசித்தது.**

காண்டனில்

சீனாவில் காண்ட்டன் நதிப் பகுதியில் இந்தியாவைச் சேர்ந்த பலரும் இருந்தனர் என்று குறிப்பு உள்ளது. கான்டன் (Canton) துறைமுகத்தில் பெருமனார் (ஸல்) அவர்களின் தோழரின் அடக்கஸ்தலம் உள்ளது.

வஹ்ப் (Wahab)

சீனாவில் கான்டனில் அடக்கமாகியிருக்கும் நபி (ஸல்) அவர்களின தோழர் வஹ்ப் (Wahab) என்பதாகும்.***

இவ்வாறு தமிழகத்தில் பரங்கிப்பேட்டையில், சென்னை கோவளத்தில், சீனாவின் கண்டன் துறைமுகத்தில் நபி (ஸல்) அவர்களின் தோழர்களே அடக்கமாகியிருப்பது வரலாற்றில் பதிவாகி உள்ளது. அண்ணலார் (ஸல்) காலத்திலேயே இஸ்லாம் இங்கு வந்துவிட்டது என்பதற்கு இவைகள் சான்று அன்றோ!

இஸ்லாத்தின் இந்தியா வருகை

இந்தியாவில் இஸ்லாத்தின் வருகை கி.பி. ஏழாம் நூற்றாண்டில் தொடக்கம் ஆனது.****

---

* எம்.ஆர்.எம். அப்துர்ரஹீம், முற்கூறிய நூல் பக்கம் 236

** வெ. சாமிநாத சர்மா, சீனாவின் வரலாறு, கோயம்புத்தூர் (முதற்பதிப்பு 1974) மறுபதிப்பு 2001, பக்கம் 329.

*** ஸையித் இப்ராஹீம், இந்தியாவில் முஸ்லிம் ஆட்சி முதற்பகுதி, யுனிவர்ஸல் பப்ளிஷர்ஸ், சென்னை 2014 பக்கம் 10.

**** டாக்டர் எம்.நசீமுத்தீன், இஸ்லாமும் வீரசைவமும், யுனிவர்ஸல் பப்ளிஷர்ஸ், சென்னை 2018, பக்கம் 13.

முதன் முதலில் கேரளத்தில்

இந்தியாவில் முதன் முதலாக கேரளாவில் அராபிய நாடுகளிலிருந்து முஸ்லிம்கள் குடியேறினார்கள்.

Muslims arrived here at the very beginning of Islam. Without doubt the first muslim who came to Malabar deported from the Arabian Peninsula. *

மலபார் பகுதிகளில் முதலில் 18 பள்ளிவாசல்கள்

மலபார் பகுதியில் அரேபியாவிலிருந்து வந்த இஸ்லாமியப் பிரச்சாரக்குழு 18 இடங்களில் இஸ்லாமியர்களுக்கான தொழுகைப் பள்ளிவாசல்களை அமைத்தனர் என்ற குறிப்பும் காணக்கிடைக்கிறது. வரலாற்றாசிரியரும் சூஃபியுமான புகழ்பெற்ற இலக்கியப் படைப்பின் ஆசிரியருமான உமர் பின் முஹம்மது சஹ்ரவர்தி (Suhrawardi) தனது ரிஹ்லா அல் மாலிக் (Rihla aal Malik) நூலில் குறிப்பிட்டுள்ளார்.

சாலியம்

சாலியத்தில் Chaliyam (Silisath) ஹாஜி ஜாபர் பின் சுலைமான் (Haji Jahfar bin Sulaiman) பள்ளிவாசலை அமைத்தார்.

பந்தளாயினி கொல்லம்

Panthalayani கொல்லத்தில் பந்தளாயினி அப்துல்லா பின் தீனார் (Abdullah bin Dinar) பள்ளிவாசல் அமைத்தார்.

மாஹி - சேரம்பால்

மாஹி (Mahe)யில் ஜாபர் பின் மாலிக் (Jahfar bin Malik) பள்ளிவாசல் அமைத்தார்.

தலச்சேரி

மாஹி - பெரிங்காடி தலச்சேரியில் (Talassery) ஹபீப் பின் மாலிக் (Habib bin Malik) பள்ளிவாசலை அமைத்தார்.

தர்மடம்

தர்மடத்தில் (Darmapattanam) ஹஸன் பின்மாலிக் (Hasan bin Malik) பள்ளிவாசல் அமைத்தார்.

---

* *Anderwink, Al- Hind the making of the Indo-Islamic world. Volume I Oxford University Press Madras, 1990, Page 70*

ஏழிமலை

ஏழிமலை புதியங்காடி அறத்தில் Ezhimala (Helimadai) *அப்துல்லாஹ் பின் மாலிக்* Abdullah bin Malik *பள்ளிவாசல் அமைத்தார்.*

காஸர்கோடு

காஸர்கோடு உல்லலில் (Kasargode) (Kancharkuth) *ஜாபிர் பின் மாலிக்* (Jabir bin Malik) *பள்ளிவாசலை அமைத்தார்.*

மங்கலாபுரம்

மங்கலாபுரத்தில் (Mangalore) (Mancharur) *ஹமீத் பின் மாலிக்* (Hameed bin Malik) *பள்ளிவாசலை அமைத்தார்.*

தானூர் - தீரூர் - பரப்பனங்காடி

தானூர், தீருர் பரப்பனங்காடியில் (Thanur) (Parapanagadi) *அலி பின் மாலிக்* (Ali bin malik) *(அலி பின் ஜபீர் என்றும் கூறப்படுகிறது) பள்ளிவாசலை அமைத்தார்.*

பொன்னானி

பொன்னேரி (Ponnani)*யில் அப்துல் மஜீத் பின் மாலிக்* (Abdul Majid bin Malik) *பள்ளிவாசலை நிர்மாணித்தார்.*

சாவக்காடு

சாவக்காட்டில் (Chavakad) *ஜுபைர் இப்னுல் ஹாரிஸ் பள்ளிவாசலைக் கட்டினார். ஜுபைர் பின் மாலிக்* (Jubair bin Malik) *என்ற கருத்தும் உண்டு.*

கொச்சி

கொச்சி பள்ளுருத்தி Cochi (Palluruthi) *நெட்டூரில் ஹமாத் (ஹமீது)* (Hammad) *பள்ளிவாசலைக் கட்டினார்.*

ஆலப்புழை

ஆலப்புழையில் (Alleppey) *மிஸியாப் அல்லது முஸாத்* (Musad) *பள்ளிவாசலைக் கட்டினார்.*

கொல்லம்

கொல்லத்தில் (Kollam) (Kullam) *ஆஸிம்* (Asim) *பள்ளிவாசலை நிர்மாணித்தார்.*

திருவனந்தபுரம்

திருவனந்தபுரத்தில் புறைதத் (Buraidath) பள்ளிவாசலை அமைத்தார்.

பூவார்

பூவார் பட்டினத்தில் (Puvar) ஜுபைர் (Zubair) அல்லது புபைர் பள்ளிவாசலை அமைத்தார்.

தேங்காய்பட்டினம்

தேங்காய்பட்டினத்தில் (கொளச்சல்) உபைதத் (Ubaidath) பள்ளிவாசலைக் கட்டினார்.

காயில்பட்டினம்

காயில்பட்டினத்தில் (Kayilpattanam) காசிம் (Kasim) பள்ளிவாசலை அமைத்தார். இந்தப் பள்ளிவாசல்கள் ஏழாம் நூற்றாண்டிலே அமைந்தது.*

கி.மு.எட்டாம் நூற்றாண்டு

தென்அரேபிய நாட்டினரான சேபியர்கள் பற்றி கி.மு.எட்டாம் நூற்றாண்டு மெசபட்டோமிய நாட்டுத் தொன்மைக் கல்வெட்டுக்கள் குறிப்பிடுகின்றன.**

ஏமென்

அரேபிய துணைக் கண்டத்தின் தென்கிழக்கு மூலையில் சேபியர்கள் வாழ்ந்தனர். அந்த நாடு இப்பொழுது 'ஏமென்' என்று அழைக்கப்படுகிறது. இப்பகுதியில் மட்டும் மழை பெய்கிறது. இந்திய நாட்டுக்குச் செல்லும் கடல் வழியில் இந்த நாடு இருப்பதால் தொன்மைக் காலத்திலிருந்தே இங்கு வாணிகம் செழிப்படைந்திருந்தது.

---

* *Prof. K.M.Bahauddin, Kerala Muslim History: A Revist, Others books, Calicut, 2012, Page 41 and Prof Syed Mohideen Shah, Dean Calicut University,*இஸ்லாம் மலையாளக் கட்டுரை பக்கம் 497, 498. தமிழில் தந்தவர் தேங்காய் பட்டினம் முஸம்மில்.

** இரா. கிருஷ்ணமூர்த்தி, பிற்காலத்தமிழ் வட்டெழுத்து, சென்னை, மூன்றாம் பதிப்பு, 2010, பக்கம் 12.

உலக வணிகம்

கிறிஸ்து (ஈசா) அலை பிறப்பதற்கு ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பும் கிறிஸ்துவிற்குப் பிறகும் சுமார் இருநூறு ஆண்டுகள் வரையும் ஏமெனைச் சேர்ந்த சேபியர்கள் (தென் அரேபிய நாட்டினர்) கைகளில் உலக வணிகத்தின் பெரும் பங்கு இருந்தது.*

மலையாளக் கரையினிலே

அண்மைக் காலம் வரை கேரளத்தை மலைநாடு என்றும் மக்கள் வழக்கில் மலையாளம் என்றும் கூறிவந்ததை அறிவோம். ‘மலையாள மின்னல், ஈழ மின்னல், சூழ மின்னுதே’ என்ற பள்ளுப்பாட்டை மறக்கத்தான் முடியுமா? சங்ககாலத் தமிழகம் மலைகளின் நாடு; சூழும் கடல்களை எதிர்த்து நம்மைக் காக்கும் கற்கோட்டைகளாய் மலைத்தொடர்கள்; அவற்றுக்கு இடையே அங்கும் இங்கும் குறுக்கிலும், நெடுகிலும் எழுந்தும் தொடர்ந்தும் நிற்கும் மலைகள்.** மலையாளக் கரையினில் இஸ்லாம் துவக்க காலத்திலேயே பரவியது அற்புத நிகழ்வாகும்.

உலக அளவில்

கிறிஸ்து (ஈசா) (அலை) பிறப்பதற்கு பல ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பிலிருந்து வணிகம் நடத்தியவர்கள் அரேபியர்கள். அரேபியர்களது நாட்டில் இஸ்லாம் தோன்றியதும் அண்ணலார் (ஸல்) அவர்கள் மார்க்கத்தைப் போதித்தும் அதனை அகிலம் முழுவதிலிருந்து மன்னர்களும் மற்றவர்களும் அறிந்ததும், அதன்பின்னர் அண்ணலார் (ஸல்) அவர்களை நேரில் சென்று சந்தித்து உரையாடியதும் அப்போதே மலையாளக்கரையினில் இஸ்லாம் வேகமாகப் பரவியதும் சரித்திரத்தின் சாட்சியங்களாகும்.

---

* *The Encyclopedia Americana, International Edition, Sabean, Page 77-78.*

** *சாலமன் பாப்பையா, அகநானூறு, குறிஞ்சித்திணை, தொகுதி*I, *சென்னை, 2021, பக்கம் 264.*

சேரமான் பெருமாள்

கேரள சரித்திரத்தில் அண்ணலார் (ஸல்) காலத்திலோ அல்லது அதைத் தொடர்ந்தோ அரசாட்சி செய்த கேரள மன்னர் (சேரமான் பெருமாள்) ஒருவர் இஸ்லாத்தை ஏற்றுக்கொண்டார் என அநேகமாக எல்லா சரித்திர ஆசிரியர்களும் ஏற்றுக்கொண்டுள்ளனர்.

எந்த மன்னர்? எப்போது? என்பதில் தான் அபிப்பிராயபேதங்கள் கருத்து வேறுபாடுகள் உள்ளன. அதனை ஆராயவேண்டியது அவசியமாகிறது.

திருஞானசம்பந்தர்

கிரேக்கத்து மெகஸ்தனீஸ் குறிப்பில் சேரர்களை **'சேரமான்கள்'** என்று அழைக்கிறார். திருஞானசம்பந்தர் தமது பதிகங்களில் **'சேரர்'**, **'சேரலர்'** என்னும் சொற்களைப் பயன்படுத்துகிறார். திருஞான சம்பந்தர் வாழ்ந்தது ஏழாம் நூற்றாண்டில். எனவே ஏழாம் நூற்றாண்டில் அச்சொல் வழக்கில் வந்துவிட்டது.*

பதிற்றுப் பத்து

சங்க கால எட்டுத்தொகை நூல்களில் ஒன்று பதிற்றுப்பத்து கிடைத்துள்ளது அதில் எட்டு புலவர்கள் எட்டுச் சேர அரசர்களைப் பாடியுள்ளனர். இதில் ஐந்துபேர் ஒரே மரபினர்; மூவர் மற்றொரு மரபினர் ஆவர்.

உதியன் - பொறையன்

சேரர் குடி வழி உதியன் குடும்பம், பொறையன் குடும்பம் எனப்பிரிக்கப்படும். இதில் சேரமான் பெருமாள் உதியன் குடும்பத்தைச் சேர்ந்தவர் ஆவார். இமயவரம்பன் வானவரம்பன் கி.மு.30,000க்கு முற்பட்டவர் என்று கூறுவர். அதுகளுக்குள் செல்லாமல் இஸ்லாத்தைத் தழுவிய சேரமான் பெருமாள் யார்?

---

* மயிலை சீனி. வேங்கடசாமி, சேரர் தமிழ்நாட்டு வரலாறு, சங்ககாலம், அரசியல், தமிழ்நாடு அரசு வெளியீடு, சென்னை, 1983 பக்கம் 133. (நூல் விலை 37 ரூபாய் 15 பைசா, நூல் 672 பக்கங்கள்)

முதலாம் குலசேகரப் பெருமாள் கி.பி. 257 – கி.பி. 269
சேங்கால் அல்லது வீரராகவப் பெருமாள் கி.பி. 269 – கி.பி. 281
இரண்டாம் குலசேகரப் பெருமாள் கி.பி. 293 – கி.பி. 305
முதலாம் பாஸ்கர இரவி வர்மன் கி.பி. 350 – கி.பி. 385
மூன்றாம் குலசேகரப் பெருமாள் கி.பி. 450 – கி.பி. 462

முதலாம் சேரமான் பெருமாள்

முதலாம் சேரமான் பெருமாள் கி.பி.677 – கி.பி.712
தம்பிரான் தோழர் பெருமாள் கி.பி.712 – கி.பி.754
இரண்டாம் சேரமான் பெருமாள் கி.பி.754 – கி.பி.798
மார்த்தாண்டவர்மன் கி.பி.798 – கி.பி.850
மூன்றாம் சேரமான் பெருமாள் கி.பி.793 – கி.பி.834

என்று ஒரு பட்டியலைத் தருகிறார். திருமந்திரமணி துடிசைக் கிழார் அ. சிதம்பரனார்.*

அ. சிதம்பரனார் தந்த பட்டியலில் இடையிடையே **ஆட்சியாண்டுகள் விடுபட்டிருக்கின்றது. அடுத்த முதலாம் பாஸ்கர இரவிவர்மான்** என்று குறிப்பிட்டுவிட்டு அடுத்து முதலாம் சேரமான் பெருமாள் என்று குறிப்பிட்டுவிட்டு இரண்டாம் சேரமான் பெருமாள் என்றும் குறிப்பிட்டுவிட்டு மூன்றாம் சேரமான் பெருமாள் பற்றி குறிப்பிடுகையில் அவரது இயற்பெயர் பாஸ்கர இரவிவர்மன் என்கிறார்.

பெருமாள்

சேர அரசர்களில் பலர் ‘பெருமாள்’ என்ற பட்டம் வகுத்துக்கொண்டு ஆட்சி செய்திருக்கிறார்கள். பெருமாள் என்றால் என்ன?

‘பெருமாள்’ சொல்லின் வரலாறு

புராண – இதிகாசப்படி பரசுராமர் தனது தவத்தால் கடலில் பரசுவை (கோடாரியை) வீசி எறிந்தார். கோ கர்ணம் முதல் கன்னியாகுமரி வரை 1100 கி.மீ. தூரம் கொண்ட நிலப்பரப்பு உருவாயிற்று. அதில் தமது மரபைச் சேர்ந்த 64 குடும்பத்தாரை அழைத்து வந்து 64 கிராமங்களில் குடியமரச் செய்தார். 64 குடும்பத்தார்தான் கேரளத்து நம்பூதிரிகள்.

---

* சேரர் வரலாறு, சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், திருநெல்வேலி (முதற் பதிப்பு 1954) இரண்டாம் பதிப்பு 1962, பக்கம் 206.

நான்கு பிரிவு (கலக்கம்)

64 கிராமங்கள் நிர்வாக வசதிக்காக நான்கு பிரிவுகளாகப் (கலக்கம்) பிரித்தனர். **பெருஞ்செல்லூர், பையனூர், பட்டப்பூர், செங்கனூர் (செங்குன்றூர்)** *இந்த நான்கு பிரிவுகளுக்கும் தலா 16 கிராமங்கள் உள்ளடங்கும். 64 கிராமங்களிலும் கிராம சபை ஏற்படுத்தப்பட்டது.*

இரட்ச புருஷர் (Protector)

நான்கு கலக்க (பிரிவு) சபையோர்களும் சேர்ந்து தங்களுக்குள் ஒரு ஆட்சிக் காவலரை **இரட்சபுருஷரை (Protector)** *தேர்ந்தெடுத்தனர்.*

அவரோதி நம்பி

ஆட்சிப் பேராளரான இரட்சபுருஷருக்கு **'அவரோதி நம்பி'** *என்ற பட்டமும் தந்தார்கள். இவரது ஆட்சியே பல்லாண்டு காலம் நடந்தது.*

'திருநாவாய்' கூட்டம்

64 கிராமங்கள் ஒன்றுக்கொன்று தொலைவில் இருந்தது. உள்நாட்டில் போக்குவரத்து வசதிகள் சரிவர இல்லை. 'கலக்க' நான்கு பிரிவினருக்குள் கலகங்கள் நடந்தது. அவரோதி நம்பி தன்னைக் கேட்க எவரும் இல்லாத காரணத்தால் அக்கிரமம் செய்யத் தலைப்பட்டார். எனவே 64 கிராமங்களில் நம்பூதிரிகளும் திருநாவாய் என்ற ஊரில் ஒன்று கூடி சில முக்கிய முடிவெடுத்தனர்.

வேற்று நாட்டிலிருந்து வேந்தர்

கிராமங்கள் பரிபாலனம் இனி அவரோதி நம்பியிடம் கிடையாது. சேர, சோழ, பாண்டிய, கொங்கு, துளு, வாணமண்டலங்களில் உள்ள அரசர்களையோ அவர்களைச் சேர்ந்தவர்களையோ தேர்ந்தெடுக்க வேண்டும்.

பன்னிரெண்டு ஆண்டுகள்

அவ்வாறு தேர்ந்து எடுக்கப்பட்டவர் பன்னிரண்டு ஆண்டுகள் ஆட்சி செய்ய வேண்டும். **அவ்வாறு தேர்ந்து எடுக்கப்படுபவர் இயற்பெயருடன் பெருமாள் என்ற பட்டமும் கொடுக்க வேண்டும்.**

கொங்கு நாட்டிலிருந்து

நம்பூதிரிகள், பன்னிரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை 'பெருமாளை' தேர்ந்தெடுக்க வேண்டும் என்று செய்த முடிவிற்கேற்ப முதன் முதலில் கி.பி.216இல் கொங்கு நாட்டிலிருந்து பெருமாள் தேர்வு செய்யப்பட்டார்.

கோயைப் பெருமாள்

கோயை, கோவை என்று குறுகிய பெயரால் கோயைப் பெருமாள் முதல் பெருமாள் சேரமான் கேரளன் கோயைப் பெருமாள் கி.பி.216 – கி.பி.225 வரை ஆட்சி புரிந்தார்.

கொச்சி சமஸ்தான ரிப்போர்ட்

சோழ, பாண்டிய, வள்ளம், துளு, இந்திரயன், ஆரிய, கந்த, குட்டி, முண்ட, எலி, கொம்பன், விஜய, வல்லுவ, அரிச்சந்திர, மல்லன், குலசேகர, சேரமான் என பல பெருமாள்கள் ஆட்சி புரிந்தனர் என்று கொச்சி சமஸ்தான ரிப்போர்ட் கூறுகிறது.

கேரளோற்பத்தி

கி.பி.216இல் இருந்து கி.பி.798 வரை மொத்தம் 25 பெருமாள்கள் தேர்ந்து எடுக்கப்பட்டிருக்கிறார்கள் என்று கேரளோற்பத்தி நூல் கூறுகிறது.

சேரமான் கேரளன் கி.பி. 216 – கி.பி. 225
சோழ பெருமாள் கி.பி. 225 – கி.பி. 236
பாண்டி பெருமாள் கி.பி. 236 – கி.பி. 245
பூதராய பெருமாள் கி.பி. 245 – கி.பி. 257
கேரள பெருமாள் கி.பி. 257 – கி.பி. 269
சேங்கால் பெருமாள் கி.பி. 269 – கி.பி. 281
சோழிய பெருமாள் கி.பி. 281 – கி.பி. 293
குலசேகர பெருமாள் I கி.பி. 293 – கி.பி. 305
பாண பெருமாள் கி.பி. 305 – கி.பி. 317
துலாபன் பெருமாள் கி.பி. 317 – கி.பி. 329
இந்திரயன் பெருமாள் கி.பி. 329 – கி.பி. 341
ஆரிய பெருமாள் கி.பி. 341 – கி.பி. 353
கந்தன் பெருமாள் கி.பி. 353 – கி.பி. 365
குட்டி பெருமாள் கி.பி. 365 – கி.பி. 366
மாடன் பெருமாள் கி.பி. 366 – கி.பி. 378

எலி பெருமாள் கி.பி. 378 – கி.பி. 390
கொம்பன் பெருமாள் கி.பி. 390 – கி.பி. 402
விஜய பெருமாள் கி.பி. 402 – கி.பி. 414
வல்லப பெருமாள் கி.பி. 414 – கி.பி. 426
அரிச்சந்திர பெருமாள் கி.பி. 426 – கி.பி. 438
மல்லன் பெருமாள் கி.பி. 438 – கி.பி. 450
குலசேகர பெருமாள் II கி.பி. 450 – கி.பி. 462

கி.பி. 462க்குப் பிறகு 22 பெருமாள் பட்டியலைத் தொடர்ந்து பல ஆண்டுகளுக்கு பெருமாள் பட்டியல் கிடைக்கவில்லை.

கி.பி. 462 - 764

கி.பி. 462 லிருந்து கி.பி.764 வரையிலான கேரளத்தை ஆட்சிபுரிந்த சேரமான் பெருமாள்கள் பற்றிய விவரங்கள் கிடைக்கவில்லை.

கி.பி. 765 இலிருந்து 777 வரை அதிராஜன் பெருமாள்

கி.பி. 777 இலிருந்து 789 வரை பாண்டி பெருமாள்

கி.பி. 789 இலிருந்து 799 வரை 4வது சேரமான் பெருமாள் ஆட்சி புரிந்ததற்கான குறிப்புகள் கொச்சி சமஸ்தான ரிப்போர்ட்டிலும் கேரளோற்பத்தியிலும் உள்ளது.

303 ஆண்டுகள்

கி.பி. 462 லிருந்து கி.பி. 765 வரை 303 ஆண்டுகள் பெருமாள்கள் இல்லாமல் இருப்பதை மேலே கூறியவற்றால் அறியலாம்.[*]

அண்ணல் நபி (ஸல்) காலம் கி.பி.570 – கி.பி.632 என்பதை அறிவோம். **அப்போது சேர நாட்டை ஆட்சி புரிந்த பெருமாள்கள் பட்டியலும் இல்லை என்பதனை கவனத்தில் கொள்வோம். ஆய்வினைத் தொடர்வோம்.**

சேரமான் பெருமாள் நாயனார்

சேரர் மரபில் தோன்றிப் புலமையால் சிறப்புற்று, சைவ சமயச்சான்றோராகிய மன்னர் சேரமான் பெருமாள். இவர்

---

[*] *அ.சிதம்பரனார், துடிசைக்கிழார், சேரர் வரலாறு, சென்னை 1962 பக்கம் 268.*

பாடிய பாடல்கள் பன்னிருதிருமுறையில் பதினோராவது திருமுறையில் பக்திச் சுவை நனிசொட்டச்சொட்ட அமைந்துள்ளது.

நாற்பதில் மூன்று

பதினோராந் திருமுறை பன்னிரு புலவர்கள் பாடிய 40 நூல்கள். இதில் சேரமான் பெருமாள் நாயனார் பாடியது நூற்கள் மூன்று.*

பொன்வண்ணத்திருவந்தாதி

'பொன் வண்ணம்' எனும் தொடரை முதலாகக் கொண்டு 'பொன் வண்ணமே' எனும் 100வது பாடலில் முடியும் அந்தாதி நூல் இது. ஆதியும் அந்தமும் இல்லாத இறைவனைக் குறித்த பாடல்கள் இவை.

இறைவனது அருவம்
(உருவமற்றவன்) உருவம்
அருவுருவமென்ற மூவகை
விளக்கமும் இதில் உள்ளது.**

திருவாரூர் மும்மணிக்கோவை

திருவாரூரில் எழுந்தருளியுள்ள பெருமாள் மீது சேரமான் பெருமாள் பாடிய பிரபந்தம் திருவாரூர் மும்மணிக் கோவை அகவல் 10, வெண்பா 10, கட்டளைக்கலித்துறை 10 என முப்பது பாடல்களால் இது ஆனது.

திருக்கைலாய ஞான உலா

சேரமான் பெருமாள் நாயனார் அருளிய திருக்கைலாய ஞானவுலா 1952 இல் வெளிவந்தது. திருமயிலை வித்வான் சண்முகம் பிள்ளை (1905 இல் எழுதிய) உரையை வாசித்துள்ளேன். 197 கண்ணிகள், நூல் 75 பக்கங்கள்.

---

* பி.ரா. நடராசன், பதினோராந் திருமுறை மூலமும் உரையும், சென்னை 2005, பக்கம் 77-194.

** பொன். சுப்பிரமணிய பிள்ளை, சேரமான் பெருமாள் நாயனார் அருளிச் செய்த பொன்வண்ணத்தந்தாதி, திருவிடைமருதூர், 1963 பக்கம் 3. கா. பொன்னுசாமி நாட்டார் 1935இல் இதற்கு உரை செய்துள்ளார். நூல் விலை அணா ஆறு. (நூல் 121 பக்கங்கள்)

சுந்தரமூர்த்தி நாயனாரோடு சேரமான் திருக்கயிலாயத்திற்குச் சென்றபோது கயிலாத நாதரை வணங்கி இவ்வுலாவை அவர் திருமுன் புகன்றார்.*

மாசாத்தா

சேரமான் பெருமாள் நாயனார் அரங்கேற்றிய திருக்கைலாய ஞானவுலாவை, திருக்கயிலையில் அன்று கேட்டிருந்த **மாசாத்தா** என்பவர், திருப்பிடவூரில் இதை வெளிப்படுத்தி நிலை பெற அருளினார்.**

சாத்தனார்

சேரர் பாடிய திருக்கயிலாய உலாவை கயிலையில் உடனிருந்து கேட்ட சாத்தனார் (ஐயனார்) அதனை மண்ணுலகத்திற்கு கொண்டு வந்து சோழ நாட்டுப்படவூரில் யாவரும் அறிய வெளிப்படுத்தினார்.***

பெருமாக்கோதை

மலைநாட்டிலே, மகோதையென்றும் பெயருடைய கொடுங்களூரிலே சேரர் குடியில் பிறந்தவர் பெருமாக்கோதை சிறந்த சிவபக்தர்.

செங்கோற் பொறையன்

செங்கோற் பொறையன் என்ற சேர அரசர் பக்தியால் நாட்டங்கொண்டு பாராளும் ஆசையைத் துறந்தார். திருவஞ்சைக்களத்தில் திருத்தொண்டு செய்து வந்த பெருமாக்கோதையைச் சந்தித்து, வணங்கி, ‘இம்மலைநாட்டை நீரே முடிசூடி அரசியற்றல் வேண்டும்‘ என்றார். அவ்வாறே அவரும் ஆட்சிச் பொறுப்பை ஏற்றார்.

---

* சே.வெ.ஜம்புலிங்கம், முகவுரை, திருக்கைலாய ஞானஉலா, ஸ்ரீகுமரகுருபரன் சங்கம், திருவைகுண்டம், 1952.

** பு.பா.இரத்தினசபாபதி நாயகர் விருத்தியுரை, சேரமான் பெருமானாயனார் அருளிச்செய்த திருக்கயிலாய ஞானவுலா, பா.ல. முருகேச நாயகர் வெளியிட்டது. சென்னை, 1936. விலை அணா பன்னிரண்டுல பக்கம் 4 (நூல் மொத்தம் 88 பக்கங்கள் முன்னுரை 6 + 94 பக்கங்கள்)

*** மறை. திருநாவுக்கரசு, சுந்தரர் வரலாற்று ஆய்வுரை, சென்னை 1973, பக்கம் 232.

சேரமான் பெருமானாயனார் புராணம்

சேக்கிழார் பெரியபுராணத்தில் 175 பாடல்களில் (கழறிற்றறிவார் புராணம், வெள்ளானைச் சுருக்கம்) இவரின் வரலாற்றை விவரித்துள்ளார். யாழ்ப்பாணத்து ஆறுமுகநாவலர் அதனை வசனப்படுத்தி எழுதியுள்ளார்.

நகர்வலம்

பெருமாக்கோதை யானையில் நகர்வலம் வந்தார். உவர்மண் ஊறப்பெற்று வெளுத்திருந்த சலவையாளர் (வண்ணார்) (ஈரங்கொல்லி) ஒருவரைக்கொண்டு, விபூதி பூசிய சிவனடியார் என வணங்கியது, மதுரையிலிருந்து பாணபத்திரர் சிவபிரானிடமிருந்து ஓலை கொண்டு வந்தது. பெருமளவில் தானங்கள் பெற்றது.

உடைவாள்

தனது உடைவாளை உருவித் தமது மார்பிலே நாட்ட முயன்றது. சுந்தர மூர்த்தி நாயனார் சந்தித்தது, பின் அவருடன் கயிலை சென்றது. இவைகளை விவரித்திருப்பார்.*

திருக்கயிலையில் ஒரே நாளில் நால்வர்

சுந்தரரும், சேரமான் பெருமாளும், திருக்கயிலை அடைந்த அதே நாளில் (ஆடி சுவாதி) பெருமிழலைக் குறும்பநாயனாரும், ஔவையாரும் திருக்கயிலையை அடைந்தனர் என்ற செய்தியும் உண்டு.**

ஆதியந்தவுலா

தமிழ் இலக்கிய மரபில் திருக்கயிலாய ஞானஉலா முதல் உலா ஆகும். '**ஆதியந்தவுலா ஆசுபாடிய சேரர்**' என்று திருப்புகழில் அருணகிரிநாதர் பாராட்டுவார்.

---

* *தவத்திரு ஆறுமுகநாவலர், திருக்கைலாய ஞானஉலா, பதிப்பாசிரியர் செ. இராதாகிருஷ்ணன், சென்னை, 2014, பக்கம் 3-11.*

2.1.2015 தினமணி வெள்ளிமணியில் மயிலை சிவா எழுதிய சேரமான் பெருமாள் நாயனார் திருக்கயிலாய ஞானவுலா பாடிய வரலாறு கட்டுரையினையும் படிக்கலாம்.

** *மருத்துவர் கைலாசம் சுப்ரமணியம் ஒரே தினத்தில் திருக்கயிலை அடைந்த நால்வர், தினமணி, வெள்ளிமணி, 17.7.2015.*

கயிலாயம் - ஞானஉலா

197 கண்ணிகள் கொண்ட திருக்கயிலாய ஞானஉலா, கலி வெண்பாவால் பாடப்பட்டது. **இந்த நூலில் கயிலாயம் என்ற சொல்லோ, ஞான உலா என்ற சொல்லோ இடம்பெறவில்லை. பின் இந்த நூலிற்கு இப்பெயர் எவ்வாறு ஏன் சூட்டப்பட்டது என்று தெரியவில்லை.** கயிலாயத்தின் வருணனையும் நூலினுள் இடம்பெறவில்லை*என்பதனை கருத்தில் கொள்ள வேண்டுகிறேன்.

சேரமான் திருக்கயிலை செல்லல்

சேரர் பெருமான் திருக்கயிலை சென்றமைக்கும் இன்றுள்ள சுந்தரர் திருப்பதிகங்களில் இருந்து சான்று காண்டற்கில்லை என்பார் பேராசிரியர் கு.சுந்தரமூர்த்தி** இதனையும் கருத்தில் கொள்ள வேண்டுகிறேன்.

சைவத்திருக்கோயில்களில்

சைவத்திருக்கோயில்களில் திருமுறைகள் பாடப்படுகின்றன. ஆனால் திருக்கைலாய ஞானஉலா பாடப்படுவதில்லை. வைணவத் திருக்கோயில்களில் ஆழ்வார்களின் பிறந்த நாளன்று அவர்கள் பாடிய பாடல்கள் முழுவதையும் வைணவர் ஓதுவர். **சேரமான் பெருமாள் நாயனாரின் குருபூசை அன்றுகூட சைவத்திருக்கோயில்களில் சேரமான் பெருமாள் நாயனாரின் ஞானஉலா ஓதும் மரபு காணப்படவில்லை** என்றும் சு.வேங்கடராமன் கூறுவார்.*** இதனையும் கருத்தில் கொள்ள வேண்டுகிறேன்.

சேரமான் பெருமாள் நாயனார் காலம்

சைவசமயத்தைச் சேர்ந்த பதினோராந் திருமுறையில் வரும் 40 நூற்களில் மூன்று நூல்கள் பாடிய சேரமான் பெருமாள் நாயனார் காலம் எது?

---

* முனைவர் சு.வேங்கடராமன், தமிழர் சமயமரபுகள், மதுரை, 2007, பக்கம் 7, (நூல் விலை 55 ரூபாய், மொத்தப் பக்கங்கள் 136)

** சுந்தரர் வரலாற்றாராய்ச்சியும் தேவாரத்திறனாய்வும், சென்னை - 1978, பக்கம் 70,71

*** முற்கூறிய நூல் பக்கம் 19.

அ. சிதம்பரனார்

ஆராய்ச்சி அறிஞர் அ. சிதம்பரனார் தனது சேரர் வரலாறு நூலில் (1954) முதலாம் சேரமான் பெருமாள் பிறந்தது கி.பி.642. ஆட்சியினைக் கைக்கொண்டது கி.பி.667. ஆட்சியினைக் கைவிட்டு விலகியது கி.பி.712 கயிலை சென்றது கி.பி.712 என்ற அறுதியிட்டுள்ளார்.

எனவே சைவ சமயத்தைச் சேர்ந்த புகழ்மிக்க சேரமான் பெருமாள் நாயனார் காலம் (கி.பி.642 – 712). இவரது காலம் கி.பி. எட்டாம் நூற்றாண்டு ஆகும். (சி.அருணைவடிவேல், உரையாசிரியர் பதினொன்றாந் திருமுறை தருமபுர ஆதீனம் வெளியீடு, 1995, 2014 பக்கம் அ 110 நூலில் அ 154 பக்கங்கள். அடுத்து 1030 பக்கங்கள், மொத்தம் 1140 பக்கங்கள்). அண்ணலார் (ஸல்) அவர்கள் காலம் கி.பி. 570 – 632) ஆகும். எனவே அண்ணலார் (ஸல்) காலத்தில் இஸ்லாத்தைத் தழுவிய சேர மன்னர் வேறொருவர் ஆவார்.

தி.வை.சதாசிவப்பண்டாரத்தார் – மு. இராகவ ஐயங்கார்

தஞ்சையிலிருந்து வெளிவந்த தமிழ்ப்பொழில் இதழ் மூன்றாம் துணரில் சுந்தரமூர்த்திகளது காலம் பற்றி எழுதிய தி.வை. சதாசிவப் பண்டாரத்தாரும், ஆழ்வார்கள் காலநிலை நூல் பக்கம் 135–134இல் எழுதிய மு.இராகவஐயங்காரும் சுந்தரரது காலம் கி.பி.ஏழாம் நூற்றாண்டின் **பிற்பகுதியில் எட்டாம் நூற்றாண்டின்** தொடக்கமும் ஆகும் என்பர்.

சீனிவாசபிள்ளை – டி.ஏ.கோபிநாதராவ் – மா.இராசமாணிக்கனார்

தமிழ் வரலாறு – நூலில் சீனிவாசபிள்ளையும் செந்தமிழ் 3ஆம் தொகுதியில் டி.ஏ.கோபிநாதராவும் பெரியபுராண ஆராய்ச்சி நூலில் மா.இராசமாணிக்கனாரும் சுந்தரர் காலம் கி.பி. ஒன்பதாம் நூற்றாண்டின் இடைப்பகுதி என்பார்கள். சேரமான் பெருமாள் நாயனார் ஆட்சியைவிட்டுச் சென்ற காலம் கி.பி.825 என்பது அந்நாட்டவர் வழிவழியாகக் கூறிவரும் கூற்றாகும். இக்கால ஆய்வாளர்களின் கூற்றைத் தழுவி சுந்தரர் காலம் **கி.பி.ஏழாம் நூற்றாண்டின் இறுதியும் எட்டாம் நூற்றாண்டின்** தொடக்ககாலம் எனக் கோடலில் இழுக்கில்லை.*

---

* கு.சுந்தரமூர்த்தி சுந்தரர் வரலாற்றாராய்ச்சியும் தேவாரத் திறனாய்வும், சென்னை 1978, பக்கம் 73, 74, 79.

கயிலாயம் சென்ற சேரமான் பெருமாள்

சைவ சமயத்தில் முக்கியமானவராகப் போற்றப்படும் கழறிற்றறிவார் என்ற முதலாம் சேரமான் பெருமாள். இவர் இஸ்லாத்தை ஏற்றுக்கொண்டவர் அல்ல. அவர் காலம் அதுவல்ல; அண்ணலார் (ஸல்) காலம் வேறு ஆகும்.

இரண்டாம் சேரமான் பெருமாள்

இரண்டாம் சேரமான் பெருமாள் பிறந்தது கி.பி.730. அரசு கட்டிலில் ஏறியது கி.பி.754. 'பெருமாள்' என்னும் பட்டம் பெற்றது கி.பி.789. அரசைக் கைவிட்டது கி.பி.798. பரமபதம் சேர்ந்தது கி.பி.803.

திராவிட விருத்தர்

திராவிட விருத்தர் எனனும் த்ரடவ்ரதரின் பிள்ளையாகப் திருவஞ்சைக்ககளத்தில் பிறந்தவர். சேர அரசர்கள் எல்லாம் சைவர்கள். ஆனால் இவரோ வைணவர்.

வைணவ ஆழ்வார்கள்

வைணவ ஆழ்வார்கள் பன்னிருவரில் ஒருவர் இவர். வடமொழியில் '**முகுந்தமாலா**' தமிழில் '**பெருமாள் திருமொழி**' (பத்துப்பதிகங்கள், 105 பாசுரங்கள்) பாடியவர்.

குலசேகர ஆழ்வார்

கி.பி.8ஆம் நூற்றாண்டில் பிறந்தவர் குலசேகர ஆழ்வார். இவரது பிறப்பிடம் '**கொல்லிநகர்**' என்று ஒரு நூல் கூறும் '**கோழிக்கோடு**' என்று மற்றொரு நூல் சொல்லும்; '**வஞ்சிக்களம்**' என்று ஒரு நூல் உரைக்கும்.

சேரவல்லி

பிறிதொரு நூலில் 'கூடல்' என்று குறிப்பிடும் குலசேகர ஆழ்வாருக்கு ஒரு மகள் இருந்ததாகவும், அவள் பெயர் சேரவல்லி என்றும், அவளைத் தென்னரங்கன்சீர் அருளுக்கு இலக்காக்கி அவனுக்கே மணம் முடித்துக் கொடுத்ததாகவும் ஒரு நூல் பேசும். மற்றொரு நூலே இது பற்றி மௌனம் சாதிக்கும்.

இராம கதை

இராம கதை கேட்ட குலசேகர ஆழ்வார் இராமபிரானுக்கு நேர்ந்த துயர் துடைக்கப் படைத்துணையாகப் புறப்பட்டதை

ஒரு நூல் விரித்துப் பேசும். வேறொரு நூலோ அதைவிடுத்து ஆழ்வார் கனவில் திருமால் காட்சி தந்ததாகக் கூறிக் கதைபோக்கிலே புதுமை சேர்க்கும் என்பார் வைணவ ஆராய்ச்சிப் பேராசிரியர் ம.பெ.சீனிவாசன்.*

குலசேகரரின் வாழ்க்கையை அறிய

வடமொழியில் கருடவாகன பண்டிதர் இயற்றிய அனந்தாசாரியார் இயற்றிய **திவ்யசூரிசரிதம்**, **பிரபந்நாம்ருதம்** தமிழும் வடமொழியும் கலந்த மணிப்பிரவாள நடையில் எழுதப்பட்ட பின் பழகிய பெருமாள் ஜீயர் அருளிய '**ஆறாயிரப்படி குருபரம்பரை**', வடிவழகிய நம்பி தாசர் பாடிய '**ஆழ்வார்கள் வைபவம்**' கீழையூர் சடகோபதாசரின் '**அரியசமயதீபம்**' சுவாமி தேசிகரின் '**பிரபந்தசாரம்**' மணவாளமாமுனிகள் அருளிய '**உபதேசரத்திமாலை**' போன்ற நூல்களின் வாயிலாக ஆழ்வார்களின் வரலாற்றை அறியலாம்.

திடவிரதன்

திடவிரதன் மலை நாடாகிய சேரநாட்டின் மன்னன் பலநாள் பிள்ளைப் பேறின்றி இருந்த மன்னனுக்கு மகன் பிறந்தான். 'குலசேகரன்' என்று பெயர் சூட்டினான். சிறப்புகள் பல பெற்று வளர்ந்தான் குலசேகரன்.

கோழிக்கோன் குலசேகரன் - கொல்லி காவலன் - கூடல் நாயகன்

கோழிக்கோள் குலசேகரன், கொல்லி காவலன், கூடல் நாயகன் என்று பல விருதுகள் பெற்று மூன்று நாடுகளுக்கும் தலைவன் என்ற நிலைக்கு குலசேகரன் உயர்ந்தான்.

திடவிரதன் பதவி துறப்பு

தனது முதுமை கருதி திடவிரதன் அரசு துறந்தான். அவரது மகன் குலசேகரன் முடிசூடினார். பாண்டிய அரசரின் புதல்வியை மணந்தார். புதல்வன் – புதல்வியைப் பெற்றார். காலங்கள் கடந்தன. அரச வாழ்வில் வெறுப்பு ஏற்பட்டது. குலசேகரர் தமது புதல்வர் திடவிரதனுக்குப் பட்டம் சூட்டினார். நூல்கள் இயற்றினார். இறைத் தொண்டு புரிந்தார்.

---

* குலசேரகர ஆழ்வார், சாகித்திய அகாதெமி, புதுதில்லி, முதற்பதிப்பு, 2002. இரண்டாம் பதிப்பு 2015, பக்கம் 18.

சேரர்குடி

குலசேகரர் சேரநாட்டு அரசர் என்பது பொதுவாக அனைவராலும் ஏற்கப்பட்ட ஒரு கருத்தாகும்.

ஆர். அரிஹரமையர்

அம்பாசமுத்திரம் ஆசிரியர் ஆர்.அரிஹரமையர் 1930இல் இரண்டு பாகங்களாக 'ஆழ்வார் ஸ்ரீ குலசேகரர்' எனும் 88 பக்கங்களைக் கொண்ட நூலைத் தந்துள்ளார்.

தெ.பொ.மீனாட்சி சுந்தரன

1961இல் கோவையிலிருந்து தெ.பொ.மீனாட்சி சுந்தரனார் குலசேகரர் எனும் 160 பக்கங்களைக் கொண்ட நூலை வெளியிட்டுள்ளார்.

மதி. சீனிவாசன்

சென்னை வைணவக் கல்லூரி பேராசிரியர் டாக்டர் மதி.சீனிவாசன் 'கொல்லி காவலன்' எனும் 156 பக்கங்களைக் கொண்ட நூலை 1982இல் தந்துள்ளார்.

குலசேகரன் வீதி

அரச பதவியைத் துறந்த குலசேகரர் திருவரங்கத்தில் தங்கி இறைப்பணி ஆற்றினார். தற்போதும் திருவரங்கத்தில் ஓர் வீதிக்கு குலசேலகரன் வீதி என்று பெயரிடப்பட்டுள்ளது.*

குலசேகரன்படி

'படியாய்க் கிடந்து உன்பவளவாய்க் காண்பேனே' என்று பாடியவர் குலசேகர ஆழ்வார். எனவே விஷ்ணு ஆலயங்களில் கோயிலினுள் வாயிற்படி குலசேகரன்படி என்று குலசேகரர் பெயரால் வழங்கப்படும்.**

---

* பிரசங்கபூஷணம் பு.பா.இரத்தினசபாபதி நாயகர் விருத்தியுரை, குலசேகராழ்வார். திருவாய் மலர்ந்தருளிய பெருமாள் திருமொழி மூலம், அல்லூரர் ப.எல்லப்ப நாயகர் முயற்சியில் வெளியானது. சென்னை கந்தன் அச்சுக்கூடம் 1928, விலை ஒரு ரூபாய் பன்னிரண்டு அணா பக்கம் 13. (நூல் மொத்தம் 147 பக்கங்கள்)

** பெருமாள் கோயில் பிரதிவாதி பயங்கரம் அண்ணங்கராச்சார்யார் இயற்றிய திவ்யார்த்த தீபிகை உரை ஸ்ரீகுலசேகர ஆழ்வார் அருளிச் செய்த பெருமாள் திருமொழி எம்.ஆர். கோவிந்தசாமி நாயுடு அச்சுக்கூடம், மதறாஸ், இரண்டாம் பதிப்பு, 1930, பக்கம் 8 (மொத்தம் நூல் 149 பக்கங்கள்)

குலசேகர ஆழ்வார்

சேரர் குடிபெயர்களான கோதை, வில்லவன், வானவன், குட்டுவன் போன்றவற்றால் குலசேகரர் தன்னை அடையாளப்படுத்திக் கொள்ளவும் இல்லை. தம்மைச் சேரர் குடியிற்பிறந்தவராக ஓரிடத்தும் வெளிப்படையாக கூறிக்கொள்ளவில்லை என்பது கவனிக்கத்தக்கது ஆகும்.*

குலசேகரன் - பெருமாள்

குலசேகரர் தம்மைக் ‘குலசேகரன்’ என்று பல சுருதுப்பாடல்களில் குறிப்பிடுகிறார். பத்துத் திருமொழிகளின் இறுதிப் பாசுரங்கள் **‘குலசேகரன்’** என்றும் ஒருபெயரைத் தவிர ‘பெருமாள்’ என்பதை எங்குமே பயன்படுத்தவில்லை.

‘இராமனுசர் பாடிய தனியனில்
தென்னரங்கம் பாடவல்ல சீர்ப்பெருமாள்’ என்று வருகிறது.

பிள்ளை லோகம் ஜீயர்

திவ்விய பிரபந்தத் தனியன்களுக்கெல்லாம் உரை செய்த பிள்ளைலோகம் ஜீயர் வெண்பாவில் முறையே இரண்டாம் அடியிலும் நான்காம் அடியிலும் இடம்பெறும் இவ்இரண்டு பெயர்களையும் இணைத்து **‘ராஜாவான ஸ்ரீ குலசேகரப் பெருமாளிடத்திலே’** என்று உரையிடுகிறார்.

பெரியவாச்சான் பிள்ளை

‘குலசேகரன்’ என்று மட்டுமே ஆழ்வார் தம்மைக் குறித்துக்கொண்ட **பெருமாள் திருமொழிப்** பல சுருதி பாசுரத் தொடர்களுக்கு உரை விவரிக்கும்போது மூலத்தில் இல்லாத **பெருமாள்** என்பதையும் வருவித்து ‘ஸ்ரீகுலசேகரப் பெருமாள் அருளிச் செய்த **தமிழ்மாலை**’ என்று எழுதிச் செல்கிறார்.

கொடைக் குலசேகரன் சொற்செய்த (1–11) என்ற பாசுரத்திற்கு பெரியவாச்சான் பிள்ளை உரையில் கொடை மாறாதே கொடுக்கும் பெருமாள் அருளிச் செய்த என்று கூறுவார். மூலத்தில் உள்ள குலசேகரனை விடுத்துப் பெருமாளை மட்டும் இணைத்துக் கொள்வது கவனிக்கத்தக்கது என்பர் ம.பெ.ஸ்ரீனிவாசன்.**

---

* ம.பெ.ஸ்ரீனிவாசன், குலசேகர ஆழ்வார், பக்கம் 24.

** குலசேகர ஆழ்வார், பக்கம் 28.

ஆழ்வார்கள்

பெருமாள் பக்கல் கொண்ட பக்தி மிகுதியாகிய ஈடுபாட்டினால் அப்பெருமாள், மயமாதலால் ஆழ்வார்கள் பெருமாள் எனப்படுவர் என்பர் வை.மு.கோபால கிருஷ்ணமாச்சாரியார்.

அரசர்கள் - பெருமாள்கள்

சேரநாட்டு அரசர்களை பெருமாள்கள் என்று அழைப்பர். குலசேகர ஆழ்வார் அப்பெருமாள் கூட்டத்தைச் சேர்ந்தவர் ஆதலால் குலசேகரப் பெருமாள் என்று அழைக்கப்பட்டார். கழறிற்றறிவார் என்னும் பெருமாக்கோதையரும் சேரநாட்டு அரசர் அவர் சேரமான் பெருமாள் நாயனார் என்று அழைக்கப்பட்டார்.

குலசேகரப் பெருமாளின் காலம்

ஆழ்வார்கள் காலம் பொதுவாக கி.பி.700 க்கும் 900க்கும் இடைப்பட்டது என்பர் அறிஞர் எஸ்.வையாபுரிப்பிள்ளை. குலசேகரரின் காலம் கி.பி. எட்டாம் நூற்றாண்டு என்னும் முடிவுக்கு வரலாம் என்பார் ம.பெ. ஸ்ரீனிவாசன்.

மு. இராகவையங்கார்

திருவிதாங்கூர் சர்வகலாசாலைத் தமிழ்ப் பேராசிரியர் ராவ்ஸாஹிப் மு.இராகவையங்கார். திருவாங்கூர் சர்வகலாசாலைத் தமிழ்ப்பதிப்புத் தொடர் ஒன்று 1947இல் நான்கு ரூபாய் எட்டணா விலையில் 438 பக்கங்களில் வெளியிட்டார்.

சேரவேந்தர் செய்யுட்கோவை

'சேரவேந்தர் செய்யுட் கோவை' எனும் (Era vendar Ceyyutkovi with notes and comments) முதல் தொகுதியைத் தொடர்ந்து திருவிதாங்கூர் சர்வகலா சாலைத் தமிழ்பதிப்புத் தொடர் நான்கு 1951இல் வெளிவந்தது. விலை நான்கு ரூபாய் எட்டணா 496 பக்கங்கள். இவ்விரு நூல்களையும் தொகுத்தவர் மு.இராகவையங்கார். சேரர் வரலாற்றிற்கு ஒளிபாய்ச்சும் நூல்கள் இவை.

இலக்கிய சாஸன வழக்காறுகள்

மு. இராகவையங்கார் எழுதிய **'இலக்கிய சாஸன வழக்காறுகள்'** 1973இல் தமிழ்நாடு அரசால் 15 ரூபாய் 50 பைசா விலையில் 307 பக்கங்களில் வெளிவந்துள்ளது.

சேரமான் பெருமாள்

இலக்கிய சாஸன வழக்காறுகள் நூலில் பக்கம் 90 லிருந்து சேரமான் பெருமாள் பற்றி எழுதுவர் மு.இராகவையங்கார் பக்கம் 91இல் குறிப்பிடுவார்.

“குலசேகராழ்வார், அவ்வெட்டாம் நூற்றாண்டுத் தொடக்கத்தில் வாழ்ந்தவர் என்பது மிகத்தெளிவாகும் என்று நிரூபிப்பார்.”

அரச பதவியைத் துறந்த மன்னன் யார்?

சேர நாட்டை ஆட்சி புரிந்து வந்த பொறையன் உலகப் பற்றற்றுத் தன் அரசாட்சியைத் துறந்து சென்றான் என்றும், அதனால் ஆட்சி செய்ததற்குரியாரை அமைச்சர் ஆராய்ந்து முடிவில் அஞ்சைக் களத்து வாழ்ந்துவந்த பெருமாள் கோதையாரை அழைத்து வந்து முடிசூட்ட அவர் நீதி வழுவாது அரசியலை நிகழ்த்தி வந்தாரென்றும் சேக்கிழார் தம் நூலில் பாடுகிறார்.[*]

சேரமான் பெருமாளுக்கு முன் அரசு துறந்த கோவேந்தன் யாவர்? என்று கேள்வி எழுப்புவர் மு.இராகவைய்யங்கார்.[**]

தரணி நீங்கி தவம் சார்தல்

‘**நீரின் மலிந்த**’ *எனத்துவங்கும் பெரியபுராணப் பாடல் இறுதிவரை* ‘**தாரின் மலிந்த புயத்தரசன் றரணி நீத்துத் தவஞ் சார்ந்தான்**’ *என்று பாடுகிறார்.*

இவ்வாறு தரணி நீத்துத் தவச் சார்ந்தவராகக் கூறப்பட்ட சேரவேந்தர், 7,8 ஆம் நூற்றாண்டினரான திருமங்கை மன்னுக்குச் சமகாலத்தவராகவும் தம்மரசு துறந்தவராகவும் தெளியப்பட்ட நம் குலேசகரப் பெருமாள் என்றே நாம் கொள்ளக்கூடியதன்றோ என்பார் மு.இராகவையங்கார்.[***]

---

[*] *பெரிய புராணம் சேரமான் பெருமாநாயனார் புராணம் முதல் 16 வரை உள்ள செய்யுட்களைப் பார்க்கவும்.*

[**] *இலக்கிய சாஸன வழக்காறுகள், பக்கம் 90.*

[***] *ஆழ்வார்கள் காலநிலை, முதற்பதிப்பு 1929 புதிய பதிப்பு, 1981, மணிவாசகர் நூலகம், சிதம்பரம் பக்கம் 251-252. (நூல் விலை ரூபாய் 16 நூல் மொத்தம் 344 பக்கங்கள்)*

திவ்ய சூரிசரிதம்

ஸ்ரீவைஷ்ணவாசார்யத் தலைவரான இராமானுஜ முனிவரது காலத்தில் அவரது சிஷ்யர்களுள் ஒருவரான கருடவாகன பண்டிதரால் செய்யப்பட்டதும், ஆழ்வார்கள் முதல் இராமானுஜரது வாழ்க்கையின் ஒரு பகுதிவரை கூறுவதுமான வடமொழி நூல் திவ்யசூரி சரிதம் ஆகும்.

குலசேகரர்

குலசேகரர் தம் குமரர்க்குப்பட்டங்கட்டிவிட்டுத் துறவு பூண்டனர் என்று திவ்ய சரிதம் கூறும். குலசேகர ஆழ்வார் வைணவத்தைச் சார்ந்தவர். இறுதிக்காலம் வரைத் திருப்பணி செய்து மறைந்தவர். பெருமாக்கோதையர் என்பவரிடம் ஆட்சியைக் கொடுத்துவிட்டு துறவு சென்ற மன்னன் யார்?

எஸ். கிருஷ்ணசாமி அய்யங்கார்

1920இல் சென்னையிலிருந்து எஸ். கிருஷ்ணசாமி அய்யங்கார் வெளியிட்ட ஆங்கில நூல் Early History of Vaishnavism in south India. *இது* Madras University special lectures of Indian History & Archaeology *4வது வெளியீடு 112 பக்கங்களைக் கொண்டது.*

குலசேகரர் காலம்

குலசேகர ஆழ்வாரின் காலம் 12ஆம் நூற்றாண்டின் முதல் பகுதி என்று பேராசிரியர் அ.கிருஷ்ணசாமி குறிப்பிடுவார்.

Alvarkula Sekara lived in the first half of the 12th century.*

கி.பி.1088

*குலசேகர ஆழ்வாரின் காலம் கி.பி.1088க்கு முந்தியதாக இருக்கலாம் என்று அதே நூலில் கூறுவார் எஸ்.கிருஷ்ணசாமி அய்யங்கார்.***

டாக்டர் எஸ்.குலசேகரன்

வைணவத்தின் ஆழ்வார்கள் காலநிலை என்ற நூல் ஆழ்வார்களின் காலநிலை குறித்து மிக விரிவாகவும்,

---

* *S.Krishnaswami Ayyangar, Early History of Vaishnavism in South India, Madras, 1920 page 15*

** *Ibid Page 34.*

நுட்பமாகவும் ஆராய்ச்சி செய்து வெளிவந்துள்ள நூல். சென்னை திருமகள் வெளியீடாக 1988இல் வெளிவந்த இந்த நூலில் டாக்டர் எஸ்.குலசேகரன் ‘குலசேகரப் பெருமாளின் காலம்‘ கி.பி.750 – 817 என அறுதியிட்டுள்ளார். (அண்ணலார் (ஸல்) காலம் கி.பி.570 – 632)

வெவ்வேறு காலங்களில் கைலாயம் சென்ற சைவசமய சேரமான் பெருமாள், வைணவ குலசேகர ஆழ்வார் இருவரும் தத்தம் சமயக் கொள்கையில் வழுவாது நின்று இறைத் தொண்டாற்றி மறைந்தவர்கள் என்பதனை உறுதிபடுத்திக் கொள்வோம்.

அண்ணலார் (ஸல்) காலத்தில் அவர்கள் வாழ்ந்தவர்கள் அல்ல. அண்ணலார் (ஸல்) காலத்தில் புனித மெக்கா சென்று இஸ்லாத்தை ஏற்றுக்கொண்ட சேர அரசர் யார்?

பண்டைய நாளைச் சேர மன்னர்கள்

1957இல் தியாகராசர் கல்லூரி தமிழ்ப் பேராசிரியர் ஔவை சு.துரைசாமிப் பிள்ளையவர்கள் வெளியிட்ட நூல் **‘பண்டைய நாளைச் சேரமன்னர்கள்’**.

சேர மன்னர் வரலாறு

சென்னை சாந்தி நூலகம் 1960இல் அந்த நூலை **‘சேரமன்னர் வரலாறு’** என்று 408 பக்கங்களில் வெளியிட்டது.

ஔவை சு.துரைசாமிப்பிள்ளை

ஔவை சு. துரைசாமிப்பிள்ளை எழுதிய அந்த நூலின் இரண்டாவது தலைப்பு சேரநாட்டின் தொன்மை, அதில் பக்கம் 30இல் இதோ;

கேரள நாட்டு வேதியர்கள் ‘பூருவ தேசத்துப் பாணப் பெருமாள்’ என்ற ஒருவனைக் கொணர்ந்து கேரள நாட்டுக்கு வேந்தராக்கினார்கள். அவ்வேந்தன் புத்த சமயத்தை மேற்கொண்டார். புத்தர்கட்கும் வேதியர்களுக்கும் சமயச் சொற்போர் புத்தர் தோற்றனர். வேந்தன் திரும்பவும் வைதிகச் சமயத்தை மேற்கொண்டு புத்தர்களை நாட்டினின்று விரட்டிவிட்டான்.

மெக்காவுக்கு சென்றான்

நானகு ஆண்டுகட்டுப் பின் அவன் (பூருவதேசத்துப் பாணப்பெருமாள்) **மெக்காவுக்குச் சென்றொழிந்தான்** என்று வேகமாக எழுதியிருப்பார் ஔவை சு.துரைசாமிப்பிள்ளை.*

கேரளோற்பத்தி கேரளத்தை ஆட்சிபுரிந்த பெருமாள்களின் சரித்திரத்தை ஆரம்பம் முதல் இறுதிவரைக் கூறும் நூல்.

பூருவதேசத்துப்பாணப்பெருமாள்மெக்காவிற்குச்சென்றபிறகு துறவன் பெருமாள் (6), இந்திரப் பெருமாள் (12), ஆரியபுரத்து ஆரிய பெருமாள் (5), கந்தன்பெருமாள் (4), காட்டிப்பெருமாள் (11), மாடப்பெருமாள் (11), ஏழிப்பெருமாள் (12), கொம்பன் பெருமாள் (3 1/2), விஜயன்பெருமாள் (12), வல்லபபெருமாள் (11), அரிச்சந்திர பெருமாள் (13), குலசேகரப்பெருமாள் (18) ஆட்சிபுரிந்தனர். அடைப்புக்குறிக்குள் குறிப்பது மன்னர்களது ஆட்சி ஆண்டு என்பார் ஔவை சு. துரைசாமிப்பிள்ளை.**

பருடையார் மூல பருடையார்

குலசேகரப் பெருமாளுக்குப்பின் கேரளநாடு அரசர்கள் இன்றி நெடுங்காலம் இருந்தது. பருடையார் மூல பருடையார் என்றும் மக்கட் கூட்டத்தார் அரசு புரிந்தனர்.

ஆனைகுண்டி கிருஷ்ணராயர்

மக்கட் கூட்டத்தினர் ஆட்சியின்போது கருத்து வேற்றுமை ஏற்பட்டது. அவர்கள் ஆணைகுண்டி கிருஷ்ணராயரைச் சந்தித்தனர். தங்களை ஆட்சிசெய்ய ஒரு அரசரைத் தருமாறு வேண்டினர். ஆணைகுண்டி கிருஷ்ணராயர் ஒரு சத்திரியரை சேரமான் பெருமாளாய் ஆட்சி செய்யுமாறு அனுப்பினார். அவர் 24 ஆண்டுகள் ஆட்சி செய்தார்.

கிருஷ்ணராயர்

சேரமான் பெருமாள் ஆட்சியின்போது கிருஷ்ணராயர் கேரளாநட்டின் மீது போர் தொடுத்தார். முதற்போரில் சேரமான் பெருமாள் தோற்றார். இரண்டாவது போரில்

---

* ஔவை சு.துரைசாமிப்பிள்ளை சேரமன்னர் வரலாறு, சென்னை, 1960, பக்கம் 31.

** ஔவை சு.துரைசாமிப்பிள்ளை முற்கூறிய நூல் பக்கம் 31,32

சேரமான் பெருமாள் வென்றார். **இச்சேரமானும்** மெக்காவுக்கு போனார் என்று கேரளோற்பத்தி கூறுகிறது.*

மலையாள நாட்டில் இஸ்லாம்

சேரமான் பெருமாள் மெக்காவுக்குப் போனபோது கோழிக்கோட்டு வேந்தனான சாமொரின்பால் தன் உடைவாளைத் தந்துவிட்டுப் போனான் என்றும், அங்கே மெக்காவில் அவர் இறத்தற்கு முன் அரபியர் தலைவன் ஒருவனை **மலையாள நாட்டுக்கு அனுப்பினான் என்றும், அவன் வந்து மலையாள நாட்டில் இஸ்லாம் சமயத்தைப் பரப்பினான் என்றும் கேரளோற்பத்தி கிளந்துரைக்கின்றது.**

இந்த வரிகள் என்னால் எழுதப்பட்டவையல்ல ஔவை சு. துரைச்சாமிப்பிள்ளை தனது சேரமன்னர் வரலாறு நூலில் 1960 பக்கம் 33இல் தரும் தகவல். ஆ.க. ஔவை சு.துரைசாமிப் பிள்ளை தரும் தகவலில் இருந்து இரண்டு சேரமான் பெருமாள்கள் புனித மக்கா சென்று இஸ்லாத்தைத் தழுவியதை வரலாறு கூறுகிறது.

அண்ணலார் (ஸல்) காலத்தில் இஸ்லாத்தைத் தழுவிய சேரமான் பெருமாள் ஒருவர். அண்ணலார் (ஸல்) காலத்திற்குப் பிந்தைய காலத்தில் மெக்கா சென்று இஸ்லாத்தைத் தழுவிய இன்னொரு சேரமான் பெருமாள் என்பதை கேரளோற்பத்தி தெளிவிட்டுச் சொல்கிறது. இனி அவைகளைக் காண்போம்.

அமுது - மறுமலர்ச்சி

இஸ்லாமிய வார ஏடு 'மறுமலர்ச்சி' அதில் 1966இல் 'அமுது' என்பவரால் ஆரம்பிக்கப்பட்டு சேரமான் பெருமாள் தொடர் சில வாரங்கள் மட்டுமே வெளிவந்தது. முற்றுப்பெறாமல் நின்றது.

ஏ.எம்.யூசுப் - 'பால்யன்'

கி.பி.1943இல் காரைக்காலிலிருந்து வெளிவந்து கொண்டிருந்த 'பால்யன்' வார இதழில் தனது எழுத்துப் பயணத்தைத் துவக்கினார் ஏ.எம்.யூசுப்.

---

* முற்கூறிய நூல் பக்கம் 33

மலாயா நண்பன்

1948–1949 களில் சிங்கப்பூரிலிருந்து வெளிவந்த மலாயா நண்பன் தினசரி மற்றும் வாரப்பத்திரிகைகளின் ஆசிரியராகப் பணியாற்றியவர் ஏ.எம்.யூசுப்

மறுமலர்ச்சி

1950களில் திருச்சியிலிருந்து வெளிவரும் மறுமலர்ச்சி எனும் வார இதழ். இதன் ஆசிரியர் ஏ.எம்.யூசுப். 'அமுது' பத்திரிகையில் எழுதி சில வாரங்கள் மட்டுமே வெளிவந்த தொடரைத் தொடர்ந்து தகவல்களைத் திரட்டி மறுமலர்ச்சியில் எழுதியவர் ஏ.எம்.யூசுப்.

மறைவழிகண்ட மன்னர் சேரமான் பெருமாள்

மறுமலர்ச்சி வார ஏட்டில் தொடராக வெளிவந்த **'மறைவழிகண்ட மாமன்னன் சேரமான் பெருமாள்'** *1991இல் முதற்பதிப்பாக நூலாக ரூபாய் 45 விலையில் திருச்சியிலிருந்து கிரவுன் சைஸ் 382 பக்கங்களில் வெளிவந்தது.*

புதுயுகம்

சென்னை 'புதுயுகம்' பதிப்பகத்தார் **'மறைவழிகண்ட மாமன்னர் சேரமான் பெருமாள்'** *என்ற நூலை 2012இல் ரூபாய் 130 விலையில் டிம்மி சைஸில் 311 பக்கங்களில் வெளியிட்டுள்ளனர்.*

வர்த்தக வழியில் வரவேற்பு

கேரளாவிற்கு இஸ்லாம் வரும்போது வர்த்தக வழியில் வரவேற்கப்பட்டது. அன்புக்கு ஆட்பட்டு மனிதப்பண்பை வளர்த்தது. சேரமான் பெருமாள் காலத்தில் கேரள மண்ணில் இஸ்லாம் புரிய வைக்கப்பட்டது. அதைத்தொடர்ந்து தமிழகமும் புதுமை கண்டது. இந்த வரலாற்றை தனது பேனா முனையிலிருந்து வெளியிட்ட அமுதமாக 'மறைவழிகண்ட மாமன்னர் சேரமான் பெருமாள்' எனும் இலக்கியப் பொக்கிஷமாகத் தந்தவர் அண்ணன் ஏ.எம்.யூசுப்.

காலத்தைக் கணித்ததில் குறை

அந்த நாவலில் முதலாம் சேரமான் பெருமாள் காலம் கி.பி.561 என்றும், இரண்டாவது சேரமான் பெருமாள் கி.பி.598 என்றும் குறிப்பிடுவார் ஏ.எம்.யூசுப். இதில் அண்ணன்

ஏ.எம்.யூசுப் காலத்தை கணிதத்தில் சற்று கவனக் குறைவாக கணித்துள்ளார். சைவரான முதலாம் சேரமான் பெருமாள் காலம் கி.பி.667- கி.பி. 712. இவர் கைலாயம் சென்றதும் தம்பிரான் தோழர் பெருமாள் கி.பி.712 – கி.பி.754 வரை ஆட்சிபுரிந்தார். வைணவரான இரண்டாவது சேரமான் பெருமாள் கி.பி.754 – கி.பி.798 வரை அரசு புரிந்தார்.

மூன்றாவது சேரமான் பெருமாள்

கி.பி.798 முதல் 832 வரை சேர நாட்டை ஆட்சி புரிந்தவர் ஆவார்கள்.

12 பாகங்களாக பிரித்தல்

மூன்றாம் சேரமான் பெருமாள் இளவரசர் பட்டத்திற்கு வந்தது கி.பி.798. அரசு பதவியை வெறுத்து, சேர நாட்டை பன்னிரண்டு பகுதிளாகப் பிரித்ததும் மெக்காவிற்குச் சென்றதும் கி.பி.827. மெக்கா சென்று இஸ்லாமிய மார்க்கத்தில் சேர்ந்து பின் ஜாபர் (Jaffar) என்னும் இடத்தில் வாழ்ந்து மறைந்தது கி.பி.832.

ஐந்து சகோதரிகள்

ஒட்டநாட்டை மார்த்தாண்டவர்மனுக்கும் அவனது சந்ததியாருக்கும், கோழிக்கோட்டைத் தன் தம்பி மக்களுக்கும், குட்ட நாட்டை (Cochin) தனது சகோதரிகள் மூத்ததாவளி, இளையதாவளி, மூரின்னூர்தாவளி, சாலியூர்த்தாவளி, பள்ளிவிருத்தித்தாவளி ஆகிய ஐவருக்கும் மீதி ஒன்பது பகுதிகளைத் தனது சுற்றத்தார், நண்பர்கள், உறவினர்களுக்கும் கொடுத்துவிட்டு அரேபியா சென்றார். ‘சகர் முக்கல்’ துறைமுகத்தில் இறங்கினார். புனித மெக்காவை அடைந்தார். இஸ்லாமிய மார்க்கத்தைத் தழுவினார்.

அப்துல் ரஹிமான் சாமெரின்

தனது பெயரை அப்துல் ரஹிமான் சாமெரின் என்று மாற்றிக் கொண்டார். சில காலம் அங்கிருந்துவிட்டு, பிறகு கடற்கரை வழியாக ஜாபரை அடைந்தார், நோய்வாய்ப்பட்டார். கி.பி. 832இல் அங்கு மறைந்தார். அங்கு அவரது உடல் அடக்கம் செய்யப்பட்டது. இதற்கு வரலாறு ஆதாரம் எங்கே?

வில்லியம் லோகன்

வில்லியம் லோகன் (William Logan) *(1841 – 1914)* எழுதிய நூல் மலபார் மானுவெல் (Malabar Manual) இது இரண்டு தொகுதிகள். முதல் தொகுதி *759* பக்கங்கள், இரண்டாம் தொகுதி *422* பக்கங்கள். முதல் முறையாக கி.பி.*1887*லும் பின்பு *1906, 1951, 2000* ஆண்டுகளில் மறுபதிப்பு செய்யப்பட்டது.

மூன்றாவது தொகுதி *1879*இல் வெளியிடப்பட்டது. பலபதிப்புக்கள் கண்ட இந்த நூல் *467* பக்கங்களைக் கொண்டது. இந்த நூல் கேரள வரலாற்றிற்கு முக்கிய ஆவணம் ஆகும். அதில் முதல் தொகுதியில் பக்கம் *196* இல் வில்லியம் லோகன் கூறுகிறார்;

Zaphar ஜாபர்

வில்லியம் லோகன் கூறுகிறார்

“Finally, it has recently come to notice from the information of a Arab resident near the spot, that the tomb of the Perumal referred to still exists at Zaphar on the Arabian coast, at some distance from the place (shahr), he is reported to have Landed.

The **factshave still to be authoritatively** verified, but it is stated that on this tomb the inscription runs:

“Arrived at Zaphar”

A.H.212. Died there A.D.216

These dates correspond with the years 827-832 A.D.*

கல்வெட்டு ஆதாரம்

சேரமான் பெருமாள் அப்துல் ரஹ்மான் சாமிரி (Abdul Rahman Samiri) என்று பெயரை மக்காவில் மாற்றி இஸ்லாத்தைத் தழுவியது பின்னர் திரும்பி வரும்வழியில் கி.பி. *827*இல் ஜாபரில் தங்கியிருந்தது. உடல் நலக்குறைவால் அங்கு மறைந்தது கி.பி.*832*. அந்த அடக்கஸ்தலம் அங்கே இன்றும் உள்ளது. கல்வெட்டும் உள்ளது என்று தனது மலபார் மானுவல் நூலில் தெள்ளத்தெளிவாகச் சொல்லியுள்ளார் வில்லியம் லோகன்.

---

* *Malabar Manual,* வில்லியம் லோகன் முதல் தொகுதி பக்கம் 196.

இந்தியன் ஆண்டிகுயரி

Indian Antiquary என்னும் இதழில் 11வது தொகுதியில் வில்லியம் லோகன் எழுதிய கட்டுரையில் பக்கம் 116இல் சேரமான் பெருமாள் அடக்கப்பட்ட இடத்தில் அரபி மொழியில் கல்வெட்டு உள்ளது என்று ஆணித்தரமாக கூறியுள்ளார்.

Comeons in his Ulusiad

கேமியான்ஸ் என்பவர் உலூசியாட் என்ற நூலில் சேரநாட்டைப் பன்னிரண்டு பாகங்களாகப் பிரித்ததை உறுதி செய்கிறார்.

Having no heir, left Royal Home before he parted, he did cantonize His realm; those servants he loved best, he brings form want of wealth, from subjects to be kings cameons his Ulusiad. *

இஸ்லாத்தை ஏற்றுக்கொண்ட இந்த சேரமான் பெருமாள் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் காலத்திற்குப் பிந்தைய காலத்தில் இஸ்லாத்தை ஏற்றவர்.

சி.என்.எம். சலீம்

பிரியத்திற்குரிய சகோதரர் சி.என்.எம். சலீம் **'சேரமான் பெருமாள் தென்னிந்தியாவில் இஸ்லாத்தின் அறிமுகம்'** என்ற நூலை 2011இல் ரூபாய் 50 விலையில் 104 பக்கங்களில் தந்துள்ளார்.

அல்பலீத் துறைமுகம்

ஓமான் நாட்டில் உள்ள சலாலாஹ் (ஷஹர் – அல் – முகல்லா) நகரில்தான் அல்பலீத் துறைமுகம் அமைந்துள்ளது. கீழ்த்திசை நாடுகளில் வாணிபத்தில் 2000 ஆண்டுகளாக அல்பலீத் துறைமுகம் முக்கியமாக இருந்தது. அதன் பழமை மாறாமல் இன்றளவும் பாதுகாக்கப்பட்டு வருகிறது.

இந்தியா வருவதற்கு இலகு

அல்பலீத் துறைமுகத்திலிருந்து கேரளா – தமிழகத்துறைமுகங்களுக்கு வருவது மிகவும் எளிதானது. கீழ்த்திசை நாடுகளுக்கான அரபு நுழைவாயிலாகவும்

---

* அ. சிதம்பரனார், சேரர் வரலாறு, திருநெல்வேலி 1962 பக்கம் 126.

மிகப்பெரிய அளவில் சரக்குகளை கையாண்ட துறைமுகமாகவும் இருந்த அல்பலீத் துறைமுகத்தை நோக்கி பெருமானார் (ஸல்) காலத்தில் சந்திரன் பிளவுபட்ட அதிசயம் நிகழ்ந்ததற்குப்பின் சேரநாட்டின் ஒரு பகுதியை ஆட்சிபுரிந்த ஆட்சியாளர் கிளம்பினார், 'அல்பலீத்' துறைமுகத்தை அடைந்தார்.

ரப்உ-அல் - காலி

அல்பலீத் துறைமுகத்திலிருந்து குறுக்கே தரைமார்க்கமாக அரேபியாவிற்குள் செல்ல இயலாது. காரணம் இடையில் 'ரப்உ-அல்-காலி' எனும் மிகப்பெரும் பாலைவனம் உள்ளது.

'ஹதரமௌத்' - 'சன்ஆ'

யமன் நாட்டின் **'ஹதரமௌத்' - 'சன்ஆ'** *நகரங்களைக் கடந்து கேரள ஆட்சியாளர் பெருமானார் நபிகள் நாயகம் (ஸல்) வாழ்ந்துவரும் மதீனா நகரை அடைகிறார்.*

நபிகள் நாயகம் (ஸல்) சந்திப்பு

மதீனாவில் அண்ணலார் (ஸல்) அவர்களை கேரள ஆட்சியாளர் சேரமான் சந்திக்கிறார். இஸ்லாத்தை தழுவுகிறார். இதனை திவான் பகதூர் சி.கோபாலன் நாயர் தனது மலையாளத்தில் மாப்பிள்ளைமார் நூலில் (1917) விவரமாகப் பதிவு செய்துள்ளார். பெருமானார் (ஸல்) அவர்களின் 57வது வயதில் (கி.பி.627இல்) ஷவ்வால் பிறை 27 வியாழக்கிழமையன்று சேர அரசர் அண்ணலார் (ஸல்) அவர்களைச் சந்தித்தார்.

முஹம்மது காஸிம் பெரிஷ்டா

முஹம்மது காஸிம் பெரிஷ்டா தாரீஃக்-இஃபரிஷ்தா நூலில் இதனை உறுதிப்படுத்துகிறார்.

அல் குத்ரீ (ரலி)

நபி (ஸல்) அவர்களின் தோழரான அல்குத்ரீ (ரலி) அவர்களின் அறிவிப்பிலும் புகழ்பெற்ற ஹதீஸ் அறிஞர் அலிஹாகிமின் அல்முஸ்தத்ரக்கிலும் அண்ணலார் (ஸல்) சேரமான் சந்தித்த சரித்திரச் செய்தி இடம் பெற்றுள்ளது.

அபூபக்கர் (ரலி)

அண்ணலார் (ஸல்) அவர்களின் உயிர்த்தோழரும் முதலாவது கலீபாஆன அபூபக்கர் (ரலி) அவர்களும் அந்த

சந்திப்பின்போது உடன் இருந்தார்கள் என்று அல்குத்ரீ (ரலி) அறிவித்த பொன்மொழியில் உள்ளது.

தாஜத்தீன்

அப்போது தாஜ்அல்தீன் சுல்தான் அல்லது தாஜுத்தீன் என்ற பெயரை சேரஅரசர் சூட்டிக்கொண்டார். சில காலம் மதீனாவில் தங்கியிருந்துவிட்டு பின்னர் திரும்புகிறார். திரும்பும் வழியில் உடல்நலக்குறைவு ஏற்படுகிறது. தன்னோடு வருகிற நபி(ஸல்) அவர்களின் தோழர்களில் ஒருவரிடம் தனது நாட்டில் உள்ள முக்கியஸ்தர்களுக்கு கடிதம் கொடுத்து அனுப்புகிறார்.

அல்பலீத் துறைமுகத்தில்

ஓமான் நாட்டின் சலாலஹ் நகரில் உள்ள அல்பலீத் துறைமுகத்திற்கு தானே நேரில் சென்று சேரமான் பெருமாள் என்ற தாஜுத்தீன் அடக்கஸ்தலத்தையும் பார்த்துவிட்டுத் திரும்பிய சி.எம்.என். சலீம், அந்த அடக்கஸ்தலம் அருகே நிற்கும் புகைப்படத்தை அவரது நூலில் பக்கம் 84இல் தருகிறார். நூலின் பின் அட்டையிலும் தருகிறார்.

அதிசய ஒற்றுமை

சேரமான் பெருமாள் என்ற தாஜுத்தீன் அடக்கமாகியிருக்கும் ஓமான் நாட்டு சலாலஹ் நகரம் கேரளப் பகுதிகளின் நிலவியல்



இதோ அந்த
அடக்கஸ்தலம்
புகைப்படம்


CHERAMAN JUMA MASJID
KODUNGALLUR
ESTD.629.A.D
ചേരമാൻ ജുമാ മസ്ജിദ്
കൊടുങ്ങല്ലൂർ

கொடுங்கல்லூரில் உள்ள இந்தியாவின் முதல் பள்ளிவாசல்

சூழலிலே உள்ளது. எங்கு பார்த்தாலும் தென்னை, வாழைத் தோட்டங்கள், கரும்பு, பப்பாளி, காய்கறி, கீரைவகைகள் என்று காணும் பசுமை நிறைந்த பகுதகிள் இந்த அதிசயத்தை நேரிலே கண்டுவந்த சி.எம்.என். சலீம் தமது நூலில் பக்கம் 95இல் பதிவு செய்கிறார்.

கேரளத்தைப் போன்றே ஜூன் மாதம் தொடங்கி, சலாலாஹ் ஜூன் மாதம் தொடங்கி மூன்று மாதங்கள் பருவமழை பொழிகிறது.

கேரளாவில் கிடைக்கும் மத்திமீன் இங்கும் கிடைக்கிறது. இந்த அதிசயங்களை அதே நூலில் பக்கம் 97இல் விளக்குகிறார்.

மரணவேளையில்

சேரமான் என்ற தாஜுத்தீன் மரணம் அடைகின்ற வேளையில் இறைவனிடம் சலாலாஹ் பகுதியை கேரளப்பகுதிபோல ஆக்கித்தருவாயாக என்று கேட்டதாக செவிவழி வரலாற்றுச் செய்தியும் உள்ளது.

கொடுங்கல்லூரில் முதல் பள்ளி

பின்னர் தாஜுத்தீனுடன் வந்த பயணக்குழு சில ஆண்டுகளில் கொடுங்கோளூர் வந்தது. மன்னரின் கடிதத்தைத் தந்தது. மசூதி கட்ட அனுமதிப்பெற்றது. முதற் பள்ளிவாசல் கொடுங்களூரில் அமைந்தது.

The Epigraphically society of India

இந்தியக் கல்வெட்டுத்துறை மைசூரில் இயங்கி வருகிறது. இது நடத்திவரும் இதழ் Journal of the Epigraphically society of India அதன் 25வது தொகுதி 1999இல் வெளிவந்தது.

G.S.Khawja

ஜி.என். காவ்ஜா என்பவர் அந்த இதழில் 1999இல் பக். 54 முதல் பக்கம் 57 வரை எழுதிய ஆங்கிலக் கட்டுரை An Arabic Epigraph Pertaining to early Islamic mission to Kerala.

கேரளத்தில் ஆதிகாலத்தில் இஸ்லாமியக் குழு குறித்த கல்வெட்டு.

அரபிமொழியில் அற்புதத் தகவல்

14X77 செ.மீ. அளவில் நாக்ஷ் வடிவமைப்பில் (Naskh Style) மூன்று வரிகளில் அரபியில் அந்த எழுத்துக்கள் உள்ளது.

எழுத்துப் பெயர்ப்பு

அந்த எழுத்துப் பெயர்ப்பு இதோ

TRANSLITERATION

1. Hadha Masjidi Malik ibni Dinar wa safara jarna atan min al-'Arab il-a'l-Hind li 'imaratil Masjid wa izhari din a'l-Islam wa hum Shraf Ibni Malik wa akhuhu min a'lummi Malik ibni Dinar wa ibni akhihu.

2. Malik ibni Habib Malik wa ghairahum wa rasala fi baladata kancherkot wa bania fiha masjidan jami'an, yauma a'l-athnain, ath-thalith 'ashr mim shari Rajab sana ithni wa 'ashrin min al-Hijrat-an-Nabawiyya, wa ja'la fith ibnhu qadiyan.

3. Yusamma Malik ibni Ahamad ibni Malik qaddasa-Allahu ruhahum wa nawwara darihahum as nafa'na mim-barakatahum, thumma tajjada ba'dahu al-qadim mim-malahu, sahibi baladata, sana alaf wa miatain wa thalathata wa ashrin min al-Hijrah.

ஆங்கில மொழி பெயர்ப்பு இதோ

TRANSLATION

This is the mosque of Malik bin Dinar who travelled from Arabia to India, for constructing mosques and propagating Islam, along with a party consisting of his son sharaf, his maternal uncle (name not given),his nephew Malik son of Habib son of Malik and others. They reached Kanacherkot (i.e Kasargod) and constructed Jami Mosque on Monday, the 13th Rajab, the seventh month of Islamic calendar, year 22 after the migration of the prophet – 643A.D. June 7. He appointed his grandson named Malik, son of Ahamad son Malik, as gadi of the town. May Allah sanctify their souls and glorify their graves. The mosque was renovated out of the funds contributed by one of the residents of the town, in 1223 after Hijra – 1808 A.D.

The contents of the epigraph are self explanatory recording the visit of an Islamic mission to the India coast early as A.H. 22.

மரப்பலகையில் அரபு மொழிச் செய்தி

காசர்கோடு நகரத்தில் இந்திய மண்ணில் மிக மிகத் தொன்மைவாய்ந்த பள்ளிவாசல் உள்ளது.[*]

செய்த் ஜாமி பள்ளிவாசல்

செய்த் ஜாமி பள்ளிவாசலின் (Said Jami Mosque) *மத்தியபகுதியில் உள்ள கதவில் முக்கியமான இறைவணக்கம் பகுதியில்* (Main Prayer Hall) *மரத்தால் ஆன பலகையில் அரபி எழுத்துக்கள் பொறிக்கப்பட்டிருந்தது.*[**]

அரபி மொழியில் அமைந்த வாசகங்கள்

அரபு மொழியில் அமைந்த அற்புத எழுத்துப் பொறிப்பு இதோ;



ஹிஜ்ரி 22இல் ரஜப் மாதம் 13ஆம் நாள் கி.பி.643 சூன் 7இல் (7.6.643) காசர்கோட்டில் இஸ்லாமிய தூதுக்குழுவினரால் கட்டப்பட்ட பள்ளிவாசல் மாலிக்பின் தீனார் அவரது மகன் ஷராப் Sharaf *அவரது மாமனார், மருமகனார் ஆகியோரால் கட்டப்பட்டது.*

கி.பி. 1808

காசர்கோட்டில் அமைந்த இந்தப் பள்ளிவாசல் ஹிஜ்ரி 1223இல் அதாவது கி.பி.1808 இல் புணரமைப்புச் செய்யப்பட்டது. தற்போது மீண்டும் புணரமைப்புச் செய்யப்பட்டுள்ளது.

---

[*] *Gazetteer of India and Pakistan, Volume II, New Delhi, 1953 page 599. Imperial Gazetteer of India, Volume XV, New Edition, Oxford, 1908, Page 68.*

[**] *Annual Report on Indian Epigraphy, 1990-1991, Appendix c, No.68.*

சேரமான் ஜிம்ஆ மஸ்ஜித்

கி.பி. 629 இல் கட்டப்பட்டது. கி.பி.1808இல் புணரமைக்கப்பட்டது. கி.பி.1984இல் திருத்திக் கட்டப்பட்டது சேரமான் ஜும்ஆ மஸ்ஜித். 3 1/2 ஏக்கர் நிலத்தில் 12,000 சதுரஅடியில் தற்போது பள்ளிவாசல் அமைந்துள்ளது.

1,600 குடும்பங்கள்

1,600 இஸ்லாமியக் குடும்பங்கள் 7,000 பேர்கள் மக்கள் தொகை. தற்போது வாழ்ந்து வருகிறார்கள். திருச்சூர் மாவட்டம் கொடுங்களூர் தாலுகா கொச்சியிலிருந்து வடக்கே 35 கிலோ மீட்டர் தூரத்தில் தேசிய நெடுஞ்சாலை 17வது ரோட்டில் அமைந்துள்ளது.

கொடுங்களூர் பகவதி கோவில்

கொடுங்களூர் பகவதி கோவிலிலிருந்து இரண்டு கி.மீ. தூரத்தில் அமைந்துள்ள சேரமான் ஜும்ஆ பள்ளிவாசலின் பழைய தோற்றம் இதோ;



CHERAMAN JUMA MASJID
RENOVATION WORK
COMPLETED
IN 1984.
கல்வெட்டு

பள்ளியின் இப்போதைய வெளித்தோற்றம்

ஹபீப் பின் மாலிக் – குசரிய்யா சமாதி

கொடுங்கலூரில் இந்தியாவிலேயே முதல் பள்ளிவாசல், சேரமான் பள்ளி கட்டப்பட்டு, அதன் முதல் காஜியாக மாலிக் பின் தீனார் என்பவர் இருந்தார்கள். சிறிது காலத்துக்குப் பிறகு மாலிக் பின் தீனார் சேரமான் பள்ளிவாசல் பொறுப்பை, தனது உறவினர் ஹபீப் பின் மாலிக் என்பவரிடம் ஒப்படைத்துவிட்டு, அவர் கேரளா, முழுவதும் சுற்றுப்பயணம் செய்து பல்வேறு இடங்களில் பள்ளிவாசல்களை உருவாக்கினார்கள். பிறகு அங்கேயே மரணித்துவிட்டார்கள். இதை உறுதிபடுத்தும் விதமாக “ஹபீப் பின் மாலிக் மற்றும் அவரது மனைவி “குசாரிய்யா” ஆகியோரது சமாதி உள்ளது.



ஹபீப் பின் மாலிக் மற்றும்
அவரது மனைவி குசரிய்யா சமாதி

ஏ.எம்.யூசுப் குறிப்பு

அண்ணன் ஏ.எம்.யூசுப் தனது புகழ்மிக்க மறைவழி கண்ட மாமன்னர் சேரமான் பெருமாள் நாவலை முடித்துவிட்டு ஒரு பாரா ஆசிரியர் குறிப்பு என்று தருவார்.

கடைசி ஹஜ்

மன்னர் சேரமான் பெருமாள் மதீனா மாநகர் போய்ச் சேர்ந்து ரசூல் (ஸல்) அவர்களைச் சந்தித்து கலிமா சொல்லி இஸ்லாத்தில் இணைத்ததாகவும், கடைசி ஹஜ்ஜில் (ஹஜ்ஜத்துல் விதா எனும் விடைபெறும் ஹஜ் அதாவது பெருமானார் (ஸல்) அவர்களின் கடைசி ஹஜ்) கலந்து கொண்டதாகவும் சில குறிப்புகள் கூறுகின்றன.

இது ஒரு சேரமான்; பின்னர் ஒரு சேரமான் நபி (ஸல்) காலத்திற்குப்பிறகு மக்கா சென்று இஸ்லாத்தை தழுவுகிறார். இது ஒரு சேரமான் கிபி462 இல் இருந்து கிபி 763 வரை 303 ஆண்டுகள் பெருமாள்கள் இல்லை என்பதாக கேரளோற்பத்தியும் கொச்சி சமஸ்தான ரிப்போர்ட்டும் கூறுகிறது.

ராஜகுரு நம்பி

ஏ.எம். யூசுப் அண்ணன் தனது நாவலில் கடைசியில் ராஜகுருராமநம்பியின் விசுவாசமுடையவர்கள் நடுக்கடலில் ஒரு படையை நிறுத்தி வைத்து திடீர் தாக்குதல் நடத்தி மன்னரைக் கொன்று கப்பலையும் கடலில் ஆழ்த்தி விட்டார்கள் என்பார்.

குலசேகரன்பட்டினம்

பழங்காலத்தில் புகழ்பெற்று விளங்கியது குலசேகரன்பட்டினத் துறைமுகம். சேரமான் ஒருவர் மெக்கா சென்று இஸ்லாமியரானார். இவரது உடல் குலசேகரன்பட்டினம் கடற்கரையில் ஒதுங்கியது.

ஹஜ்ரத் செய்யது சிராஜதீன் ஒலியுல்லாஹ்

அவரது உடல் ஒதுங்கிய இடத்தில் இஸ்லாமிய மரபுப்படி அவரை அடக்கம் செய்தனர். அவர் அடக்கம் செய்த இடம் தர்காவானது. ஹஜ்ரத் செய்யது சிராஜுதீன் ஒலியுல்லாஹ் பெயரில் குலசேகரன்பட்டினம் கடற்கரையில் இத்தர்கா இன்றும் உள்ளது.

சிதம்பர நாதர் ஆலயம்

குலசேகரப்பட்டினம் சிதம்பர நகர் சைவ ஆலயத்தின் கருவறையின் தென்பகுதியில் சன்னல் ஒன்று உள்ளது. இச்சன்னலும் ஹஜ்ரத் செய்யது சிராஜுதீன் ஒலியுல்லாஹ் தர்காவின் கல்லறைப் பகுதியின் நுழைவு வாயிலும் நேர் எதிராக அமைந்துள்ளது. சிதம்பரநாதர் கருவறைப் பகுதியில் இருந்து தர்காவின் கல்லறைப் பகுதியையும், தர்காவின் கல்லறைப் பகுதியிலிருந்து சிதம்பரநாதர் கோயில் கருவறைப் பகுதிகளையும் காணமுடியும். சேரமான் பெருமாள் சைவ அடியாராகவும், பின்னர் இஸ்லாமிய இறைநேசராகவும் வாழ்ந்ததை நினைவூட்டும் வகையில் இவ்வாறு அமைக்கப்பட்டுள்ளதாக இவ்வூர் மக்கள் கருதுகிறார்கள்.

இந்து - முஸ்லிம் ஒற்றுமை

குலசேகரப்பட்டினத்திலும் அதன் சுற்றுப்பகுதியிலுள்ள ஊர்களிலும் வாழும் இந்துக்கள் ஹஜ்ரத் செய்யது சிராஜுதீன் ஒலியுல்லாஹ் தர்காவில் வேண்டுதல்கள் நிகழ்த்துவதுடன் அதன் விழாக்களிலும் பங்கு கொள்கின்றனர். *

குலசேகரன்பட்டினம்

திருச்செந்தூர் கடற்கரையிலிருந்து எட்டாவது மைலில் (8 கி.மீ. 5 மைல்) இருப்பது குலசேகரன்பட்டினம். இது சில ஆண்டுகள் முன்வரை பெரிய துறைமுகமாக இருந்தது. இதற்குத் தெற்கே இருப்பது மணப்பாடு அருகே ஒரு கலங்கரை விளக்கம். அது குலசேகரன்பட்டினத்தைக் கருதி அமைக்கப்பெற்றது. குலசேகரபாண்டியன் அரசாண்ட நகரம் இது. காஞ்சி விசயகச்சி கொண்ட பாண்டியனால் போற்றப்பெற்ற ஈசர் கோவில் இங்கு உள்ளது. அம்மை அறம் வளர்த்த நாயகிக்கும் கோயில் அமைத்தவன் குலசேகரன்.

மலையான்தெரு

குலசேகரன்பட்டினத்தில் மலையான் தெரு என்ற தெரு ஒரு காலத்தில் சேரர் செல்வாக்கு இவ்வூரில் இருந்தது என்பதைக் காட்டுகிறது.**

---

* *அப்பணசாமி, பேர் சொல்லும் நெல்லைச்சீமை பகுதி 87, தினமலர் செய்திமலர் 16.8.2009 பக்கம் 5.*

** *இ.மு.சுப்பிரமணிய பிள்ளை, நெல்லை மாவட்டக் கோவில் வரலாறு சென்னை, 1962 பக்கம் 127 - 128.*

சோமலெதரும் தகவல்

சேரநாட்டை ஆண்ட சேரமான் பெருமாள் என்ற பெயருடைய ஓர் அரசர் திரு மக்கா நகருக்குச் சென்று இஸ்லாத்தைத் தழுவினார் என்பர். அவர் தம் நாட்டிற்குத் திரும்பும் வழியில் மரணமடைந்தார். கலத்திலிருந்து இறக்கப்பட்டு குலசேகரபட்டினம் தென்தில்லை சிதம்பரசுவர் கோயில் அன்னைச் சிவகாமி சந்நிதிக்கு நேர் தெற்குப்புறத்தில் அவர் நல்லடக்கம் செய்யப்பட்டார்.

சேரா முதலி சாகிபு

சேரா முதலி சாகிபு என்னும் செய்யது சிராஜுதீன் ஒலியுல்லா தர்கா குலசை (குலசேகரபட்டினம்)யில் கட்டப்பட்டுள்ளது.

ஆப்பிரிக்கா தொடர்பு

தென்தில்லை சிதம்பரேசுவரர் கோயிலுக்கு அருகே பப்பரப் புளிமரம் உண்டு. இது ஆப்பிரிக்காவில் மட்டுமே உண்டு. ஆப்பிரிக்கா துறைமுகங்களோடு தொடர்பு இருந்ததற்கு இது சாட்சியாகும்.*

*சோமலெ, திருநெல்வேலி மாவட்டம், சென்னை 1965, பக்கம் 272-273.

சேரமான் பெருமாள் புனித மக்காவில் இஸ்லாத்தைத் தழுவி திரும்பி வரும் வழியில் மரணமுற்று குலசேகரன்பட்டினக் கடற்கரையில் அடக்கப்பட்டதும். அங்கு அவர் பெயரால் தர்கா அமைந்திருப்பதும் பழைய நெல்லை மாவட்டம். இன்றைய தூத்துக்குடி மாவட்டம் குலசேகரன்பட்டினத்தில் காணப்படும் சாட்சியங்களாகும்.

சேரமான் காதலி

பண்ணரசன் கண்ணதாசன் எழுதிய அருமையான நாவல் சேரமான் காதலி.

'கல்கி' இதழில் தொடராக வெளிவந்தது. அதில் முதற்பாகம் 27 அத்தியாயங்கள், இரண்டாம் பாகம் 23 அத்தியாயங்கள், மூன்றாம் பாகம் 24 அத்தியாயங்கள் ஆகும்.

சாகித்ய அகாதெமி விருது

1977இல் வானதி பதிப்பகம் அதனை நூலாக வெளியிட்டது. 1981 ஆம் ஆண்டில் அந்த நாவலுக்கு சாகித்ய அகாதெமி விருது கிடைத்தது. 626 பக்கங்கள் அந்த நாவலை துடிசை கிழார் அ. சிதம்பரனார் எழுதிய சேர வரலாற்று நூலைத் தழுவியே எழுதியிருப்பார்.

கொடுங்களூர் பள்ளிவாசல்

சேரமான் காதலியில் கவிஞர் கண்ணதாசன் முதற்பாகம் முதற் அத்தியாயத்தில் ஆள்வார் ஆழ்வாரான படலத்தில் சொல்வார்

வஞ்சியின் வணிகத்தை
அரேபிய வாசனைத் திரவியங்களால்
வாசமாக இருந்ததைக் குறிப்பிடுவார்.
அடுத்து சொல்வார்

கொடுங்களூர் * பகவதியம்மன் கோயிலில் மணி அடிக்கும் போதெல்லாம் அவர்களது மற்ற இரண்டு கோயிலிலும் மணி ஒலிக்கும் **மசூதியைத் தவிர** என்பார். **பள்ளிவாசல்** அப்போதே அமைந்துவிட்டது.** என்று இறைவன் அவரை எழுத வைத்தான்.

அராபியச் சேரமான்

உதயணன் அராபியச் சேரமான் என்ற நூலை 2016இல் 1015 பக்கங்களில் தந்துள்ளார். இதில் முதற்பாகம் 442 பக்கங்கள். அதில் அண்ணல் **நபி (ஸல்) வரலாறு. முதற்பாகத்தின் கடைசியில், 'பெருமானார்(ஸல்) இந்தியாவிலிருந்து சேரநாட்டு மன்னர் சேரமான் பெருமாள் தங்களைச் சந்திக்க வந்திருக்கிறார்'** என்று முடித்திருப்பார்.

---

* கண்ணதாசன் சேரமான் காதலி, வானதி மூன்றாம் பதிப்பு 1981, பக்கம் 13.

** கொடுங்களூர் கோயில் பற்றி அறிய *V.T. Induchudan, the secret chamber, the Cochin Devaswom Board, Trichur* 1969 வெளியிட்ட 323 பக்கங்களைக் கொண்ட நூலை வாசிக்கலாம்.

உயர்ந்த மனிதன்

நாவலில் 97வது அத்தியாயம் உயர்ந்த மனிதன். இது கடைசி அத்தியாயம் 1014வது பக்கத்தில் நெஞ்சுவலியோடு உறங்கச் சென்ற சேரமான் உயிரைத் துறந்ததைக் குறிப்பிடுவார். சல்லாஹ் நகரில் அவரது உடல் மக்களின் கண்ணீர் மழைக்கிடையில் அடக்கம் செய்யப்பட்டதைச் சொல்வார்.

மலபார் கரைகளில் இஸ்லாம்

மாலிக்! நீ சென்று நபி பெருமானை (ஸல்) சந்தித்த விவரத்தைச் சொல்; சேரநாட்டிற்குச் சென்று அவரது கடைசி விருப்பத்தை நிறைவேற்று என்றார் அபூபக்கர். மாலிக் வந்தார்; மலையாளக் கரையோரம் பள்ளிவாசல்கள் எழுந்தன, இஸ்லாம் வேகமாகப் பரவிற்று.

அரக்கல்ராஜ வம்சம்

ஹிஜ்ரி 64இல் அரக்கல் ராஜவம்சக் குடும்பத்தினரின் தொடர்புடைய ஆவணங்கள் இந்த வம்சா வழியின் நிறுவனர் சேரமான் பெருமானின் தங்கை ஸ்ரீதேவியின் மகன் முஹம்மது அலி என்கிறது.

முஹம்மது அலி

மகாபலி என்ற இயற்பெயரைக் கொண்டிருந்த இவர் இஸ்லாத்தை ஏற்று முஹம்மது அலியாக மாறினார். தர்மடம் இவ்அரச வமிசத்தினரின் தலைமைப் பீடமாக விளங்கியது. மலையாளக் கரையில் இஸ்லாம் மார்க்கம் தொடர்ந்து வேகமாகப் பரவியது.

கோட்டாறு அஹ்மது

நாகர்கோவில் கோட்டாறு இளங்கடை மேலப்புதுத்தெருவில் வாழ்ந்துவரும் பாசத்திற்குரிய சகோதரர் கோட்டாறு அஹ்மது கபீர் தொலைபேசியில் அடியேனிடம் மணிக்கணக்கில் கருத்துப் பரிமாற்றம் செய்பவர். 'மிகுராசுமால' பாடிய ஆலிப்புலவரின் பெண் வழி வாரிசு அவர்.

அச்சாரம் - சிலாபம்

இவர்கள் 2010 அளவில் நடத்திய இதழ் அச்சாரம் வழங்கும் **'சிலாபம்'** மூன்று இதழ்களோடு முடிந்து போனது. இதில் ஒரு இதழில் வந்த கட்டுரை இதோ;

கோயிலத்து தம்புராட்டிய மாப்பிள்ளை தொட்டு...

இஸ்லாத்தை ஈர்த்த கேரளத்து மண்

இந்தியாவைப் பொறுத்த வரையில் தென்னிந்தியாவில் மேற்கு கிழக்குக் கடற்கரைப் பகுதிகளில் இஸ்லாம் முதலில் பரவியது என்பதற்கு பல சான்றுகள் உள்ளன. இஸ்லாமியக் கொள்கைகளாகிய ஏகத்துவ, சமத்துவம், சகோதரத்துவம் ஆகியனவும், பெண்களுக்கு இஸ்லாத்தில் தரப்பட்ட மரியாதை, பாதுகாப்பு முதலியனவும் இஸ்லாம் இந்தியாவில் விரைந்து பரவக் காரணங்களாகும். இந்தியாவில் நிலவிய சாதிக் கொடுமைகளும், கீழ்ச்சாதிக்காரர்கள் அனுபவித்த துன்பங்களும் இப்பரவுதலை விரைவுபடுத்தின. பெண்களைப் பற்றிய அக்காலக் கண்ணோட்டமும் இஸ்லாம் தென்னிந்தியாவில் விரைவாகப் பரவ ஒரு காரணமாகும். அரக்கல் பீவியின் வரலாறு இதற்குச் சிறந்த சான்றாக அமைகிறது.

சிறக்கல் மாப்பிள்ள பள்ளி

கேரள மாநிலத்தின் வடக்குப் பகுதியில் கண்ணனூர் மாவட்டம் அமைந்துள்ளது. இது பழங்காலத்தில் பூழிநாடு என அழைக்கப்பட்டது. (பூமி – புழுதி – மண்) கண்ணனூர் நகருக்கு வடக்கில் ஏறத்தாழ நான்கு கிலோ மீட்டர் தூரத்தில் சிறக்கல் என்னும் பெயரில் ஒரு ஊர் உள்ளது. இவ்வூரின் வடக்கில் அமைந்துள்ளது வலிய பட்டணம். சிறக்கல் ஊரில் அமைந்துள்ள சிவன் கோயிலும், அக்கோயிலில் ஆண்டுதோறும் நடைபெறும் திருவிழாவும் மிகவும் புகழ்பெற்றவை. பழமை வாய்ந்தவை.

பையங்காடிப் புழை என்னும் ஆறு

பண்டைக் காலத்தில் பையங்காடிப் புழை என்னும் ஆறு சிறக்கல் பகுதியைத் தொட்டு ஓடியது. தற்போது இந்த ஆறு தன்னுடைய பாதையை மாற்றிக் கொண்டுள்ளது. இவ்வாற்றின் கரையில் மிகவும் புகழ்பெற்ற சிறக்கல் ராஜ வம்சத்தின் அரண்மனை (கோயிலகம்) அமைந்திருந்தது.

ஏறத்தாழ 1200 ஆண்டுகளுக்கு முன் ஒரு மன்னன் சிறக்கல் பகுதியை ஆண்டு வந்தான். அவனுக்குப் பருவ வயதடைந்த இரு பெண்கள் இருந்தனர். அவர்கள் ஒரு நாள் தோழியருடன் பையங்காடி ஆற்றில் நீராடிக் கொண்டிருந்தனர். அந்தக் காலத்தில் அந்தப்புரத்திலிருக்கும் அரச குலப் பெண்களைப் பிறர் காணமுடியாத வகையில் சிறை கட்டுவது வழக்கம். இவ்வாறு பாதுகாப்பான முறையில் பிறர் காண முடியாத



வரலாறு கூறும் அரபு எழுத்துக்கள் எழுதப்பட்ட பீங்கான்கள்

வகையில் நீராடிய பெண்களில் ஒருத்தியைத் தண்ணீர் இழுத்துக் கொண்டு சென்றது. உடன் நீராடியோர் பயந்து கூக்குரல் எழுப்பினர்.

அரேபிய இளைஞன்

ஆற்றின் மறுகரையில் அரேபியாவிலிருந்து வந்த ஒரு வணிகக் கூட்டத்தினர் தங்கியிருந்தனர். அவர்கள் மாப்பிள்ளைமார் என அழைக்கப்பட்டனர். அவர்களில்ஒரு இளைஞன் நீரில் குதித்து ஆற்றில் அடித்துச் செல்லப்பட்ட பெண்ணை காப்பாற்றினான். ஆற்று நீரின் வேகத்தால் அப்பெண் அணிந்திருந்த ஆடை நீரோடு போயிற்று. இதை உணர்ந்த அவ்விளைஞன் அவளைக் கழுத்தளவு தண்ணீரில் நிறுத்திவிட்டு கரைக்கு வந்தான். அவன் தான் அணிந்திருந்த ஆடையின் ஒரு பகுதியைக் கிழித்து அவளை நோக்கி வீசினான். அவள் அந்த ஆடையை உடுத்திக் கொண்டு கரையேறினாள்.

இந்தச் செய்தி காட்டுத்தீ போல் சிறக்கல் பகுதி முழுவதும் பரவியது. **கோயிலகத்துக்குத் தம்புராட்டியை மாப்பிளதொட்டு** என்று மக்கள் பேசத் தொடங்கினர். அக்காலம் எண்ணிப் பார்க்க முடியாத சாதிக் கொடுமைகள் நிலவிய காலம். மேல்சாதிப் பெண் ஒருத்தியை அதிலும் குறிப்பாக நம்பூதிரிப் பெண் ஒருத்தியை கீழ்ச்சாதிக்காரன் ஒருவன் கண்டாலே அவனைக் ‘**கை கொட்டிப் புறத்தோட்டுக**’ என்னும் கோட்பாடு நிலவிய காலம். அதாவது சமூகத்தை விட்டும் இருவரையும் விலக்கி வைக்க வேண்டும் என்னும் கருத்து நிலவிய காலம்.

இஸ்லாத்தை ஏற்றல்

இங்கு தம்புராட்டியை மாப்பிள்ளை தொட்டதால் அபத்தம் ஆகிவிட்டது. கோயிலகத்தில் அப்பெண்ணை மீண்டும் சேர்த்துக் கொள்ள முடியாத நிலை உருவானது. மன்னர் பெரிதும் வருந்தினார். ஆனால் அப்பெண் தன்னைத் தொட்டுத் தூக்கிக் காப்பாற்றியதோடு மானம் காக்க ஆடை தந்தவனைக் கணவனாக ஏற்றுக்கொள்ள முடிவு செய்தாள். இஸ்லாத்தை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்னும் நிபந்தனையின் பேரில் அவளைத் தன் மனைவியாக ஏற்றுக் கொள்ள அவ்விளைஞன் இணங்கினான்.

அரக்கல் அரச பரம்பரை

அரசவை கூடியது. திருமணம் குறித்து அவை வாதித்தது. திருமணத்திற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டது. சிறக்கலின் தெற்குப் பகுதி அரக்கல் என்னும் பெயரில் மணமக்களுக்கு வழங்கப்பட்டது. அரக்கல் அரச பரம்பரை உருவாயிற்று.

வட்ட வடிவ பீங்கான் பாத்திரம்

அரக்கல் அரண்மனை கண்ணனூரின் தென்மேற்குப் பகுதியில் தானா என்றழைக்கப்படும் இடத்தின் கடற்கரையில் அமைந்திருக்கிறது. இந்த அரண்மனையில் வட்ட வடிவ பீங்கான் பாத்திரம் ஒன்று உள்ளது. அப்பாத்திரத்தில் காலியோ கிராபி வடிவ அரபி எழுத்தில் நீல வண்ணத்தில் இவ்வரலாறு வரையப்பட்டுள்ளது. இச்சம்பவம் ஹிஜிரி 200ஆம் ஆண்டு நடந்ததாக அப்பீங்கான் பாத்திரத்தில் எழுதப்பட்டுள்ள செய்திகளிலிருந்து புலனாகிறது.

சுல்தான் பீவி

17ஆம் நூற்றாண்டில் திப்புசுல்தான் அரக்கலின் ஒரு பகுதியைக் கைப்பற்றி அங்கு ஒரு கோட்டையைக் கட்டினார். அரக்கல் அரச வம்சத்தினர் தற்போது பையம்பலம் கடற்கரை என்னும் பகுதியில் வாழ்கின்றனர். இப்பகுதி கண்ணனூர் நகரில் வடமேற்கு திசையில் உள்ளது. இங்கு நூர் மஹால் என்னும் அரண்மனையில் அவர்கள் வாழ்கிறார்கள். இவ்வரச பரம்பரையின் கடைசி அரசு சுல்தான் பீவி.

இவ்வாறு இஸ்லாம் என்னும் புனித மார்க்கம் தன்னுடைய ஏகத்துவம், சமத்துவம், சகோதரத்துவம், பெண்மையைப் போற்றுதல் போன்ற எழிலார்ந்த பண்புகளால் மலையாளக் கரையைப் பெரிதும் ஈர்த்தது; வளர்ந்தது; வளர்ந்து வருகிறது; வளரும்.

பின் இணைப்பு

மாலுமி சிந்துபாத்தின் கடற்பயணம்

இந்தியாவிற்கும் அரேபியாவிற்கும் இருந்த தொடர்பை அறிய மாலுமி சிந்துபாத்தின் கடற்பயணம் உறுதிப்படுத்துகிறது.

அரபுக்கதைகளில் இந்தியா - அரேபிய உறவு

உலகப் பிரசித்தி பெற்ற அரபுக்கதைகளில் ஆயிரத்தி ஓர் இரவுகள் முக்கிய இடத்தைப் பெற்றுள்ளது.

எஸ்.எஸ்.மாரிசாமி

10, சிங்கராச்சாரி தெரு, திருவல்லிக்கேணி, சென்னை – 5, இல் இருந்து அன்னை நூலகத்தார் எஸ்.எஸ். மாரிசாமி மொழி பெயர்ப்பில் 1001 இரவுகள் நூலை ஆறு தொகுதிகளாக வெளி யிட்டார்கள். 1953 மே முதல் தொகுதி விலை ரூபாய் மூன்று; இரண்டாம் தொகுதி; அக்டோபர் 1953 இல் பக்கங்கள் 274; விலை ரூபாய் மூன்று; மூன்றாம் தொகுதி பிப்ரவரி; 1954 விலை ரூபாய் மூன்று; பக்கங்கள் 243; நான்காம் தொகுதியை தமிழ்ச்சுடர் நிலையம் மூன்று ரூபாய் விலையில் 1954 இல் 233 பக்கங்களில் வெளியிட்டது. ஐந்தாம் பாகம் 1955 ஏப்ரல் 1 இல் மூன்று ரூபாய் விலையில் 256 பக்கங்களில் வெளிவந்தது. ஆறாம் பாகம் 1956 ஜனவரியில் அருணா புத்தக நிலையம் இரண்டு ரூபாய் விலையில் 172 பக்கங்களில் வெளியிட்டது.

ஆயிரத்தோர் இரவுகள் மூலநூல் பாரிஸில் உள்ள தேசிய வாசக சாலையில் இந்நூலின் ஆதிமொழி பெயர்ப்பாளரான அந்தோணி காலண்டினின் கையெழுத்துப் பிரதிகள் உள்ளது. இதில் ஐந்தாம் பாகத்தில் சிந்துபாத் வரலாறு பக். 38 முதல் 115 வரை உள்ளது.

இந்தியர்களைக் கண்டேன்

கூலிக்கார சிந்துபாத்தும், மாலுமி சிந்துபாத்தும் சந்திப்பதில் துவங்கும் கதை வைரக்காடு கண்டேன் ஆபத்துக்கு மேல் ஆபத்து, சிந்துபாத்தின் சந்தோஷம் சிந்துபாத்தின் நான்காவது பயணம், நான்காவது பயணத்தின் கதை, ஐந்தாவது பிரயாணம் என்று தொடரும் கதை. அடுத்து இந்தியர்களைக் கண்டேன். சிந்துபாத்தின் ஆறாவது பயணம் அப்போது இந்தியர்கள்

சிந்துபாத்தை ஆபத்திலிருந்து காப்பாற்றிய செய்திவரும். அவர்கள் பேசிய பாஷை புரியாமல் விழித்தான். அவர்களில் ஒருவன் எல்லோரையும் தள்ளிக்கொண்டு வந்து அரபு மொழியில் பேசினான்.

எஸ்.எஸ்.மாரிசாமி, 1001 இரவுகள் ஐந்தாம் பாகம் பக்கம் 102 அந்த இந்தியர் கொடுத்த உணவை உட்கொண்டதும் சிந்துபாத்திற்கு களைப்பு நீங்கியது. (மேலது பக்கம் 103) பூர்வ கால அரபுக்கதையாம் 1001 இரவுகளில் அரபு மொழி அறிந்த இந்தியர்கள் பேசப்பட்டுள்ளார்கள்.

Powys Mathers

The Book of the Thousand Nights and One Night rendered in to English from The Literal and Complete French Translation of Dr. J.C.Mardrus by Powys Mathers.

இலண்டனில் இருந்து நான்கு தொகுதிகளாக 1964 இல் இரண்டு பதிப்பாக (அதற்கு முன் பத்து பதிப்புகள் வெளிவந்துள்ளது.

முதல் தொகுதி 644 பக்கங்கள், இரண்டாவது 592 பக்கங்கள், மூன்றாவது தொகுதி 569 பக்கங்கள், நான்காவது தொகுதி 537 பக்கங்கள்.

இரண்டாவது தொகுதி பக்கம் 183, 184 வரும் தகவல் இதோ.

சிந்துபாத் இந்தியர்களைச் சந்தித்த செய்தி ஆங்கில நூலிலும் வருகிறது. சிந்துபாத்தின் ஏழு கடற்பயணங்கள் பற்றிய குறிப்புக்கள் அந்த நூலில் உண்டு.

அ.லெ.நடராஜன்

ஆயிரம் ஆயிரம் வருஷங்களாக கிழவன் கிழவி குமரன் குமரி குழந்தைகள் அத்தனை பேரும் விரும்பி விரும்பிப் படித்து வரும் அதிக அற்புதமான கதை. போவிஸ் மாத்தர் மொழி பெயர்ப்பை 1957 இல் தமிழில் தந்தவர் அ.லெ.நடராஜன் ஆறு பாகங்களாக வெளியிட்டார்கள். சக்தி காரியாலயம் மலிவுப் பதிப்பு ஒரு ரூபாய் ஐம்பது பைசா.

மே.ச. பரதன்

சென்னை பூம்புகார் பதிப்பகம் 1977 இல் மே.சபரதன் மொழி பெயர்ப்பில் முதல் பாகம் 368 பக்கங்கள், இரண்டாம் பாகம் 367 பக்கங்கள், மூன்றாம் பாகம் 288 பக்கங்கள், இரண்டாம் பாகத்தில் பக்கம் 204 முதல் மாலுமி சிந்துபாத் வரலாறு; அதில் குதிரை வாணிகம் பற்றிய குறிப்பு வரும் (பக்கம் 216) ஆறாவது கடற் பயணத்தில் சிந்துபாத் இந்தியர்களைச் சந்தித்த செய்தி வரும். அவர்கள் அரபி மொழியை நன்கு அறிந்திருந்தார்கள் என்ற தகவலும் கிடைத்திடும் (பக்கம் 298). 204வது பக்கம் துவங்கி, 317 வது பக்கம் வரை சிந்துபாத் கதை அதில் வருகிறது.

முல்லை முத்தையா

சென்னை வானதி பதிப்பகம் 1966 ஆகஸ்டில் வெளியிட்ட ஆயிரத்து ஓர் இரவுகள் முல்லை முத்தையா தொகுத்தது 69 கதைகள் அதில் உள்ளது. 51வது கதை சிந்துபாத் மாலுமி கதை 52 லிருந்து 58 வரை சிந்துபாத்தின் ஏழாவது பிரயாணக்கதை அதில் உள்ளது. (பக்கம் 227 முதல் 259 வரை) அதில் பக்கம் 254 இல் இந்தச் செய்தி கூறப்பட்டுள்ளது.

என்.ஜனார்த்தனம்

1001 அராபிய இரவுகள் நூல் 1993 இல் 288 பக்கங்களில் என்.ஜனார்த்தனம் வெளியிட்டுள்ளார். அதில் பக்கம் 199 முதல் மாலுமி சிந்துபாத் கதை ஆரம்பமாகும். பக்கம் 236 இல் ஐந்தாவது பயணத்தோடு நிறுத்திக் கொள்வார்.

அருள் நம்பி

அருள் நம்பி தொகுத்த சிந்துபாத்தின் சாகச கடற் பயணங்கள் என்ற நூல் 2005 இல் 144 பக்கங்களுடன் வெளிவந்தது. இந்தியர்களையும், அரபு மொழி அறிந்தவர்களையும் பற்றிய குறிப்பு பக்கம் 114, 115 இல் பேசப்படுகிறது.

க.வே.சொக்கலிங்க முதலியார்

வித்வ விவேக யுக்திக்கு வித்தாகிய மந்திரியின் குமாரத்தி ஷாரேயரென்றும் பாட்சாவிற்கு ஆயிரத் தொருநாள் இரவிற் சொல்லியதை க.வே.சொக்கலிங்க முதலியாரால் முன் அச்சிட்ட பிரதிக்கிணங்க 1923 இல் ந.இரத்தின நாயகர் அண்டு

சன்ஸ் நிறுவனத்தால் திருமகள் விலாச அச்சியந்திர சாலையிற் பதிப்பித்த மூன்று பாகங்கள் அடங்கிய நூல் அராபிக்கதை.

அராபிக்கதை

முதல் பாகம் 528 பக்கங்கள்; இரண்டாம்பாகம் 500 பக்கங்கள், மூன்றாம் பாகம் 261 பக்கங்கள்; இதில் முதலாம் பாகத்தில் 227 பக்கம் முதல் 292 பக்கம் வரை சிந்துபாத் வரலாறு பேசப்படுகிறது. 276, 277வது பக்கங்களில் இந்தியர்களைச் சந்தித்தது; அதில் ஒருவர் அரபி மொழியில் பேசியது பற்றிய குறிப்பு உள்ளது.

பா.தாவூத் ஷா

இஸ்லாமியப் பேரறிஞர் பா.தாவூத்ஷா அரபு மூலத்திலிருந்து மிகச் சிறந்த மொழி பெயர்ப்பை 1001 இரவுகளுக்கு கொண்டு வந்தார். முதல் ஐந்து தொகுதிகள் மட்டுமே வெளிவந்தது.

மூலகாவியத்தின் மிகச்சரியான மொழிபெயர்ப்பாக 1953இல் ஒரு ரூபாய் விலையில் ஒவ்வொரு தொகுதியாக வெளிவந்தது. அது முழுவதும் கிடைக்காமல் போனதும் துரதிர்ஷ்டமே.

ஆதிகால அரேபிய உறவு

மாலுமி சிந்துபாத் தனது ஆறாவது கடற்பயணத்தின் போது இந்தியர்களையும், அவர்களில் அரபி மொழி அறிந்தவர்களையும் சந்தித்தார் என்பதிலிருந்து அரேபிய – இந்திய உறவு ஆதிகாலத்திலிருந்தே இருந்தது என்பது தெளிவாகிறது.

Hitti opines that the world famous thousand and one Arabian Nights was based upon several stories of Indian origin as they found their way to the Arabian peninsula through the Panchtantra literature (J.L. Mehta Advanced study in the History of medieval India, Volume III, NewDelhi, 1990, page 74, and Philip K.Hitti, History of the Arabs eighth edition, Great Britain, 1964, page 404, 405.

========

“இந்தியாவிற்கும் அரேபியாவிற்கும் இடையிலான வாணிபம் மனித இனத்தின் ஆரம்பத்திலிருந்தே துவங்கி விட்டது” என்கிறார் ராதாகுமத் முகர்ஜி - Indian Antiquary, Volume XIII, Page 28 Quoted in Indian shipping, A History of the sea - Bore Trade and Maritime Activity of the Indians From the Earliest Times, by Radhakumad Mookerji, London, 1912, Page 94.

கேரளம், மலையாளம் என்பன தற்போது மலையாள நாட்டையும், அங்கு வழங்கும் மொழியையும் குறிக்கும் பெயர்களாம். சங்க (கழக) காலத்தில் முத்தமிழ் நாடுகளில் ஒன்றாயிருந்த சேர நாட்டின் மேல்பாகமே இப்போது மலையாள நாடாயிருக்கின்றது. மேற்கு தொடர்ச்சி (குட) மலைக்கு மேற்கே வடக்கில் மங்களூரி (மங்களபுரம்) லிருந்து தெற்கில் திருவனந்தபுரம் வரைக்கும் தென் “கன்னடம்” மலபார் கொச்சி திருவிதங்கோடு (திருவாங்கூர) என்றும் நான்கு சீமைகளில் தாய் மொழியாகப் பேசப்படுவது மலையாளம் சேரநாடு கி.பி. 10 ஆம் நூற்றாண்டு வரை செந்தமிழரசரும், செந்தமிழ்ப் புலவரும் திகழ்ந்த செந்தமிழ் நாடாயிருந்தது.

- மொழி ஞாயிறு ஞா.தேவநேயப் பாவாணர்,

திராவிடத்தாய் & 1944.

NEWSMAN
Publications



₹ 200

ISBN 978-93-92351-18-1
9 789392 351181